வெளியீடு : 17-9-08

Issued : 17-9-08

1560
16-4-2009

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

புதன்கிழமை, ஏப்ரல் 16, 2008—தொகுதி 47—எண் 3

**Wednesday, the 16th April 2008—Volume 47—No. 3**

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

Legislative Assembly Secretariat, Chennai - 600 009

[Price Rs. 3.00

D
211,31808
808.47.3
28410.

16–4–2008

## உள்ளடக்கம்


பக்கங்கள்

**வினாக்கள்–விடைகள்—**

உடுக்குறியிட்ட வினாக்கள் 781-815

**தகவல் கோரல்—**

(அ) தமிழ்நாட்டில் சில அரசியல் கட்சித் தலைவர்கள் உள்ளிட்ட சில உயர் அதிகாரிகளின் தொலைபேசிகளைத் தமிழ்நாடு காவல் துறை புலனாய்வுப் பிரிவு ஒட்டுக்கேட்பதாக வந்துள்ள பத்திரிகைச் செய்தி 815,816

திரு. கே.ஏ. செங்கோட்டையன் 815,816

(ஆ) உறுப்பினர்கள் திரு. கோ. அரி மற்றும் திரு. வி.பி. கலைராஜன் ஆகியோர் அவை நடவடிக்கைகளில் கலந்து கொள்ள அனுமதி வேண்டுதல் 864

திரு. கே.ஏ. செங்கோட்டையன் 864

**மானியக் கோரிக்கைகள், 2008–2009, விவாதமும் வாக்கெடுப்பும்**–தொடர்ச்சி 816-925

(அ) கோரிக்கை எண் 34—நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை–தொடர்ச்சி

(ஆ) கோரிக்கை எண் 42—ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

—தொடர்ச்சி

திரு. கு. செல்வம் 817-823

திரு. தி. வேல்முருகன் 823-832


—1

பக்கங்கள்

3. **மானியக் கோரிக்கைகள், 2008–2009, விவாதமும் வாக்கெடுப்பும்**–தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 34—நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை
(ஆ) கோரிக்கை எண் 42—ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை
—தொடர்ச்சி

| | |
|---|---|
| திரு. கரி. இராமசாமி | 832-840 |
| திரு. அ. ராஜன் | 840-843,845-849 |
| திரு. தா. மலரவன் | 850-852,855-864 |
| *மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின் | 860,861, 865-918,923 |

4. **அறிவிப்பு**—

உறுப்பினர்களுக்கு, நகராட்சி நிருவாகம், குடிநீர் வழங்கல்—ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய வெளியீடுகள் நூல்கள் மற்றும் குறுந்தகடு வழங்குதல் 817,919

5. **பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** 925,926


# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## திருவள்ளுவர் ஆண்டு 2039, சித்திரை 4

## 2008 ஏப்ரல் 16, புதன்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"வானோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்
கோனோக்கி வாழுங் குடி."

உலகில் உள்ள உயிர்கள் வாழ்வதற்கு மழை தேவைப்படுவதுபோல ஒரு நாட்டின் குடிமக்கள் வாழ்வதற்கு நல்லாட்சி தேவைப்படுகிறது.

## 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா எண் 101, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**101—**

### தகவல் தொழில்நுட்பப் பூங்கா

***561—திரு. டி. செங்குட்டுவன்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்திய விடையை இங்கு தருகிறேன்.

கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூரில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைய ஒசூர் வட்டம், விசுவநாதபுரம் கிராமத்தில் 172.19 ஏக்கர் நிலம்

எல்காட் நிறுவனத்திற்கு உரிமை மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இதில் சிறப்புப் பொருளாதார மண்டலம் அமைக்க அரசு உத்தேசித்துள்ளது. இதற்கென எல்காட் நிறுவனத்தால் மத்திய அரசிடம் உரிய விண்ணப்பம் செய்யப்பட்டு, மத்திய அரசின் முறையான ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இங்கு தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைக்க எல்காட் நிறுவனத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன்.

**திரு. டி. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி 2007-2008 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை விவாதத்தின்போது கொடுக்கப்பட்ட கேள்வியாகும். மாண்புமிகு முதல்வர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் கடந்த 26-2-2008 அன்று தருமபுரியிலே நடைபெற்ற ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்ட விழாவிற்கு அடிக்கல் நாட்டி முடித்து, மாலையிலே கிருஷ்ணகிரியில் நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர் புதிய அலுவலகத் திறப்பு விழா மற்றும் புதிய பஸ் நிலையத் திறப்பு விழாவிலே, கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர், விசுவநாதபுரத்திலே சுமார் 200 ஏக்கர் நிலத்திலே I.T. Park அமைப்பதற்காக அவர்களுடைய திருக்கரங்களால் அடிக்கல் நாட்டி இருக்கிறார்கள். அதற்காக மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களுக்கும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தளபதியார் அவர்களுக்கும் எங்களுடைய மாவட்ட மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் எப்போதெல்லாம் முதல்வராகப் பொறுப்பேற்கிறாரோ, அன்று முதல் தமிழகத்திலே தொழில் வளம் பெருகுகின்ற நிலையைப் பார்க்கிறோம். எங்கள் மாவட்டத்தில் நான் சொல்ல வேண்டுமானால், 1972 ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் அவர்கள் முதல்வராகப் பொறுப்பேற்றபோதுதான் ஓசூரிலே முதல் சிப்காட் அமைத்துத் தந்தார்கள். . .

**மாண்புமிகு பேரவைத்** [illegible] திரு. செங்குட்டுவன், கேள்வியை மட்டும் கேளுங்கள்.

22840
சென்னை-600 008





**திரு. டி. செங்குட்டுவன்:** முதல் சிப்காட், இரண்டாவது சிப்காட் உள்ளிட்ட அத்தனை திட்டங்களையும் தலைவர் கலைஞர் அறிவித்திருக்கிறார்கள். இன்றைக்குத் தலைவர் கலைஞருடைய ஆட்சியில் தொழில் முதலீட்டாளர்கள் எல்லாம் வேகமாகத் தமிழகத்தை நோக்கி வருகின்ற வேளையில், கிருஷ்ணகிரியிலே தேசிய நெடுஞ்சாலை செல்கின்ற அந்தப் பகுதியில் சுமார் 200 ஏக்கர் அரசு நிலம் உள்ள காரணத்தால், மேற்படி அரசு நிலத்திலே அரசின் சார்பிலே மேலும் ஒரு I.T. Park அமைக்கின்ற திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைக்கின்ற அந்தக் கேள்விக்கு நான் அளித்த பதிலில், ஒரு தொழில்நுட்பப் பூங்கா அமைவதுபற்றித்தான் கூறியிருக்கிறேன். அவர்கள் இன்னொரு பூங்காவிற்கு ஆசைப்படுகிறார்கள். அதுபற்றிப் பிறகு பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன்.

**திரு. டி. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களுடைய பதிலுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில அளவிலிருந்து மாவட்ட அளவில் புதியதாகத் தொழில்நுட்பப் பூங்கா துவங்கப் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. அதே நேரத்தில், கடந்த நிதியாண்டில் 2007-2008-ல் மென்பொருள் ஏற்றுமதி மற்றும் வர்த்தகம்மூலமாக எத்தனை ஆயிரம் கோடி ரூபாய் மாநில அரசிற்கு வருமானம் வந்தது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 9-35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மென்பொருள் ஏற்றுமதியைப் பொறுத்தவரையில்,

ஆண்டுவாரியாகச் சொல்லப் போனால், அண்மையிலே உள்ள ஆண்டுகள் என்ற கணக்கில், 2005-2006 ஆம் ஆண்டில் 14,400 கோடி ரூபாய் என்றும், 2006-2007 ஆம் ஆண்டில் 21,700 கோடி ரூபாய் என்றும், இப்போது 2007-2008 ஆம் ஆண்டில் 26,000 கோடி ரூபாயாகவும் உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையில் I.T. பூங்கா வேண்டுமென்று கேட்டபோது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மதுரைக்கு மாத்திரமல்லாமல், பல்வேறு மாவட்டங்களுக்கு அறிவித்தார்கள். அங்கெல்லாம் பூங்காக்கள் மணம் பரப்பத் தொடங்கிவிட்டன. மதுரையில் விரைவில் அடிக்கல் நாட்டப்படும் என்று சென்ற முறை அறிவித்திருந்தார்கள். அது எப்போது நிகழும் என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூர், திருச்சி, மதுரை, சேலம் மற்றும் நெல்லை ஆகிய நகரங்களில் தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா அமைப்பதற்கான நடவடிக்கைகள் ELCOT நிறுவனத்தின்மூலமாக மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அதிலே, கோயம்புத்தூர் நகரத்தில் அதற்கான அடிக்கல் நாட்டு விழா ஏற்கெனவே நடைபெற்றிருக்கிறது. திருச்சி, மதுரை, சேலம் ஆகிய நகரங்களிலும் தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள் அமைய விரைவான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன. மதுரையைப் பொறுத்தவரையில், இரண்டொரு வாரங்களில் அங்கே இந்தத் தொழில்நுட்பப் பூங்கா தொடங்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென் மாவட்ட மக்களினுடைய நலனில் அக்கறைகொண்ட மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், 2000 ஆம் ஆண்டில் நாங்குநேரியிலே ஒரு உயர் தொழில்நுட்பப் பூங்கா, சிறப்புப்



பொருளாதார மையத்தை ஏற்படுத்தினார்கள். கடந்த ஐந்தாண்டு காலமாகத் தொய்விலே இருந்ததை, மாண்புமிகு முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள், தென் மாவட்ட மக்களினுடைய வாழ்வில் ஒளியேற்றும்வண்ணம், மீண்டும் கடந்த வாரம் அதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தியதற்கு இந்த அவையிலே தென் மாவட்ட மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதோடு, ராதாபுரத்திலே இந்து சமய அறநிலையத் துறைக்குச் சொந்தமாக 4,000 ஏக்கர் நிலம் உள்ளது. தமிழகம் இதுவரை இல்லாத அளவிற்கு மிகப் பெரிய அளவில் தொழிலில் முன்னேற்றம் அடைந்து, இந்தியாவிலேயே முதலிடம் என்ற நிலைக்குக் கொண்டு வந்திருக்கின்ற நம்முடைய முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள், ராதாபுரத்தில் இந்து சமய அறநிலையத் துறைக்குச் சொந்தமாக இருக்கின்ற அந்த 4,000 ஏக்கர் நிலத்திலே புதிதாக ஏதேனும் ஒரு தொழில் தொடங்க முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென் மாவட்டங்களில் வளத்தை உருவாக்குவதற்கும், செழிப்பை உருவாக்குவதற்கும் என்னென்ன ஏதுவான வாய்ப்புகள் இருக்கின்றன என்பதை ஆய்ந்து அறிவிக்கும்படி ஏற்கெனவே இந்த அரசின் சார்பாக, ஓய்வுபெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதி திரு. ரத்தினவேல் பாண்டியன் அவர்கள் தலைமையிலே ஒரு குழு அமைக்கப்பட்டு, அந்தக் குழுவிலே சென்றவர்கள் இவற்றையெல்லாம் ஆய்வு செய்து, சில, பல திட்டங்களை அரசுக்கு அறிவித்திருக்கிறார்கள். அந்தத் திட்டங்களிலே ஒன்று, நாங்குநேரி. நாங்குநேரித் திட்டம் தொடங்கப்பட்டு, இடையிலே நின்று, இப்போது மீண்டும் தொடங்கப்படுவதற்கான அறிகுறிகள் தோன்றி, அதற்கான ஆரம்பம் கடந்த வாரத்திலே ஒரு ஒப்பந்தம்மூலமாகத் தரப்பட்டிருக்கிறது. எனவே, நாங்குநேரியைத் தொடர்ந்து, தென் மாவட்டங்களிலே பல செழிப்பான திட்டங்களை உருவாக்க இந்த அரசு முன்வரும் என்பதை உறுதிபடத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி.

முற்பகல் 9-40

**டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மற்றும் முக்கிய நகரங்களின் அருகில் தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள் அதிகரித்து வருவதால் மக்களின் பழக்க வழக்கங்கள், life-style ஒரு புறம் மாறிக்கொண்டே வருகின்றது. அது மட்டுமல்லாமல், ஆயிரம் சதுர அடி வீட்டுக்கு இப்போது வீட்டு வாடகை 15 ஆயிரத்திலிருந்து 20 ஆயிரம் ரூபாயாக உயர்ந்துள்ளது. ஏழைகளும், நடுத்தர மக்களும் இனி வருங்காலத்தில் இந்த நகரங்களில் எப்படி வாழ்வது என்ற எண்ணத்திற்குத் தள்ளப்பட்டுள்ளார்கள். ஆகவே, இந்தத் தொழில்நுட்பப் பூங்காக்களை இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை நகராட்சிகளின் அருகில் அமைத்து, அதற்கான அடிப்படை வசதிகளைச் செய்து தர இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது தொழில் வளர்ச்சிக்குரிய கேள்வி அல்ல. பரிசீலனைக்கு உரிய கேள்வி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை, திருச்சி, மதுரை, சேலம், நெல்லை ஆகிய மாவட்டங்களில் தொழில்நுட்பப் பூங்காக்கள் தொடங்கப்படும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்து, அதற்குரிய பணிகளும் தொடங்கிக்கொண்டிருக்கிற வேளையில், இதேபோல, நமது ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டத்தில் இப்படிப்பட்ட தொழில் பூங்காக்கள் தொடங்கப்பட வேண்டுமென்று நான் பல முறை கேள்வி எழுப்பியிருக்கிறேன். அது டெல்டா பகுதி என்ற காரணத்தால், முற்றிலும் விவசாயத்தையே சார்ந்திருக்கிற பகுதி என்ற காரணத்தைக் காட்டி, எந்தத் தொழிலும் வர இயலாத நிலை ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. ஆனால், ஆயிரக்கணக்கான இளைஞர்கள், படித்தவர்கள், பட்டதாரிகள் வெளி மாவட்டங்களுக்கும், வெளி மாநிலங்களுக்கும் வேலைக்காகச் செல்ல வேண்டிய சூழ்நிலையில் இருக்கிறார்கள். பொறியியல் கல்லூரிகள், தொழிற்கல்வி நிலையங்கள் ஏராளமாக அந்த மாவட்டத்தில் இருக்கின்றன. சாலை வசதி, விமானப்



போக்குவாத்து வசதி போன்ற வாய்ப்புகள் எல்லாம் இருக்கிற காரணத்தாலே, ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டத்தில் தொழில்நுட்பப் பூங்கா தொடங்குவதற்கான முயற்சியை மாண்புமிகு முதல்வர் அவர்கள் மேற்கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொன்ன இந்த வரிசை நிறைவுபெற்றதும், அடுத்து தஞ்சையில்தான் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.கே. போஸ்.

**திரு. ஏ.கே. போஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையில் தொழில்நுட்பப் பூங்கா அமைப்பதாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அது இலந்தைகுளம் என்ற பகுதியிலா அல்லது காமராஜர் யுனிவர்சிட்டி அருகிலா? எந்தப் பகுதியில் ஆரம்பிக்கப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலந்தைகுளம் பகுதியில் அமைக்கத்தான் ஆய்வு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு எந்தப் பகுதி என்பது குறித்து அழைப்பு அனுப்பப்படும். தவறாமல் அவர் வருகை தர வேண்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 102, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். அன்பழகன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**102—**

## உழவர் சந்தை

***22454—திரு. எம். அன்பழகன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனி உழவர் சந்தையில் மேலும் 15 புதிய கடைகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பழனி உழவர் சந்தையில் 15 புதிய கடைகள் அமைக்கும் திட்டம் நடவடிக்கையில் உள்ளது. புதிதாக 15 கடைகள் அமைப்பதற்கு ரூபாய் 3.25 இலட்சத்திற்கு மதிப்பீடு அனுப்பப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். அன்பழகன்.

**திரு. எம். அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு மிக்க நன்றி. மேலும், பழனி உழவர் சந்தைக்கு அகன்ற திரையுடைய digital display மற்றும் computer வசதிகளை வழங்கி இந்தியாவின் அத்தனை நகரங்களில் உள்ள விலையைக் கண்டறியக்கூடிய அளவுக்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அவற்றை நிறுவுவதற்குத் தனியாக ஒரு அறை அமைத்துத் தந்து, ஓசூரில் வழங்கியதுபோல் digital தராசுகளும் வழங்குவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழனி உழவர் சந்தையில் ஏற்கெனவே 60 கடைகள் செயல்பட்டு வருகின்றன. இந்தக் கடைகள்மூலம் சராசரியாக நாளொன்றுக்கு 70 விவசாயிகளால் 8,321 கிலோ காய்கறி கொண்டு வரப்பட்டு, ரூபாய் 81,241 மதிப்புள்ள காய்கறிகள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. இதனால் நாளொன்றுக்கு 2,081 நுகர்வோர்கள் பயனடைந்து வருகிறார்கள். தற்போது மேலும் 15 கடைகளைக் கூடுதலாகக் கட்டினால், 70 விவசாயிகளுக்குப் பதிலாக 90 விவசாயிகள் வரை காய்கறிகளைக் கொண்டு வருவார்கள் என்ற அந்தத் தகவல் இருக்கிறது.





முற்பகல் 9-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி.

**திரு. அர. சக்கரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் நான்காவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்ற சமயத்தில், ஒட்டன்சத்திரத்தில் மெகா உழவர் சந்தையும், குளிர்பதனக் கிடங்கும் அமைப்பதற்கு அனுமதி வழங்கி, அன்றைக்கு இன்றைய வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களும், வருவாய்த் துறை அமைச்சர் அவர்களும் வந்து அடிக்கல் நாட்டிவிட்டுச் சென்றார்கள். இடையிலே வந்த அரசு அந்தத் திட்டத்திற்கு முன்னுரிமை கொடுக்கவில்லை. மீண்டும் நமது முதல்வர், தலைவர் கலைஞர் அவர்கள் ஐந்தாவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பின்பு, இப்போது அந்தத் திட்டத்திற்கு நிதி ஒதுக்கி, அந்தப் பணி முடியும் தருவாயில் உள்ளது. ஆனால், குளிர்பதனக் கிடங்கு அமைக்கின்ற பணி இன்னும் நிறைவேற்றப்படவில்லை. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் தன்னுடைய மானியக் கோரிக்கையிலே, தமிழ்நாட்டில் மிக முக்கியமான 22 உழவர் சந்தைகளில் குளிர்பதனக் கிடங்குகள் அமைக்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். ஒட்டன்சத்திரத்திலே மிகப் பெரிய காய்கறி மார்க்கெட் உள்ளது. எனவே, விவசாயிகளின் நலன் கருதி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு ஒட்டன்சத்திரத்திலே குளிர்பதனக் கிடங்கு அமைப்பதற்கு முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான்காவது முறையாக தமிழகத்திலே தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றிருந்த அந்தக் காலத்திலேதான் ஒட்டன்சத்திரத்திலே மெகா உழவர் சந்தை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு, நிதியும் ஒதுக்கப்பட்டது. அதற்குப் பின்னால், தொடர் நடவடிக்கை எடுக்கப்படாத காரணத்தினால் இப்பொழுது மீண்டும் முதல்வராக தலைவர் கலைஞர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு ஆய்வு நடத்தி, அந்த மெகா உழவர் சந்தையை விரைவாகக் கட்டி முடிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு, பணிகள் தொடங்கப்பட்டு, முடியும் தருவாயில் இருக்கின்றன. குளிர்பதனக் கிடங்கு அமைக்கின்ற திட்டம் இதிலே

சேர்க்கப்படவில்லை. அதைத் தனியாகத்தான் பரிசீலிக்க முடியும். மற்ற உழவர் சந்தைகளிலே, 22 உழவர் சந்தைகளில், தமிழகத்திலே நாளொன்றுக்கு 15 டன்னுக்கு மேலே வரக்கூடிய காய்கறிகள் உள்ள சந்தைகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, அந்த 22 உழவர் சந்தைகளிலேதான், விவசாயிகள் கொண்டு வரக்கூடிய காய்கறிகள் விற்பனை ஆகாமல் இருந்தால், அந்தக் கிடங்குகளிலே வைக்கின்ற அளவுக்கு சிறிய அளவிலே அந்தக் குளிர்பதனக் கிடங்குகள் அமைக்கப்பட இருக்கின்றன. ஒட்டன்சத்திரத்திற்கென்று தனியாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பியிருக்கின்ற கேள்வியையொட்டிப் பரிசீலிக்கப்படும்.

இன்னொன்று, நிதியைப்பற்றிக் கவலையில்லை. இந்தக் குளிர்பதனக் கிடங்கு அமைப்பதற்குத் தொழில்நுட்ப ஆலோசனைகள், அதே நேரத்திலே கட்டுமானப் பணிகளிலே ஈடுபடக்கூடியவர்களிடம் டெண்டர்கள் கோரப்பட்டால் உடனடியாகத் தகுதியானவர்கள் முன்வருவதில்லை. அதனாலேதான் இதுபோன்ற காலதாமதம் ஏற்படுகிறது. இல்லாவிட்டால், அறிவித்த அந்த நிதியாண்டிலேயே குளிர்பதனக் கிடங்குகள் கட்டுவதற்கான நடவடிக்கையும் எடுக்கலாம். ஆகவே, விரைவாக குளிர்பதனக் கிடங்குகள் கட்டுவதற்கான நடவடிக்கையை இந்த அரசு எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 103, மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. இராஜேந்திரன், மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**103—**

## ஆற்றின் கரைகள்

***14544—திரு. சபா. இராஜேந்திரன்:**

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லிக்குப்பம் தொகுதி, தென்பெண்ணை ஆற்றின் கரையைப் பலப்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:** பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மத்திய அரசால் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு நேரடியாக நிதி வழங்கப்படும். ராஷ்டிரிய சுவயம் விகாஸ் யோஜனா திட்டத்தின்கீழ் இப்பணி செயல்படுத்தப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. இராஜேந்திரன்.

**திரு. சபா. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருடந்தோறும் மழைக் காலங்களிலே, கண்டரக்கோட்டையிலிருந்து புலவனூர், மேல்குமாரமங்கலம், பகண்டை, பட்டாம்பாக்கம் போன்ற கிராமங்கள் சாதாரண மழையிலேகூட, தென்பெண்ணை ஆற்றின் கரை மிகவும் பலவீனமாக இருக்கின்ற காரணத்தினால், அந்தப் பகுதியிலுள்ள பல ஆயிரம் ஏக்கர் விவசாயிகளுடைய நிலம் பாழடைந்து விடுகின்றது. அதனால், பொருள் சேதமும், பயிர்ச் சேதமும் ஏற்படுகின்றது. அரசு பல இலட்சம் ரூபாயை நஷ்ட ஈடாக வழங்கி வந்தாலும், அந்த நிவாரணம் விவசாயிகளுக்குப் போதுமானதாக இருப்பதில்லை. எனவே, அவசர அவசியம் கருதி இந்த ஆண்டே அந்தத் திட்டத்தை எடுத்து அரசு செயல்படுத்துமா, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் செயல்படுத்த முன்வருவாரா என்பதைப் பேரவைத் தலைவர்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

*முற்பகல் 9-50*

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, கண்டரக்கோட்டையிலிருந்து மேல்குமாரமங்கலம் வரையில் 3.6 கிலோ மீட்டர் தூரத்திற்கு ரூபாய் 450 இலட்சத்திற்கும், மேல்குமாரமங்கலம் முதல் மேல்பட்டாம்பாக்கம் வரையில் 3.6 கிலோ மீட்டர் முதல் 6.50 கிலோ மீட்டர் வரையில் ரூபாய் 635 இலட்சத்திற்கும் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. விரைவில் நிதி கிடைத்தவுடன் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. இராஜேந்திரன்.

[2008 ஏப்ரல் 16

**திரு. சபா. இராஜேந்திரன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய அறிவிப்புக்கு நன்றி. நெல்லிக்குப்பம் தொகுதியைப் பொறுத்தவரையில், ஒரு பக்கம் தென்பெண்ணை ஆறு என்று சொன்னால், அடுத்த பக்கம் இருக்கிற கெடிலம் ஆற்றின் கரைகளும் பலவீனப்பட்டு இருப்பதனால், மல்லவராயன் நத்தம், குச்சிப்பாளையம், கீழஅருங்குணம் போன்ற பகுதிகளும் அடிக்கடி பாதிக்கப்படுகின்றன. அந்தப் பகுதிகளில் ஆற்றின் கரைகளைப் பலப்படுத்தி விவசாயிகளுடைய குறைகளைப் போக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, கெடிலம் ஆற்றின் கரைகளிலே பலவீனமாக இருக்கின்ற இடங்களில் பலப்படுத்துவதற்காக அரசினுடைய பரிசீலனையில் மட்டுமல்ல, செயல்பாட்டுக்குரிய திட்டத்திலும் அவை இருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேட்க விரும்பியது, இதற்கு முன்பு எழுப்பப்பட்ட கேள்விக்கு சம்பந்தமானது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரைகளைப் பலப்படுத்துகின்ற பணியினை அரசு தீவிரப்படுத்திச் செய்வதிலே நாங்கள் மகிழ்ச்சியடைகின்றோம். அதே நேரத்திலே, நீர்வரத்து வரக்கூடிய கால்வாய்களில், லைனிங் என்று சொல்லப்படுகின்ற நீர்வரத்து குறையாமல் பார்த்துக்கொள்கின்ற அந்த சிமெண்ட் தளங்களை அமைப்பதற்கு அரசு முன்வருமா என்று தங்கள்மூலமாக அறிய விரும்புகின்றேன். உதாரணமாக, கிருஷ்ணா கால்வாய்த் திட்டத்திலே நம்முடைய சத்திய சாய்பாபா அவர்கள் உருவாக்கிக் கொடுத்த திட்டம் எந்த அளவிலே இருக்கிறது என்பதையும் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.



2008 ஏப்ரல் 16]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, வரத்துக் கால்வாய்களுக்குக் கீழே சிமெண்ட் போட்டுவிட்டால், பூமியிலே நீர் ஊறாது. பக்கத்திலே இருக்கிற வயல்களுக்குத் தண்ணீர் போகாது. நிலத்தடி நீருக்கு உதவாது. ஆகையினால், எல்லா ஏரிகளுக்கும், வரத்துக் கால்வாய்களுக்கு அடிதளத்திலே சிமெண்ட் போடுவது சரியல்ல. நம்முடைய கிருஷ்ணா கால்வாயைப் பொறுத்தவரையில், 60 கோடி ரூபாய் திட்டத்தில் ஸ்ரீ சத்திய சாய்பாபா அவர்களுடைய டிரஸ்டின்மூலம் பணிகள் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன. மிகவும் மோசமாக இருக்கிற பகுதிகளில் கரைகளை மீண்டும் பலப்படுத்துகிற பணி நடந்துகொண்டிருக்கிறது. இப்பொழுதுதான் தண்ணீர் நின்று இருக்கிறது. ஆகையினாலே வேலைகள் மீண்டும் வேகமாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. தங்கமணி.

**திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரி ஆற்றில் வெள்ளம் வருகின்றபோது, பள்ளிபாளையத்தில் காவிரி ஆற்றின் அருகே இருக்கின்ற குடிசைகளில் எல்லாம் வெள்ளம் புகுந்துவிடுகின்றது. அதற்கு இரண்டு ஃபர்லாங் தூரம்தான் வரும். காவிரி ஆற்றுப் பகுதிகளில் கரை எழுப்பப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவரின்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, காவிரி ஆற்றுக்கே கரையா? சரி, பரவாயில்லை. இருந்தாலும், 2005 ஆம் ஆண்டிலே மிகப் பெரிய ஒரு மழை பெய்து, மாயனூரிலேயிருந்து கல்லணை வரையில், கல்லணைக்குக் கீழே இருக்கிற காவிரிக் கரையிலே உடைப்புகள் ஏற்பட்டுவிட்டன. ஆகையினால்தான், ஸ்ரீரங்கம் நகரே மூழ்குகிற நிலைக்கு வந்தது. நாட்டார்கால்வாயிலே தண்ணீர் கரை புரண்டு ஓடியது. ஆகையினாலே, ஸ்ரீரங்கம், திருச்சி—எது ஸ்ரீரங்கம், எது காவிரி, எது கொள்ளிடம் என்று தெரியாமல் இருந்த நிலை இருந்தது. அவற்றையெல்லாம் பலப்படுத்துவதற்காகத்தான் மாயனூரிலேயிருந்து

[2008 ஏப்ரல் 16

கல்லணை வாயிலே இருக்கிற கால்வாய்களைப் பலப்படுத்துவதற்குக் கலைஞருடைய அரசு, இந்த ஆண்டு 211 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறது என்பதோடு, மேலும், அதற்கு இப்பொழுது 50 கோடி ரூபாய் கூடியிருக்கிற காரணத்தால் 250 கோடி ரூபாய்க்கு மேலே இப்பணிகள் மேற்கொள்ளப்படும் என்ற விவரத்தை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் அவருடைய நிதிநிலை அறிக்கையிலும் படித்திருக்கிறார்; என்னுடைய மானியக் கோரிக்கையிலும் அதைப்பற்றித் தெளிவாகத் தெரிவித்திருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. உதயசூரியன்.

முற்பகல் 9-55

**திரு. தா. உதயசூரியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், ஆற்றின் கரைகளைப் பலப்படுத்துவதாகச் சொல்லியிருக்கின்றார்கள். அதேபோல, நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சியில் பல்வேறுவகைகளில் பல்வேறு ஏரிகளைத் தூர் வாருகின்ற நிகழ்ச்சி அமைந்துள்ளது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாவட்ட நீர்ப்பாசனக் கருத்தரங்குகளை அமைத்து—கொட்டாங்கச்சி போன்று இருந்த ஏரிகள் தாம்பாளத் தட்டுப் போன்று ஆகிவிட்டன—இவற்றைத் தூர் வார வேண்டுமென்று, நம்முடைய கலைஞர் அவர்கள் ஆட்சியில் பணிகள் நடைபெற்று வருகின்றன. அதேபோல, அணைக்கட்டுகளையும் தூர் வாரி, அவற்றின் கரைகளைப் பலப்படுத்தினால், மழைக் காலங்களில் வருகின்ற நீரைத் தேக்கி வைப்பதற்கு வாய்ப்பாக இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் சொல்லி முடியுங்கள்.

**திரு. தா. உதயசூரியன்:** அணைகளுடைய கரைகளும் வலுவாக இருக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், கள்ளக்குறிச்சி கோமுகி அணையையும், மணிமுத்தா அணையையும் தூர் வாருவதற்கு முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர்



2008 ஏப்ரல் 16]

அவர்களே, உறுப்பினர் அவர்கள் கடைசியாகச் சொன்னதை மட்டும் கேட்டிருக்கலாம். பொதுவாக ஏரிகளைத் தூர் வாருவதை ஆண்டுக்காண்டு maintenance நிதியிலேயிருந்து செய்கிறோம். உலக வங்கியின் நிதியை வாங்கி, 5,000 ஏரிகளைத் தூர் வாருவதற்கான திட்டங்கள் தயாரிக்கப்பட்டு, ஒவ்வொரு basin-களாக எடுத்து, பணியாற்றிக்கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்து, அவருடைய தொகுதி சம்பந்தப்பட்டது. அதுகுறித்து அவர்கள் தனியாகக் கடிதம் தந்தால், அவை எந்த நிலையில் இருக்கின்றன என்பதை நான் தெரிவிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 104, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. துரைராஜ், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**104—**

## பேருந்து வசதி

***29844—திரு. சி. துரைராஜ்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தேனி மாவட்டம், வருசநாடு, மயிலாடும்பாறை முதல் மதுரை மாவட்டம், மள்ளப்புரம், ஏழுமலை வழியாக உசிலம்பட்டிக்கு மலைச் சாலையில் பேருந்து இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வருசநாடு-உசிலம்பட்டி வழித்தடத்தில் தாழையூத்து முதல் மல்லப்புரம் வரையிலான மலைவழிச் சாலை வனத் துறைக்குச் சொந்தமானதாகும். மேலும், மேற்படி சாலை பல இடங்களில் மிகவும் குறுகலாகவும், குறுகிய வளைவுகளாகவும், தடுப்புச் சுவர்கள் இன்றியும் சாலையில் அரிப்பு ஏற்பட்டு, பேருந்து இயக்க இயலாத நிலையில் உள்ளது. எனவே, மேற்படி மலைவழிச் சாலையைச் செப்பனிட்டுச் சரி செய்தபின், பேருந்து இயக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. துரைராஜ்.

**திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மல்லப்புரம்-மயிலாடும்பாறை சாலை என்பது, சுமார் 23 கிலோ மீட்டர் தூரம் உள்ளது. இதில் 16 கிலோ மீட்டர் தூரம் மலைப் பகுதியில் அமைந்துள்ளது. இதிலே 14 கிலோ மீட்டர் தூரம் நெடுஞ்சாலைத் துறையினுடைய கட்டுப்பாட்டில் உள்ளது. மீதமுள்ள 2 கிலோ மீட்டர் தூரம் வனத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது. கடந்த காலங்களில் அந்தச் சாலை வழியாகப் பேருந்து இயக்குவதற்கு அனுமதி கேட்டபோது, அங்கே சாம்பல் நிற அணில்கள் இருக்கின்ற காரணத்தினால், தார்ச் சாலை அமைக்க இயலாது, பேருந்து செல்ல அனுமதிக்க முடியாது என்று வனத் துறையினர் சொன்னதன்பேரில், உரிய அதிகாரிகளிடம் அனுமதி கேட்டு, அந்த இரண்டு கிலோ மீட்டர் தூரமுள்ள சாலையை சிமென்ட் சாலையாக அமைத்து, கடந்த ஆட்சியின்போது, சோதனை ஓட்டமாக ஒரு வார காலத்திற்குப் பேருந்து இயக்கப்பட்டது. பெரிய பேருந்துகளாக இருக்கின்ற காரணத்தினால், வளைவுகளில் பேருந்துகளை இயக்க இயலவில்லை. சிறிய பேருந்துகளாக இருந்தால் இயக்கலாம் என்று போக்குவரத்துத் துறையின் தேனி கோட்டத்தினுடைய மேலாளர் அவர்கள் கூறியதன்பேரில், ஒரு வார காலத்திற்குப் பேருந்து இயக்கப்பட்டு, நிறுத்தப்பட்ட நிலையில் உள்ளது. எனவே, தினமும் அந்தச் சாலையின் வழியாகத் தனியாருக்குச் சொந்தமான மினி வேன்களில் சுமார் பத்துக்கும் மேற்பட்ட seated வேன்களில் ஆயிரக்கணக்கானோர் பயணம் செய்கிறார்கள். அந்தச் சாலை இரண்டு மாவட்டங்களையும் இணைக்கின்ற ஒரு முக்கியமான சாலையாகும். எனவே, பொது மக்களுடைய நன்மையைக் கருதி, மலைப் பகுதிகளில் செல்கின்ற சிறிய பேருந்துகளைப்போல சிறிய பேருந்துகளைவிட்டு, மக்களுடைய போக்குவரத்துப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டி-மயிலாடும்பாறை-வருசநாடு ஆகிய வழித்தடங்களில், உசிலம்பட்டியிலிருந்து அரசு மற்றும் தனியார் பேருந்துகள்மூலம் தினசரி 16 நடைகள் நேரடிப் பேருந்து வசதி கடமலைக்குண்டு விலக்கு வழியாக உள்ளது. கடமலைக்குண்டு விலக்கு மற்றும் தேனியிலிருந்து மயிலாடும்பாறை மற்றும் வருசநாடு ஆகிய இடங்களுக்கு 124 நடைகள் நேரடிப் பேருந்து வசதிகள் உள்ளன.





வருசநாடு-உசிலம்பட்டி வழித்தடத்தில் தாழையூத்து முதல் மல்லப்புரம் வரையிலான 11 கிலோ மீட்டர் தூரமுள்ள மலைவழிச் சாலை, வனத் துறைக்குச் சொந்தமானதாகும். மேற்படி சாலை பல இடங்களில் மிகவும் குறுகியதாகவும், குறுகிய வளைவுகளாகவும் உள்ளதால்தான் பேருந்துகளை இயக்க முடியாத நிலை இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இந்த வாரம் நம்முடைய அதிகாரிகளை அங்கு அனுப்பி, பேருந்து இயக்குவதற்கு எந்த அளவிற்கு வாய்ப்பு இருக்கிறது என்பதை அறிந்து, சிறிய பேருந்துகளாக ஓட்டமுடியும் என்று கருதினால், இந்த முறை பேருந்துகளை வாங்குகின்றபோது, சிறிய பேருந்துகளையும் வாங்கி, தங்கள் பகுதிக்குப் பேருந்து வசதி செய்து தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. துரைராஜ். நன்றி சொல்லிவிட்டு, உட்காருங்கள். வேறென்ன வேண்டும்? பேருந்து வசதி செய்து தரப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொல்லிவிட்டார்கள் அல்லவா?

**திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டியிலேயிருந்து மயிலாடும்பாறைக்குச் செல்வதாக இருந்தால், சுமார் 65 முதல் 70 கிலோ மீட்டர் தூரம் ஆகும். அதாவது, கடமலைக்குண்டு விலக்கு, கண்டமனூர் விலக்கு, கடமலைக்குண்டு, மயிலாடும்பாறை வழியாக மேற்கண்ட இடங்களுக்குச் செல்வதற்கு சுமார் 65 கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டும். நான் சொல்கின்ற பாதையிலே, மல்லப்புரம், மயிலாடும்பாறை வழியாகச் செல்வதாக இருந்தால், உசிலம்பட்டியிலேயிருந்து சுமார் 45 கிலோ மீட்டர் தூரம்தான் செல்லவேண்டியிருக்கும். எனவே, எரிபொருள் சிக்கனம், போக்குவரத்துப் பயணத்தினுடைய நேரக் குறைவு இவற்றையெல்லாம் மனதிலேகொண்டு, நம்முடைய அமைச்சர் அவர்களின் விரைவான நடவடிக்கையின்மூலம் அந்தப் பகுதியிலே பேருந்து இயக்குவதற்கு முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

*முற்பகல் 10-00*

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டியிலிருந்து ஏழுமலை, ஏழுமலையிலிருந்து எம்.

கல்லுப்பட்டி, பின்னர், மல்லப்புரம், தாழையூத்து, முத்தாலம்பாறை, மூலக்கடை, மயிலாடும்பாறை என்று அந்த மயிலாடும்பாறை என்ற அந்தப் பாதை இப்பொழுது குறிப்பிடப்பட்டிருக்கிறது. நான் ஏற்கெனவே சொன்னதுபோல அதிகாரிகளை அனுப்பி ஆய்வு செய்து, சரியாக இருக்குமானால் பேருந்து இயக்குவதற்குரிய முயற்சியை இந்த அரசு எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு சென்னை மாநகரப் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் சுற்றுலாப் பயணிகளுக்கு வசதியாக, சென்னை மாநகரத்திலே இருக்கிற சுற்றுலாத் தலங்களைப் பார்ப்பதற்கும், அதேபோல, சென்னையிலிருந்து மகாபலிபுரம், பாண்டிச்சேரி வரை சுற்றுலாப் பேருந்து இயக்குவதற்கான திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா, அப்படி இயக்கினால் அரசுக்கு நல்ல வருவாய் கிடைக்கும். அது குறித்து அமைச்சருடைய பதிலைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது நீலகிரி மாவட்டம், ஊட்டியிலே ஒரு பேருந்து இப்பொழுது கோவை போக்குவரத்துக் கழகத்தின் சார்பாக முழுமையாகக் கண்ணாடி இழைகளால் body-கள் கட்டப்பட்டு இப்போது இயக்கப்பட்டு வருகின்றது. சென்னையிலே இருக்கின்ற, இங்கு வந்திருக்கிற சுற்றுலாப் பயணிகளைக் கவருவதற்காக hop on-hop off என்ற வகையிலே பெரியார் போக்குவரத்துக் கழகம், விழுப்புரம் போக்குவரத்துக் கழகத்தின் சார்பாக 5 பேருந்துகளுக்கு இப்பொழுது கூண்டு கட்டிக்கொண்டிருக்கிறார்கள். விரைவிலே அது இயக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 105, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். இராசசேகரன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.



**105—**

## மாணவர் விடுதி

***33401—திரு. எஸ். இராசசேகரன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குடி தொகுதி, வெட்டன்விடுதியில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஆலங்குடி தொகுதி, வெட்டன்விடுதியில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் ஆய்வில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். இராசசேகரன்.

**திரு. எஸ். இராசசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள் அதிக அளவில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். ஆகவே, அங்கு மட்டுமல்ல, இன்னும் பல பகுதிகள்—அமைச்சரிடம் நேரடியாக நான் சொல்லியிருக்கின்றேன். இந்த ஆண்டு வெட்டன்விடுதியில் அமைக்க முடியாவிட்டாலும், திருவரங்குளத்தில் ஒரு பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி அமைத்துத் தருவாரா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் என்னிடம் இந்தக் கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். ஆலங்குடி தொகுதியில்தான் தற்பொழுது 21 விடுதிகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. தமிழ்நாட்டிலேயே புதுக்கோட்டை

[2008 ஏப்ரல் 16

மாவட்டத்தில்தான் இந்த விடுதிகள் அதிகமாக உள்ளன. நிதிநிலைக்கு ஏற்றாற்போல, நம்முடைய உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். இராசசேகரன்.

**திரு. எஸ். இராசசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டம், என்னுடைய ஆலங்குடி தொகுதியில் அதிக அளவில் உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. அதேபோல, படிக்கின்றவர்களும் அதிக அளவில் இருக்கின்றார்கள். ஆகவே, அதிக அளவில் பள்ளிகள் உருவானதன் காரணமாக இந்த மாணவர் விடுதிகள் உருவாகியிருக்கின்றன. ஆகவே, மாணவர் விடுதி அதிக அளவில் இருக்கின்ற காரணத்தினால், நான் சொல்லுகின்ற இந்தப் பகுதியில் அறவே மாணவர் விடுதிகள் இல்லை. பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, சமுதாயத்தில் கீழ்த்தட்டில் இருக்கின்ற அந்த மாணவர்கள்தான் இங்கே படித்துக்கொண்டிருக்கின்றார்கள். ஆகவே, திருவரங்குளத்தில் ஒரு மாணவர் விடுதி அமைத்துத் தர அமைச்சர் மீண்டும் பரிசீலிப்பாரா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, இந்த ஆண்டோ, வருகிற ஆண்டோ நிதிநிலைக்கு ஏற்றாற்போல நம்முடைய உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இல. வேலுசாமி.

**திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தருமபுரி சட்டமன்றத் தொகுதியில் சோலைக்கொட்டாய், பாளையம்புதூர் போன்ற அரசு மேல்நிலைப் பள்ளிகளில் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்ந்து கொண்டிருக்கின்ற மாணவர்கள் படித்து வருகிறார்கள்.



2008 ஏப்ரல் 16]

அவர்களுடைய நலன் கருதி, அங்கே அவர்கள் தங்கிப் படிப்பதற்காக இந்த ஆண்டு விடுதி அமைத்துக் கொடுக்க அமைச்சர் ஆவன செய்வாரா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை அரசு கனிவுடன் வருங்காலத்தில் பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ராம. சுப்புராம்.

**திரு. ராம. சுப்புராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது திருமயம் சட்டமன்றத் தொகுதி, அரிமளம் ஒன்றியம் கீழாநிலைக்கோட்டை, ஒத்தைப்புளி குடியிருப்பு ஆகிய மேல்நிலைப் பள்ளிகளுக்கு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின்கீழ் விடுதிகள் அமைத்துத் தர வேண்டி கடந்த 2007 ஆம் ஆண்டு முன்னாள் அமைச்சர் அவர்களிடம் விண்ணப்பம் கொடுத்திருக்கின்றேன். இந்த ஆண்டு அமைத்துத் தருவதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும் இதேபோல அவரவருடைய தொகுதிக்குக் கேட்டிருக்கிறார்கள். எந்தப் பகுதிக்கு இந்த ஆண்டு முன்னுரிமை வழங்க வேண்டுமென்று அரசினுடைய ஆய்விலே வைத்து, தகுந்த நடவடிக்கையை நிச்சயமாக எடுப்போம்.

முற்பகல் 10-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** [illegible] உறுப்பினர் திரு. தா. மலாவன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

228410
சென்னை-600 008

[2008 ஏப்ரல் 16

**106—**

## திருக்கோயில் கோபுரம்

***30583—திரு. தா. மலரவன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர், அருள்மிகு கோணியம்மன் திருக்கோயிலுக்கு கோபுரம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கோவை, அருள்மிகு கோணியம்மன் திருக்கோயிலுக்குப் புதியதாக ஒரு கோடியே 10 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஏழுநிலை இராஜகோபுரம் கட்டுவதற்கு முடிவு செய்யப்பட்டு, ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, கடந்த 7-9-2007 அன்று அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது. அதில் நானும் கலந்துகொண்டு பணிகளைத் தொடங்கி வைத்திருக்கின்றோம். ஏறத்தாழ 20 சதவிகிதப் பணிகள் இப்பொழுது முடிக்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தங்கள் மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. மலரவன்.

**திரு. தா. மலரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி, நான் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னாலே கேட்டது. இப்போதுதான் வந்திருக்கிறது. அந்தக் கோணியம்மன் கோயில் என்பது கோவை மாநகரத்தினுடைய காவல் தெய்வமாக விளங்கிக் கொண்டிருக்கிறது. அந்தக் கோயிலுக்கு இராஜகோபுரம் கட்டுவதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டியதாகச் சொன்னார்கள். அது உண்மைதான். ஆனால், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலேயே 2006 ஆம் ஆண்டில் அதற்கு அடிக்கல் நாட்டப்பட்டது. அன்றைக்கு அமைச்சர்களாக இருந்த திரு. பொள்ளாச்சி ஜெயராமன் அவர்களும், திரு. செ.ம. வேலுசாமி அவர்களும் அங்கே வந்து அடிக்கல் நாட்டினார்கள். ஆனால், புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய



2008 ஏப்ரல் 16]

காலத்தில் செய்யப்பட்டது என்பது தெரியக்கூடாது என்பதற்காக, அடிக்கல் நாட்டப்பட்ட அந்த கோயிலுக்கு, அதே கோபுரத்திற்கு மீண்டும் ஒரு அடிக்கல் நாட்டு விழா நடத்தியதை இப்போதுதான் பார்க்கின்றோம். ஆனாலும் அங்கே அடிக்கல் நாட்டப்பட்டது என்றாலும், அதற்குரிய வேலை இன்னும் வேகமாக நடைபெறவில்லை; மிகவும் மந்தமான நிலையில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆகவே, அதை விரைவுப்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பணி தொடங்கப்பட்டு ஆறு மாதக் காலத்திற்குள் ஏறத்தாழ 20 சதவிகிதத்திற்கு மேற்பட்ட பணிகள் நடைபெற்றிருக்கின்றன. குறிப்பாக, அடித்தளப் பணிகளுக்கு சற்றுக் காலம் கூடுதலாக எடுக்கும். தற்போது நடைபெறுகின்ற பணிகள் வெகுவிரைவாக நடந்து முடிந்து, குடமுழுக்கு நடத்தப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. மலரவன்.

**திரு. தா. மலரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த இராஜகோபுரம் கட்டுவது என்பது—அன்றைக்கு அங்கே கடைகள் எல்லாம் இருந்தன. கடைக்காரர்கள் கடைகளைக் காலி செய்ய மாட்டோம் என்று சொன்னார்கள். சில கடைக்காரர்கள் நீதிமன்றத்திற்கெல்லாம் சென்றார்கள். அன்றைக்கிருந்த அதிகாரிகள் எங்களிடத்திலே வந்து, நீங்கள் மேயராக இருப்பதால் அவர்களைக் கூப்பிட்டுப் பேசுங்கள். அவர்கள் காலி செய்வார்கள் என்று சொன்னார்கள். நானும் அவர்களைக் கூப்பிட்டு, அவர்களைக் காலி செய்ய வைத்து, கோபுரம் கட்டியதற்குப் பிறகு உங்களுக்குக் கடைகள் எல்லாம் கட்டிக் கொடுக்கப்படும் என்று அவர்களிடத்திலே சொல்லி, அதன் பிறகுதான் அங்கு இராஜகோபுரம் கட்ட முடிந்தது என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்கின்றேன். அப்படி ஆன்மீகத்திலேயும், ஆலயங்களிலும் நல்ல ஈடுபாடுகொண்ட அதிகாரிகளை மாற்றாமல் அந்த கோயிலிலேயே இருக்கச் செய்ய வேண்டும் என்பதைக் கோரிக்கையாக நான் வைக்கின்றேன்.

அதேபோல, இப்போது மருதமலை கோயிலில் இராஜகோபுரத்தினுடைய பணி மந்த கதியிலே கிடக்கிறது. அதேபோல

ஆலூரில் இருக்கக்கூடிய அய்யன் கோயிலிலும், வாதாராஜப் பெருமாள் கோயிலிலும் இப்போது அங்கு பணிகள் சரியாக நடைபெறவில்லை. நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் அங்கே 10 இலட்சம் ரூபாய் வீதம் ஒவ்வொரு கோயிலுக்கும் நிதி ஒதுக்கி, டி.ஆர்.டி.ஏ.-வில் பொது மக்களின் பங்களிப்போடு, பணிகள் அங்கே நடைபெற்றன. அது மட்டுமல்லாமல், அந்த அய்யன் கோயிலில் இன்றைக்கு சுவர் இடிந்து கிடக்கிறது . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மலரவன், கேள்வியை மட்டும் கேளுங்கள்.

**திரு. தா. மலரவன்:** அதைச் சரி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே, அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் இதிலே கவனம் செலுத்தி, இந்த ஆலயங்களுடைய திருப்பணிகளைச் சிறப்பாகச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதைப்போல, கடந்த ஆட்சியில்தான் அறநிலையத் துறையிலே பணிகள் சிறப்பாகவும், விரைவாகவும் நடந்தன என்றும், தற்போது ஏதோ மந்த நிலை ஏற்பட்டு இருப்பதாகவும் குறிப்பிட்டுச் சொல்கிறார்கள். கடந்த ஆட்சியினுடைய பணிகளையும், இந்த ஆட்சியினுடைய பணிகளையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மனசாட்சியோடு ஒப்பிட்டுப் பார்த்தால், என்ன நிலவரம் என்பது அவருக்குத் தெரியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. சுப்ரமணியன்.

**திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது குளத்தூர் தொகுதி, நார்த்தாமலையில், புகழ்பெற்ற முத்துமாரியம்மன் கோயில் உள்ளது. அந்தக் கோயிலுக்குச் சொந்தமான குடவறைக் குளத்தில் 5-4-2008 அன்று சமீபத்தில் திருவிழா நடைபெற்றது. அந்தத் திருவிழாவிற்கு வந்திருந்த ஒரு மூதாட்டியும், அவருடைய பேத்தியும் அதில் விழுந்து இறந்துவிட்டார்கள். அதேபோன்று, 12-4-2008 அன்று மூன்று பள்ளி மாணவர்கள் அந்தக்



குளத்திலே தவறி விழுந்து இறந்துவிட்டார்கள். எனவே, அந்தக் குடவறைக் குளத்திற்கு சரியான பாதுகாப்பு வேலி அமைத்துத் தர இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விபத்துகளைத் தடுப்பதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் இதற்குத் தனியாகக் கேள்வி எழுப்பினால், விவரமாகப் பதில் சொல்வதற்கு ஏதுவாக இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை சார்பாக, தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கக்கூடிய கோயில்களுக்குக் கட்டுமானப் பணிகளுக்கு ரூ.25,000 தற்போது வழங்கப்பட்டு வருகிறது. கட்டுமானப் பொருட்களினுடைய விலை உயர்வு காரணமாக அதை 50,000 ரூபாயாக உயர்த்துவது நல்லது என நான் கருதுகிறேன். வரக்கூடிய காலத்தில் நமது துறை அது குறித்துப் பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்ட மக்கள் வாழக்கூடிய அந்தப் பகுதிகளில் 25,000 ரூபாய் அரசினுடைய உதவியின்பேரில் திருக்கோயில்கள் கட்டப்பட்டு வந்தன. அவை ஓரளவுக்குக் கணிசமான எண்ணிக்கையை எட்டியுள்ளன. இப்போது, ஆங்காங்கு அந்தக் கோயில்களைக் கட்டுவதற்கான கேள்விகள் சற்றுக் குறைவாகவே இருக்கின்றன. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய அந்தக் கோரிக்கையை ஏற்று, மாண்புமிகு முதல்வர் அவர்களோடு கலந்து பேசி உரிய அறிவிப்புகள் வெளியிடப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 107. மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**107—**

## கல்வி அலுவலகம்

***29425—திரு. சி. கோவிந்தசாமி:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூரை மையமாகக் கொண்டு முதன்மைக் கல்வி அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் 20-3-2008 அன்று சமர்ப்பித்த நிதிநிலை அறிக்கையில், திருப்பூரைத் தலைநகராகக்கொண்டு ஒரு புதிய மாவட்டம் அமைக்கப்படும் என்று அறிவித்தார்கள். இந்த மாவட்டம் அமைக்கப்பட்ட பின்னர், மாவட்டத்திற்கெனத் தனியாக ஒரு முதன்மைக் கல்வி அலுவலகம் அமைக்க ஏற்பாடுகள் செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுடைய அறிவிப்புக்கு நன்றி. தற்சமயம் திருப்பூரில் தொடக்க உதவிக் கல்வி அலுவலர் அலுவலகம் ஒன்று மட்டும் இருக்கிறது. திருப்பூர் நகர, ஒன்றியப் பகுதிகளில் சற்றேறக்குறைய 170 நடுநிலை, தொடக்கப் பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. 1,400-க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் அதில் பணியாற்றுகிறார்கள். ஆகவே, ஒரேயொரு உதவித் தொடக்கக் கல்வி அலுவலர் அந்தப் பள்ளிகளையெல்லாம் கண்காணிப்பதிலே நடைமுறையில் மிகப் பெரிய சாத்தியம் இல்லாத நிலை தொடர்ந்துகொண்டிருக்கிறது. இதனால், கல்வித் தரம்கூட பாதிக்கிற வாய்ப்பு இருக்கிற காரணத்தால், இந்த ஆண்டு அந்த உதவிக் கல்வி அலுவலர் அலுவலகம், திருப்பூரை இரண்டாகப் பிரிக்க வாக்கு,



தெற்கு என்று உருவாக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்திலே திருப்பூர் கல்வி மாவட்டத்தில்தான் அதிக அளவு பள்ளிகள் இருக்கின்றன. ஏறத்தாழ 1,100-க்கும் மேற்பட்ட பள்ளிகள் இருக்கின்றன. 41 சதவிகிதப் பள்ளிகள், கோவை மாவட்டத்தில் இருக்கக்கூடிய பள்ளிகள் திருப்பூர் கல்வி மாவட்டத்திலே இருக்கின்றன. 8 ஒன்றியப் பகுதிகள் அந்தக் கல்வி மாவட்டத்தின்கீழே வருகின்றன. எனவே, புதிதாக இந்த மாவட்டம் தொடங்கப்படுகிறபோது, முதன்மைக் கல்வி அலுவலகம் அமைக்கிறபோது, அங்கே இருக்கக்கூடிய கல்வி அமைப்பினுடைய நிர்வாக வசதிகளை reorganise செய்கின்ற ஒரு வாய்ப்பு வருகிறபோது, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய இந்தக் கோரிக்கையை அரசு நிச்சயமாகப் பரிசீலிக்க இயலும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பணிகள் நிறைவடைய ஓராண்டு காலம் வரையிலும்கூட ஆவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்று கருதுகிறேன். ஆகவே, இந்த முதன்மைக் கல்வி அலுவலகத்தை, நீங்கள் சொன்னபடி மாவட்டம் உருவாகிறபோது அமைப்பதிலே மாறுபட்ட கருத்து இல்லை. ஆனால், இந்த உதவிக் கல்வி அலுவலர் அலுவலகம் என்பதை இந்த ஆண்டிலேயே தொடங்க, உங்களுடைய மானியக் கோரிக்கையிலே நீங்கள் அறிவித்தால் உதவியாக இருக்கும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்; அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** பேரவைத் தலைவர் அவர்களே, பிள்ளைக்குப் பெண் பார்க்கவே இப்போதுதான் ஆரம்பித்திருக்கிறோம். பேரனுக்குப் பெயர் வைப்பதை உரிய காலத்திலே பரிசீலிக்கலாம். (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டத்தில் முதன்மைக் கல்வி அலுவலகங்கள், தொடக்கக் கல்வி அலுவலகங்கள் எல்லாம் வாடகைக் கட்டடத்தில் இயங்கிக்கொண்டிருக்கின்றன. பெருந்திட்ட வளாகத்திலே 200 ஏக்கருக்கும் மேலே இடம் இருக்கிற காரணத்தால், அதிலே ஒரு முதன்மைக் கல்வி அலுவலகம் மற்றும் அனைத்துக் கல்வி அலுவலகங்கள் வருகின்ற வகையில் அதற்கான கட்டடங்களைக் கட்டித் தர ஆவன செய்யப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** பேரவைத் தலைவர் அவர்களே, அரசு நிச்சயமாகப் பரிசீலிக்கும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அது குறித்துத் தனியாக வினா எழுப்பினால், நான் விளக்கமான விடையினைச் சொல்வதற்கு வாய்ப்பாக அமையும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. தமிழரசு.

**திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓமலூர் பகுதிக்கான மாவட்டக் கல்வி அலுவலகம் கடந்த பல ஆண்டுகளாக சங்ககிரி கல்வி அலுவலகத்தில் இயங்கி வருகிறது. இந்தக் கல்வி அலுவலகம் ஓமலூரைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்க வேண்டுமென்று நான் வினா எழுப்பி இருக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குக் கடிதம் கொடுத்திருக்கிறேன். எனவே, தாலுகா தலைமையிடமாக இருக்கிற காரணத்தாலே, அங்கே அதிகப் பள்ளிகள் இருக்கிற காரணத்தாலே, ஓமலூரைத் தலைமையிடமாகக் கொண்டு மாவட்டக் கல்வி அலுவலகம் இயங்குவதற்கு ஆவன செய்வாரா என்று தங்களின்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை அத்தகைய செயற்குறிப்பு அரசினுடைய பரிசீலனையில் இல்லை. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நேரிலே என்னிடத்திலே வலியுறுத்தி இருக்கிறார்; இந்த அவையிலும் இது குறித்து இப்போது வினா எழுப்பி இருக்கிறார். அதை அடிப்படையாக வைத்து வருங்காலத்திலே அது குறித்து அரசு பரிசீலிக்க முடியும்.



முற்பகல் 10-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 108, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ.சு. விஜயகுமார், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**108—**

## வனச் சரக அலுவலகம்

***29688-திரு. பெ.சு. விஜயகுமார்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் தொகுதி, போளூரில் புதிய வனச் சரக அலுவலகம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) போளூர் வனச் சரக அலுவலகம், போளூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் உள்ள பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான கட்டடத்தில் இயங்கி வருகின்றது. போளூரில் வனத் துறைக்குச் சொந்தமான நிலம் இல்லாத காரணத்தால், வனச் சரக அலுவலகம் கட்டுவதற்குத் திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலைவரிடம் நிலம் கோரப்பட்டுள்ளது. நிலம் கிடைக்கப்பெற்றபின், கட்டடம் கட்டப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ.சு. விஜயகுமார், இருக்கையில் இல்லை.

வினா எண் 109, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி, மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**109—**

## தொகுப்பு வீடு

***20467—திரு. ஜி.கே. மணி:**

*மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேலம் மாவட்டம், குள்ளவீரம்பட்டி பகுதி மீனவர்களுக்குத் தொகுப்பு வீடுகள் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், மேட்டூர் அணையில் மீன் பிடிக்கும் குள்ளவீரம்பட்டி பகுதி மீனவர்களுக்கெனத் தனியாக இலவசத் தொகுப்பு வீடுகள் கட்டித் தரும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூர் அணை மீனவர் கூட்டுறவுச் சங்கத்தில் ஆயிரக்கணக்கானவர்கள் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டு, அரசின் சார்பிலே உரிமத்தையும் பெற்று, அங்கே மீன்பிடித் தொழிலிலே ஈடுபட்டு வருகின்றார்கள். மழைக் காலங்களில் மேட்டூர் அணை நிரம்பியிருக்கின்ற நேரத்தில், அங்கே மீன்பிடித் தொழில் மிகச் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. அணையில் நீர் குறைந்துவிடுகின்ற காலத்தில் மீன் பிடிக்க இயலாமல், மிக ஏழ்மை நிலையில் வாழக்கூடிய, வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழக்கூடிய மீனவர்கள்தான் அந்தப் பகுதியிலே இருக்கின்றார்கள். ஆகவே, மேட்டூர் அணையை ஒட்டியிருக்கின்ற குள்ளவீரம்பட்டி, காவிரிப் பாலம், அண்ணா நகர், நவப்பட்டி ஊராட்சிப் பகுதி, மேச்சேரியிலே கோணாண்டியூர், சேத்துக்குளி போன்ற ஊர்களிலும், பெண்ணாகரம் பகுதியிலே நாகமரை என்ற ஊரிலும் மீனவர்கள்தான் வாழ்ந்து வருகின்றார்கள். அவர்களுக்கு இதுவரையிலே தொகுப்பு வீடுகள் கட்டப்படவில்லை. ஆகவே





அவர்களின் ஏழ்மை நிலையைக் கருதி, அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து, மீண்டும் தொகுப்பு வீடுகள் திட்டத்தின்கீழ் அவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கு முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், மேட்டூர் அணையில் மீன் பிடிக்கும் குள்ளவீரம்பட்டி பகுதி மீனவர்களுக்கெனத் தனியாக இலவசத் தொகுப்பு வீடுகள் கட்டித் தரும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. ஆனால், இலவசத் தொகுப்பு வீடுகள் திட்டத்தின்கீழ் மீனவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க அரசால் முடிவு செய்யப்பட்டு, குள்ளவீரம்பட்டி பகுதி மீனவர்கள், தாங்கள் சார்ந்துள்ள மீனவர் கூட்டுறவுச் சங்கத்தின்மூலம் முறையாகத் தீர்மானம் இயற்றி, சம்பந்தப்பட்ட மீன்வளத் துறை உதவி இயக்குநர் வழியாக, அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ள தகுதிகளின் அடிப்படையில், மத்திய, மாநில அரசுத் திட்டங்களில் உள்ள கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு இலவசத் தொகுப்பு வீடுகள் வழங்கப்பட்டு வருகின்றன. இலவசத் தொகுப்பு வீடுகள் கட்டும் திட்டத்தின்கீழ், வீடுகள் பெற கீழ்க்கண்ட தகுதிகளை மீனவர்கள் பெற்றிருக்கவேண்டும்: (1) மீனவர் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினராக இருக்கவேண்டும்; (2) சொந்தமாக 3 சென்ட் பட்டா நிலம் வைத்திருக்கவேண்டும்; (3) மீனவர்கள் அளிக்க வேண்டிய சான்றுகள் அந்தந்த உறுப்பினர்கள் பெயரில் இருக்கவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீனவர் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினரான மீனவர்கள், உரிமம் பெற்ற மீனவர்கள். அந்தத் தகுதி இருக்கின்ற, வீட்டுமனைப் பட்டா வைத்திருக்கக்கூடிய அந்த மீனவர்களுக்கு வழங்கினால்கூட போதுமானது. ஆகவே, மேட்டூர் அணைப் பகுதியில் மீனவர் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினராக இருக்கின்ற பெரும்பாலானவர்களுக்கு, இந்த ஆண்டிலாவது நிதி ஒதுக்கி, அந்தத் தகுதியின் அடிப்படையிலாவது அனைவருக்கும் இலவசத் தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கு அமைச்சர் முன்வருவாரா என்பதை மீண்டும் அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிட்டபடி, மீனவர் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினராக இருப்பவர்களுக்கு, முறையாக அவர்களுடைய பெயரில் 3 சென்ட் பட்டா நிலம் இருக்குமேயானால், நிச்சயமாக மீனவர்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்டித் தரப்படும் என்பதைத் தங்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 110, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. கண்ணன், மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் அவர்கள்.

**110—**

## தொழிற்பேட்டை

***27813-திரு. பெ. கண்ணன்:**

மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதியில் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின்மூலம் புதிய தொழிற்பேட்டை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன், கதர்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதியில் கதர் கிராமத் தொழில் வாரியத்தின்மூலம் தொழிற்பேட்டை அமைக்கும் உத்தேசம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(முற்பகல் 10-20)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. கண்ணன்.



**திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாரமங்கலம் தொகுதியில், தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின்மூலம் புதிய தொழிற்பேட்டையை அமைத்துக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாரமங்கலம் பகுதியில், தாரமங்கலத்தில் பட்டு உற்பத்தி அலகு ஒன்று உள்ளது. அதில் மாதந்தோறும் சுமார் 200 பட்டுப் புடவைகள் உற்பத்தி ஆகின்றன. தற்போது 40 தறிக்காரர்கள் உள்ளனர். மேலும் 40 தறிக்காரர்களைத் தற்போது சேர்க்க உள்ளார்கள். மேச்சேரி பகுதியில், விருத்தாசலம்பட்டியில் 2 கதர் நூற்பு நிலையங்கள் நடைபெற்று வருகின்றன. அதேபோல, மேச்சேரியிலும் ஒரு நூற்பு நிலையம் உள்ளது. அதனால், மேலும் அந்த இடத்தில் வேறு தொழில் தொடங்கும் உத்தேசம் அரசிடம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. கண்ணன்.

**திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாரமங்கலம், மேச்சேரி, முத்துநாயக்கன்பட்டி போன்ற பகுதிகளில், இந்தத் தொழில், மகாத்மா காந்தியினுடைய கனவு நனவாகும் வகையில், சோப்பு, குங்குமம், கற்பூரம், பொம்மை, துணி, தோல் பொருள்கள் அனைத்தும் செய்து கொடுக்க இந்த ஏழையெளிய மக்களுக்குத் தொழிலும், முழுநேரத் தொழிலாக அமைவதற்கு இந்த அரசு அந்தத் தொழிற்பேட்டையை அமைத்துக் கொடுக்க முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அதற்கும் மேலாக, தாரமங்கலத்தில் சோப்பு கம்பெனி ஒன்று அரசின்மூலம் கோபுரம் சோப்பு என்று செய்துகொண்டிருந்தார்கள். அதை மூடிவிட்டார்கள். அந்தத் தொழிற்பேட்டையின்மூலம் அதையும் திறந்து, அந்த மக்களுக்கு, உரிய வேலைவாய்ப்புகள் கிடைக்க அரசு முன்வருமா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு, அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் அவர்கள்.

[2008 ஏப்ரல் 16

**மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாரமங்கலம் தொகுதியில், புதியதாகத் தொழில் ஆரம்பிப்பதற்கான சாத்தியக் கூறுகள் ஏதுமில்லை என்றாலும், மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும்பொருட்டு, தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் தற்போது மும்பை கதர் கிராம ஆணையக் குழுமூலம், கிராம வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ், விளிம்புத் தொகை மானியம் வழங்கும் திட்டத்தினைச் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்மூலம் 25 முதல் 30 விழுக்காடு வரை மானியம் பெற்று, தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள்மூலம் 116 குடிசைத் தொழில்களுக்கு இந்தத் துறையில் அறிவிக்கப்பட்டுள்ள குடிசைத் தொழில்கள், அதற்காகக் கடனுதவி வழங்கப்பட்டு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அந்தத் திட்டத்தின்மூலம், தனி நபரோ அல்லது குழுக்களாகவோ சேர்ந்து, தொழில் தொடங்கினால் அதற்கு அந்தத் துறையின் உதவி இயக்குநர் அவர்களை அணுகினால், தகுந்த ஆலோசனை தருவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கதர்த் துறையின் சார்பாக, தமிழகத்திலே இருக்கின்ற கதர்க் கடைகளுக்கு, கதர் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கடந்த 6 ஆண்டு காலமாகத் தமிழக அரசால் மானியம் வழங்கப்படவில்லை. அதனால், அந்தக் கூட்டுறவுச் சங்கங்களெல்லாம் மிகவும் நலிவடைகின்ற நிலையில் இருக்கின்றன. மத்திய அரசு கொடுக்கவேண்டிய மானியத்தைக் கொடுத்துவிட்டது. ஆடிட் செய்ய வேண்டுமென்று அவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். மத்திய அரசு ஏற்கெனவே ஆடிட் செய்து, அவர்கள் கொடுக்க வேண்டிய நிதியைக் கொடுத்துவிட்டார்கள். தமிழக அரசு உடனடியாக ஆடிட் செய்தோ அல்லது அவர்களுக்கு அவசர கால நிதியாகவோ—30 கோடி ரூபாய் பாக்கி வைத்திருக்கிறார்கள்—அதை உடனடியாகக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சிக் காலத்திலிருந்து இந்தத் தொகைகளை பாக்கி வைத்திருந்தனர். இந்த அரசு வந்த பின்னர் எடுத்த நடவடிக்கையின்



2008 ஏப்ரல் 16]

காரணமாக, முதல் தவணையாக 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் தற்போது கொடுக்கப்பட்டுள்ளது. அதில், இப்போது தணிக்கை அறிக்கை கிடைக்காமல் அந்தப் பணத்தினைப் பட்டுவாடா செய்யக்கூடாது என்று நிதித் துறையின்மூலமாக நமக்கு ஒரு கட்டுப்பாடு உள்ளதால், அந்தத் தணிக்கை அறிக்கை பெறுவதற்காக நாங்கள் முயற்சி செய்து வருகிறோம். அதை இந்த ஆண்டு இறுதிக்குள் எவ்வளவு தொகை முடிந்த அளவிற்கு அந்தத் தணிக்கை அறிக்கையைப் பெற்றுக் கொடுக்க முடியுமோ, கொடுத்துவிடுவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

**[குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

*முற்பகல் 10-25*

## 2. தகவல் கோரல்

**(அ) தமிழ்நாட்டில் சில அரசியல் கட்சித் தலைவர்கள் உள்ளிட்ட சில உயர் அதிகாரிகளின் தொலைபேசிகளைத் தமிழ்நாடு காவல் துறை புலனாய்வுப் பிரிவு ஒட்டுக்கேட்பதாக வந்துள்ள பத்திரிகைச் செய்தி**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செங்கோட்டையன், சொல்லுங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, 56-வது விதியின்கீழ் நேற்றையதினம் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானமும், இன்றையதினம் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானமும் நாங்கள் கொடுத்திருக்கிறோம். தமிழக புலனாய்வுத் துறை ஒட்டுக் கேட்கிறது, அரசியல் கட்சித் தலைவர்களின். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் Subject-க்குள் போக வேண்டாம். ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறீர்கள். நேற்று அது சம்பந்தமாக முதலமைச்சர் அவர்கள் பதில் கொடுத்து விட்டார்கள். விசாரணை ஆணையமும் அமைக்கப்பட்டிருக்கிறது. உங்களிடம் ஏதாவது evidence இருந்தால் அங்கே போய் produce பண்ணுங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** இல்லை, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களிடத்திலே C.D. கொடுத்திருக்கிறோம். C.D. இருக்கிறது. அதைப் போட்டுப் பார்த்துக்கொள்ளலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதை எல்லாம் விசாரணை கமிஷனில் கொண்டு போய்க் கொடுங்கள். எல்லாவற்றையும் விசாரணை கமிஷனில் கொண்டு போய்க் கொடுத்து, உங்கள் case-ஐ prove செய்யுங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** அனுமதி வழங்கப்படாத காரணத்தால் நாங்கள் அனைவரும் வெளிநடப்புச் செய்கிறோம்.

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)

## 3. மானியக் கோரிக்கைகள், 2008–2009, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

**(அ) கோரிக்கை எண் 34—நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை**
**(ஆ) கோரிக்கை எண் 42—ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை**
—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2008-2009 ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும். 15-4-2008 ஆம் நாளன்று முன்மொழியப்பெற்ற மானியக் கோரிக்கைகள் மற்றும் அவற்றின்மீது முன்மொழியப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் ஆகியவற்றின்மீது விவாதமும் வாக்கெடுப்பும்-தொடர்ச்சி. மானியக் கோரிக்கை எண் 34-நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, மானியக் கோரிக்கை எண் 42-ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை. மாண்புமிகு உறுப்பினர்கள் 5 பேர் பேசவிருக்கிறார்கள். முதலில் மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வம் பேசவிருக்கிறார். அவர் பேசுவதற்கு 10 நிமிடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. அதற்கு முன்னதாக ஓர் அறிவிப்பு.



## 4. அறிவிப்பு

### உறுப்பினர்களுக்கு, நகராட்சி நிருவாகம், குடிநீர் வழங்கல்—ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய வெளியீடுகள், நூல்கள் மற்றும் குறுந்தகடு வழங்குதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 15-4-2008 மற்றும் 16-4-2008 ஆகிய இரு நாட்களில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் மானியக் கோரிக்கை எண் 34—நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மற்றும் மானியக் கோரிக்கை எண் 42—ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை குறித்த திட்டங்களின் செயல்பாடு, வழிகாட்டு நெறிமுறைகள், முக்கிய அரசாணைகள், அறிவுரைகளின் தொகுப்பு, முக்கிய சட்டம் மற்றும் விதிகள், பணியமைப்பு உள்ளிட்ட 34 வெளியீடுகள் மற்றும் நூல்களை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எளிதில் அறிந்துகொள்ளத்தக்க வகையில் ஒளிவுமறைவின்றி மிகச் சிறப்பான முறையில் வழங்கியுள்ள மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்குப் பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மேற்கூறிய வெளியீடுகள் மற்றும் நூல்கள் சட்டமன்றப் பேரவைச் செயலகம் நூலகப் பிரிவு-2-ன்மூலம் உறுப்பினர்களுக்கு வழங்கப்பெறுகின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 3. மானியக் கோரிக்கைகள், 2008–2009, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

**(அ) கோரிக்கை எண் 34—நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை**
**(ஆ) கோரிக்கை எண் 42—ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை**
—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகள்மீதான விவாதம். மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வம்.

**திரு. கு. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை மானியக் கோரிக்கையில் பேச வாய்ப்புத் தந்தமைக்கு விடுதலைச் சிறுத்தைகள் சார்பாக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறைக்குப் புத்துணர்வு அளித்து வருகின்ற நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் துறை தமிழகம் முழுவதும் ஒரு புத்துணர்வு பெற்ற துறையாக விளங்கிக்கொண்டிருக்கிறது. 1996-லே, நம்முடைய முத்தமிழ் அறிஞர் முதல்வர் கலைஞர் அவர்கள் சமத்துவபுரங்களை உருவாக்கி தமிழகத்தில் வாழ்கின்ற தமிழின மக்கள் எல்லாம் சமத்துவமாக வாழ வேண்டும் என்ற தன்னுடைய கொள்கையை நிலைநாட்டினார்கள். அதேபோன்று, இந்திய சனநாயகத்திற்கு ஒரு களங்கமாக விளங்கிய பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி, கொட்டக்காச்சியேந்தல், நாட்டார்மங்கலம் ஆகிய ஊராட்சிகளிலே கலைஞரைப் பின் தொடர்ந்து நம்முடைய இளைய கலைஞர் அவர்கள் அங்கே சனநாயகத்தை மலர வைத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அங்கே தேர்தல் நடத்தப்பட்டாலும், சனநாயகத்திற்கு எந்தவிதக் களங்கமும் வரக்கூடாது என்று இன்று வரை அதைக் கட்டிக் காத்து வருகிறார்கள். கொன்றை வேந்தனிலே ஒரு செய்தி சொல்வார்கள். 'திரைகடல் ஓடியும் திரவியம் தேடு' என்று. இது தனி நபர்களுக்குப் பொருந்தும். ஆனால், தமிழக மக்களுக்காக ஜப்பான் சென்று 1,330 கோடி ரூபாயைப் பெற்று ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றும் தருவாயில் இருக்கின்ற நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தளபதி அவர்களை மனமாரப் பாராட்டுகிறோம், வாழ்த்துகிறோம்.

*முற்பகல் 10-30*

அதேபோன்று இராமநாதபுரத்திற்கு 616 கோடி ரூபாயிலே கூட்டுக் குடிநீர்த் திட்டம். அந்த மக்களெல்லாம் தங்களுக்குத் தண்ணீர் கிடைக்குமா என்று சுதந்திரத்திற்குப் பிறகு ஏங்கிய காலங்களெல்லாம் உண்டு. ஆனால், இதே முத்தமிழறிஞர் கலைஞருடைய ஆட்சி அங்கே தண்ணீர் கொண்டு வருகிறது என்கிற மாபெரும் திட்டத்தை உருவாக்கி இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டம், மத்திய அரசிடமிருந்து 1,000 கோடி ரூபாயைப் பெற்று, நம்முடைய நிதிநிலை அறிக்கையிலே 300 கோடி ரூபாயை நாம் ஒதுக்கி, அதைச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம். மாவட்டங்கள்தோறும் சுற்றுப் பயணம் செய்து உள்ளாட்சித் துறை இயங்குகிறது என்ற ஒரு நிலையை ஏற்படுத்தியவர் நம்முடைய அமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)



உள்ளாட்சிப் பிரதிநிதிகளை அழைத்து 4 மண்டலங்களாகப் பிரித்து. அந்த 4 மண்டலங்களிலும் இப்பொழுது பணிகள் நடைபெற்று வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகளிர் சுய உதவிக் குழுவிலே எவ்வளவோ மாற்றங்களையும், புரட்சிகளையும் செய்து வருகிறது இந்தத் துறை. ஆனால், உண்மையான ஏழையெளிய பெண்கள் இதிலே கலந்துகொள்கிறார்களா என்பதிலே நாம் கவனம் செலுத்த வேண்டும். ஏற்கெனவே SGRY திட்டம் இரத்துச் செய்யப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டத்திலே பயனடைந்த நம்முடைய ஏழையெளிய ஆதி திராவிட, ஒடுக்கப்பட்ட பெண்மணிகள் அந்தக் குழுவிலே உண்மையிலேயே இடம்பெற்றிருக்கிறார்களா என்று மீண்டும் ஒரு முறை நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆய்வு செய்ய வேண்டும். அந்தத் திட்டத்திலே பயன் பெற்றவர்களெல்லாம் இன்று வேலைவாய்ப்பு இல்லாமல் இருக்கிறார்கள். எனவே அதற்கு மாற்றாக, SGRY திட்டத்திற்கு மாற்றாக நம்முடைய அமைச்சர் அவர்கள் இன்று மனம் புகழும் பேறிஞர் அண்ணாவினுடைய நூற்றாண்டு விழாவிலே அவர் பெயரிலே ஏதாவது ஒரு மாற்றுத் திட்டத்தை அமைக்க முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

அதேபோன்று, அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் தமிழகத்திலே வெற்றிகரமாக நடந்து கொண்டிருக்கிறது. தமிழக மக்களெல்லாம் எங்களுடைய ஊராட்சிக்கு எப்போது 20 இலட்சம் ரூபாய் பணம் வரும் என்று ஆவலோடு எதிர்பார்த்து, அந்தப் பணத்தைக் கொண்டு அரிய, பெரிய திட்டங்களை அங்கே தீட்டி வருகிறார்கள்.

குறிப்பாகச் சொல்லப் போனால், சட்டம்-ஒழுங்கு எங்கே கெடுகிறது என்று பார்த்தால், கிராமங்களிலே சுடுகாட்டுப் பாதை சரியாக இல்லை, சுடுகாட்டுப் பாதை இருந்தால் ஆதிக்க வர்க்கத்தினர் ஆதி திராவிட மக்களை அங்கே அந்தப் பாதையிலே செல்ல அனுமதிப்பதில்லை. நம்முடைய முத்தமிழறிஞர் முதல்வர்கூட ஒரு கதை எழுதினார். அந்தக் கதையிலே, ஒரே பாதையில் அனைத்துத் தரப்பு மக்களும் தங்களுக்குச் சொந்தமான இறந்த உடல்களை எடுத்துச் செல்ல வேண்டும் என்று கூறி இருந்தார்கள். ஆனால் அவர் கூறி எத்தனையோ ஆண்டுகளானாலும் இன்று வரை அந்தக் குறைகள் தீர்க்கப்படாமல் இருக்கின்றன. சட்டம்-ஒழுங்கு 40 சதவிகிதம் கெடுகிறது என்றால் அது சுடுகாட்டுப் பிரச்சினையால்தான் கிளம்புகிறது. ஆகவே, அதற்கு நம்முடைய துறை தனியாக ஏதாவது ஒரு சட்டம் இயற்ற முடியுமா என்பதை ஆலோசிக்க வேண்டும்.

அதேபோன்று, தனியார் நிறுவனங்களிலே, கம்பெனிகளிலே skilled training என்று கொடுக்கிறார்கள். சென்னையிலே இருப்பவர்கள் பயனாளிகளாக இருக்கிறார்கள். திருப்பூரிலே இருப்பவர்கள் பயனாளிகளாக இருக்கிறார்கள். ஆனால், நெல்லையிலோ, நாகர்கோவிலிலோ இருப்பவர்கள் இங்கு வந்து தங்கி அந்த skilled training-ஐ எடுத்துக்கொள்ள முடியாத ஒரு நிலை இருக்கிறது. ஆக, நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், அவர்கள் தங்கிப் பயன்பெறும் வகையிலே ஏதாவது விடுதிகள் கட்ட ஆவன செய்ய முன்வரவேண்டும் என்று வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

நாம் மத்திய அரசிலே அங்கம் வகித்து வருகிறோம். பஞ்சாயத்து ராஜ்-க்கு என்று ஒரு அமைச்சர் இருக்கிறார். கேட்கவே வேதனையாக இருக்கிறது. அங்கே அவர்கள் என்ன முயற்சிக்கிறார்கள் என்றால், ஏற்கெனவே கல்வித் துறையிலே நாம் அந்த Concurrent List என்ற ஒரு தொகுப்பிலே போய்விட்டோம். ஏற்கெனவே Environment and Forests-ம் அப்படிப் போய்விட்டது. தமிழகத்திலே ஏதாவது சுயமாகச் செய்ய வேண்டும், அனுமதி வாங்க வேண்டும் என்றால், மத்திய அரசை அணுகி ஒப்புதல் வாங்கவேண்டியிருக்கிறது. மாநிலத்தில் சுயாட்சி, மத்தியிலே கூட்டாட்சி என்று உரைத்த நம்முடைய முத்தமிழறிஞர் முதல்வர் அவர்கள் ஆட்சியிலே, உள்ளாட்சித் துறையையும் அப்படி ஒரு Concurrent List-லே எடுத்துச் செல்ல முயற்சிக்கிறார்கள் என்ற செய்தி வேதனையாக இருக்கிறது. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அதை அனுமதிக்கக் கூடாது. ஏனென்றால், சில தலைவர்களெல்லாம் மனு கொடுத்ததாக செய்திகளை நாம் கேள்விப்பட்டிருக்கிறோம்.

அதேபோன்று, இப்போது உள்ளாட்சித் துறையிலே Junior Assistant, Assistant என்று ஆயிரக்கணக்கான பதவிகள் காலியாக இருக்கின்றன. Junior Assistant என்ற பதவியை நாம் நிரப்பினால், அங்கே Assistant என்ற அந்தப் பதவி உயர்விற்கு 5 ஆண்டுகள் பிடிக்கும். அந்த 5 ஆண்டுகளிலே அங்கே ஒரு தேக்க நிலை ஏற்படும். ஆக, நேரடியாகவே அந்த Assistant என்ற பதவிக்கு நாம் ஆட்களைத் தமிழ்நாடு தேர்வாணையம் மூலமாகத் தேர்வு செய்யலாம்.

தமிழகத்திலே உள்ளாட்சித் துறை அமைச்சர் இப்படிப்பட்ட சாதனைகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள் என்றால், அவர் வழி வந்த சென்னை மாநகராட்சி, வணக்கத்திற்குரிய மேயர் இன்று பல அற்புத வேலைகளை அங்கே செய்து வருகிறார்கள். பல திட்டங்களைத் தீட்டுகிறார்கள். நான் எங்களுடைய [illegible] உறுப்பினர்



உமாசாசவியிடம் கேட்டேன். எந்த வரியும் போடாமல் எப்படி சென்னை மாநகராட்சிக்கு இப்படிப்பட்ட திட்டங்களை அறிமுகப்படுத்துகிறார்கள்? குழந்தை பிறந்தால் பிறப்புச் சான்றிதழ் இலவசம், இலவசமாக-- இலவசம்; ஒருவர் இறந்தால் இறப்புச் சான்றிதழ் இலவசம், புதைப்பதற்குக் கட்டணம் எரியூட்டுவதற்குக் கட்டணம் கிடையாது. புதைப்பதற்குக் கட்டணம் கிடையாது. செல்லப் பிராணிகளுக்குத் தனியாக இடுகாடு. இப்படி இந்தத் திட்டங்களை எப்படி நடைமுறைப்படுத்துகிறார்கள் என்று கேட்டால், நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுடைய ஆலோசனையின்பேரில், நம்முடைய வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள், இதுவரை வசூலிக்க முடியாத அந்த வரித் தொகையை, ரூ.50 கோடிக்கு மேற்பட்ட தொகையை அவர் வசூலித்தார் என்ற மகிழ்ச்சியான செய்தியை நாம் கேள்விப்படுகிறோம். இவ்வளவு காலமாக, கடந்த ஆட்சியிலே முதலாளிகளுக்கு ஒத்துப் போன, முதலாளிகளுடன் கூட்டணி வைத்துக்கொண்ட பழைய நிர்வாகிகள், அதிகாரிகள் எல்லாம், கோடிக்கணக்கான வரிப் பணங்களை வசூல் செய்யாமல் இருந்தார்கள். அந்தப் பணங்களையெல்லாம், இப்போது வரி செலுத்தாமல் இருந்த முதலைகளைப் பிடித்து, நூற்றுக்கும் மேற்பட்ட கோடிகளை, வருவாயை ஈட்டி இருப்பார்கள் என்பது உள்ளாட்சித் துறைக்கு மீண்டும் சிறப்புச் சேர்க்கிறது.

முற்பகல் 10-35

அதேபோன்று, எங்களையெல்லாம் ஒரு காலத்திலே வெட்டியான் என்று சொல்வார்கள். நம்முடைய உள்ளாட்சித் துறை இப்போது மயான உதவியாளர்கள் என்று அழைத்து இருப்பது வரவேற்கத்தக்கது. அதேபோன்று, துப்புரவுப் பணியாளர்களைத் தூய்மைப் பணியாளர்கள் என அழைக்கின்றனர். ஆதரவற்ற குழந்தைகள், இரவு நேரக் காப்பகம்—காது கேளாத, வாய் பேசாத குழந்தைகளுக்குத் தனிப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இந்தப் பேச முடியாத, கேட்க முடியாத குழந்தைகளுக்குப் பயிற்சி மட்டும் அளித்தால் போதாது; அவர்களுக்கு மாநகராட்சிகள் தனியாகப் பள்ளிக்கூடங்களை அமைக்க வேண்டும். குளிர்பதன சவப் பெட்டி இலவசம்; 10 மண்டலங்களிலும் அமரர் ஊர்தி வாகனம், ஆக்கிரமிப்பு நிலங்களைக் கையகப்படுத்துதல், இதுபோன்று பல அரிய சாதனைகளை நம்முடைய உள்ளாட்சித் துறை செய்து வருகிறது. நம்முடைய முத்தமிழறிஞர் முதல்வர் அவர்கள், புதிதாக 95 சமத்துவபுரங்களை உருவாக்குவதாக அறிவிப்புச் செய்திருக்கிறார்கள். நான் அந்த அறிவிப்பை வரவேற்கிறேன்.

அதேபோன்று, சட்டமன்ற உறுப்பினர் நிதியில் இருந்து—இன்னும் 3 வருடங்கள் இருக்கின்றன—ரூ.60 இலட்சம் எடுத்து, குறைந்தபட்சம் 50 வீடுகளைக் கட்ட சட்டமன்ற உறுப்பினர்களால் அங்கே சமத்துவபுரங்களை உருவாக்க முடியுமா என்பதை நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் ஆலோசிக்க வேண்டும்; அனுமதி வழங்க வேண்டும்.

மகளிர் சுய உதவிக் குழுக்கள் அனைத்திற்கும் சுழல் நிதி வழங்குவதற்கு அரசு முன்வரவேண்டும். தபால் அலுவலகங்கள்மூலமாக நபார்டு வங்கி நிதி உதவிபெறும் திட்டம் புதுக்கோட்டை மாவட்டத்திலே உள்ளது. அதை அனைத்து மாவட்டங்களிலும் நடைமுறைப்படுத்த முடியுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

பேரூராட்சிகள் அனைத்திலும் மின் தகன மேடையை அமைத்துத் தரவேண்டும். சூரிய ஒளி மின்சாரத்தைக் கொண்டு, குஜராத் மாநிலத்திலே மின் தகன மேடைகளை அமைத்து உள்ளனர். அந்த முறையை நம்முடைய தமிழக அரசு பின்பற்றுமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிக்க வேண்டும். ஒரு காலத்திலே சுனாமியால் ஏற்பட்ட பேரிழப்புகள் தொடர்பான அந்தப் பணிகள் முடங்கிக் கிடந்தன. இப்போது கடலூர் மாவட்டம் உள்பட அனைத்து மாவட்டங்களிலும் அசுர வேகத்தில் நடந்துகொண்டிருப்பதை நாம் உணர முடிகிறது; நாம் நெஞ்சாரப் பாராட்டுகிறோம்.

ஏற்கெனவே மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரிடம், திட்டக்குடி பேரூராட்சியையும், பெண்ணாடம் பேரூராட்சியையும் upgrade செய்ய வேண்டும், நிதி ஒதுக்க வேண்டும் என்று பல கோரிக்கைகளை அதிகாரிகள்மூலம் வைத்து இருக்கிறோம். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அதை உடனே செய்து தருமாறு நான் மங்கலூர் சட்டமன்ற உறுப்பினர் என்ற நிலையிலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று பேரூராட்சியில் தூய்மைப் பணியாளர்களை நியமித்தீர்கள். இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு தூய்மைப் பணியாளர்களை நம்முடைய அரசு நியமித்தது. இப்போது மக்கள் தொகை பெருகிக்கொண்டே போகிறது. ஒரு பேரூராட்சிக்கு 50 இலட்சம் என்று நாம் கொடுத்திருக்கின்றோம். ஆனால், அந்தத் தூய்மைப் பணியாளர்களை இன்னும் நாம் பெருக்குவதற்கு, கூட்டுவதற்கு வாய்ப்பு இருக்கிறதா என்பதை நம்முடைய மாண்புமிகு



அமைச்சர் அவர்கள் அறிவிக்க வேண்டும். அதேபோன்று, 2 வருடங்களுக்கு முன்பு ரூ.1.20 கோடி ஒரு தொகுதிக்குக் கொடுத்தீர்கள். அப்போது கம்பி விலை, சிமென்ட் விலை, செங்கல் விலை, மணல் விலை என்ன என்றும், இன்றைய விலையைக் கூட்டிக் கழித்துப் பார்த்தால் இன்று நீங்கள் ரூ.2 கோடி கொடுக்க வேண்டும். குறைந்தபட்சம் ரூ.1 கோடியே 50 இலட்சமாவது உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அளிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, என்னுடைய தொகுதியில் உள்ள பல்வேறு கோரிக்கைகளை அதிகாரிகளிடம் கொடுத்து இருக்கிறேன். அதைச் செய்து கொடுக்குமாறு பணிவுடன் கேட்டு, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன், 15 நிமிடங்கள்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் மிக முக்கியமான உயிர் நாடியாக இருக்கின்ற 6½ கோடித் தமிழக மக்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்கின்ற ஒரு மிக முக்கியமான துறையான உள்ளாட்சித் துறையில் பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு என்னுடைய முதற்கண் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-40*

7 மாநகராட்சிகளையும், 150 நகராட்சிகளையும், 561 பேரூராட்சிகளையும், 12,618 கிராம ஊராட்சிகளையும், 29 மாவட்ட ஊராட்சிகளையும் உள்ளடக்கி, தமிழ்நாட்டில் வாழ்கின்ற அனைத்து மக்களுக்குமான பாதுகாக்கப்பட்ட குடிநீர், சுத்தமான வாழ்வாதாரம், மாசு இல்லாத மாநகராட்சிகள், நகராட்சிகள், அனைத்து நகராட்சிகளுக்கும் பாதாளச் சாக்கடைத் திட்டம் என்கிற வகையில் பல்வேறு திட்டங்களை வகுத்து, தமிழகத்தை ஒரு முன்மாதிரியான மாநிலமாக உயர்த்துவதற்கான மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தலைமையில் நடைபெறுகின்ற அந்தத் துறைக்கு முதலில் என்னுடைய மனமார்ந்த நன்றியையும், பாராட்டுகளையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குத் தமிழகம், குறிப்பாக சென்னை, அதேபோல இருக்கிற 7 மாநகராட்சிகளில்

வாகனப் போக்குவரத்து என்பது நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டு வருகிறது. மக்கள் இன்றைக்குத் தேவையான இடத்திற்குக் குறிப்பிட்ட நேரத்தில் சென்றடைய முடியாத மிகப் பெரிய நேர நெருக்கடியில் வாழ்ந்துகொண்டிருக்கிற ஒரு நிலையைப் போக்குவதற்குத்தான் எங்கள் தமிழினப் போராளி மருத்துவர் அய்யா அவர்கள் சென்னைப் பெருநகருக்கான மாற்றுப் போக்குவரத்துத் திட்டம் என்கின்ற ஒரு திட்டத்தை, ஒரு கையேட்டை வெளியிட்டு, நம்முடைய தமிழக அரசுக்கு ஆக்கபூர்வமான ஆலோசனைகளையும், மாற்று வழிமுறைகளையும் கூறியிருக்கிறார்கள். அதன் அடிப்படையில், இப்பொழுது ஐ.நா. மன்றத்தினுடைய மாநில மேம்பாட்டுப் பட்டியலில் இடம் பெற்றுள்ள 177 நாடுகளில், 96 நாடுகளைக் காட்டிலும், வருகின்ற 2011 ஆம் ஆண்டுக்குள் தமிழகத்தினுடைய, குறிப்பாக, சென்னை மாநகரத்தினுடைய மக்கள்தொகை எண்ணிக்கை என்பது பல மடங்கு, கிட்டத்தட்ட 1 கோடியை எட்டுமென்றும், அது வளர்ந்து வருகின்ற 96 நாடுகளைக் காட்டிலும் அதிகமாக இருக்கிறது என்ற கருத்தை ஐ.நா. மன்றம் வெளியிட்டிருக்கிறது. இதிலிருந்து நாம் தெரிந்துகொள்ள வேண்டிய விஷயம் என்னவென்று சொன்னால், உலகத்தில் இருக்கின்ற 96 நாடுகளைக் காட்டிலும் அதிகமாகப் போக்குவாத்துக்கும் மக்கள் வாழ்கின்ற இடத்திற்கு ஏற்றவாறு அவர்களுடைய அந்த போக்குவரத்தினுடைய நடைமுறைகளை எளிதாக்கித் தர வேண்டிய பொறுப்பு நம்முடைய தமிழகத்திற்கு இருக்கிறது.

குறிப்பாக, இந்தியாவிலேயே, நம்முடைய தமிழகத்தின் நகர்ப் பகுதிகளில் 49 சதவிகிதத்திற்கும் அதிகமாக மக்கள் வாழ்கின்ற காரணத்தால், தமிழக அரசுக்கு அந்தக் கடமை இருக்கிறது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக, ஆங்கிலேயர் காலத்தில் ஒரு குதிரைத் திறன்கொண்ட வண்டிகளில் 20 கி.மீ. ஒரு மணி நேரத்திற்குப் பயணம் செய்கிறார் என்று சொன்னால் இப்போது நவீன உலகத்தில் மணிக்கு 250 கி.மீ., 450 கி.மீ. வேகமாகப் பயணம் செய்யக்கூடிய மகிழுந்து என்ற கார்கள் எல்லாம் தயாரிக்கப்பட்டு சந்தைக்கு வந்த பிறகு, சென்னை நகரத்தில் ஒரு மணி நேரத்தில் நாம் ஒரு இடத்தைக் கடக்கின்ற தூரம் வெறும் 13 கி.மீ. 100 ஆண்டுகளுக்கு முன்பு பிரிட்டிஷ் காலத்தில், மன்னர்கள் குதிரைத் திறன் கொண்ட காரை ஓட்டிக் கொண்டு வருகிறபோது 20 கி.மீ. கடந்து சென்ற நிலை மாறி, இந்த நவீன விஞ்ஞான யுகத்தில் வளர்ச்சி ஏற்பட்ட பிறகும் நகரத்தினுடைய நகர்வு என்பது 1 மணி நேரத்திற்கு 13 கிலோ மீட்டரைத்தான் நாம் கடக்க முடியும் என்கிற



ஒரு நேர நெருக்கடியும், அந்த வசதிக் குறைவும் ஏற்பட்டிருக்கிறது. இதையெல்லாம் களைய வேண்டிய மிகப் பெரிய பொறுப்பு நம்முடைய தமிழக அரசுக்கு உள்ளது. நம்முடைய ஆட்சிக் கட்டிலில் இருக்கின்ற, குறிப்பாக, மாநகராட்சிகளையும் நகராட்சிப் பகுதிகளையும், அனைத்து மக்களுக்குமான திட்டங்களைத் தீட்டி வருகின்ற நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இந்தப் பிரச்சினைகளையும் இனி வருங்காலத்தில் கவனத்தில்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, சென்னை மாநகரம்; இன்றைக்கு 100 சதவிகிதம் மக்களுக்குப் பயனளிக்கக்கூடிய இந்தச் சாலைப் பகுதிகளில் 80 சதவிகித விழுக்காடு இடங்களை மகிழுந்துகளும், இரு சக்கர வாகனங்களும் ஆக்கிரமித்துக்கொள்கின்றன. மீதி 20 சதவிகித இடங்களைத்தான் பேருந்துகளும், மிதி வண்டிகளும், நடைபாதையில் செல்வோரும் பயன்படுத்துகின்ற நிலை இருக்கின்றது. ஆனால், வாழ்கின்ற மக்கள்தொகையின் 80 சதவிகித இடத்தை ஒரு 20 சதவிகித மக்கள் பயன்படுத்திக்கொள்வதும், 80 சதவிகித மக்கள் பயன்படுத்த வேண்டிய இடத்தை வெறும் பணக்காரர்கள், மகிழுந்து பயன்படுத்துகிறவர்கள் மட்டும் ஆக்கிரமித்துக்கொள்வது என்பதும் நடைமுறைக்கு ஒத்துவராத ஒரு காரியமாக இருக்கிறது. ஆதலால்தான், வளர்ந்து வருகின்ற நாடுகளிலும், இந்தியாவிலும் நாக்பூர், டெல்லி போன்ற மாநகரங்களில் B.R.T. என்கின்ற அதி விரைவு பேருந்து சிஸ்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இதற்குச் செலவும் குறைவு. அதன்மூலமாக, இந்த B.R.T. முறையின் மூலமாக தமிழகத்தில் நம்முடைய அரசு இதை நடைமுறைப்படுத்தினால், சென்னை போன்ற நகராட்சிகளில் மாநகராட்சியின் பகுதிகளுக்கும் மக்களுடைய நெருக்கடியைக் குறைப்பதற்கும், அதிக மக்களை நாம் அழைத்துச் சென்று, குறிப்பிட்ட நேரங்களில் அவர்கள் அதைக் கடப்பதற்கான வாய்ப்புகள் இருக்குமென்ற அடிப்படையில் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக இந்தக் கருத்தை நான் பதிவு செய்ய விரும்புகிறேன். கடந்த சில நாட்களுக்கு முன்பாக நான் இதே கருத்தை வலியுறுத்திப் பேசியபோது, பல்வேறு பத்திரிகைகள் வெளிநாடுகளிலே இந்த B.R.T. முறை எப்படிச் செயலாற்றி வருகிறது; இதைத் தமிழகத்திலும் நடைமுறைப்படுத்தினால் ஒத்து வருமா என்று ஆய்வு செய்கின்றபோது, நிச்சயமாக இது பயனளிக்கும் ஒரு திட்டமாக இருக்குமென்கின்ற கருத்துகளை யெல்லாம் இந்து, இந்தியன் எக்ஸ்பிரஸ் போன்ற பத்திரிகைகள் கடந்த முதல் முறை நான் பேசியபோது தெரிவித்ததை இன்றைக்கு வெளியிட்டிருக்கிறார்கள்.

(முற்பகல் 10-45

ஆக, இந்த ஜன நெருக்கடியைப் போக்குவதற்குப் புதிய மாற்றுத் திட்டத்தை நம்முடைய தமிழக அரசு கொண்டு வரவேண்டும். குறிப்பாக, நடைபாதைகள், மிதிவண்டிகள், பேருந்துகள், மக்களின் அன்றாடப் பயன்பாட்டுக்கு வருகின்ற, அதிக மக்கள் பயன்படுத்துகின்ற இந்தத் தேவைகளுக்கு நம்முடைய நகராட்சிப் பகுதிகளிலே தனி லைன்கள், தனி வரிசைகளை அமைத்து, இந்தப் பேருந்துகள் செல்வதற்கு ஏதுவாக வழிவகைகளை இந்த அரசு காண வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, இன்றைக்குப் பேருந்துகள் சென்னையில் எவ்வளவு இயக்கப்படுகின்றன என்று சொன்னால், கடந்த காலங்களில் 43 இலட்சம் மக்களை ஏற்றி, இறக்கியிருக்கிறது. ஆனால், 2007 ஆம் ஆண்டு 33 இலட்சமாக அது குறைந்திருக்கிறது. பேருந்துகளினுடைய எண்ணிக்கை கூடுவதற்குப் பதிலாக, இன்றைய மக்கள்தொகைக்கு ஏற்றவாறு பேருந்துகள் இருக்க வேண்டிய இடத்தில் மாற்றாக மகிழுந்துகளும், இரு சக்கர வாகனங்களும் 20 சதவீதம் முதல் 22 சதவீதமாக இப்போது உயர்ந்திருக்கிறது. ஆனால், பெரும்பான்மை மக்களால் பயன்படுத்தப்படுகின்ற பேருந்துகள் மக்களுடைய எண்ணிக்கை உயர்வினால், அவர்கள் பேருந்துகளைத் தவிர்ப்பதற்குக் காரணமாக இருக்கிறது. அதனால், கூடுதலாக பேருந்துகளை நம்முடைய மாநகராட்சிப் பகுதிகளிலே மக்களுடைய வசதிக்கேற்றவாறு இயக்குவதற்கு நடைமுறை வேண்டும். குறிப்பாக, இன்றைக்கு வாழ்கின்ற இந்த மக்கள் தொகைக்கு ஏற்றவாறு சென்னை மாநகராட்சியில் மட்டும் குறைந்தபட்சம் 6,000 பேருந்துகளாவது இயக்கப்பட வேண்டும். ஆனால், அது மிகவும் குறைவாக இயங்கிக்கொண்டிருக்கிறது. 2,500 பேருந்துகள் என்று கருதுகிறோம். இதைக் கூடுதலாக இயக்குவதற்கு மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத் திட்டம்-2-ஐத் தயாரித்து, அளித்துள்ளதாக நாங்கள் கருதுகிறோம். அந்தத் திட்டத்தில் சில குறைபாடுகள் இருப்பதாக ஏற்கெனவே எங்கள் அய்யா அவர்களும் கட்சியினுடைய தலைவர் அவர்களும் பேசுகின்றபோது சுட்டிக்காட்டியிருக்கின்றார்கள். ஆகவே, ஒரு வல்லுநர்



குழு அமைத்து, சென்னை மாநகரத்திலே இருக்கிற வல்லுநர்கள் உட்பட பரவலாக படித்த அனைத்து மக்களிடத்திலும் கருத்தைக் கேட்டு அந்தக் கருத்தினடிப்படையிலே சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமக் கொள்கை உருவாக்கப்பட வேண்டுமென்று பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாகச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். சட்ட விதி 47-க்கு உட்பட்டு மக்கள் பிரதிநிதிகள், வல்லுநர்கள், தொண்டு நிறுவனங்கள் போன்றோர் அடங்கிய ஒரு குழு அமைக்கப்பட்டு, அந்தக் குழுவின் கலந்தாய்வின் மூலமே இதை நிறைவேற்றுவதற்கு அரசு முன்வர வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, அதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலையீட்டின் பேரிலாவது இப்போது கொடுத்திருக்கின்ற திட்டத்தைக்கூட நீங்கள் கொஞ்சம் ஒத்திவைத்துவிட்டு அந்தக் குழுவை அமைத்து அனைத்துத் தரப்பு வல்லுநர்களுடைய கருத்தையும் கேட்டு அதற்கேற்றவாறு நீங்கள் புதிய திட்டத்தைத் தயாரிக்க முன்வரவேண்டுமென்று . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம், சென்னை மாநகருக்கான 2-வது முழுமைத் திட்டத்தைத் தயாரித்திருப்பதுபற்றிக் குறிப்பிட்டார்கள். ஏற்கெனவே மக்கள் பிரதிநிதிகள், பொது மக்கள் மற்றும் அதிகாரிகள் மட்டத்தில் கலந்தாய்வுக் கூட்டங்களை நடத்தி, முறைப்படி என்னென்ன செய்ய வேண்டுமோ, அவற்றையெல்லாம் செய்து, தேவையான அளவுக்கு வாய்ப்புக் கொடுத்து, கால நீட்டிப்பும் செய்து, அதற்கான வாய்ப்புகளெல்லாம் கொடுத்துத்தான் தயாரிக்கப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது பரவலாக அனைத்து மக்களிடத்திலும் சென்றடையவில்லை. அனைத்து வல்லுநர் பெருமக்களிடத்திலும் செல்லவில்லை. இதற்கென்று இருக்கக்கூடிய specialists என்று சொல்லக்கூடிய . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** தலைவர் அவர்களே, அதாவது, நுகர்வோர் பாதுகாபபுக் குழுவினர்கூட கலந்துகொண்டார்கள். அந்தக் கலந்தாய்வுக் கூட்டத்தில் உங்கள் கட்சியைச் சேர்ந்த பிரதிநிதிகளும் கலந்துகொண்டார்கள். எல்லா மட்டத்திலும் ஆய்வு நடத்தித்தான் அது தயாரிக்கப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே முழுமைத் திட்டம் ஏறத்தாழ 30 வருடங்களுக்குப் பின்பு இப்போதுதான் வரவிருக்கிறது. தயவுசெய்து அது வருவதற்கான ஒத்துழைப்பை நீங்கள் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 30 ஆண்டு காலம் வராத ஒரு திட்டத்தை மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியில் கொண்டு வரவிருக்கின்ற நீங்கள் அதை இன்னும் கொஞ்சம் ஆய்வுக்கு உட்படுத்தி, அனைத்துத் தரப்பு மக்களின் கருத்துகளையும் கேட்டுச் செய்யுங்கள் என்பதுதான் எங்களுடைய வேண்டுகோள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் தன்னுடைய திறமையின் மூலமாக ஒவ்வொரு மாவட்டத்திற்கும் நேரடியாகச் சென்று, அனைத்து மாவட்டங்களிலும் இருக்கின்ற திட்டங்களையும் கண்டறிந்து நேரடியாக அங்கேயே சில உத்தரவுகளைப் பிறப்பித்து, தனக்காக உருவாக்கப்பட்டிருக்கின்ற துறையினுடைய officers, R.D. செயலாளரிலிருந்து M.A.&W.S. Secretary வரையிலும் அனைத்துத் துறை அதிகாரிகளையும், நேர்மையான, துடிப்பு மிக்க, கண்ணியம் மிக்க அதிகாரிகளையும்கொண்டு இந்தத் துறையைத் தமிழகத்தினுடைய ஒரு முன்மாதிரி துறையாக நடத்திச் செல்வதற்காக நீங்கள் எடுத்துக்கொண்டிருக்கின்ற அந்த முயற்சிகளுக்கும், நீங்கள் சென்று வந்த பயணத் திட்டத்தினுடைய வெற்றிகளுக்கும் நான் என்னுடைய மனமார்ந்த பாராட்டுதல்களையும், நன்றிகளையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆனால், அதே நேரத்தில் பாதாளச் சாக்கடைத் திட்டம் என்கின்ற ஒரு திட்டம் தமிழகத்தில் தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர்



கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு படிப்படியாக, ஓர் ஆண்டுக்கு இத்தனை நகராட்சிகள், மாநகராட்சிகள் என்கிற புள்ளிவிவரங்களை வைத்துக்கொண்டு நீங்கள் இன்றைக்குப் பாதாளச் சாக்கடைத் திட்டங்களை நிறைவேற்றுகின்றீர்கள். ஆனால், அப்படிப் பாதாளச் சாக்கடைத் திட்டங்களை நிறைவேற்றுகின்றபோது, இன்றைக்குக் குறிப்பாகத் தமிழக அரசினுடைய பணம் தமிழக மக்களினுடைய வரிப் பணங்களை எந்த மாநிலத்திலிருந்தோ வந்த ஒப்பந்தக்காரர்கள் என்று சொல்லக்கூடிய கான்டிராக்டர்கள் Syndicate ஒன்றை form பண்ணிக்கொண்டு, தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய நகராட்சிகளிலும், மாநகராட்சிகளிலும் Internet-ல் கணினிமூலமாக அவர்கள் quote பண்ணும்போது, ஒரு மாநிலத்தைச் சேர்ந்த ஒருவர் மட்டுமே, ஒரு மாநகராட்சி அல்லது ஒரு நகராட்சிக்கு ஒப்பந்தம் கோருகிறார். அதனுடைய விளைவு தமிழகத்தினுடைய மக்களுடைய பணம்—நீங்கள் 120 கோடி ரூபாய்க்கு ஒரு நகராட்சிக்கு இறுதி செய்கிறீர்கள் என்று சொன்னால், இதை அவர்கள் above என்று சொல்லக்கூடிய 50 சதவிகிதம் முதல் 60 சதவிகிதம் வரை கேட்கின்ற நிலைமை இருக்கிறது. இதைக் களையவேண்டும் என்பதற்காக மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுடைய அறிவுறுத்தலின்பேரில் நம்முடைய M.A.&W.S. Secretary அவர்களும், C.M.A. அவர்களும் அவர்களை அழைத்துப் பேசி, நீங்கள் 60 சதவிகிதம், 50 சதவிகிதம் above செய்து கேட்கிறீர்களே, இது எந்தவிதத்தில் நியாயம்; நீங்கள் அதைக் குறைத்து மதிப்பிட்டுத் தாருங்கள் என்று கேட்கிறபோது, அவர்கள் ஒரு Syndicate form செய்துகொண்டு—இத்தனை ஆண்டுகள், மூன்று ஆண்டுகள் ஆகின்றன—நாங்கள் இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு சிமெண்ட் விலை ஏறிவிடுகிறது, கம்பி விலை ஏறிவிடுகிறது; இத்தனை தந்தால்தான் நாங்கள் இதை நிறைவேற்றுவோம் என்று அரசையே மிரட்டி, அந்தத் தொகையில் பல நூறு கோடி ரூபாயை, அரசு நிர்ணயித்த தொகையைக் காட்டிலும் அதிகமாகப் பெறுவதற்கான ஒரு வாய்ப்பு இருக்கிற சூழ்நிலையில், அந்த வாய்ப்பைக் களைந்து எறிவதற்கு, தடுத்து நிறுத்துவதற்கு நம்முடைய அரசு ஒரு கடுமையான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்.

*முற்பகல் 10-50*

எந்த நிறுவனம்—குறிப்பிட்ட ஒரு நிறுவனம்—கோயம்புத்தூர் மாநகராட்சி இருக்கிறது என்று சொன்னால், ஒரே ஒருவர்தான் Internet-ல் quote செய்கிறார். மீதம் உள்ள கான்டிராக்ட்காரர்கள் எங்கே போனார்கள்? ஆனால், மற்ற மாநகராட்சிகளைப் பார்க்கப் போனால்,

அதே ஒருவர்தான் quote செய்கிறார். இன்னொருவரை dummy-ஆகப் போடுகிறார்கள். அவர்கள் சொல்கிறார்கள், நீங்கள் இந்த மாநகராட்சியை எடுத்துக்கொள்ளுங்கள்; நீ இந்த மாநகராட்சியை எடுத்துக்கொள்; நீ இந்த நகராட்சியை எடுத்துக்கொள்; நீ இதற்கு இவ்வளவு quote செய்யுங்கள்; நீ இதற்கு இவ்வளவு quote செய்யுங்கள் என்றும், அரசாங்கப் பணம் தானே; 100 கோடி ரூபாய் திட்டம் என்றால், 150 கோடி ரூபாய் கொடுத்தால்தான் வருகிறார்கள். அரசுக்கு உள்ள நெருக்கடி எங்களுக்குப் புரிகிறது.

இன்றைக்குக் கொள்கை விளக்கக் குறிப்பிலே அறிவிக்கிற திட்டங்களை நாளைக்கு நானோ அல்லது பிரதான எதிர்க்கட்சிகளோ கையில் வைத்துக்கொண்டு, போன ஆண்டு அறிவித்தீர்கள்—ஏன் நிறைவேற்றவில்லை என்று கேட்போம். அதனால், நீங்கள் எப்படியாவது திட்டத்தை நிறைவேற்றவேண்டும் என்ற எண்ணத்தில் கூப்பிட்டு negotiate செய்கிறீர்கள். ஆனால் அப்படி negotiate பண்ணும்போதுகூட இந்த நாட்டினுடைய ஒப்பந்ததாரர்கள் தொகையைக் குறைப்பதற்கு முன்வரவில்லை. ஆனால், தமிழ்நாட்டைச் சேர்ந்த எந்தவொரு ஒப்பந்ததாரர்களும் இந்தப் பெரிய கோடிக்கணக்கான ரூபாய் ஒப்பந்தத்திலே ஈடுபடவில்லை. எங்கேயாவது ஒரு இடத்தில் தமிழன் செய்கிறான் என்று சொன்னால், அந்த ஒப்பந்தத்தினுடைய condition, அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட தொகையை நாம் பார்க்கிறபோது, அவர் ஒரு இடத்தில்கூட above the estimate கேட்கவில்லை; அதிகமாகக் கேட்கவில்லை. அவர்கள் குறிப்பிட்ட தொகைக்குத் தமிழனால் செய்யமுடிகிறது. ஆனால், மற்ற மாநிலத்தவர்களால் ஏன் செய்யமுடியவில்லை என்பதை இந்த நேரத்திலே நான் தமிழக அரசுக்கு வினாவாக விடுக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அப்படிச் செய்கின்ற அந்த ஒப்பந்ததாரர்களை மத்திய அரசினுடைய வழிகாட்டுதலோடு மாநிலத்திலும், இந்தியாவிலும், பிற எந்தப் பகுதிகளிலும் அவர்கள் இந்த ஒப்பந்தம் செய்யக்கூடாது என்ற ஒரு நிலையை நம்முடைய தமிழக அரசு எடுத்தாகவேண்டும். அப்படி இந்தத் தொகைக்கு, தமிழக அரசு சொல்கின்ற அதே தொகைக்கு வருகின்ற ஒப்பந்ததாரர்களைக்கொண்டு, தமிழக அரசினுடைய பணத்தை மிச்சம் செய்வதற்கு இந்த அரசு முன்வரவேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல் இந்த N.R.E.G.S. work - அதை complete செய்வதற்காக திட்டத்தட்ட 17,819 பணியாளர்கள் இடங்கள் காலி என்று அறிவித்தார்கள். ஆனால், இன்றைக்கு 16,317 பணியாளர்கள் நியமனம்



செய்யப்பட்டு அந்த வேலைகள் எல்லாம் நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுடைய தலைமையில் இப்போது சிறப்பாக நடந்துகொண்டிருக்கின்றன. அதேபோல், தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம். அதில் அரிசி கிலோவிற்கு 2 ரூபாய்க்குக் கொடுக்கிறீர்கள். ஆனால், உணவுக்கு வேலைத் திட்டத்தில் அந்த அரிசியை 5 ரூபாய், 6 ரூபாய்க்கு என்கிறார்கள். அந்த அரிசியை மக்கள் வாங்கமாட்டேன் என்கிறார்கள். அது மூட்டை, மூட்டையாகக் கிடைக்கிறது. அதை வெளியில் சில ஒப்பந்ததாரர்கள் விற்கும்போது, அது அரிசிக் கடத்தல் என்ற ஒரு மிகப் பெரிய செய்தியாக வருகிறது. இரண்டு ரூபாய்க்குத் தமிழக அரசு அரிசியை தருகின்றபோது இந்த அரிசியையும் அதே விலைக்கு மக்களுக்கு விற்பதற்கு ஒரு மாற்றுத் திட்டத்தை இந்த அரசு கையாளவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல், 59 இலட்சம் சுய உதவிக் குழு உறுப்பினர்களை அங்கத்தினர்களாக்கி அவர்களுக்குக் கடன் வசதி செய்து தருகிறீர்கள். ஆனால், இந்த சுய உதவி குழுக்களை எல்லாம் நம்முடைய அரசாங்கம் தன்னுடைய துறையினுடைய கட்டுப்பாட்டில் வைத்து, நேரடியாக இந்த சுய உதவிக் குழுக்களுக்குக் கடன் வழங்குவதையும், சுழல் நிதி வழங்குவதையும் தன்னுடைய கட்டுப்பாட்டில் கொண்டுவரவேண்டும் என்பதை பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக நான் கருத்துக் கூற விரும்புகிறேன். காரணம், இந்த சுய உதவிக் குழுக்கள் எந்த நோக்கத்திற்காக ஆரம்பிக்கப்பட்டனவோ, அந்த சுய உதவிக் குழுக்களை நடத்துகிறவர்கள் எல்லாம் இப்போது கல்லூரிகள், Engineering College, Medical College, Teacher Training College, Nursing College வைத்துக்கொண்டு அவர்கள் கோடிக்கணக்கில் சம்பாதித்துக்கொண்டிருக்கின்ற நிலையில் - கந்து வட்டியை ஒழிப்பதற்காகக் கொண்டு வரப்பட்ட சுய உதவிக் குழுக்கள் இன்றைக்கு கிராமங்களில் பல்வேறு கந்து வட்டிக் குழுக்களாகப் மாறிக்கொண்டிருக்கின்றன. இந்த அவலத்தைத் தடுத்து நிறுத்தவேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல் Tank Operator. பாவம் அவர்கள், 600 ரூபாய் சம்பளம் வாங்குகிறார்கள். அவர்களுக்கு ஒரு கால முறை ஊதியம் அல்லது மூன்று, நான்கு மடங்கிற்கு 3,000 ரூபாய் அளவிற்குத் தொகையை நிர்ணயம் செய்ய அரசு முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது). (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** No, 15 நிமிடங்கள் கொடுத்திருக்கிறேன். (குறுக்கீடு) உரையை முடியுங்கள்.

**திரு. தி. வேல்முருகன்:** முடித்து விடுகிறேன். அதேபோல், ஊராட்சி உதவியாளர்கள். அடிப்படை ஊதியம் ரூ.625 கொடுத்து இருக்கிறீர்கள். கிட்டத்தட்ட 3,500 ரூபாய் கொடுப்பதற்கு இந்த அரசு முன்வரவேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல், 12,618 ஊராட்சிகளில் மின்சாரக் கட்டணம் மிகப் பெரிய அளவில் ஏறிக்கொண்டு போகிறது. அதை எந்தப் பஞ்சாயத்துத் தலைவராலும் கட்ட முடியவில்லை. அதனால் குடிப்பதற்கு மக்களுக்குத் தண்ணீர் தருவதற்கான அந்த மின்சாரக் கட்டணத்தை . . .

முற்பகல் 10-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி. (குறுக்கீடு) உங்களுக்குப் போதிய நேரம் கொடுத்தாகிவிட்டது. (குறுக்கீடு) No, No. அது முறையல்ல. உட்காருங்கள். (குறுக்கீடு) உரையை முடியுங்கள்.

**திரு. தி. வேல்முருகன்:** அந்தத் தெரு விளக்கு, மின் மோட்டார் கட்டணம் அதிகமாகிறது. அதையும் குறைத்து, வருங்காலத்தில் மானிய விலையில் மின்சாரம் தருவதற்குத் துறையினுடைய அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி, உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி.

**திரு. கரி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறை மானியக் கோரிக்கையின்மீது பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்த தங்களுக்கு முதலிலே என்னுடைய நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

உள்ளாட்சித் துறை என்பது மிக, மிக முக்கியமான ஒரு துறையாகும். இந்தத் துறைதான் மக்களிடம் நேரடியாக நலத் திட்டங்களைக் கொண்டு செல்வதற்கு உதவியாக இருக்கக்கூடிய துறையாகும். இந்தத் துறைக்குப் பொறுப்பேற்று இருக்கக்கூடிய நமது உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், சிறப்பாகச் செயல்படுகிறார்கள் என்பது எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். அவர்கள் மாவட்டந்தோறும்



சுற்றுப் பயணம் செய்து, அந்தந்த மாவட்டத்திலே என்னென்ன பிரச்சினைகள் இருக்கின்றன என்பதை அறிந்து, அதை நிவர்த்தி செய்வதற்காக பல முயற்சிகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பது நமக்கு நன்றாகத் தெரியும். அதற்காக நாம் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். இருந்தாலும், உள்ளாட்சித் துறையைப் பொறுத்தமட்டில், அந்தத் துறைக்குப் போதுமான அதிகாரங்கள் இன்னும் வேண்டும் என்பது தொடர்ந்து வைக்கப்படக்கூடிய கோரிக்கையாக இருக்கிறது.

மத்திய அரசைப் பொறுத்தமட்டில், ஒரு தெளிவான பஞ்சாயத்து ராஜ் சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அதிலே பல அறிவிப்புகளை, உள்ளாட்சித் துறைக்கு அதிகாரங்களைக் கொடுக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அது 29 வகைப்படுத்தப்பட்டிருக்கிறது. அதிலே பெரும் பகுதியான திட்டங்களை, அதிகாரத்தை உள்ளாட்சித் துறைக்கு வழங்கவேண்டும் என்பது காங்கிரஸ் கட்சியினுடைய கோரிக்கை. அதிலே சில இடர்பாடுகள் இருக்கின்றன. என்பது எனக்கு நன்றாகத் தெரியும். இருந்தாலும், இன்றைக்கு நமது அரசு ஓர் உயர்மட்டக் குழுவை அமைத்து, என்னென்ன அதிகாரங்களை வழங்கலாம் என்பதை கொள்கை விளக்கக் குறிப்பிலே தெளிவாகச் சொல்லியிருக்கிறீர்கள். அந்த அதிகாரங்கள் போதாது. இன்னும் அதிகாரங்களை நீங்கள் வழங்கவேண்டும் என்பதே எங்களுடைய கோரிக்கை. அப்பொழுதுதான் நமது பஞ்சாயத்து ராஜ் சட்டத்தை நாம் முழுமையாகச் செயல்படுத்தமுடியும் என்று நாங்கள் நம்புகிறோம். இந்த அதிகாரங்களை பலவகைப்படுத்தி, ஒவ்வொரு மட்டத்திலும், மாவட்ட, வட்ட, ஊராட்சி ஒன்றியத்தின் அளவில், பஞ்சாயத்து அளவிலே, தனித் தனியாக அதிகாரங்களைப் பிரித்துக் கொடுக்க வேண்டும் என்பது எல்லோருடைய வேண்டுகோள் ஆகும். மாவட்ட அமைப்பைப் பொறுத்தமட்டில் இன்றைக்கு அதிகாரமற்ற ஓர் அமைப்பாக இருக்கிறது. ஆகவே, அதற்குரிய அதிகாரங்களை வழங்க வேண்டும். அதற்குரிய நிதியை ஒதுக்கித் தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று, உள்ளாட்சித் துறையைப் பொறுத்தமட்டில், ஊராட்சி ஒன்றியத்திலே பல பிரச்சினைகள் இருக்கின்றன. பல பிரச்சினைகளை சரி செய்தாலும், இன்னும் பல பிரச்சினைகள் இருக்கின்றன. அங்கே போதுமான நிதி கிடைக்கவில்லை. அதேபோல, ஊராட்சி மன்றங்களைப் பொறுத்தமட்டில், நிதிநிலையிலே சிக்கி இன்று தவித்துக்கொண்டிருக்கும் நிலையை நாம் பார்க்கிறோம். அவர்களால்

மின் கட்டணம் கட்டமுடியவில்லை; குடிநீர்க் கட்டணம் கட்டமுடியவில்லை; இதுபோன்ற நிலை நமது தமிழகத்திலே தொடர்கிறது. இதை மாற்றியமைக்க தகுந்த நடவடிக்கைகளை நமது அரசு செய்யவேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

உள்ளாட்சி அமைப்புகளுக்கு எல்லாம் நிதி ஆதாரங்களைப் பெறுவதற்கு வழிவகைகளை நமது அரசு செய்து தாவேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். உள்ளாட்சித் துறையிலே பல பணியிடங்கள் காலியாக இருக்கின்றன. காலிப் பணியிடங்களை உடனடியாக நிரப்புவதற்கு நமது அரசு முன்வர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். உள்ளாட்சிப் பிரதிநிதிகளால் நியமனம் செய்யக்கூடிய இடங்களுக்கு, அந்தப் பதவிகளை நிரப்புவதற்கு உரிய அதிகாரத்தை அந்த உள்ளாட்சி அமைப்புகளுக்குக் கொடுக்க வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-00*

தமிழக அரசும், மத்திய அரசும் இணைந்து குழும வீடுகள் கட்டுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது. மத்திய அரசு 10,000 ரூபாயை அதிகமாக வழங்குகிறது; அதேபோல 8,000 ரூபாயை நமது அரசு வழங்குகிறது; இது வரவேற்கத்தக்கது. மத்திய அரசிற்கும் நமது அரசிற்கும் எங்களது பாராட்டுதலைத் தெரிவிக்க நாங்கள் கடமைப்பட்டிருக்கிறோம். ஆனால் இந்தக் குழும வீடுகளை, தொகுப்பு வீடுகளைத் தேர்வு செய்வதிலே ஒரு பிரச்சினை இருக்கிறது. B.P.L. list என்ற ஒன்றை நாம் வைத்திருக்கிறோம். அந்த list-லேயிருந்துதான் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று சொல்கிறோம். ஆனால், இப்பொழுது Zero to 17 என்ற point கணக்கை வைத்துக்கொண்டு, 17 point-க்கு மேலாக இருந்தால், நாங்கள் அதை ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்று அதிகாரிகள் சொல்கிறார்கள். 17 point என்பது என்னவென்று எல்லோருக்கும் நன்றாகத் தெரியும் என்று நான் எண்ணுகிறேன். ஒருவர் ஒரு colour T.V. வைத்திருந்தால் அதற்கு 4 point; 4 வேட்டிகள் வைத்திருந்தால், அதற்கு மேல் வைத்திருந்தால் அதற்கு 4 point என்ற ஒரு நிலையிருக்கிறது; இதையெல்லாம் மாற்றியமைக்க வேண்டும். வேட்டி எத்தனை வைத்திருக்கிறார்கள்; சட்டை எத்தனை வைத்திருக்கிறார்கள் என்பன போன்றவற்றையெல்லாம் இந்த நாகரிக காலத்திலே நாம் மாற்றி அமைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இப்பொழுது வீடுதோறும் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை நாம்தான் வழங்குகிறோம்; இலவசமாக வழங்குகிறோம். தொலைக்காட்சிப் பெட்டி பெற்ற அவர்களுக்கு 4 point கொடுத்தால், அவர்கள் 17 point-ஐவிட்டுத் தாண்டிவிடுகிறார்கள்; அவர்களுக்கு வீடு கட்டித் தர முடியாத ஒரு நிலையிருக்கிறது. உரிய அதிகாரிகளுக்கு தகவலைச் சொல்லி, இந்தக் கட்டுப்பாட்டை கண்டிப்பாக நீக்குவதற்கு நமது அரசு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இப்பொழுது உள்ளாட்சித் துறைக்கு அதிக அதிகாரங்கள் வேண்டுமென்று தொடர்ந்து சொல்லி வருகிறோம். உள்ளாட்சித் துறைக்குச் சொந்தமான கண்மாய்கள், ஊருணிகள், புறம்போக்கு இடங்கள் போன்றவற்றில் இருக்கக்கூடிய முள் மற்றும் மரங்களை நீக்க வேண்டுமென்றால் நிச்சயமாக வருவாய்த் துறையினுடைய அனுமதி பெற வேண்டுமென்று சொல்கிறார்கள். இது தொடர்ந்து வருகிறது. ஏறத்தாழ இந்தச் சட்டமன்றத்திலே 10-வது தடவையாக நான் இதைப் பேசுகிறேன். ஆனால், இதற்கு வழிவகைகள் ஏற்படவில்லை. நமது மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் காலத்திலாவது இதற்கு ஒரு நல்ல வழி ஏற்பட வேண்டுமென்று நான் உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

உள்ளாட்சித் துறையிலே, ஊராட்சி எழுத்தர்கள் இருக்கிறார்கள். இப்பொழுது மத்திய அரசினுடையத் திட்டங்களை அதிகமாகச் செயல்படுத்தக்கூடிய நிலை அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. அந்த நிலையால் அவர்களுடைய வேலைப்பளு அதிகரித்திருக்கிறது. அதனால் அவர்களுக்குக் கொடுக்கக்கூடிய சம்பளத்தினுடைய அளவை நீங்கள் அதிகரித்துக் கொடுக்க வேண்டும். இந்த வேலைகளைச் செய்வதற்கு உரிய அதிகாரிகள் இன்னும் நியமிக்கப்படவில்லை. அந்தக் காலிப் பணியிடங்களில் உடனடியாக நியமனம் செய்ய ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, உள்ளாட்சித் தேர்தல்களைப்பற்றி ஒருசில கருத்துகளை நான் சொல்ல விரும்புகிறேன். உள்ளாட்சித் தேர்தலில் நாம் இன்றைக்கு 3 அடுக்கு முறையைச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம். 3 அடுக்கு முறையைச் செயல்படுத்துவதிலே சில பிரச்சினைகள் இருக்கின்றன என்பது நமக்கு நன்றாகத் தெரியும். அதை 2 அடுக்கு முறையாகச் செயல்படுத்துவதற்கு நமது அரசு முன்வர

வேண்டும். அதற்குரிய சட்டத் திருத்தங்களை மத்திய அரசிடமிருந்து நாம் பெற வேண்டிய நிலையிலே இருக்கிறோம். அதற்குரிய ஏற்பாடுகளை நீங்கள் செய்து தர வேண்டுமென்று நான் உங்களை கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, உள்ளாட்சிப் பிரதிநிதிகளை, தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர்களை, மக்களே நேரடியாகத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்பது பொதுவான கருத்து. இதிலே direct-ஆக, மக்களே vote போட்டு, அவர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்பது எங்களுடைய கோரிக்கை. பல பிரச்சினைகளைத் தேர்தல் நேரத்திலே தடுப்பதற்கு இது ஒரு வாய்ப்பாக இருக்கும். இதிலே பல, பல பிரச்சினைகள் உள்ளன. இப்போது உள்ளதுபோல் குதிரைப் பேரம் நடக்காமல் இருக்க, மக்கள் easy-ஆக தான் நினைத்தவரைத் தேர்ந்தெடுக்கக்கூடிய ஒரு வாய்ப்பு எல்லாம் ஏற்படும். இதிலே கவனம் செலுத்தி, அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்து தர வேண்டுமென்று நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-05

அடுத்தபடியாக, குடிநீர் வாரியம். குடிநீர் வாரியத்தைப் பொறுத்தமட்டில், தமிழகத்திலே மிகச் சிறப்பான திட்டங்களை நிறைவேற்றிக்கொண்டிருக்கிறார்கள் என்பது நமக்கு நன்றாகத் தெரியும். இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டம், சென்னை கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டம், ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம்—இதுபோன்ற திட்டங்களை தமிழக அரசு மிகச் செம்மையாகச் செயல்படுத்துவதற்காக நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். இந்தப் பெரிய திட்டங்கள் நிச்சயமாகத் தமிழகத்திற்குத் தேவை என்பது எல்லோருக்கும் நன்றாகத் தெரியும்.

இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் ரூ.616 கோடி அளவிலே சிறப்பாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. இந்தத் திட்டத்தினுடைய முதல் கட்டப் பணிகள் சிவகங்கை, இராமநாதபுரம் மாவட்டங்களிலே அதிகமாக இன்றைக்கு நடந்துகொண்டிருக்கின்றன. ஆனால் சிவகங்கையிலிருந்து திருச்சி, திருச்சியிலிருந்து முக்கொம்பு போன்ற இடங்களிலே வேலைகள் இன்னும் துரிதமாக நடைபெறவில்லை என்று நான் எண்ணுகிறேன். இந்தத் திட்டத்தைப் பொறுத்தமட்டில், இங்கே எத்தனை நீர் ஆதாரங்களுக்குக் கிணறுகள் தோண்டுவதாக உத்தேசம் இருக்கிறது? அதிலே எத்தனை கிணறுகள் இப்போது தோண்டப்பட்டிருக்கின்றன? இன்னும் தோண்டப்படாத கிணறுகள்,



அதற்குரிய காரணம் என்ன?; அதை நமது அரசு சரி செய்துவிட்டதா? என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, சென்னை கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டம். இதற்கு நமது அரசு மத்திய அரசிடம் வேண்டுகோள் வைத்தவுடன், உடனடியாக அந்தத் திட்டத்தை ஏற்று, அதற்காக ஆயிரம் கோடி ரூபாயை ஒதுக்குவதாகவும், முதலிலே 300 கோடி ரூபாயை ஒதுக்கித் தந்திருக்கக்கூடிய மத்திய அரசிற்கும் அதனுடைய நிதி அமைச்சர் அவர்களுக்கும் நாம் நன்றிசொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம்.

சென்னைக் குடிநீரைப் பொறுத்தமட்டில் இப்போது புதிதாக நேற்றிலிருந்து ஒரு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. கட்டணங்கள் விதிப்பதிலே சில தவறான தகவல்களைச் சொல்லியிருக்கிறார்கள். இங்கே முதலிலேயிருந்த அளவைவிட பல மடங்கு அதனுடைய வரியை அதிகப்படுத்தியிருக்கிறார்கள். உதாரணமாக, முதலிலே இரண்டாயிரம் ரூபாய் அளவிற்குக் குடிநீர் வரி கட்டியவர்கள், இப்போது ஐந்தாயிரம் ரூபாய் அளவிற்கு வரி கட்ட வேண்டிய ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. இதை ஆராய்ந்து சரியான உத்தரவுகளைப் பிறப்பிக்க வேண்டும்; இந்த உத்தரவைத் திரும்பப் பெற வேண்டும்; உயர்த்தாமல் முதலிலே இருந்த அளவையே வரியாக விதிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இதையெல்லாம்விட, எங்களது காங்கிரஸ் கட்சியின் சார்பாக இந்த அரசுக்கு ஒரு வேண்டுகோளை வைக்க விரும்புகிறோம். தமிழகத்திலே பல நல்ல திட்டங்களை நாம் செயல்படுத்திக்கொண்டிருக்கிறோம். இப்போது விவசாயிகளுக்கு ஏழாயிரம் கோடி ரூபாய் விவசாயக் கடனை இரத்துச் செய்திருக்கிறோம். தமிழகத்தில் இருக்கக்கூடிய அத்தனை குடும்பங்களுக்கும் தொலைக்காட்சிப் பெட்டிகளை நாம் வழங்கிக்கொண்டிருக்கிறோம், இலவசமாக வழங்கிக் கொண்டிருக்கிறோம். ஆனால், இந்தக் குடிதண்ணீருக்கு மாத்திரம் நாம் இன்னும் வரி விதித்துக்கொண்டிருக்கிற நிலை இருக்கிறது. ஒரு மனிதன் வாழ வேண்டுமென்றால், மிக முக்கியமான ஒன்று குடிதண்ணீர்தான். நாம் அத்தனை கிராமங்களுக்கும், அத்தனை நகராட்சிகளுக்கும், மாநகராட்சிகளுக்கும் இலவசமாகக் குடிநீரை வழங்க வேண்டும் என்று நான் உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இன்னும் இரண்டு நிமிடங்கள் எடுத்துக்கொள்ளுங்கள்.

**திரு. கரி. இராமசாமி:** கழிவு நீரகற்றும் பணி. தமிழகத்திலே இந்தப் பணிக்காகப் பல கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கின்றது. அந்தப் பணிகள் செம்மையாகச் செயல்பட வேண்டும் என்பது எங்களுடைய எண்ணம். குறிப்பாக, இப்போது கும்பகோணத்திலே பாதாளச் சாக்கடை அமைக்கப்பட்டிருக்கிறது. அங்கே சிறப்பாகச் செயல்படுவதாகச் சொல்கிறார்கள். அதேபோல, இராமநாதபுரத்திலே கழிவு நீரகற்றும் பணி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அதேபோல, தஞ்சாவூரிலே நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இதேபோல, வேலூரிலும் அந்தப் பணி நடக்க இருக்கிறது.

இந்தப் பணிகளைப் பொறுத்தமட்டில், இராமநாதபுரத்திலே அமைக்கப்பட்ட பணி செம்மையாகச் செயல்படவில்லை என்று சொல்கிறார்கள். அதை நேரடியாக ஆய்வு செய்து அதை எந்த வகையிலே மாற்றியமைக்க முடியுமோ அதைச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் *11-10*

அதற்கடுத்தாற்போல, தஞ்சாவூரில் செயல்படுத்தி வரும் திட்டத்தை நான் நேரடியாகச் சென்று ஆய்வு செய்கின்ற நிலை ஏற்பட்டது. அப்போது நான் அவர்களைக் கேட்கும்போது, "இந்தத் திட்டத்தை ஆரம்பித்திருக்கிறீர்கள்; நமது துறையினுடைய அமைச்சர் அவர்கள் வந்து அதை ஆரம்பித்திருக்கிறார்கள். ஆனால், இந்தப் பணி இன்னும் முற்றுப்பெறவில்லை, முற்றுப்பெறாமல் இருக்கிறதே" என்று கேட்டேன். அவர்கள் வெறும் *200* வீடுகளுக்குத்தான் அதிலே இணைப்புக் கொடுத்திருக்கிறார்கள். நான் அந்தச் சுத்திகரிப்பு நிலையத்தைச் சென்று பார்க்கும்போது, இன்னும் அந்தக் கழிவு நீர், அந்தச் சுத்திகரிப்பு நிலையத்திற்கே வரவில்லை. இதற்காக பல கோடி ரூபாயினை நீங்கள் செலவு செய்திருக்கிறீர்கள். இதைச் சரியாகச் செய்யவேண்டியது நமது அரசினுடைய கடமை. அரசுக்கு நல்ல பெயர் வரவேண்டுமென்றால், நிச்சயமாக இதுபோன்ற பணிகளை எந்தத் தவறும் நடக்காமல் செயல்படுத்தவேண்டியது நமது கடமை. இதேபோல, வேலூர் நகராட்சியிலே இந்த. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, நேரம் ஆகிவிட்டது. (குறுக்கீடு) இல்லை. (குறுக்கீடு) இதையெல்லாம் திரு. சி. ஞானசேகரனுக்காக நீங்கள் பேசுகிறீர்கள். (குறுக்கீடு) சரி. உரையை முடித்துவிடுங்கள்.



**திரு. கரி. இராமசாமி:** என்னுடைய தொகுதியைப் பொறுத்தமட்டில், தேவக்கோட்டை நகராட்சிக்குக் காவிரிக் கூட்டுக் குடிநீர்த் திட்டம் வேண்டுமென்று சொன்னோம். ஆனால், அதற்குத் தனியாக ஒரு திட்டத்தைச் செயல்படுத்தித் தருவதாகச் சொன்னீர்கள்; ஆனால், இன்னும் அது நடைபெறவில்லை. அதற்கு நீங்கள் உரிய நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, தேவக்கோட்டை நகராட்சிக்குப் பாதாளச் சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டும். அங்கே மின் மயானம் அமைத்துத் தரவேண்டும்.

இன்னொன்று, மாநகராட்சி, நகராட்சிகளுக்குச் சொந்தமான மருத்துவமனைகளில் போதிய மருத்துவர்கள் இல்லை; அங்கே போதிய வசதிகள் வேண்டுமென்று தொடர்ந்து சொல்லி வருகிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எல்லாவற்றையும் ஒரே sentence-ல் சொல்லலாம்.

**திரு. கரி. இராமசாமி:** இதேபோல, அரசு மருத்துவமனைகளிலே போதிய மருத்துவர்கள் இல்லை; போதிய செவிலியர்கள் இல்லை; போதிய சுகாதார வசதி இல்லை. இதில் குறிப்பாக, திருவாரூர் மாவட்டத்தில், திருக்குவளை என்ற ஊரிலே. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராஜன் அவர்கள். (குறுக்கீடு) இல்லை, time adjust செய்யவேண்டியுள்ளது. எனக்கும், அவருக்கும் என்ன? Personal-ஆக ஒன்றும் கிடையாது; Time-தானே முக்கியம்? (குறுக்கீடு)

**திரு. கரி. இராமசாமி:** நன்றி சொல்லிவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி, சொல்லுங்கள்.

**திரு. கரி. இராமசாமி:** திருக்குவளை என்ற ஊரிலே இருக்கக்கூடிய மருத்துவமனையில் கட்டடம் கட்டி 7 ஆண்டுகள் ஆகிவிட்டன. கண் மருத்துவத் துறையைச் சார்ந்த எந்த மருத்துவரும் அங்கே இல்லை; எந்தவிதமான உபகரணங்களும் இல்லை. 70 இலட்சம் ரூபாய் செலவிலே அந்தக் கட்டடம் கட்டப்பட்டிருக்கிறது. அந்த மருத்துவமனைக்கு உரிய மருத்துவர்களை நியமித்து, உரிய உபகரணங்களையும் நீங்கள் வழங்குவதற்குத் துறையைச் சார்ந்த அமைச்சர் அவர்களிடம், மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் சார்பாக நான்

கேட்டுக்கொள்கிறேன். அதை நீங்கள் செய்து தரவேண்டுமென்று அன்போடு கேட்டு, இந்த வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராஜன் அவர்கள்.

**திரு. அ. ராஜன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உலகமெல்லாம் வாழும் கோடானு கோடி தமிழர்களின் ஒரு பெரும் தலைவர், ஊமைகளைப் பேச வைத்த உத்தமன், தமிழ்த் தாயின் தலைமகன், பேரறிஞர் அண்ணா அவர்களின் நூற்றாண்டு விழாவினை இந்த ஆண்டு கொண்டாட அறைகூவல் விடுத்துள்ள உன்னதத் தலைவன், அய்யன் திருவள்ளுவர் பிறந்த நாளான தைத் திங்கள் முதல் நாளைத் தமிழ்ப் புத்தாண்டு என இந்த அவணிக்குப் பறைசாற்றிய தமிழ்கூறும் நல்லுலகின் தன்னிகரில்லாத் தலைவன், மாண்புமிகு தமிழக முதல்வர், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) அறிவுக்கடல் ஆசான், திராவிட இயக்கத்தின் கருவூலம், இந்த ஆண்டு தமிழகத்தில் வரியில்லா நிதிநிலை அறிக்கையை உற்சாகமாய் மூன்று மணி நேரம் சபைக்கு அளித்த மாண்புமிகு நிதி அமைச்சர், இனமானப் பேராசிரியப் பெருந்தகை அவர்களுக்கும், பாசமுள்ள அன்பிற்குரிய அண்ணன் மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் ஆற்காட்டார் அவர்களுக்கும், தான் உள்ளாட்சித் துறை அமைச்சராகப் பொறுப்பேற்றபிறகு, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் பல தடவை சுற்றுப்பயணம் மேற்கொண்டு, பல்வேறு பணிகளை மிகச் சிறப்பாக இந்தக் குறுகிய காலத்தில் செய்து, சென்ற ஆண்டு தன்னுடைய மானியக் கோரிக்கையின் மீதான பதிலுரையில், 'வரும் ஆண்டில் செய்யப்படும்' என அறிவித்த அத்துணை அறிவிப்புகளையும், ஒரே ஆண்டில் நடைமுறையில் செய்துகாட்டி, புத்தகம்மூலம் உடனடியாக அனைவருக்கும் வழங்கிச் சிறப்புச் செய்த, உள்ளாட்சி மன்றங்களுக்கு அதிக அதிகாரங்களை வழங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கு முன்னர் தமிழக வரலாற்றில் ஊரக, உள்ளாட்சித் துறை அமைச்சர்களாகப் பலர் இருந்தாலும், இவர்தான் உள்ளாட்சித் துறை அமைச்சர் என்று ஒட்டுமொத்தத் தமிழ் மக்களும் ஓங்கி ஒலிக்கும் அளவிற்கு, தன் சிந்தனையால், செயலால், கடின உழைப்பால், புகழ்பெற்ற வருங்காலத் தமிழகத்தின் வசந்தம், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர், அண்ணன் தளபதியார் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்



அவர்களுக்கும் முதற்கண் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-15

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை மானியக் கோரிக்கைகள்மீது ஒரு சில கருத்துகளைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முதலாவதாக, என்னுடைய நீண்டநாள் கோரிக்கையை ஏற்று, நாகர்கோவில் நகரப் பகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையான பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்கு ரூ.118 கோடி ஒதுக்கீடு செய்து, இந்த நிதியாண்டே அந்தப் பணி மேற்கொள்ளப்படும் என்று நிதிநிலை அறிக்கையில் அறிவித்திருப்பதற்கு மாண்புமிகு முதல்வர், தலைவர் கலைஞர் அவர்களுக்கும், மாண்புமிகு அண்ணன் தளபதியார் அவர்களுக்கும் எனது தொகுதி மக்களின் சார்பில் நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல், என்னுடைய நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று, நாகர்கோவில், செட்டி குளம் பகுதியில் போக்குவரத்துத் துறைக்குச் சொந்தமாக உள்ள இடத்தில் இந்த ஆண்டே புதிய பணிமனை அமைத்துத் தரப்படும் என்று போக்குவரத்துத் துறை மானியம்மூலம் தெரிவித்த மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்களுக்கும், போக்குவரத்துத் துறை அமைச்சர் மாண்புமிகு அண்ணன் நேரு அவர்களுக்கும் தொகுதி மக்கள் சார்பில் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அண்ணன் தளபதியார் அவர்கள், சென்னை மாநகர மேயராகப் பணியாற்றியபோது, சென்னை மாநகரில் போக்குவரத்து நெரிசல், பொது மக்கள் நெரிசல் இவற்றைக் கருத்திற்கொண்டு உலகத்தரம் வாய்ந்த பிரமாண்டமான பல மேம்பாலங்களைக் கட்டி வரலாறு படைத்தார்கள். வெளிநாட்டிலிருந்து சென்னைக்கு வரக்கூடியவர்கள்கூட, மேற்கண்ட பாலங்களின் கட்டுமானப் பணிகளைப் பார்த்து மனதாரப் பாராட்டினார்கள். ஆனால், இதைப் பொறுக்க முடியாத முன்னாள் முதலமைச்சர், இன்று எதிர்க்கட்சித் தலைவர் ஜெயலலிதா அம்மையார் அவர்கள் இதே அவையில் (குறுக்கீடுகள்) மாண்புமிகு தளபதியார்

அவர்களைப் பார்த்து, நீங்கள் மேயராக இருக்க விரும்புகிறீர்களா அல்லது சட்டமன்ற உறுப்பினராக இருக்க விரும்புகிறீர்களா என்று சொல்லி, தனது அதிகார மமதையால் மேயர் பதவியைப் பறித்தார். (குறுக்கீடுகள்) ஆனால், இன்றைக்குத் தமிழகத்தில் மீண்டும் கழக அரசு (குறுக்கீடுகள்) பொறுப்பேற்ற பிறகு, சென்னை மாநகராட்சி மட்டுமல்ல (குறுக்கீடுகள்) தமிழகத்தில் உள்ள அனைத்து மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள். . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, நீங்கள் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) one second. (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மரபைக் காக்கின்ற வகையில், இரு தரப்பிலும் தலைவர்களுடைய பெயரை உச்சரிக்கக் கூடாது என்று நாம் முடிவு (குறுக்கீடுகள்) இருங்கள், சொல்லி முடித்துவிடுகிறேன். (குறுக்கீடுகள்) நீங்களே சொல்லுங்கள், எழுந்திருந்து பேசுங்கள், நான் உட்கார்ந்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் பேசுங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மரபுகளை நீங்கள் கடைப்பிடிக்கிறீர்களா, இல்லையா? நீங்கள் பேசினால், நாங்களும் பேசினால், அது எப்படி மரபாக இருக்கும் என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். அதை, அவைக் குறிப்பிலிருந்து, அம்மா அவர்களுடைய பெயரைச் சொன்னதை எடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ராஜன், இனிமேல் நீங்கள் அவர்கள் பெயரைச் சொல்ல வேண்டாம். (குறுக்கீடுகள்)

**திரு. அ. ராஜன்:** முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா என்றுதான் குறிப்பிலே சொன்னேன். அதிலே என்ன தப்பு? முன்னாள் முதலமைச்சர் என்றுதான் சொன்னேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மானியத்திற்கு வாருங்கள். திரு. ராஜன், நீங்கள் மானியத்திற்கு வாருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. அ. ராஜன்:** ஆனால், இன்றைக்குத் தமிழகத்தில் மீண்டும் கழக அரசு பொறுப்பேற்ற பிறகு (குறுக்கீடுகள்) சென்னை மாநகராட்சி



மட்டுமல்ல (குறுக்கீடுகள்) தமிழகத்திலுள்ள அனைத்து மாநகராட்சிகள், (குறுக்கீடுகள்) நகராட்சிகள், பேரூராட்சிகள், ஊராட்சிகள் இவற்றை முழுமையாகக் கவனிக்கும் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறைக்குப் பொறுப்பேற்றுள்ள நம்முடைய மாண்புமிகு தளபதியாரின் சிறப்பான பணிகளைக் கண்டு (குறுக்கீடுகள்) புழுதி வாரித் தூற்றுபவர்கள் கூட இன்றைக்கு மனதாரப் பாராட்டுகிறார்கள் என்பதை நான் இந்த மாமன்றத்தில் வைக்கக் கடமைப்பட்டுள்ளேன். (குறுக்கீடுகள்) இந்த நேரத்தில் நான் மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களுக்கும் . . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உட்காருங்கள். இதெல்லாம் unparliamentary word கிடையாது. இப்படியெல்லாம் பண்ணினால் (குறுக்கீடுகள்) பெயரை நீக்கச் சொல்லி இவ்வளவு பேர் சொல்ல வேண்டாம். (குறுக்கீடுகள்) மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறை விவாதம் என்று சொன்னாலே, கடந்த ஆண்டும், அதற்கு முன்பும் அ.தி.மு.க.வைச் சேர்ந்தவர்கள் ஏதோ காரணம் சொல்லி வெளிநடப்புச் செய்கிறார்கள். கடந்த கால இந்த அவையினுடைய குறிப்புகளை தயவுசெய்து பாருங்கள். எத்தனை முறை முன்னாள் முதலமைச்சர், எங்களுடைய தலைவருடைய பெயரைச் சொல்லிப் பேசியிருக்கிறார்கள் இந்த அவையிலே என்பதை நீங்கள் எண்ணிப் பார்த்தால்—வேண்டுமானால் நீங்கள் அதைத் தவிர்க்க வேண்டுமென்று கேளுங்கள், அது வேறு. ஆனால், ஒரு பெயரையே சொல்லக்கூடாது என்று கட்டாயப்படுத்துவதற்கு யாருக்கும் உரிமை இல்லை. அது அவர்களுடைய அப்பா, அம்மா வைத்த பெயர். அதிலே போய் நாம் குறுக்கிடுவது சரியல்ல. (குறுக்கீடுகள்) தலைவர் கலைஞருடைய பெயரை முன்னாள் முதலமைச்சர் இந்த அவையிலே எத்தனை முறை பேசியிருக்கிறார்? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

முற்பகல் 11-20

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த முறை இந்தப் பிரச்சினை அவையில் வந்தபோது,

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாண்புமிகு அம்மா அவர்களுடைய பெயரைக் குறிப்பிட வேண்டாம், முன்னாள் முதலமைச்சர் என்று சொன்னால் போதும் என்று சொல்லியிருக்கின்றார்கள். இப்பொழுது திரும்பவும் மாண்புமிகு உறுப்பினர், பெயரை விளித்துக் கூறுகின்ற காரணத்தினால் இங்கிருந்தும் உறுப்பினர்கள் பெயரைச் சொன்னால் நீங்கள் அனுமதிக்கின்றீர்களா, அங்கு பிரச்சினை செய்வதாக இருந்தால், இங்கிருந்தும் பெயரைச் சொல்வார்கள், தேவையில்லாத ஒரு பிரச்சினை இந்தச் சபையில் உருவாகும். அதைத் தவிர்ப்பதற்கு சட்டப் பேரவையினுடைய துணைத் தலைவர் ஒரு சரியான முடிவை இப்பொழுது அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த சட்டசபையிலே நடந்தது எனக்கும், மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் பன்னீர்செல்வத்திற்கும் நன்றாகத் தெரியும். இந்த அவையில், வேண்டுமானால் நான் இப்பொழுதுகூட சொல்கிறேன். போன முறை நாங்கள் எதிர்க்கட்சியில் இருந்து பேசியபொழுது, எத்தனை முறை முன்னாள் முதலமைச்சருடைய பெயரைச் சொல்லியிருக்கிறோம், மனதிலே கை வைத்துச் சொல்லுங்கள். இங்கிருந்து திரு. பொன்னையன் ஆயிரக்கணக்கான தரம் கலைஞரைப் பெயரைச் சொல்லிச் சொல்லிப் பேசியதை பன்னீர்செல்வமே மறந்துவிடலாமா? மனசாட்சி வேண்டாமா? என்ன அக்கிரமம்? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒரு குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை. (குறுக்கீடுகள்) ஒரு reference-க்காகத்தான் சொன்னாரே தவிர . . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் கூறுவதை நான் ஒத்துக்கொள்கிறேன். அதிலே கொஞ்சம் கண்ணியமாகப் பேசியவர் மாண்புமிகு பன்னீர்செல்வம் அவர்கள்தான். ஆனால் மற்ற அமைச்சர்கள் எப்படிப் பேசினார்கள்? ஒரு lady, I don't know her name. (குறுக்கீடுகள்) I forgot her name. அந்த lady, how she spoke on that day? Filthy language. ரோட்டிலே பேசுவதுபோலப் பேசினார்களே. (குறுக்கீடுகள்) நீங்கள் அதுபோலப் பேசவில்லை. நீங்கள் அப்போது ஒரு மாதிரியாகத்தான் பேசினீர்கள், நன்றாகப் பேசினீர்கள். (குறுக்கீடுகள்)



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. அ. ராஜன், முன்னாள் முதல்வர் என்று பேசுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** ஆனால், இப்பொழுது அதற்காக போட்டிக்காகப் பேச வேண்டுமென்று நான் சொல்லவில்லை. ஆகையினால், கூடுமானவரையில் தலைவர்களுடைய பெயர்களை உச்சரிக்காமல், அவர்களுக்குரிய பதவிப் பெயரை உச்சரிப்பதுதான் சரியாக இருக்கும் என்பதை நாங்கள் இப்பொழுது பெருந்தன்மையோடுகூட சொல்கிறோம். (குறுக்கீடுகள்) நடந்தவை நடந்தவைகளாக இருக்கட்டும், இனி நடப்பவைகளாவது நல்லவைகளாக இருக்கட்டும். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, நான் முன்னாள் முதல்வர் என்று பேசச் சொல்லி உறுப்பினருக்கு ruling கொடுத்துவிட்டேன். திரு. அ. ராஜன், முன்னாள் முதல்வர் என்று சொல்லுங்கள்.

**திரு. அ. ராஜன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதுதான் ஒரு நிலைமை என்று எடுத்துக்கொண்டால் House-ஐ யாராலும் நடத்த முடியாது. Accusation எதுவும் சொல்லவில்லை. அவர் ஏதாவது குற்றச்சாட்டு சொன்னால், நீங்கள் சொல்வதில் நியாயம் இருக்கிறது. குற்றச்சாட்டே சொல்லாமல், ஒரு reference-க்காக ஒரு ஆட்சி என்று சொல்லும்போது, (குறுக்கீடுகள்) this is not an unparliamentary word. நீங்கள் செய்வது நன்றாக இல்லை. ஒரு bad precedent ஆகிவிடும். (குறுக்கீடு) யார் வேண்டுமானாலும் ஆட்சிக்கு வரலாம். இப்படி நடந்துகொண்டால் பிறகு House-ஐ நடத்த முடியாது.

**திரு. அ. ராஜன்:** கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் இரண்டு முதலமைச்சர்கள் இருந்தார்கள். எனவே, நான் குறிப்பிடும்போது, பெயரைச் சொல்லாமல் இருந்தால் ஒருவேளை இவரைக் குறிப்பிட்டுவிடுமல்லவா? அதனால்தான் அவருடைய பெயரை நான் குறிப்பிட்டேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சார், இது நன்றாக இல்லை. இது ஒரு bad precedent ஆகிவிடும் சார். (குறுக்கீடுகள்) மரபைக் கடைப்பிடிக்கிறோம். (குறுக்கீடுகள்) அதைத்தான் நான் சொல்லிவிட்டேனே! Sir, I have given my ruling. நான் பெயரைச் சொல்ல வேண்டாமென்று சொல்லிவிட்டேன். என்னுடைய ruling-ஐக் கொடுத்துவிட்டேன். மீண்டும் அதைப்பற்றிப் பெரிதாகப் பேசிக்கொண்டிருப்பது நியாயமல்ல. Sir, I have given my ruling. முன்னாள் முதல்வர் என்று அழைத்துப் பேசுங்கள் என்று சொல்லிவிட்டேன். (குறுக்கீடுகள்) பெயரை எடுக்க முடியாது. (குறுக்கீடுகள்) ஒரு bad precedent -ஐ உருவாக்காதீர்கள். This is Assembly.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முன்னாள் முதல்வர் பெயரைக் குறிப்பிட்டதற்காக, அதை அவைக் குறிப்பிலிருந்து எடுக்க வேண்டும், எடுக்க வேண்டும் என்று சொல்கிறார்கள், அது என்ன கெட்ட வார்த்தையா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** Unparliamentary word இல்லை என்று அழகாகச் சொல்லிவிட்டேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர்கள் என்ன கேட்கிறார்கள் என்று சொன்னால், முன்னாள் முதலமைச்சருடைய பெயரை, அவர் சொன்னார், அதை அவைக் குறிப்பிலிருந்து எடுத்துவிட வேண்டும் என்று கேட்கிறார்கள். கெட்ட வார்த்தைகளை எடுப்பதிலே தவறில்லை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை. நீங்கள் எல்லோரும் பொறுப்பாகப் பேச வேண்டும். ஒரு குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை. ஒரு reference-ஆகச் சொல்லிவிட்டார். நான், இனிமேல் முன்னாள் முதல்வர் என்று அழைத்துப் பேசுங்கள் என்று சொன்ன பிறகு இதைத் தொடர்ந்து பேசுவது நல்லதல்ல. (குறுக்கீடுகள்) Mr. Rajan, continue your speech.

*முற்பகல் 11-25*

**திரு. அ. ராஜன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம்.



**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதல்வர் அவர்கள் மிகவும் பெருந்தன்மையோடு, பெரிய மனதோடு, இந்த அவையிலே யாருடைய பெயரையும் உச்சரிக்க வேண்டாம், அதுவும் முதலமைச்சர்களுடைய பெயரை உச்சரிக்க வேண்டாம் என்று வேண்டுகோள் வைத்திருக்கிறார்கள். அது அவர்களுடைய பெருந்தன்மையைக் காட்டுகிறது. ஆதலால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய வேண்டுகோளை ஏற்று, இந்த அவையில் உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட முன்னாள் முதலமைச்சருடைய பெயரை தயவுசெய்து அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்ற அன்பான வேண்டுகோளை வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அமைதி. அமைதி.

**திரு. அ. ராஜன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு சிறிய விளக்கம். அதாவது, இன்றைய உள்ளாட்சித் துறை அமைச்சர் எங்களுடைய தளபதியார் அவர்களை, நீங்கள் எம்.எல்.ஏ.வாக இருக்க விரும்புகிறீர்களா, மேயராக இருக்க விரும்புகிறீர்களா என்று சொன்னபோது, நான் ஒருவேளை முன்னாள் முதலமைச்சர் என்று சொன்னால், மாண்புமிகு உறுப்பினர் பன்னீர்செல்வம் அவர்கள் வருத்தப்பட்டுவிடக் கூடாது அல்லவா? எனவேதான், நான் இரண்டு முதலமைச்சர்களையும் பிரித்துக் காட்டுகின்ற வகையில், அவருடைய பெயரைக் குறிப்பிட்டேன். யார் சொன்னாரோ அவருடைய பெயரைக் குறிப்பிட்டேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** Subject-க்கு வாருங்கள்.

**திரு. அ. ராஜன்:** இந்த நேரத்தில் நான் மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களுக்கும், உள்ளாட்சித் துறை அமைச்சர் தளபதியார் அவர்களுக்கும் தெரிவித்துக்கொள்ள விரும்புவது, திருப்பூர் மற்றும் ஈரோடு ஆகிய நகரங்களின் வளர்ச்சியைக் கருத்திற்கொண்டும், அந்நகர மக்களின் கோரிக்கைகளின் அடிப்படையிலும் அவற்றை மாநகராட்சியாக நிலை உயர்த்தினீர்கள். வேலூர் நகராட்சியும் இந்த ஆண்டில் மாநகராட்சியாக நிலை உயர்த்தப்படும் என்று நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. குமரி மாவட்ட மக்களின் நீண்டகால எதிர்பார்ப்பாக உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க நாகர்கோவில் நகராட்சியை மாநகராட்சியாக இந்த ஆண்டே நிலை உயர்த்திட ஆவன செய்ய வேண்டுமென்று நான் அன்பாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழக நகர்ப்புறங்களில் உள்ள சாலைகளை உலகத் தரத்திற்கு உயர்த்தும் வகையில், தமிழ்நாடு நகர்ப்புறச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம், இந்த நிதியாண்டிலிருந்து செயல்படுத்தப்படும் என்று நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதோடு, ரூ.1,000 கோடி மதிப்பீட்டில் சில மாநகராட்சிகள், சில நகராட்சிகள் ஆகியவற்றில் உள்ள சாலைகளை மேம்படுத்துவதோடு, நடைபாதைகள், மழைநீர் வடிகால்கள் அமைத்துக் கொடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருப்பதை நான் மனமாரப் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் கைவிடப்பட்ட அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்மூலம் கடந்த ஆண்டு 140 பேரூராட்சிகளில் ரூ.70 கோடி மதிப்பீட்டில் மிகச் சிறப்பான வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. தொடர்ந்து, இந்த நிதியாண்டிலும் மேலும் 140 பேரூராட்சிகளில் ரூ.70 கோடி மதிப்பீட்டில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும் என்று அறிவித்துள்ளதை நான் மகிழ்ச்சியுடன் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் உள்ள குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க, இதற்கு முன்னர் இருந்த அ.தி.மு.க. சர்க்கார் எந்தவிதமான நடவடிக்கையையும் எடுக்கவில்லை. ஆனால், தாயுள்ளம் கொண்ட தலைவர் கலைஞர் அரசின் இடைவிடாத முயற்சியால், ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு ஜப்பானிய பன்னாட்டு கூட்டுறவு வங்கியின் நிதியுதவியோடு, ரூ.1,330 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்திட, (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களால், 26-2-2008 அன்று அடிக்கல் நாட்டப்பட்டது. வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தத் திட்டத்திற்கு ஒட்டுமொத்த தமிழ் மக்களும் தம்முடைய நன்றியையும், பாராட்டுக்களையும் தலைவர் கலைஞர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், இவற்றைப் பொறுக்கமுடியாதவர்கள், அறிக்கைமூலம் தங்களுடைய வயிற்றெரிச்சலை நாட்டிற்குக் காட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ராஜன், சீக்கிரம் பேசி முடியுங்கள். நேரமாகிவிட்டது.



**திரு. அ. ராஜன்:** முடித்துவிடுகிறேன். இந்த நேரத்தில் நான் குறிப்பிட விரும்புவது, நம்முடைய தளபதியார் அவர்கள், உள்ளாட்சித் துறை அமைச்சராகப் பொறுப்பேற்றபிறகு, முதல்தடவையாக நாகர்கோவில் வந்து, அரசு அதிகாரிகள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் கலந்துகொண்ட ஆய்வுக் கூட்டத்தில் நான் பேசும்போது, நாகர்கோவில் நகர மக்களின் குடிநீர்ப் பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்ப்பதற்கு உலக்கையருவித் திட்டத்தை நிறைவேற்றித் தரும்படிக் கேட்டுக்கொண்டேன். தளபதியார் அவர்களும், அதற்கான நடவடிக்கைகளை வேகமாக எடுத்து, அதற்கான நிர்வாக அனுமதியைத் தந்து, முதற்கட்டமாக ஆய்வுப் பணிகளுக்காக ரூ.25 இலட்சம், நாகர்கோவில் நகராட்சிமூலம் அரசுக்குக் கட்டப்பட்டுள்ளது. கடந்தகால அ.தி.மு.க. ஆட்சியில் கிடப்பில் போடப்பட்டு, மீண்டும் தலைவர் கலைஞர் ஆட்சியில் புத்துயிர் பெற்றுள்ள இந்தத் திட்டத்தினை அவசர அவசியம் கருதி, மிக வேகமாக முடித்துத்தர வேண்டுமென்று அன்பாய்க் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ராஜன், கடைசி point-ற்கு வாருங்கள்.

**திரு. அ. ராஜன்:** வந்துவிடுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைவர் கலைஞர் அவர்கள் நான்காவது முறையாக முதலமைச்சராகத் தமிழகத்தில் பணியாற்றியபோது, எல்லோரும் ஓரினம், எல்லோரும் ஓர் குலமென்ற உணர்வின் அடிப்படையில், தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் தந்தை பெரியார் அவர்களின் சமத்துவக் கொள்கைகளை நிலைநாட்டும் வகையில், சமத்துவபுரங்களை அமைத்துத் தந்தார்கள். இந்த ஆண்டு தந்தை பெரியார் சிலையுடன்கூடிய சமத்துவபுரங்களை அமைத்திட ரூ.75 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதை . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ராஜன், உட்காருங்கள். அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. மலரவன். (குறுக்கீடு)

**திரு. அ. ராஜன்:** கோரிக்கை மட்டும். தலைவர் கலைஞர் அவர்கள் . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், திரு. ராஜன். அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. மலரவன். 20 நிமிடங்களில் உங்கள் பேச்சை முடித்துக்கொள்ளுங்கள்.

முற்பகல் 11-30

**திரு. தா. மலரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே பேசுகின்ற பெரும் வாய்ப்பை எனக்கு அளித்த, நாட்டு மக்களின் நம்பிக்கை நட்சத்திரம், ஏழைகளின் இதய தெய்வம், ஒன்றரை கோடி கழகத் தொண்டர்களின் காவல் தெய்வம், நாங்கள் தினந்தோறும் உச்சரிக்கும் சுப்ரபாதம், கடையேழு வள்ளல்களில் எட்டாவது வள்ளலாகத் திகழ்ந்த எங்களுடைய இதய தெய்வம், பாரத் ரத்னா டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் ஒரே அரசியல் வாரிசு, வருங்காலத் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கின்ற திசை நோக்கி என்னுடைய வணக்கத்தையும், நன்றியையும் நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியைச் சேர்ந்த கோட்டைமேடு, வின்சென்ட் ரோட்டில் குடிசை மாற்று வாரியத்திற்குச் சொந்தமான வீடுகள் இடிந்து விழுந்து, 20-10-2007 அன்று 13 பேர் பலியாயினர். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களும், ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களும் வந்து பார்த்தார்கள். பார்த்துவிட்டு, பத்திரிகைகளுக்குப் பேட்டி கொடுத்தார்கள். உடனடியாக வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும் என்று சொன்னார்கள். ஆனால், அப்படிச் சொல்லி ஆறு மாத காலமாகிறது, இதுவரையிலே வீடுகள் கட்டிக் கொடுக்கவில்லை. கட்டிக் கொடுப்பதற்கு எந்தவித நடவடிக்கையுமே எடுக்கவில்லை என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கின்றேன். ஏனென்று சொன்னால், புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் அங்கே வாலாங்குளத்திலே இருந்த வீடுகளை. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 13 வீடுகளைத் தவிர, மற்ற வீடுகளில் இருப்பவர்களைக் காலி செய்வதற்கு மூன்று மாத காலம் ஆயிற்று. வீடுகளைக் காலி செய்கின்ற ஒவ்வொரு குடும்பத்திற்கும் வாடகையாக ரூ.8,000 கொடுக்கின்றோம் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்ததற்குப் பிறகு இப்பொழுதுதான் முழுமையாகக் காலி செய்து, இடிக்கின்ற பணி நடந்து முடிந்திருக்கின்றது. விரைவிலே வீடுகள் கட்டித் தரப்படும்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மலரவன், பேசுங்கள்.

**திரு. தா. மலரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆறு மாத காலமாகிறது. இதுவரையில் எந்த நடவடிக்கையுமே எடுக்கவில்லை என்பதைத்தான் நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு குடிசை மாற்று மற்றும் இட வசதிக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி வாரியத்தினுடைய பார்வைக்கு வைக்கப்பட்டு, tender அங்கீகரிக்கப்பட்டு, வரவிருக்கின்ற 22 ஆம் தேதி தச்சு செய்யவிருக்கிறார்கள்.

**திரு. தா. மலரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் வாலாங்குளத்திலே அத்துமீறிக் கட்டப்பட்டிருந்த வீடுகளை அப்புறப்படுத்த வேண்டுமென்று நீதிமன்றம் கட்டளையிட்டது. அந்தக் கட்டளையை ஏற்றுக்கொண்டு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அவர்களைக் காலி செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். ஆனால், அதற்கு உடனடியாக மாற்று இடத்தில், சுகுணாபுரத்திற்குப் பக்கத்திலே இருக்கக்கூடிய பிள்ளையார்புரத்திலே அவர்களுக்கு வீடுகளைக் கட்டிக் கொடுத்து, 850 வீடுகளைக் கட்டிக் கொடுத்து, அவற்றுக்கு சுகாதார வசதி, அடிப்படை வசதிகளான ரோடு, மின்சாரம், குடி தண்ணீர் கொடுத்து, அவர்களை அங்கே குடியமர்த்தியதற்குப் பிறகுதான் அந்த வீடுகள் அம்மா அவர்களுடைய ஆட்சியில் இடிக்கப்பட்டது என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன். ஆனால், நீங்கள் உடனடியாக வீடுகளைக் காலி செய்துவிட்டீர்கள். அந்த வீடுகளைக் காலி செய்தது மட்டுமல்ல, அன்றைக்கு இருந்த மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், கோவையிலே இருக்கக்கூடிய தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்தமான அத்தனை வீடுகளையும் உடனடியாகக் காலி செய்ய வேண்டுமென்று சொல்லி, பத்திரிகைமூலம் அறிக்கை கொடுக்கிறார். அப்படியென்றால், அத்தனை மக்களும் எங்கே போவார்கள்? இந்த 350 வீடுகளிலே குடியிருந்த 1,500-க்கு மேற்பட்ட மக்கள், அந்த 350 குடும்பங்கள், இன்றைக்கு நடுத்தெருவிலே அனாதைகளாக நின்றுகொண்டிருக்கிறார்கள். அவர்களை யார் காப்பாற்றுவது? இல்லை, ஒருவேளை இது அண்ணா தி.மு.க. வெற்றி பெற்ற தொகுதி, அதனாலே நாங்கள் கட்டிக் கொடுக்க முடியாது என்று நீங்கள் சொல்கிறீர்கள் என்று சொன்னால். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு குடிசை மாற்று மற்றும் இட வசதிக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கருணை உள்ளம் கொண்ட எங்களுடைய தலைவர் அவர்கள் ஒவ்வொரு குடியிருப்பிற்கும், ஒவ்வொரு நபருக்கும் தலா 8,000 ரூபாய் கொடுத்து, வீடுகளைக் கட்டி முடிக்கும்வரைக்கும் மாற்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) சபையில் தவறான தகவல்களைச் சொல்ல வேண்டாம் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

**திரு. தா. மலரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தவறான தகவலைச் சொல்லவில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்கு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றுதான் நான் கேட்டுக்கொள்கிறேன் என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது உள்ளாட்சி நிருவாகம், சரியாக செயல்படுவதில்லை என்பதை எடுத்துக்காட்டுவதற்கு அனைத்து உள்ளாட்சிகளிலும், அடிதடி, வெளிநடப்பு, உள்ளிருப்புப் போராட்டம் என்றுதான் நடந்துகொண்டிருக்கிறது. கோவை மாநகராட்சியிலும் அதே நிலைமைதான். அங்கே கோவை மாநாகராட்சியில் நான் மேயராக இருந்த நேரத்தில் (குறுக்கீடு) உட்காருங்கள் திரு. கோவை தங்கம், நீங்கள்தான் தெரியும், உட்காருங்கள். நான் மேயராக இருந்த நேரத்தில் கோவை ஆர்.எஸ். புரத்திலும், பீளமேட்டிலும் (குறுக்கீடு) துணை மின் நிலையம் அமைப்பதற்கு. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கோவை தங்கம், என்ன? (குறுக்கீடுகள்) அவர் எழுந்து நிற்கிறார், என்னவென்று கேட்கக்கூடாதா? (குறுக்கீடுகள்)

முற்பகல் 11-35

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. (குறுக்கீடுகள்) அண்ணா தி.மு.க. ஆட்சியில் (குறுக்கீடுகள்) சென்ற ஐந்து ஆண்டு காலத்தில், கோவை மாநகராட்சியில் நடைபெறாத அட்டூழியமும் இல்லை, தகராறுகளும் இல்லை. மாநகராட்சிக் கூட்டத்தில் ஒவ்வொரு முறையும் சேர்கள் பறக்கும், தகாராறுகள் நடக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சித் துணைத் திரு. தா. மலராவன், பேசுங்கள். (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சித் துணைத் தலைவர்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அ.இ.அ.தி.மு.க.வின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. மலாவன் எந்தவிதமான அவர்கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் ஆட்சேபகரமான வார்த்தைகளையும் பயன்படுத்தாமல் பேசிக்கொண்டிருக்கிறார்கள். சட்டப் பேரவைத் தலைவர் நீங்களே . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் எழுந்து நின்றால் என்னவென்று நான் கேட்கக்கூடாதா?

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** அதில் பேசுவதற்கு என்ன இருக்கிறது? அதிலே என்ன point of order இருக்கிறது?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் என்னுடைய அதிகாரத்தில் தலையிடக் கூடாது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழக உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்றனர்.)

***மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு உறுப்பினர் பேசிக்கொண்டிருக்கும்போது, மற்றோர் உறுப்பினர் Point of Order, Point of Clarification அல்லது வேறு எதற்காகவோ எழுந்து நின்றால், அந்த உறுப்பினரை அனுமதிப்பது என்பது முழுக்க, முழுக்க சபாநாயகருடைய உரிமை. அந்த உரிமையில்—ஏன் வாய்ப்புக் கொடுத்தீர்கள் என்று கேட்பதற்கு யாருக்கும் உரிமையில்லை. அதற்காக, பேசிக்கொண்டிருக்கும்போது இவ்வளவு பேர் எழுந்துகொள்ளக்கூடாது. சபாநாயகரைக் கேள்விக் கேட்கக்கூடாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சித் துணைத் தலைவர், சொல்லுங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைத் தலைவர் அவர்களே,**

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஆட்சேபகரமான விஷயம். சபாநாயகரை நோக்கி ஒரு முன்னாள் முதலமைச்சர் சொல்கிற வார்த்தையல்ல. எனவே, இதை அவைக் குறிப்பிலிருந்து உடனடியாக நீக்கவேண்டும்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** தலைவர் அவர்களே, தலைவர் அவர்களே . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவைக் குறிப்பிலிருந்து மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொன்ன அந்த வார்த்தைகள் நீக்கப்படுகின்றன. (குறுக்கீடுகள்) No. எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் எழுந்து நின்றால் மட்டும் என்னவென்று கேட்க வேண்டும்; ஆனால், அவர்கள் எழுந்து நின்றால் என்னவென்று கேட்கக்கூடாதா? What is this? (குறுக்கீடுகள்) மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை நான் சொல்லக்கூடாது. மாண்புமிகு பன்னீர்செல்வம் அவர்கள் அந்தக் கட்சியினுடைய துணைத் தலைவர். இவர் ** கொறடா. அவருக்கு நீங்கள் அதற்காக அதிகமாகக் கொடுத்துவிடக் கூடாது. (குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, உட்காருங்கள் எல்லோரும். (குறுக்கீடுகள்) இந்த ** என்ற வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. மலாவன், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) நீக்கச் சொல்லியாகிவிட்டது, எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். திரு. பீட்டர் அல்போன்ஸ், சொல்லுங்கள்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** Point of Order. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் உணர்ச்சிவசப்பட்டுப் பேசுகின்றபோது ** கொறடா என்று சொல்லி, கொறடா பதவிகளை வைத்துக்கொண்டிருக்கின்ற எங்கள் எல்லோரையுமே ஒரு இலவச இணைப்புபோல அவர்கள் இந்த அவையிலே சொல்லியிருக்கிறார்கள். உண்மையிலேயே இந்தச் சட்டமன்ற நடவடிக்கை . . .

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இந்த ** என்ற வார்த்தையை அவைக் குறிப்பிலிருந்து நீக்கியாகிவிட்டது. மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, திரு. பீட்டர் அவர்கள் அதற்காக வருத்தப்பட வேண்டாம். ஏனென்றால், அண்ணா அவர்கள் அன்றைக்கு எதிர்க்கட்சியில் இருந்தபோது, நான் கொறடாவாகத்தான் இருந்தேன். (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மலரவன், நீங்கள் பேசுங்கள்.

**திரு. தா. மலரவன்:** கோவை மாநகராட்சியில் நான் மேயராக இருந்த நேரத்தில், கோவை ஆர்.எஸ். புரத்திலும், பீளமேட்டிலும், துணை மின் நிலையங்களை அமைப்பதற்காக, கோவை மாநகராட்சியில் ஒவ்வொரு இடத்திற்கும் இரண்டரை ஏக்கர் என்று ஐந்து ஏக்கர் இடம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலே ஒதுக்கப்பட்டது. ஆனால், அங்கே துணை மின் நிலையம் அமைப்பதற்கு இதுவரையில் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். அங்கு உடனடியாக துணை மின் நிலையம் அமைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகளில் வாழக்கூடிய மக்களுக்காக அங்கே அவர்களுக்கு அடிப்படை வசதிகளைச் செய்துகொடுக்க வேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு, உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அங்கே வாழக்கூடிய மக்கள் ஒரு சதுர அடிக்கு ரூ.5 கட்ட வேண்டும் என்று சொல்லி, கடந்த சட்டமன்ற கூட்டத் தொடரிலே அறிவித்தார்கள். அப்படி அறிவித்ததை ஏற்று, அங்கே அங்கீகரிக்கப்படாத மனைகளில் வாழக்கூடிய மக்கள் கோயம்புத்தூரிலே மட்டும் சுமார் ரூ.50 கோடி செலுத்தியுள்ளார்கள்.

ஆனால், அவர்களுக்கு இதுவரை எந்த அடிப்படை வசதியும் செய்து தரவில்லை. அங்கே சாலை வசதியோ, குடிதண்ணீர் வசதியோ, எதையுமே செய்யவில்லை என்பதை நான் வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-40

கடந்த 2006-2007 ஆம் ஆண்டு தாங்கள் வெளியிட்ட கொள்கை விளக்கக் குறிப்பில், கோவை மாநகராட்சிக்கு பல்வேறு திட்டங்களை

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

அறிவித்துள்ளீர்கள். அதில், 'கால்வாய்களை தூய்மைப்படுத்துதல்' என்ற தலைப்பில் மாநகராட்சி எல்லையில் ஓடும் சங்கனூர்பள்ளம் கால்வாய் தூய்மைப்படுத்தப்பட்டு மாசற்ற கால்வாயாக ஆக்கப்படும், அதில் சிமென்ட் கான்கிரீட் தளமும் சிறு வடிகால்களும் அமைக்கப்படுவதோடு, கரைகளும் அமைக்கப்பட்டு அதில் நடைபாதை, விளக்கு வசதி, அமர்வதற்கான இருக்கை வசதிகள் செய்து கொடுத்து, அதன்மூலம் பொது மக்களுக்கு பொழுதுபோக்கு இடமாக மாற்றி அமைக்கப்பட உள்ளது என்று பக்கம் 35-ல் அறிவித்துள்ளீர்கள். கோவையில் உள்ள பல்வேறு மருத்துவமனைகள் அந்தச் சங்கனூர்பள்ளத்திலேதான் மருத்துவக் கழிவுகளைக் கொட்டுகிறார்கள். இதனால், அந்தச் சங்கனூர்பள்ளம் மிகவும் மாசுபடுத்தப்பட்டுள்ளது. இதுவரை அங்கு எந்த வேலையையும் ஆரம்பிக்கவில்லை. கோவை மக்களுக்குப் பயன்படும் வகையில் அதனைச் செய்து கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் அனைத்துப் பகுதிகளுக்கும் சீரான குடிநீர் வழங்குவதற்கு ரூபாய் 172.80 கோடி மதிப்பீட்டில் கோவை மாநகராட்சிக்குத் தனியாக 2-வது பில்லூர் குடிநீர் வழங்கும் மேம்பாட்டுத் திட்டம் எடுத்துக்கொள்ளப்பட உள்ளது. இந்தத் திட்டம் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. இதில் ரூ.68 கோடி மாநகராட்சியினுடைய பங்கீடு ஆகும் என்று பக்கம் 35-ல் அறிவித்துள்ளீர்கள். இந்தத் திட்டம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில் திட்டமிடப்பட்டது. அப்போது அதற்கு ரூபாய் 110 கோடி என்று மதிப்பீடு தயாரிக்கப்பட்டது. அது இப்போது ரூ.172.80 கோடியாக உயர்ந்துள்ளது. ஆனால், அதே கொள்கை விளக்கக் குறிப்பில் பக்கம் 60-ல், 'மேலும் 2006-2007 ஆம் ஆண்டில் பின்வரும் பெரிய அளவிலான கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட உள்ளன' என்ற தலைப்பில், கோயம்புத்தூர் மாவட்டத்தில், கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு ரூபாய் 120 கோடி மதிப்பீட்டில் 9.94 இலட்சம் மக்கள் பயன்பெறும்வகையில் பில்லூர் அணையை நீராதாரமாகக் கொண்ட குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் என்று அறிவித்துள்ளீர்கள். இந்தத் திட்டத்திற்கான மதிப்பீடு, ரூ.172.80 கோடியா, இல்லை, ரூ.120 கோடியா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெளிவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதிலும், 1981 ஆம் ஆண்டு எடுத்த மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 9.94 இலட்சம் மக்கள் தொகை கொண்டது கோவை. ஆனால், அங்கு



இப்போது 15 இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் தொகை உள்ளது. இது எதிர்காலத்தில் இன்னும் அதிகமாகும் என்பதையும் நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

தமிழ்நாடு அரசு குடிநீர் வடிகால் வாரியம் உள்ளது; அது அரசின் கட்டுப்பாட்டில் உள்ளது. இப்படிப்பட்ட குடிநீர்த் திட்டங்களை நிறைவேற்றத்தான் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் உள்ளது. கோவை மக்களுக்கு குடிநீர் வழங்கும் சிறுவாணி அணையையும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்தான் பராமரித்து வருகிறது. அதேபோல் பில்லூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தையும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்தான் இப்போது பராமரித்து வருகிறது. அப்படிப்பட்ட தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் இருக்கும்போது, பில்லூரிலிருந்து கோவை மாநகராட்சிக்கு இரண்டாவது குடிநீர் வழங்கும் திட்டத்தைக் கொடுக்காமல் அந்தப் பணியை தனியாருக்குக் கொடுக்க வேண்டிய அவசியம் என்ன வந்தது? இந்த டெண்டரை தனியாருக்குக் கொடுத்தால் கமிஷன் கொடுப்பார்கள். தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்குக் கொடுத்தால் அவர்கள் கமிஷன் கொடுக்கமாட்டார்கள். இப்போது தமிழ்நாட்டில் உள்ள அனைத்துக் கூட்டுக் குடிநீர்த் திட்டங்களையும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்தான் செயல்படுத்தி உள்ளது. ஆகவே, கோவை மாநகராட்சிக்கு இரண்டாவது பில்லூர் குடிநீர்த் திட்டத்தையும் தனியாருக்குக் கொடுத்த டெண்டரை இரத்துச் செய்து, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடம் ஒப்படைக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கோவையில் போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்த மேட்டுப்பாளையம் சாலையில் புதிய பஸ் நிலையம் அமைக்க மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டது. ஆனால், இதுவரை அங்கு பஸ் நிலையம் அமைக்க பணிகள் ஏதும் தொடங்கப்படவில்லை என்பதை மிகவும் வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். அங்கு பஸ் நிலையம் அமைக்க விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் நான் கேட்டுக்கொள்கிறேன். காந்திபுரம் மத்திய பேருந்து நிலையத்தினுடைய நெருக்கடியைக் குறைக்கும்வகையில் புதிய நவீனப் பேருந்து நிலையம் மேட்டுப்பாளையம் சாலையில் 2006-2007-ல் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது என்று தாங்கள் கூறியுள்ளீர்கள். அதனை உடனடியாக நிறைவேற்றித் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

தென்னிந்தியாவிலேயே கோவை மாநகராட்சியில்தான் மிருகக்காட்சி சாலை உள்ளது. அது வ.உ.சி. பூங்காவில் உள்ளது மக்கள் நெருக்கடி இல்லாத காலத்தில் அது தொடங்கப்பட்டது இப்போது கோவையில் மக்கள் நெருக்கடி அதிகமாக உள்ளது. கோவை மாநகராட்சிக்குச் சொந்தமான இடம், கவுண்டம்பாளையத்தில் 35 ஏக்கர் நிலம் உள்ளது. அந்த இடத்தில் மிருகக்காட்சி சாலையை, சிங்கம், புலி, கரடி உள்பட அனைத்து மிருகங்களும், அனைத்துப் பறவைகளும் உள்பட, நவீனமயமாக்கப்பட்ட ஒரு மிருகக்காட்சி சாலையை அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

முற்பகல் 11-45

கோவை மக்களுக்குப் பொழுது போக்க எந்த வசதியும் இல்லை. ஆகவே, அந்த இடத்தில் மிருகக்காட்சி சாலையை அமைக்கவேண்டும். சிங்கப்பூரில் சென்தோமா என்று ஓர் இடம் உள்ளது. அந்த இடத்தில் ஓர் அற்புதமான மீன்காட்சி சாலை இருக்கிறது. அங்கே சென்றால் கடல்வாழ் உயிரினங்கள் அனைத்தையும் ஒரே இடத்தில் பார்க்கக்கூடிய அளவுக்கு அற்புதமாக அமைத்திருக்கின்றார்கள். அதேபோல ஒரு மீன்காட்சி சாலையையும் நீங்கள் அமைத்துத் தரவேண்டுமென்று நான் கோவை மக்கள் சார்பாகக் கேட்டுக்கொள்கின்றேன். தற்போது இருக்கின்ற மிருகக்காட்சி சாலை, 5 ஏக்கர் நிலத்தில்தான் இருக்கிறது. அதுவும் கோவையின் மத்திய பகுதியில் இருக்கிறது. அதனால் அதை மாற்றி கவுண்டம்பாளையம் பகுதியில் 35 ஏக்கர் உள்ள இடத்தில் மிருகக்காட்சி சாலையை அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் அறிவித்த நிதிநிலை அறிக்கையில் தமிழகத்திலே பல்வேறு மாவட்டங்களுக்கு பல்வேறு சலுகைகளை, பல்வேறு திட்டங்களை அறிவித்துள்ளார்கள். ஆனால் கோவை மாவட்டத்திற்கு மட்டும் எந்தத் திட்டத்தையும் அறிவிக்கவில்லை. அது ஏன் என்று எனக்கும் தெரியவில்லை. அந்த மாவட்டத்து மக்கள் அனைத்திந்திய அண்ணா தி.மு.க.வுக்கு ஓட்டு போட்டார்கள் என்ற கோபம் ஆட்சியாளர்களுக்கு இன்னும் தீரவில்லை என்றுதான் நான் கருதுகின்றேன். கோவை மாநகராட்சியில் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலோடு, அன்றைக்கு நான் மேயராக இருந்தபோது, எந்த வரியும் அந்த மக்களுக்குப் போடாமல் ஐந்தாண்டு காலம் நிருவாகத்தை நடத்தினேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். ஆனால், இன்றைக்கு அங்கு குடிநீர்க் கட்டணம் உயர்த்தப்பட்டது.



குப்பைக்கு வரி போட்டுள்ளார்கள். இப்போது அரசு அனுப்பியுள்ள தாக்கீதின்படி, வரி சீராய்வு என்று சொல்லி, எல்லா உள்ளாட்சிகளுக்கும் வரியை உயர்த்தியிருக்கின்றீர்கள். 150 சதவிகிதம் என்று வரி உயர்த்தப்படவுள்ளது. இன்றைக்கு குடியிருப்புப் பகுதிக்கு 25 சதவிகிதம் என்றும், தொழிற்சாலைப் பகுதிக்கு 100 சதவிகிதம் என்றும், வணிக நிறுவனங்களுக்கு 150 சதவிகிதம் என்றும் தற்போது வரியை உயர்த்தியிருக்கின்றீர்கள். அப்படி என்றால், அங்கிருக்கின்ற மக்கள் எப்படி தொழிலை நடத்த முடியும்? எப்படி தொழிற்சாலைகள் இயங்கும் என்பதை நீங்கள் சிந்திக்கவேண்டும். இந்த வரி உயர்வை இரத்து செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன். மக்களைப்பற்றி கவலைப்படாமல் இந்த அரசு செயல்படுகின்றது என்றுதான் மக்கள் சொல்வார்கள். சுமார் 200 நகராட்சிகளின் வேலையை இப்போது மாநகராட்சிகளின் நிருவாக ஆணையர் கவனிக்க வேண்டியுள்ளது. Commissioner of Municipal Administration அவர்தான் எல்லா வேலைகளையும் செய்துகொண்டிருக்கின்றார். அதனால் என்ன நடக்கின்றது என்று சொன்னால், காலதாமதம் ஏற்படுகின்றது. ஒரு பணிக்கு உத்தரவு வழங்குவதற்கு technical sanction, administrative sanction கொடுப்பதற்குக்கூட இரண்டு, மூன்று ஆண்டுகள் ஆகின்றன.

மாநகராட்சியினுடைய எண்ணிக்கையை அதிகரித்து இருக்கின்றீர்கள். தமிழகத்திலே 8 மாநகராட்சிகள் இருக்கின்றன. ஆகவே நான் உங்களைக் கேட்டுக்கொள்வது, Commissioner of Municipal Administration என்று இருப்பதைப்போல, Commissioner of Corporation Administration என்று ஒரு நிருவாகத்தை நீங்கள் புதிதாகத் தொடங்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன். அப்படி தொடங்கினால்தான் மாநகராட்சியினுடைய வேலைகளை வேகமாக செய்து முடிப்பதற்கு அது வசதியாக இருக்கும் என்பதையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். மாநகராட்சியின் நிருவாக ஆணையரை உடனடியாக நியமித்து, மாநகராட்சிப் பகுதியில் நிருவாக வேலையை வேகமாக செய்வதற்கு தாங்கள் வழிவகை செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

கோவையைப் பொறுத்தவரையில், நகரப் பொறியாளர்--City Engineer இல்லை. அப்படி City Engineer இல்லாமல் மாநகராட்சி செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. நம்முடைய உறுப்பினர் கோவை தங்கம் அவர்கள் பேசும்போது சொன்னார். அங்கே நான் மேயராக இருந்தபோது எவ்வளவு மோசமாக நிலைமை இருந்தது என்று

சொன்னார். ஆனால், அன்றைக்கு காங்கிரஸ் கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. வி.கே. லட்சுமணன் அவர்களும், திருமதி மஹேஸ்வரி அவர்களும் நான் நடத்திய அனைத்துக் கூட்டங்களுக்கும் வந்து, கோரிக்கையை முன்வைத்துப் பேசினார்கள். ஆனால் இன்றைக்கு நடக்கக்கூடிய நிருவாகத்தில், அந்தக் கூட்டத்தில் எந்த எம்.எல்.ஏ.வும் உள்ளே நுழைய முடியவில்லை. அந்த அளவுக்கு மோசமாக நடந்துகொண்டிருக்கின்றது என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன். அந்தக் கூட்டத்திலே கலந்துகொள்ள வேண்டுமென்பதற்காக நானும் சிங்காநல்லூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் சின்னசாமி அவர்களும், பேரூர் சட்டமன்ற உறுப்பினர் சு.ப. வேலுமணி அவர்களும் சென்றபோது, அங்கிருக்கின்ற மேயர் எங்களைப் பார்த்தவுடன் 'all passed' என்று சொல்லிவிட்டு வேகமாக ஓடிவிட்டார் என்று சொன்னால், அந்த நிருவாகம் எப்படி நடக்கின்றது என்பதை நீங்கள் தெரிந்துகொள்ளவேண்டும். எங்களுடைய கோரிக்கையை அங்கே சொல்ல முடியவில்லை. அப்படிப்பட்ட நிலைமை அங்கே இருந்துகொண்டிருக்கின்றது என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அண்மையில் கோவை மாநகராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்காக டெண்டர் விட்டிருக்கின்றார்கள். 100 கோடி ரூபாய்க்கு டெண்டர் விட்டிருக்கின்றார்கள். 100 கோடி ரூபாய்க்கு டெண்டர் விட்டதில், 18 கோடி ரூபாய்க்கு ஊழல் நடைபெற்றதாக மாநகராட்சிமன்றக் கூட்டத்திலேயே குற்றச்சாட்டு சொல்லப்பட்டது. மாநகராட்சி மேயர் உடனே கூட்டத்தை ஒத்திவைத்துவிட்டார். ஏனென்று சொனனால், ஆளும் கட்சியைச் சார்ந்த தி.மு.க. உறுப்பினரே குற்றச்சாட்டு சொன்னார். ஒத்திவைத்துவிட்டு, மீண்டும் நான்கு நாட்கள் கழித்து மீண்டும் கூட்டத்தை நடத்தினார். இப்படித்தான் இருக்கிறது. ஆகவே நான் கேட்பது, 100 கோடி ரூபாய் டெண்டரிலே...

*முற்பகல் 11-50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு போவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. மலாவன் அவர்கள் சொல்லி இருக்கக்கூடிய சில குற்றச்சாட்டுகளுக்கெல்லாம் உடனுக்குடன் பதில் சொல்ல வேண்டுமென்று நான்



கருதிக்கொண்டிருந்தேன். ஆனால், பதிலுரையிலே அவற்றுக்கெல்லாம் தெளிவாக பதில் சொல்லலாம் என்று நான் பொறுமையாகக் காத்திருந்தேன். ஆனால், இப்போது அவர் பேசிக்கொண்டிருக்கின்றபோது, பாதாளச் சாக்கடைத் திட்டத்தில் விடப்பட்ட டெண்டரைப்பற்றி இங்கே குறிப்பிட்டுச் சொன்னார். நேற்றைக்குக்கூட நம்முடைய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியைச் சார்ந்த திரு. சி. கோவிந்தசாமி அவர்கள் பேசுகின்றபோது, அதைப்பற்றிக் கோடிட்டுக் காட்டி, அதற்கு உடனே விசாரணை வைக்கவேண்டுமென்ற கோரிக்கையைக்கூட எடுத்து வைத்திருக்கிறார்கள்.

இதுசம்பந்தமாக உடனடியாக சம்பந்தப்பட்டிருக்கக்கூடிய அதிகாரிகளை நேற்றே நான் தொடர்புகொண்டு, அந்த விவரங்களையெல்லாம் பெற்றிருக்கிறேன். கோவை மாநகராட்சி பாதாளச் சாக்கடைக்கான ஒப்பந்தப்புள்ளி விதிகளின்படிதான் தேசிய அளவிலே வெளியிடப்படக்கூடிய நாளேடுகளிலும், தமிழ்நாடு ஒப்பந்தப்புள்ளி செய்தி அறிவிப்பு வெளியீட்டிலும், மாநகராட்சி இணைய தளத்திலும், நகராட்சி நிருவாக ஆணையர் இணைய தளத்திலும் வெளியிடப்பட்டு, டெண்டர் விளம்பரப்படுத்தப்பட்டிருக்கிறது. அந்த ஒப்பந்தத்திலே, Ramkay Infrastructures Limited, Hyderabad, Carbora Engineering and Construction Private Limited, Pune மற்றும் Hindustan Door Oliver Limited, Mumbai இந்த மூன்று நிறுவனங்கள் அதிலே ஒப்பந்ததாரர்களாகப் பங்கேற்றிருக்கிறார்கள். அந்த ஒப்பந்தப் புள்ளிகளெல்லாம் நடைமுறைகளின்படி பரிசீலிக்கப்பட்டு, குறைந்த விலைப்புள்ளி தந்துள்ள நிறுவனங்கள்தான் இப்போது ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. இதிலே எங்கேயாவது தவறு என்று உறுப்பினர் கருதுவாரேயானால், அதை ஆதாரத்தோடு எடுத்துச் சொல்வாரேயானால், நிச்சயமாக இந்த அரசு உரிய நடவடிக்கையை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மலரவன், உங்களுக்கு கொடுக்கப்பெற்ற நேரம் முடிந்துவிட்டது.

**திரு. தா. மலரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூரைப் பொறுத்தவரையில், இந்தப் பிரச்சினை பெரிதாக, பூதாகரமாக வெடித்திருக்கிறது. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டுச் சொன்ன அந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், நம்முடைய கோவை மாநகராட்சியினுடைய தணிக்கைக் குழு ஒரு ஆய்வு செய்து, அந்த ஆய்வின்மூலமாக ஆணையருக்கு எழுதிய கடிதத்தில், ஒரு குறிப்பிட்ட பகுதியை நான் சுட்டிக்காட்டுகின்றேன். அமைச்சர் அவர்களிடத்திலும் கொடுக்கின்றேன். "ஆகவே, இந்தக் குறிப்பிட்ட மதிப்பீட்டிற்குக் கூடுதலாக இருப்பதாலும், மேலே பத்தி ஒன்றில் தெரிவிக்கப்பட்டவாறு புகார்கள் ஆய்வு செய்ய வேண்டிய நிலையில் உள்ளதாலும், மறு ஒப்பந்தப்புள்ளி கோரி முடிவெடுக்கலாம் என்று தெரிவிக்கப்படுகிறது" என்று தணிக்கைக் குழு அதிகாரி அவர்கள் நம்முடைய ஆணையர் அவர்களுக்கு எழுதியிருக்கிறார்கள். ஆகவே, நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் நிச்சயமாகத் தவறு என்று அவர்கள் அறிவாரானால், உறுதியான நடவடிக்கை எடுப்பார் என்ற நம்பிக்கையோடுதான் இந்த அவப் பெயரைப் போக்குவதற்கு மறு டெண்டர் விடுவதற்கு நீங்கள் ஆணையிடவேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசுங்கள், அடுத்த subject-க்கு போங்கள். சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. தா. மலரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதே ஆடிட் ரிப்போர்ட்டை நானும் வைத்திருக்கிறேன். திரு. கோவிந்தசாமி கொடுத்ததைத்தான் நானும் சொல்லமுடியும். ஆகவே, ஆடிட் ரிப்போர்ட்டை அவரே திருப்பியனுப்பி இருக்கும்போது, அதிலே என்ன நடந்திருக்கிறது என்பதைத் தாங்கள் தெரிந்துகொள்ளவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். நான் கேட்பது என்னவென்று சொன்னால், ரூபாய் 100 கோடிக்கு டெண்டர் விட்டதிலே ரூபாய் 18 கோடி ஊழல் நடந்திருக்கிறது என்று சொன்னால், அந்த மாநகராட்சிக்கு ஜவஹர்லால் நேரு தேசிய நகர புனரமைப்புத் திட்டத்தின்கீழ் ரூபாய் 3,500 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது, அப்படியென்று சொன்னால், ரூபாய் 3,500 கோடிக்கும் நாளைக்கு டெண்டர் விடும்போது எவ்வளவு, எத்தனைக் கோடி ஊழல் நடக்கும் என்பதை நீங்கள் தெரிந்துகொள்ளவேண்டுமென்பதற்காகத்தான் சொன்னேன். அகவே, அப்படி நடக்காமல் இருக்க வேண்டும் என்பதற்காகத்தான், நீங்கள் முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றுதான் நான் கேட்டுக்கொள்கிறேன்.



இன்றைக்கு கோவையிலே குடிநீர்க் கட்டணத்தை உயர்த்தியிருக்கிறார்கள். ஆனால், குடிநீர்க் கட்டணத்திற்கான மீட்டர் ரீடிங் எடுப்பதற்கு ஆட்கள் இல்லை. அந்த மக்கள் அவதிப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, நான் கேட்டுக்கொள்வதெல்லாம், ஊராட்சியிலே பணிபுரியக்கூடிய ஊராட்சி உதவியாளர்கள், ஊராட்சியில் செயல்படுத்தும் அனைத்து வளர்ச்சித் திட்டங்களையும் செயல்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு இந்தியாவிலேயே இல்லாத காலமுறை ஊதியம் 625 ரூபாய், 1,200 ரூபாய் என்ற அளவிலேதான் இருக்கிறது. ஆனால், அவர்கள் முழு நேரமும் பணியாற்றி வருகிறார்கள். எல்லாப் பணிகளையும் அவர்கள்தான் செய்து வருகிறார்கள். ஆகவே, அரசாணை எண் 175-ன்படி அரசு ஊழியர்களுக்குப் பொருந்தும் எந்தச் சலுகைகளும் பொருந்தாது என்ற ஷரத்துடன் உள்ளது. தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்திலே வேலைசெய்யக்கூடிய கூலித் தொழிலாளிக்குகூட 80 ரூபாய் சம்பளம் கொடுக்கிறார்கள். ஆனால், இவர்களுக்கு 40 ரூபாய் சம்பளம் கொடுப்பது வேதனையாக இருக்கிறது. ஆகவே, உதவியாளர்களுக்கு நீங்கள் நல்ல முறையில் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மலரவன், உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரத்தைவிடக் கூடுதலாக 4 நிமிடங்கள் எடுத்திருக்கிறீர்கள். 20 நிமிடங்கள் கொடுத்திருந்தது. 24 நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள். ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள்.

**திரு. தா. மலரவன்:** ஆகவே, அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் அனைத்தையும் இவர்களுக்கும் வழங்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கோவை காந்திபுரத்தில், போக்குவரத்து நெருக்கடியைக் கருத்தில்கொண்டு, ஒரு சுரங்கப் பாதையையும், கோவை, உக்கடம் பகுதியில் ஒரு சுரங்கப் பாதையையும், அவினாசி ரோடு, ஜி.ஆர்.ஜி. கிருஷ்ணம்மாள் கல்லூரிக்கு முன்பு ஒரு சுரங்கப் பாதையையும் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, போக்குவாத்து நெருக்கடியை குறைக்க, சத்தி ரோடு-100 அடி ரோடு சந்திப்பில் ஒரு மேம்பாலமும், ஒப்பனக்கார வீதி-பெரிய கடை வீதி சந்திப்பில் ஒரு மேம்பாலமும் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-55*

24-5-2006 ஆம் ஆண்டு மேதகு தமிழக ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரையில், பக்கம் 25-ல், சட்டமன்ற மேலவையைக் கொண்டு வருவதற்குத் தேவையான அரசியல் சட்டத் திருத்தம் செய்ய இவ்வரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. மேலவையைக் கொண்டு வந்தால் மக்களுக்கு எந்தப் பயனும் இல்லை ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மலரவன், உங்களுக்கு 20 நிமிடங்கள் கொடுத்து, 25 நிமிடங்கள் பேசி இருக்கிறீர்கள். உட்காருங்கள். மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

**திரு. தா. மலரவன்:** இந்த ஆட்சியில் எல்லாம் அறிவிப்பிலேயேதான்... (குறுக்கீடு)

## 2. தகவல் கோரல்—தொடர்ச்சி

### (ஆ) உறுப்பினர்கள் திரு. கோ. அரி மற்றும் திரு. வி.பி. கலைராஜன் ஆகியோர் அவை நடவடிக்கைகளில் கலந்துகொள்ள அனுமதி வேண்டுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள், திரு. செங்கோட்டையன். (குறுக்கீடு) அவர் முடித்துவிட்டார். நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) அவர் முடித்தாகிவிட்டது. நீங்கள் பேசுங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் சபையிலே திரு. அரி மற்றும் திரு. கலைராஜன் ஆகிய இரண்டு சட்டமன்ற உறுப்பினர்களைக் கூட்டத் தொடர் முழுவதும் வெளியேற்றியதை மறுபரிசீலனை செய்து, நாளையிலிருந்து அவர்கள் கடமைகளை ஆற்றுவதற்கு சட்டமன்றத்திலே நீங்கள் அனுமதிக்க வேண்டும் என்பதை நான் வலியுறுத்தி, அமர்கிறேன்.



## 3. மானியக் கோரிக்கைகள், 2008–2009, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### (அ) கோரிக்கை எண் 34–நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை
### (ஆ) கோரிக்கை எண் 42–ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை
—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006 ஆம் ஆண்டு மே 13 ஆம் நாள் திராவிட முன்னேற்றக் கழகம் ஐந்தாவது முறையாக ஆட்சிப் பொறுப்பை ஏற்ற நாள். தன்னிகரில்லாத் தலைவர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) ஐந்தாம் முறையாக முதல்வராகப் பொறுப்பேற்று ஆட்சி நடத்தக்கூடிய இந்தச் சிறப்பான வேளையில், 3-வது முறையாக நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சித் துறையினுடைய மானியக் கோரிக்கைகளை நீண்ட பாரம்பரியமும், நெடுந்துயர்ந்த மாண்பும் சூழ்ந்து நிறைந்திருக்கக்கூடிய இந்த வரலாற்றுச் சிறப்புக்குரிய மாமன்றத்தில் படைத்தளித்து உரையாற்றுவதை நான் பெருமையாகக் கருதுகிறேன்.

சட்டமன்றப் பொன் விழா கண்ட தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களும் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு நிதி அமைச்சர் இனமானப் பேராசிரியர் பெருந்தகை அவர்களும், கழகமும் எனக்கு அளித்திருக்கக்கூடிய பெரும் பேறாக இதை நான் கருதுகிறேன்.

நேற்றும் இன்றும் இரண்டு நாட்களாக நடைபெற்றுக் கொண்டிருக்கக்கூடிய இந்த மானியக் கோரிக்கையினுடைய விவாதத்திலே பங்கேற்று உரையாற்றி இருக்கக்கூடியவர்கள் அ.தி.மு.க.-வைச் சார்ந்த திரு. மலரவன் அவர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த திரு. கருப்பசாமி பாண்டியன் அவர்கள், திரு. ராஜன் அவர்கள், திரு. புஷ்பராஜ் அவர்கள், காங்கிரஸ் பேரியக்கத்தைச் சார்ந்த திரு. ரங்கராஜன் அவர்கள், திரு. இராமசாமி அவர்கள், திரு. ஞானசேகரன் அவர்கள், பாட்டாளி மக்கள் கட்சியைச் சார்ந்த திரு. வேல்முருகன் அவர்கள், திரு. செந்தமிழ்ச்செல்வன் அவர்கள், இந்திய கம்யூனிஸ்டு கட்சியைச் சார்ந்த திரு. குணசேகரன்

அவர்கள், மார்க்சிய கம்யூனிஸ்டு கட்சியைச் சார்ந்த திரு. கோவிந்தசாமி அவர்கள், விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பைச் சார்ந்த திரு. செல்வப் பெருந்தகை அவர்கள் இங்கே பல்வேறு கருத்துகளை, இந்தத் துறைக்குத் தேவைப்படக்கூடிய, ஆக்கப்பூர்வமான, ஊக்கம் கலந்திருக்கக்கூடிய சில உணர்வுகளையெல்லாம் இங்கே வெளிப்படுத்தியிருக்கிறார்கள். முதலில் அவர்களுக்கு நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

கடந்த இரண்டு ஆண்டுகளாக இந்த அவையில், இந்தத் துறையினுடைய மானியக் கோரிக்கை தாக்கல் செய்யப்பட்டு, அதிலே விவாதம் நடைபெற்று, அதற்குப் பிறகு நான் தொடர்ந்து இரண்டு ஆண்டுகளாக ஏற்கெனவே பதில் தந்திருக்கிறேன். அப்படி பதிலுரை தருகிறபோது என்னுடைய பதிலுரையைப் புறக்கணித்து இன்றைக்குப் பிரதான எதிர்க்கட்சியாக இருக்கக்கூடிய அ.தி.மு.க. இரண்டு முறையும் வெளிநடப்புச் செய்தது. ஆனால், இந்த முறை அந்த முறையைக் கடைப்பிடிக்காமல், ஏதோ எனக்கும் ஒரு மதிப்பளித்து அல்லது இந்தத் துறையின்மீது இப்பொழுது அவர்களுக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய நம்பிக்கையை இது காட்டுகிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதற்காக முதலில் அவர்களுக்கு நான் என்னுடைய நன்றியை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடு) அது உங்களுடைய விருப்பம்.

*நண்பகல் 12-00*

*1921* ஆம் ஆண்டு புதுவை முரசு என்கிற பத்திரிகையில், புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள் கட்டுரை ஒன்றை எழுதி இருந்தார்கள். அந்தக் கட்டுரையின் தலைப்பு, "திரும்பிப் பார், முன்னேறு" என்பதாகும். அற்புதமான தலைப்பு, ஆழ்ந்து சிந்திக்க வைக்கக்கூடிய தலைப்பு. தனி மனிதன் முன்னேற்றம் அடைய வேண்டும் என்பதற்காகத்தான் உழைக்கிறான். சமுதாயம் முன்னேற்றம் அடைய வேண்டும் என்பதற்காகத்தான் துடிக்கிறது. முன்னேற்றம் என்பதுதான் தனி மனிதனுடைய இலட்சியம். அதனால்தான் முன்னேற்றமே வாழ்க்கையினுடைய சட்டமாக அமைந்து இருக்கிறது. Progress is the law of life என்று சொல்வது உண்டு. முன்னேறிச் செல்ல முயற்சிக்காதவன் பின்தங்கிவிடுவான். 'He, who moves not forward goes backward' என்று மேலைநாட்டு அறிஞர்கள் அறிவுறுத்தி இருக்கிறார்கள். அந்த முன்னேற்றப் பாதையிலே முனைப்போடு செல்லும்போது, ஒவ்வொரு கட்டத்திலேயும், அது நடந்து வந்த



பாதையைத் திரும்பிப் பார்த்துக்கொள்வது. மேலும் செம்மையான வெற்றிகளைப் பெறுவதற்கும், உண்மையான முன்னேற்றத்தை அடைவதற்கும் உதவிடும் என்பதால்தான் புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள், "திரும்பிப் பார், முன்னேறு" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

கானகத்திலே சிங்கம் உலா வரும்போது, ஒவ்வொரு கட்டத்திலும், அதாவது, குறிப்பிட்ட அளவு தூரத்தைக் கடந்ததும், கடந்து வந்த பாதையை நின்று திரும்பிப் பார்த்துக்கொள்ளுமாம். அதன் பிறகு அது ஏறுநடை போடுமாம். அப்படி நடந்து வந்த பாதையை நின்று நிதானத்தோடு திரும்பிப் பார்ப்பதைத்தான் 'அரிமா நோக்கு' என்று சொல்வார்கள். அதைப்போலத்தான் கடந்த *2* ஆண்டுகளில் இந்தத் துறையினுடைய செயல்பாடுகளையும், சாதனைகளையும் திரும்பிப் பார்த்து, கணித்து, கணக்கெடுத்துக் கொண்டால்தான் மேலும் முன்னேற்றத்தை, முன்னேற்றத்திற்கான திட்டங்களையும், செயல் முறைகளையும் வகுத்து, அதை நாம் உறுதி செய்துகொள்ள முடியும். ஆகையினால், திரும்பிப் பார்த்து முன்னேறும் கட்டத்திலே நான் இன்றைக்கு நின்று நினைத்துப் பார்ப்பதற்குக் கிடைத்த வாய்ப்பாகவே (மேசையைத் தட்டும் ஒலி) இதனை நான் மகிழ்ச்சியோடு கருதுகிறேன். இந்தத் துறைகளின்மூலமாக கடந்த *2* ஆண்டுகளில், சென்னை முதல் குமரி வரை நிறைவேற்றப்பட்டிருக்கக்கூடிய திட்டங்கள், சந்தித்த நிகழ்ச்சிகளையெல்லாம் திரும்பிப் பார்க்கிறேன். அவையெல்லாம் இன்றைக்கு வரிசை வரிசையாக என் கண் முன்னே வந்து மின்னி பிரகாசித்துக்கொண்டிருக்கின்றன. எல்லாவற்றையும் எடுத்துரைக்க எனக்கு ஆசைதான். ஆனால் காலத்தின் அருமை கருதி, சிலவற்றை மாத்திரம் நான் உங்களிடத்திலே நினைவுகூர விரும்புகிறேன். இந்த அரசு மக்களுக்கு அளித்திருக்கக்கூடிய வாக்குறுதிகள் அனைத்தையும் இந்த இரண்டு ஆண்டு காலத்தில் தொடர்ந்து நிறைவேற்றிக்கொண்டிருக்கிறது.

புராணத்திலே, விக்கிரமாதித்தனுடைய ஆட்சியை பொற்கால ஆட்சி என்று சொல்வார்கள். அதைப்போல, வரலாற்றிலே சந்திர குப்த மௌரியர் ஆட்சியையும், மாவீரன் அக்பர் ஆட்சியையும், ஷாஜகான் ஆட்சியையும் பொற்கால ஆட்சி என்றுதான் சொல்வார்கள். அதைப்போலத்தான், *5*-வது முறையாக முதல்வராகப் பொறுப்பேற்றிருக்கக்கூடிய நம்முடைய தலைவர் கலைஞருடைய ஆட்சி (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு பொற்கால ஆட்சியாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

"வரப்புயர நீருய ரும்
நீருயர நெல்லுய ரும்
நெல்லுயரக் குடியுய ரும்
குடியுயரக் கோலுய ரும்"

என்பதைப்போல, இந்த ஆட்சியிலே பெருமைகள், திட்டங்கள், சாதனைகள் தொடர்ந்து உயர்ந்துகொண்டே போய்க் கொண்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) மக்களுடைய அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்த்து வைத்து, வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்துகின்ற ஒரு மாபெரும் பணியை நிறைவேற்றக்கூடிய துறைதான் உள்ளாட்சித் துறை. கடந்த 2 ஆண்டுகளில் கிராமப் பகுதிகளில், பேரூராட்சிப் பகுதிகளில், நகராட்சிப் பகுதிகளில், மாநகராட்சிப் பகுதிகளில் அரசினுடைய வளர்ச்சித் திட்டங்களைச் செம்மையாகச் செயல்படுத்தக்கூடிய துறைதான் இந்த உள்ளாட்சித் துறை. தலைவர் கலைஞர் அவர்கள் தலைமையில் நடைபெறக்கூடிய இந்த அரசினுடைய சாதனை எனும் பீடத்தில், இந்த உள்ளாட்சித் துறையும் இன்றைக்கு ஒளிவீசக்கூடிய ஒரு கதிராக விளங்கிக் கொண்டிருக்கிறது என்று சொன்னால், அது மிகையாகாது. நம்முடைய மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்பினுடைய பிரதிநிதிகள், பல சார்புத் துறைகளைச் சார்ந்திருக்கக்கூடிய உயரதிகாரிகள், ஊரக வளர்ச்சி, மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி நிருவாகம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சென்னைக் குடிநீர் வாரியம், மகளிர் மேம்பாட்டுக் கழகம், சுனாமி நிவாரணத் திட்ட யூனிட், மாவட்ட ஆட்சியர்கள், மாவட்ட அளவில் இருக்கக்கூடிய துறையினுடைய அலுவலர்கள், இவர்களின் சிறப்பான ஒத்துழைப்போடு மட்டுமல்ல, நம்முடைய தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களின் அறிவுரைகள், ஆலோசனைகள், அதற்கும் மேலாக அவருடைய வழிகாட்டுதலோடு இந்தத் துறை இன்றைக்குப் பல்வேறு சாதனைகளைத் தொடர்ந்து நிறைவேற்றிக்கொண்டிருக்கிறது என்பதை நான் பெருமையோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 12-05

இதே அவையில் ஊரக வளர்ச்சி, நகராட்சி அமைப்புகளின் சார்பில் பல்வேறு அறிவிப்புகள் வெளியிடப்பட்டிருக்கின்றன, இதே மாமன்றத்தில் கடந்த 2 ஆண்டு காலத்தில். அதாவது, முதலாண்டு ஊரக வளர்ச்சித் துறையின் சார்பில் 23 அறிவிப்புகள். அதற்கடுத்த ஆண்டு 24 அறிவிப்புகள். ஆக, 2 ஆண்டு காலத்தில் 47 அறிவிப்புகள்



வெளியிடப்பட்டு, அதிலே முதலாண்டு 21 அறிவிப்புகளையும், அடுத்த ஆண்டு 19 அறிவிப்புகளையும் நிறைவேற்றி, அதாவது 47 அறிவித்தோம். அதிலே முழுமையாக 40 அறிவிப்புகளை நிறைவேற்றித் தந்திருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) நிலுவையில் இருப்பது 7 அறிவிப்புகள். அதேபோல, நகராட்சி அமைப்பின் சார்பிலே முதலாண்டு 87 அறிவிப்புகளும், அதற்கடுத்த ஆண்டு 118 அறிவிப்புகளும், ஆக 205 அறிவிப்புகளை 2 ஆண்டு காலத்திலே நகராட்சியின் சார்பிலே அறிவித்தோம். அவற்றிலே முதலாண்டு 60 அறிவிப்புகளையும், அதற்கடுத்த ஆண்டு 59 அறிவிப்புகளையும், அதாவது 119 அறிவிப்புகளை முழுமையாக நிறைவேற்றி முடித்தோம். அவற்றிலே நிலுவையிலே உள்ளவை 86 அறிவிப்புகள். (மேசையைத் தட்டும் ஒலி) அதுவும் இப்போது முன்னேற்றப் பாதையை நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறது. இந்த விவரங்கள் அனைத்தும் ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர்களிடத்திலே புத்தகமாக வழங்கப்பட்டிருக்கக்கூடிய அந்தத் தொகுப்பிலே இருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, உள்ளாட்சி அமைப்புகளுக்குக் கூடுதல் அதிகாரங்களை வழங்க வேண்டும்; அதுபற்றி இங்கேகூட பல உறுப்பினர்கள் உரையாற்றியிருக்கிறீர்கள். அவர்களுக்கு உரிய அந்த அதிகாரத்தை, அவர்களுக்குத் தேவைப்படுகிற அந்தப் பொறுப்புகளையெல்லாம் உடனடியாக வழங்க வேண்டுமென்று நம்முடைய முதல்வர் அவர்கள் எங்களுக்குக் கட்டளை பிறப்பித்து, அதற்குரிய ஆலோசனைகளையெல்லாம் வழங்கி, அப்படிப்பட்ட நிலையில் அரசுக்குப் பரிந்துரைக்க, இதுகுறித்து அரசுக்குப் பரிந்துரைக்க 2 குழுக்கள் அமைக்கப்பட்டன. அந்த இரண்டு குழுக்களுக்கு அமைச்சராக இருக்கக்கூடிய நான்தான் அதிலே தலைவராகப் பொறுப்பேற்றேன். அந்த 2 குழுக்களில் நகராட்சிக்கு என்று ஒரு குழு, ஊராட்சிக்கு என்று ஒரு குழு. அந்த இரண்டு குழுக்களில் அந்தந்தத் துறைகளைச் சார்ந்து இருக்கக்கூடிய உயர் அதிகாரிகள், வல்லுநர்கள், அனைத்துக் கட்சிகளைச் சார்ந்து இருக்கக்கூடிய உள்ளாட்சிப் பிரதிநிதிகள் இடம்பெற்றிருக்கிறார்கள். இது மாநில அளவில் உயர்நிலைக் குழுவாக அமைக்கப்பட்டது. தமிழகத்திலே 13,751 உள்ளாட்சி அமைப்புகளினுடைய தலைவர்கள் இருக்கிறார்கள். அவர்களையெல்லாம் முதலில் சந்திக்கலாம் என்ற ஒரு முயற்சியிலே நாங்கள் இறங்கினோம். அதனுடைய முதற்கட்டமாக, உள்ளாட்சித் தலைவர்களுடைய கருத்தரங்கை இதே சென்னை மாநகரத்தில் கலைவாணர் அரங்கத்தில் 18-3-2007 அன்று நடத்தினோம், அந்தக்

கருத்தரங்கு நிகழ்ச்சியை நடத்தினோம். அதிலே நம்முடைய முதல்வர் அவர்களே கலந்துகொண்டு, அந்த நிகழ்ச்சிக்குத் தலைமையேற்றார்கள். அந்தக் கருத்தரங்கு நிகழ்ச்சியிலே மாநகராட்சியினுடைய மேயர்கள், நகர மன்றத்தினுடைய தலைவர்கள், பேரூராட்சியினுடைய தலைவர்கள், மாவட்ட ஊராட்சித் தலைவர்கள், ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்கள் எல்லாம் பங்கேற்று, தங்களுடைய கருத்துகளையெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். 1,133 பேருக்கு அழைப்பு அனுப்பப்பட்டு, அதிலே 1,048 பேர் பங்கேற்றார்கள்.

அதற்கடுத்த கட்டமாக, கிராம ஊராட்சித் தலைவர்களைச் சந்திக்கின்ற கலந்துரையாடல் கூட்டம். இன்றைக்கு கிராம ஊராட்சித் தலைவர்களுடைய எண்ணிக்கை--12,618 பேர். இவர்களை ஒட்டுமொத்தமாக ஒரே நேரத்தில், ஒரே சமயத்தில், ஒரே இடத்தில் சந்திக்க முடியுமா என்று கேட்டால், அது சாத்தியப்படாது. அதனால், 4 மண்டலங்களாகப் பிரித்துக்கொண்டு, ஈரோடு, திருச்சி, திருவண்ணாமலை, விருதுநகர் போன்ற பகுதிகளில் இந்தக் கலந்துரையாடல் கூட்டத்தை ஏற்பாடு செய்து, அந்தக் கூட்டத்திற்கு 12,618 பேருக்கு அழைப்பு அனுப்பி, அதிலே 11,984 பேர் பங்கேற்றார்கள் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) நான் பெருமையோடு தெரிவிக்க விரும்புகிறேன். கட்சி பேதமின்றி, கருத்தரங்கு நிகழ்ச்சியிலே கலந்துரையாடல் கூட்டத்திலே 94 சதவிகிதம் பேர் பங்கேற்றார்கள் என்பதை நான் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்ல, உள்ளாட்சியினுடைய சரித்திரத்திலே இது மிகப் பெரிய சாதனை என்பதையும் நான் இங்கே அழுத்தந்திருத்தமாகத் தெரிவிக்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) கலந்துரையாடல் கூட்டத்திலே, கருத்தரங்கு நிகழ்ச்சியிலே, எடுத்து வைத்த பரிந்துரைகளையெல்லாம், உயர்நிலைக் குழுக் கூட்டத்திலே நாங்கள் பரிசீலித்தோம். அதை முழுமையாக அலசி ஆராய்ந்தோம். அதற்குப் பிறகு நீண்ட நேரம் அதைப்பற்றி விவாதித்தோம். அதற்குப் பிறகு அவற்றையெல்லாம் பரிந்துரைகளாக நாங்கள் தொகுத்தோம். உயர்நிலைக் குழுவின் சார்பிலே அதைத் தொகுத்தோம். அதைத் தொடர்ந்து பல்வேறு துறைகளினுடைய செயலாளர்கள் நிலையிலே அதுபற்றி நாங்கள் கலந்து பேசி, அதற்குப் பிறகு அதை அறிக்கையாகத் தயாரித்தோம்.

இரண்டு அறிக்கைகளாக நாங்கள் தயாரித்தோம். ஊராட்சிக்கென்று ஓர் அறிக்கை, நகராட்சிக்கென்று ஓர் அறிக்கை. ஆக, இரண்டு அறிக்கைகளைத் தயாரித்து, அந்த இரண்டு அறிக்கைகளை 10-12-2007 அன்று நம்முடைய தமிழக முதல்வர் அவர்களிடத்திலே வழங்கினோம்.



பிற்பகல் 12-10

ஊராட்சித் தலைவர்களிடமிருந்து பெறப்பட்ட பரிந்துரைகள் எவ்வளவு தெரியுமா? 48,107 பரிந்துரைகள் வந்தன. ஒரே பரிந்துரைகள் திரும்பத் திரும்பச் சுட்டிக்காட்டப்படக்கூடிய ஒரு சூழ்நிலை. அதனால் இந்த அளவுக்கு எண்ணிக்கை அதிகம். ஆக, 48,107 பரிந்துரைகளை நாங்கள் 99 பரிந்துரைகளாகத் தொகுத்தோம். எங்களால் தொகுக்கப்பட்ட அந்த 99 பரிந்துரைகளில் உடனடியாக 38 பரிந்துரைகளை ஏற்றுக்கொண்டு, அவற்றிற்குரிய அரசாணைகளும் வழங்கப்பட்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) மீதம் இருக்கக்கூடிய பரிந்துரைகள் 61. அவையும் இப்போது நடவடிக்கையில் இருக்கின்றன. அதுபோல, நகராட்சித் தலைவர்களிடமிருந்து பெறப்பட்ட பரிந்துரைகள் 3,012. அந்த 3,012 பரிந்துரைகளை 68 பரிந்துரைகளாக நாங்கள் தொகுத்து, அந்த 68 பரிந்துரைகளில் 42 பரிந்துரைகளை உடனடியாக ஏற்றுக்கொண்டு, அவற்றிற்குரிய அரசாணைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. மீதம் இருப்பது 26 பரிந்துரைகள். (மேசையைத் தட்டும் ஒலி) அவையும் இப்போது நடவடிக்கையில் இருக்கின்றன. அவை சம்பந்தமாக எடுக்கப்பட்டிருக்கக்கூடிய நடவடிக்கைகள், அவற்றிற்காக வெளியிடப்பட்டிருக்கக்கூடிய அரசாணைகள் எல்லாம் தொகுக்கப்பட்டு, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்களிடத்திலே அவை புத்தகங்களாக, தொகுப்புகளாக வழங்கப்பட்டிருக்கின்றன. இரண்டு புத்தகங்கள் அதற்காக வழங்கப்பட்டிருக்கின்றன என்பது உங்களுக்கும் நன்றாகத் தெரியும்.

அதுமட்டுமல்ல, ஊராட்சி நிருவாக அமைப்பின் சார்பில் இரண்டு புத்தகங்கள், பணி அமைப்பினுடைய விதிகளைப்பற்றி இரண்டு புத்தகங்கள், மத்திய அரசினுடைய திட்ட வழிகாட்டி நெறிமுறைகளைப்பற்றி ஒரு புத்தகம், மாநில அரசினுடைய திட்ட வழிகாட்டி நெறிமுறைகளைப் பற்றி ஒரு புத்தகம், 2007 ஆம் ஆண்டு ஊராட்சியினுடைய சட்டத் திருத்தங்கள், அதைப்பற்றி ஒரு புத்தகம், ஆக, 7 தொகுப்புகளாக, அவை புத்தகங்களாகத் தயாரிக்கப்பட்டு, மாண்புமிகு உறுப்பினர்களிடத்திலே ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. விதிமுறைகள், அரசாணைகள், வழிகாட்டி நெறிமுறைகள் ஆகியவற்றைக் கொண்ட ஒரு தகவல் களஞ்சியத்தை இந்தத் துறை இன்றைக்குத் தயாரித்திருக்கிறது என்று சொன்னால், (மேசையைத் தட்டும் ஒலி) நான் கொஞ்சம் இறுமாப்போடு தெரிவிக்க விரும்புகிறேன், இதுவரை எந்தத் துறையிலும் இப்படியொரு சாதனை நடந்ததாக (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) வரலாறு கிடையாது.

அடுத்து, அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம். 2006-ஆம் ஆண்டு நாம் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் முதல் நிதிநிலை அறிக்கையிலேயே இந்தத் திட்டம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. தமிழகத்தில் 12,618 கிராம ஊராட்சிகள் இருக்கின்றன என்று சொன்னால், அந்த 12,618 கிராம ஊராட்சிகளில் 5 ஆண்டு காலத்தில் மக்களினுடைய அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க வேண்டுமென்பதற்காக உருவாக்கப்பட்ட திட்டம்தான் அந்தத் திட்டம். ஆண்டுக்கு 500 கோடி ரூபாய் இந்தத் திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டு, ஒவ்வோராண்டும் 2,500 ஊராட்சிகளைத் தேர்ந்தெடுத்து, ஒவ்வொரு ஊராட்சிக்கும் 20 இலட்சம் ரூபாய் நிதியொதுக்கீடு செய்து, இந்தத் திட்டத்தை நாம் தொடர்ந்து இரண்டு ஆண்டு காலமாக நிறைவேற்றிக்கொண்டிருக்கிறோம். ஊரக வளர்ச்சியின்மூலமாகச் செயல்படுத்தக்கூடிய மத்திய, மாநில அரசுகளினுடைய வளர்ச்சித் திட்டங்களில், அதிக நிதி ஆதாரத்தைக் கொண்டதொரு மாபெரும் திட்டம் இந்தத் திட்டம். அந்தத் திட்டம் இன்றைக்கு கிராமப் பகுதிகளில் ஒரு சிறப்புக்குரிய புரட்சிகரமான மாற்றத்தை மட்டுமல்ல, ஒரு மறுமலர்ச்சியையே உருவாக்கியிருக்கிறது என்று சொன்னால், அது மிகையாகாது. இந்த இரண்டு ஆண்டு காலத்தில், 5,074 கிராம ஊராட்சிகளில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டு, அதற்காக 1,019 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 78,651 பணிகள் இந்தத் திட்டத்தின்மூலமாக முடிக்கப்பட்டிருக்கின்றன.

ஊரக வளர்ச்சி மற்றும் இதர துறைகளின்மூலமாக 4,370 கோடியே 63 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலே 15,23,895 பணிகள் இந்தத் திட்டத்தின்மூலமாக நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. இங்கேகூட நேற்றைக்கும், இன்றும் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் பேசுகிறபோது--நம்முடைய மதிப்பிற்குரிய செந்தமிழ்ச்செல்வன் அவர்களும், மற்றவர்களும்கூட இங்கே பேசுகிறபோது குறிப்பிட்டுச் சொன்னார்கள்; இந்தத் திட்டத்திற்காக ஒவ்வொரு கிராம ஊராட்சிக்கும் 20 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படுகிறது; இது போதாது; இதை உயர்த்த வேண்டுமென்று சொன்னார்கள். நான் அவருக்கு மட்டுமல்ல, இங்கேயிருக்கக்கூடிய உங்களுக்கும் சேர்த்துத் தெரிவிக்க விரும்புவது. ஒவ்வொரு கிராம ஊராட்சிக்கும் இந்தத் திட்டத்தின்மூலமாக சராசரியாக ஒரு கோடியே அறாயிரம் ரூபாய் மதிப்பீட்டில் பல்வேறு பணிகள் முடிக்கப்பட்டிருக்கின்றன என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



இந்த இரண்டு ஆண்டு காலத்தில் 4,255 குளங்கள் ஆழப்படுத்தப்பட்டிருக்கின்றன. அதுமட்டுமல்ல, அந்தக் குளங்களுக்குச் சுற்றுச் சுவரும் அமைக்கப்பட்டிருக்கின்றன. அந்தச் சுற்றுச் சுவர் அமைக்கப்பட்டிருக்கிற காரணத்தினால், குளங்கள் அங்கே அமைந்திருக்கிற காரணத்தால், அந்தக் கிராமப் பகுதிகளில் இந்தத் திட்டத்திற்கு மக்களிடத்திலே ஒரு சிறப்பான வரவேற்பு கிடைத்திருக்கிறது.

பிற்பகல் 12-15

அதுமட்டுமல்ல; நிலத்தடி நீரும் உயரக்கூடிய ஒரு சூழ்நிலையை இன்றைக்கு நாம் உருவாக்கியிருக்கின்றோம். 3,719 நூல் நிலையங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. 17,254 சிமெண்ட் சாலைப் பணிகள், அதாவது, 2,080 கிலோ மீட்டர் அளவுக்கு நிறைவேற்றப்பட்டிருக்கிறது. 2,492 விளையாட்டு மையங்கள், 6,776 சுடுகாடு, இடுகாடு மேம்பாட்டுப் பணிகள் இந்தத் திட்டத்தின்மூலமாக நிறைவேற்றப்பட்டிருக்கிறது. ஊரகச் சாலைப் பணிகள்பற்றி நான் குறிப்பிட்டுச் சொல்லவேண்டுமென்று சொன்னால், இன்றைக்கு ஊராட்சிகளில் சாலைப் பணிகளைப் பொறுத்தவரையில் பல்வேறு திட்டங்களின்கீழ் செயல்படுத்தப்பட்டுக்கொண்டிருக்கின்றன. அதிலே குறிப்பாக, அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் சார்பில், 12,618 கிராம ஊராட்சிகளில் நபார்டு நிதி உதவியோடு தார்ச் சாலை அமைக்கக்கூடிய பணிகளை இப்போது நாம் தொடங்கியிருக்கிறோம். நான் அழுத்தந்திருத்தமாக, தெளிவோடு குறிப்பிட விரும்புகிறேன்; இந்த ஐந்து ஆண்டு காலத்தில் சுமார் 2,000 கோடி ரூபாய் நபார்டு உதவியோடு, 20,000 கிலோ மீட்டர் தார்ச் சாலைகள் அமைக்கக்கூடிய பணிகள் இப்போது இந்தத் துறையின் சார்பிலே மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதையும் (மேசையைத் தட்டும் ஒலி) தெரிவிக்கிற அதே நேரத்தில், ஒரு மிகப் பெரிய ஊரக உள்கட்டமைப்புத் திட்டமாக இது அமையவிருக்கிறது என்பதையும் தெரிவிக்க நான் விரும்புகிறேன்.

அதேபோல், அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டம். அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் என்பதை 2006-2007-ல் எடுத்துக்கொண்டு, ஐந்து ஆண்டு காலத்தில் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க அதை நிறைவேற்றினோம்.

அதேபோல, இந்தத் திட்டத்தை 2007-2008-ல் எடுத்தோம். அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டம். இதை

நான்கு ஆண்டு காலத்திலே நிறைவேற்றவேண்டும். தமிழகத்தில் 561 பேரூராட்சிகள் இருக்கின்றன. அதிலே ஒவ்வொரு ஆண்டும் 140 பேரூராட்சிகளை தேர்ந்தெடுத்து, அதிலே ஒவ்வொரு பேரூராட்சிக்கும் ரூ.50 இலட்சம் ஒதுக்கீடு. பேரூராட்சி என்பது, அது நகராட்சியோடும் சேராது, கிராம ஊராட்சியிலும் போய்ச் சேரமுடியாது. இரண்டுங்கெட்டான் நிலையில் இதுவரையில் இருந்தது. ஆனால், நாம் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு, இந்த இரண்டு ஆண்டு காலத்தில் பேரூராட்சியினுடைய வரலாற்றில் இல்லாத அளவிற்கு ஒரு மிகப் பெரிய சாதனை இந்தத் திட்டத்தின்மூலமாக இப்போது நிறைவேற்றப்படுகிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆக, முதலாண்டு 140 பேரூராட்சிகளைத் தேர்ந்தெடுத்து, அதற்காக இந்தத் துறையின் சார்பில் 74 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, இது தவிர, சார்புத் துறைகளின் மூலமாக ரூ.266 கோடியே 27 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, ஆக மொத்தம் ரூ.344 கோடியே 27 இலட்சம் இந்தத் திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டு, மொத்தமாக 7,568 பணிகள் இப்போது செயல்படுத்தப்பட்டுக்கொண்டிருக்கின்றன என்பதை நான் இங்கே தெரிவிக்கிறேன்.

அதேபோல், தமிழ்நாடு தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம். இது மத்திய அரசின் மூலமாக உருவாக்கப்பட்ட திட்டம். இந்தத் திட்டத்திற்கு மத்திய அரசினுடைய பங்கு 90 சதவிகிதம். மாநில அரசினுடைய பங்கு 10 சதவிகிதம். இந்தத் திட்டம் 2-2-2006 அன்று தொடங்கப்பட்டது. குறிப்பாக, ஊரகப் பகுதியில் இருக்கக்கூடிய ஒரு குடும்பத்திற்கு, வருடத்திற்கு 100 நாட்கள் ஊதியத்தோடு வேலைவாய்ப்பு. இதுதான் இந்தத் திட்டத்தினுடைய நோக்கம். நம்முடைய தமிழகத்தில் ஆறு மாவட்டங்கள் முதல் கட்டமாக தேர்ந்தெடுக்கப்பட்டன. திருவண்ணாமலை, விழுப்புரம், கடலூர், நாகப்பட்டினம், திண்டுக்கல், சிவகங்கை. அதற்கடுத்து இரண்டாவது கட்டமாக நான்கு மாவட்டங்கள். திருவாரூர், தஞ்சாவூர், கரூர், திருநெல்வேலி. இப்போது இந்த நிதியாண்டிலே நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் இங்கே தாக்கல் செய்த அந்த நிதிநிலை அறிக்கையிலேகூட தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. 1-4-2008 முதல் சென்னையைத் தவிர்த்து, தமிழகத்தில் இருக்கக்கூடிய அனைத்து மாவட்டங்களிலும் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படவிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த ஆட்சியில், அதாவது அ.தி.மு.க. ஆட்சிப் பொறுப்பில் இருந்த நேரத்தில் இந்தத் திட்டத்திற்காக மூன்று மாத காலத்தில் அவர்கள் செலவு செய்த தொகை, ரூ.3 கோடி மட்டுமே



செலவு செய்தார்கள். ஆனால், நம்முடைய அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு, இந்த 23 மாத காலத்தில் 619 கோடி ரூபாய் இந்தத் திட்டத்திற்காக நாம் செலவு செய்து இருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த இரண்டு ஆண்டுகளில் பத்து மாவட்டங்களில் 21,11,000 குடும்பங்களில் வேலை வேண்டி இந்தத் திட்டத்திலே பதிவு செய்து இருக்கிறார்கள். அது மட்டுமல்ல, இதிலே வேலைவாய்ப்புப் பெற்றவர்களுடைய அந்த விவரத்தைப் பார்க்கிறபோது, மகளிர் மட்டுமே 82 சதவிகிதம். ஆதி திராவிடர், பழங்குடியினர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் 56 சதவிகிதம் பேர் இதிலே பயன்பெற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

பிற்பகல் 12-20

உடலுழைப்புத் தொழிலாளர்களுக்கு அரசு நிர்ணயித்திருக்கக்கூடிய சட்டப்படியான தினசரி ஊதியம் 80 ரூபாய், அது எல்லோருக்கும் தெரியும். இந்த ஊதியம் பொதுப் பணித் துறை விலைப் பட்டியலின்படியான அளவீட்டின்படி வழங்கப்படும். இந்த அடிப்படையிலே, இந்தத் திட்டத்திலே பணிபுரியக்கூடியவர்களுக்கு ஊதியம் தந்தால், 40 ரூபாய், 50 ரூபாய், 60 ரூபாய் என்ற நிலையிலேதான் வழங்கக்கூடிய ஒரு சூழ்நிலை. இதை ஒரு குறைபாட்டோடு, இந்தப் பணிகளில் ஈடுபடக்கூடியவர்கள் எங்களிடத்திலே அவ்வப்போது எடுத்துச் சொன்னார்கள். ஆய்வுப் பணிகளை மேற்கொள்கிறபோது, இதைப் புகாராக எங்களிடத்திலே குறிப்பிட்டுக் காட்டினார்கள். அதுமட்டுமல்ல, இதற்கென்று அமைக்கப்பட்டிருக்கக்கூடிய, மாநில அளவில் அமைந்திருக்கக்கூடிய குழுவிலே இதுபற்றி நாங்கள் விளக்கமாக விவாதித்தோம். அந்த அடிப்படையிலேதான், இந்தத் திட்டப் பணிக்காகத் தனியாக விலைப்புள்ளி ஒன்றை நம்முடைய அரசு நிர்ணயித்தது. அதன்படி, பொதுப் பணித் துறை அளவீட்டைவிட சுமார் 35 சதவீதம் குறைவாகப் பணி முடித்திருந்தாலும் 80 ரூபாய் வழங்கலாம் என்று அரசு ஆணை பிறப்பித்து, இன்றைக்கு அதை வழங்கிக்கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) 619 கோடி ரூபாய் செலவு செய்து, 7 கோடியே 86 இலட்சம் மனித சக்தி நாட்கள், அதாவது வேலை நாட்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன என்று சொன்னால், இந்தத் திட்டம் வெற்றிகரமாக நடைபெற்றுக்கொண்டிருப்பதற்கு இதுவே ஒரு சான்று, ஒரு சாட்சி. (மேசையைத் தட்டும் ஒலி)

நம்முடைய மாண்புமிகு திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள்கூட இதே அவையிலே இந்தத் திட்டத்தைப்பற்றி அவர் குறிப்பிட்டுச் சொல்கிறபோது ஒன்றை எடுத்துச் சொன்னார். விவசாய வேலை

போன்ற பருவ காலங்களில் இந்தத் திட்டத்திற்கு விதிவிலக்கு வழங்கவேண்டும் என்று ஒரு கருத்தை எடுத்துச் சொன்னார். இங்கு மட்டுமல்ல, மாநில அளவிலே அமைந்திருக்கக்கூடிய குழுவிலேகூட இதைப் பற்றி நாங்கள் அதிகமாக விவாதித்திருக்கிறோம். எனவே, அந்தப் பரிந்துரைகளை எல்லாம் தொடர்ந்து நாம் மத்திய அரசுக்கு அனுப்பி வைத்துக்கொண்டிருக்கிறோம். தொடர்ந்து அந்த முயற்சியிலே நிச்சயமாக இந்த அரசு ஈடுபடும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்தத் திட்டத்தைச் செம்மையாகச் செயல்படுத்த வேண்டும் என்பதற்காகப் புதிய பணியிடங்களைக்கூட உருவாக்கி இருக்கிறோம். 3,604 புதிய பணியிடங்கள் இந்தத் திட்டத்திற்காகவே உருவாக்கப்பட்டிருக்கின்றன. அதேபோல், இந்தத் திட்டத்தைப்பற்றிக் கண்காணிப்பதற்காக மத்திய அரசு ஒரு கண்காணிப்புக் குழுவை அமைத்திருக்கிறது. மூன்று பேர் கொண்ட ஒரு கண்காணிப்புக் குழு. அந்தக் கண்காணிப்புக் குழுவிலே பேராசிரியர் திரு. ஜீன் திரேஸ் அவர்கள், இன்றைக்கு மாநிலங்களவையினுடைய உறுப்பினராக இருக்கக்கூடிய இந்திய கம்யூனிஸ்டு கட்சியைச் சார்ந்த மூத்த தலைவர்களில் ஒருவராக இருக்கக்கூடிய திரு. ராஜா அவர்களுடைய மனைவி திருமதி ஆனி ராஜா அவர்கள், அதேபோல தன்னார்வத் தொண்டு அமைப்பைச் சார்ந்த முன்னாள் ஐ.ஏ.எஸ். அதிகாரி திருமதி அருணாராய், இந்த மூன்று பேர் கொண்ட ஒரு கண்காணிப்புக் குழு அமைக்கப்பட்டு, அந்தக் கண்காணிப்புக் குழுகூட அண்மையிலே நம்முடைய தமிழகத்திற்கு வருகை தந்து, விழுப்புரம் மாவட்டத்திற்குப் போய் ஆய்வு நடத்தி, இந்தத் திட்டம் எப்படி நடக்கிறது என்பதைப்பற்றி ஒரு ஆய்வு அறிக்கையைக்கூட அவர்கள் தந்திருக்கிறார்கள். அதிலே தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்தத் திட்டம் வெளிப்படையாக, ஒளிவுமறைவின்றிச் செயல்படுத்தப்படுகிறது, ஊதியம் தாமதமின்றி வழங்கப்படுகின்றன, சமூகத் தணிக்கை சிறப்பாக இருக்கிறது, செயலாக்கக் கண்காணிப்பு வழிமுறைகள் பாராட்டக்கூடிய வகையில் அமைந்திருக்கின்றன. அதுமட்டுமல்ல, இந்தத் திட்டம் மக்களிடத்திலே ஒரு சிறப்பான விழிப்புணர்வையும் பெற்றிருக்கிறது என்றெல்லாம் பாராட்டிவிட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) சிறு, சிறு குறைபாடுகளைக்கூட அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அந்தக் குறைபாடுகளைக்கூட இந்தத் துறை அவ்வப்போது நிவர்த்தி செய்து கொண்டிருக்கிறது என்பதையும் நான் இங்கே தெரிவிக்கிறேன். அதையும் தொடர்ந்து இன்றைக்கு மத்திய அரசு இந்தத் திட்டத்தை இன்னும் சிறப்பாக நடத்த வேண்டும்



என்று முடிவு செய்து, அவ்வப்போது இதைப்பற்றி அவர்கள் பரிசீலித்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே மத்திய அரசு ஓர் உயர்மட்டக் குழுவை அமைத்திருக்கிறது. அந்த உயர்மட்டக் குழுவிலேகூட நம்முடைய தமிழ்நாட்டிலே இந்தத் திட்டம் சிறப்பாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது என்று தெளிவாக அவர்கள் உணர்ந்த காரணத்தால், இன்றைக்கு ஊரக வளர்ச்சித் துறையினுடைய செயலாளராக இருக்கக்கூடிய திரு. அஷோக்வர்தன் ஷெட்டி அவர்களைக்கூட இதிலே உறுப்பினராக நியமித்து இருக்கிறார்கள் என்று சொன்னால், இதுவே அதற்குப் பொருத்தமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல், மகளிர் சுய உதவிக் குழுத் திட்டம்.

**"மங்கையராய்ப் பிறப்பதற்கே மாதவம் செய்திடல் வேண்டும் அம்மா"**

என்று கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள் பாடியிருக்கிறார்கள். ஆக, மகளிருடைய முன்னேற்றத்திற்காக இந்த அரசு பல்வேறு திட்டங்களை, பல சாதனைகளைத் தொடர்ந்து நிறைவேற்றிக்கொண்டிருக்கிறது. அதிலே குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய வகையிலே, மகளிர் சுய உதவிக் குழுத் திட்டம். ஏற்கெனவே 1989 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது, தருமபுரி மாவட்டத்திலே முதன்முதலாக இந்தத் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது. ஆக, இந்தத் திட்டத்தைத் தொடங்கி வைத்தபோது நம்முடைய முதல்வர் அவர்கள் தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். இது மகளிருடைய முன்னேற்றத்திற்காக, அவர்கள் தன்னம்பிக்கை பெற்றவர்களாக வாழ்ந்திடவேண்டும்; யாருடைய தயவையும் எதிர்பார்க்காமல், அவரவர்கள் சொந்தக் காலில் நிற்கக்கூடிய ஒரு சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும்; அந்தந்தப் பகுதிகளில் இருக்கக்கூடியவர்கள், அந்தந்தப் பகுதிகளினுடைய சூழ்நிலைக்கேற்ப சிறு, சிறு தொழில்களைச் செய்துகொள்வதற்கு, அதற்குக் கடன் வழங்க வேண்டும், தொழில் செய்வதற்கு. அந்தக் கடனை குறைந்த வட்டியிலே வங்கியிலேயிருந்து பெற்று, அந்தத் தொழில்களை அவர்கள் செய்ய வேண்டுமென்ற எண்ணத்திலே 1989 ஆம் ஆண்டிலே இந்தத் திட்டத்தை நாம் உருவாக்கினோம். அது படிப்படியாக வளர்ந்து இன்றைக்கு கம்பீரமாக, ஏன், ஒரு பெரும் இயக்கமாக இந்த சுய உதவிக் குழு விளங்கிக்கொண்டிருக்கிறது. தமிழகத்திலே 3 இலட்சத்து 65 ஆயிரம் சுய உதவிக் குழுக்கள் அமைந்திருக்கின்றன. அவற்றிலே 56 இலட்சம் மகளிர் இப்பொழுது உறுப்பினர்களாக இடம் பெற்றிருக்கிறார்கள். இவர்கள் சொந்தமாக

இதுவரையில் சேமித்திருக்கக்கூடிய தொகை 1,737 கோடி ரூபாய். அவர்கள் வங்கியின்மூலமாகப் பெற்றிருக்கக்கூடிய கடனுதவி 2,673 கோடி ரூபாய். இந்த மகளிர் மேம்பாட்டுக் கழகம் என்பது நாம் ஆட்சிக்கு வருவதற்கு முன்பு சமூக நலத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. அது ஊரக வளர்ச்சித் துறையினுடைய கட்டுப்பாட்டின்கீழ் வந்ததற்குப் பிறகு, இந்த இரண்டாண்டு காலத்தில் இந்த சுய உதவிக் குழுக்களுக்காகப் பல சலுகைகள், பல சாதனைகள் எல்லாம் இந்தத் துறையின் சார்பிலே தொடர்ந்து நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

*பிற்பகல் 12-25*

நம்முடைய அரசு பொறுப்பேற்று இந்த இரண்டாண்டு காலத்தில் 50 ஆயிரத்து 53 புதிய சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. 8 இலட்சத்து 900 பேர் புதிய உறுப்பினர்களாகச் சேர்ந்திருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, இதுவரை ஊரகப் பகுதிகளில்தான் இந்த சுய உதவிக் குழுவினருக்கு சுழல் நிதி மானியம் வழங்கப்பட்டு வந்தது. ஆனால், நம்முடைய அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு, ஊரகப் பகுதிகளில் இருக்கக்கூடிய மகளிர் சுய உதவிக் குழுவினருக்கு மட்டுமல்ல, நகர்ப்புறக் குழுக்களுக்கும் அது வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) இப்பொழுது தொடர்ந்து வழங்கப்பட்டுக்கொண்டிருக்கிறது. இதுவரையிலே 30 ஆயிரம் நகர்ப்புறக் குழுக்களுக்குத் தலா 10 ஆயிரம் ரூபாய் வீதம், 30 கோடி ரூபாய் சுழல் நிதி மானியம் வழங்கப்பட்டிருக்கிறது. எல்லா மாநகராட்சிப் பகுதிகளுக்கும் நானே நேரடியாகச் சென்று அந்தச் சுழல் நிதி மானியத்தை வழங்கியிருக்கிறேன் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஏறத்தாழ நகர்ப்புற மகளிர் இதுவரையில் 6 இலட்சம் பேர் இந்தத் திட்டத்தால் பயன்பெற்றிருக்கிறார்கள்.

அதேபோல் சுனாமியால் பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய 12 கடலோர மாவட்ட மகளிர் குழுவினருக்கு, 33,547 குழுவினருக்கு 6 இலட்சத்து 70 ஆயிரம் உறுப்பினர்களுக்கு ஆசிய வளர்ச்சி வங்கியினுடைய நிதியுதவியோடு செயல்படுத்தக்கூடிய சுனாமி நிவாரணத் திட்டத்தின்கீழ் ஒரு குழுவிற்கு 30 ஆயிரம் ரூபாய் சுழல் நிதி மானியம், 88 கோடியே 82 இலட்ச ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) பொருளாதார நடவடிக்கைகளுக்காக 2,472 குழுக்களில் இருக்கக்கூடிய 40 ஆயிரம் மகளிருக்கு 31 கோடியே 59 இலட்ச ரூபாய் மானியம் வழங்கப்பட்டிருக்கிறது. 35 ஆயிரம் ஊனமுற்ற நபர்களுக்கு, அதிலே குறிப்பாக 20 ஆயிரம் மகளிருக்குத் தலா 10 ஆயிரம் ரூபாய்



வீதம் நிதி வழங்கப்பட்டிருக்கிறது. கடந்த 23 மாத காலத்தில் 95 ஆயிரத்து 302 குழுவினருக்கு, அதாவது 19 இலட்சம் மகளிருக்கு 908 கோடியே 18 இலட்ச ரூபாய் வங்கிக் கடன் மட்டுமே வழங்கப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

ஆகவே, இந்தத் திட்டத்திலே இவ்வளவு பெரிய சாதனைகளை, சலுகைகளை இப்பொழுது அவர்களுக்கு நாம் தொடர்ந்து வழங்கிக்கொண்டிருக்கிறோம். இருந்தாலும் இன்னொரு குறை ஒன்று இதுவரை இருந்து வந்தது. அதாவது, தகுதி பெற்றிருக்கக்கூடிய அந்த சுய உதவிக் குழுவினருக்கு இன்னமும் சுழல் நிதி மானியம் பெற முடியாத ஒரு நிலை. இது எங்களுடைய கவனத்திற்கு வந்தது. அதற்குப் பிறகு நம்முடைய முதல்வர் அவர்களிடத்திலே இதுபற்றி நாங்கள் கலந்து பேசினோம். உடனே அவர்கள் எங்களுக்கெல்லாம் உத்தரவிட்டார்கள். தகுதி பெற்றிருக்கக்கூடிய அந்தக் குழுவினருக்கும் உடனடியாகச் சுழல் நிதி மானியம் வழங்க வேண்டுமென்று எங்களுக்கு உத்தரவிட்டது மட்டுமல்ல; இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலேகூட அதற்காக 150 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படுகிறது என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இதனால் 30 இலட்சம் மகளிர் இந்தத் திட்டத்தின்மூலமாகப் பயன்பெற இருக்கிறார்கள். 150 கோடி ரூபாய் மானியம் பெறக்கூடிய 1 இலட்சத்து 50 ஆயிரம் குழுக்களுக்கு ரூபாய் 450 கோடி வங்கிக் கடன், மேலும் இதரக் குழுக்களுக்கு மறு கடன் வசதி என, மொத்த மகளிர் திட்டக் குழுக்களுக்கு ரூபாய் 1,138 கோடி வங்கிக் கடன் உதவி இப்போது இலக்கு நிர்ணயம் நாம் செய்திருக்கிறோம். இந்தக் கூடுதல் கடன் உதவியை வங்கிகள் வழங்கிட வேண்டும். அதற்காகத்தான் கடந்த 12 ஆம் தேதி நாங்கள் ஓர் ஆலோசனைக் கூட்டத்தை நடத்தினோம். நம்முடைய மத்திய நிதித் துறை இணை அமைச்சராக இருக்கக்கூடிய மாண்புமிகு பழனி மாணிக்கம் அவர்கள், இந்தத் துறையினுடைய அமைச்சராக இருக்கக்கூடிய நான், எங்கள் துறையினுடைய செயலர்கள், மகளிர் மேம்பாட்டுக் கழகத்தைச் சார்ந்த அதிகாரிகள், அதேபோல முன்னோடி வங்கிகளினுடைய உயர் அதிகாரிகளையெல்லாம் நாங்கள் அழைத்து, இதே கோட்டையிலே நாங்கள் ஓர் ஆலோசனைக் கூட்டத்தை நடத்தி இதுபற்றி நாங்கள் விவாதித்தோம், கலந்து பேசினோம். அப்படிப் பேசுகிறபோது நான் ஒரு கருத்தை அவர்களிடத்தில் எடுத்துச் சொன்னேன். இதுவரையில் இந்தியாவிலேயே தமிழகத்திலேதான் மகளிர் சுய உதவிக் குழுவினர் வங்கிகளில் வாங்கக்கூடிய கடனை 95 சதவிகிதம் பேர் இப்பொழுது திருப்பிச் செலுத்திக்கொண்டிருக்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி)

என்று நான் சொன்னதை அவர்கள் உளப்பூர்வமாக, மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டது மட்டுமல்ல; அவர்கள் அதற்காக நன்றியையும் தெரிவித்தார்கள்; மகிழ்ச்சியையும் வெளிப்படுத்தினார்கள்.

*பிற்பகல் 12-30*

அதற்குப் பிறகு மகளிர் திட்ட சுய உதவிக் குழுக்களுக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கக்கூடிய அந்த ரூ.1,138 கோடி வங்கிக் கடனைவிடக் கூடுதலாக வழங்க அவர்கள் உடனடியாக சம்மதம் தந்தார்கள். அதுமட்டுமல்ல, இதரக் குழுக்களையும் சேர்த்து, ஆக மொத்தம் ரூ.1,600 கோடி வழங்க, கடன் வழங்கிட வங்கிகள் முழுமனதோடு இசைவு தந்திருக்கின்றன என்பதை நான் இந்த அவையிலே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, சுய உதவிக் குழுக்கள் தொடங்கப்பட்ட காலத்திலேயிருந்து இப்படி ஒரு சாதனை நடந்ததாக வரலாறு இருக்காது, இனி இருக்கவும் முடியாது என்பதைத்தான் நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, இன்றைக்கு இருக்கக்கூடிய பள்ளிகள், ஊராட்சிப் பகுதிகளில் இருக்கக்கூடிய பள்ளிகள். இந்தப் பள்ளிகளினுடைய சீரமைப்பைப்பற்றிக் கடந்த ஆண்டு என்னுடைய அறிவிப்பிலேகூட நான் வெளியிட்டேன். இன்றைக்கு கிராமங்களில் இருக்கக்கூடிய ஆயிரக்கணக்கான பள்ளிகள், அதாவது 22,000 தொடக்கப் பள்ளிகள், 4,500 நடுநிலைப் பள்ளிகள் இன்றைக்கு இருக்கின்றன. பல ஆண்டுகளாகப் பராமரிக்க முடியாத ஒரு சூழ்நிலை. அதனால் கடந்த ஆண்டு நானும், நம்முடைய கல்வித் துறை அமைச்சர் அவர்களும், இரண்டு துறைகளைச் சார்ந்திருக்கக்கூடிய அதிகாரிகள் எல்லாம் ஒரு கூட்டத்தைக் கூட்டி, கலந்து பேசி, அந்தப் பராமரிக்கப்படாமல் இருக்கக்கூடிய பள்ளிகளையெல்லாம் சீரமைக்க வேண்டும் என்று முடிவெடுத்து, அதற்குப் பிறகு முதல்வர் அவர்களுடைய அனுமதியைப் பெற்று, சுமார் 300 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே பராமரிப்புப் பணியை நிறைவேற்றிட நாங்கள் ஈடுபட்டோம். இதுவரையில் 10,248 பள்ளிகளில் இப்போது பணி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. பராமரிக்கக்கூடிய அந்தப் பணிகளை அடிப்படையாக வைத்து இன்னும் பல பள்ளிகளில் நிறைவேற்றக்கூடிய அந்தச் சூழ்நிலையை நாம் உருவாக்கியிருக்கிறோம் என்று நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து நான் நகராட்சிக்கு வருகிறேன். "பூவேசு ஜாதி, புருஷேசு விஷ்ணு, நாரேசு ரம்பா, நகரேசு காஞ்சி." பூவேசு ஜாதி—பூக்களில் சிறந்தது ஜாதி மல்லிகை, புருஷேசு விஷ்ணு-ஆடவர்களில் உயந்தவர்



விஷ்ணு, நாரேசு ரம்பா-பெண்களில் அழகானவள் ரம்பை, நகரேசு காஞ்சி-நகரங்களில் சிறந்தது காஞ்சிபுரம். சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்த இந்த முதுமொழி—தமிழகத்தில் இந்தக் காஞ்சிபுரத்திற்கு இவ்வளவு சிறப்பு அப்போதே இருந்திருக்கிறது. நான் அதைத்தான் இங்கே நினைவுபடுத்துகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இப்போது த்மிழகத்தில் இருக்கக்கூடிய அனைத்து நகராட்சிகளையும் செம்மைப்படுத்த வேண்டும், சீர்படுத்த வேண்டும், அழகுபடுத்த வேண்டும் என்பதற்காகத்தான் நம்முடைய நகராட்சி அமைப்பு பல்வேறு திட்டங்களை உருவாக்கிக்கொண்டிருக்கிறது.

புதிய குடிநீர்த் திட்டங்கள், மேம்பாலங்கள், பாதாளச் சாக்கடைத் திட்டங்கள், கழிவு நீர்க் கால்வாய்கள், சோடியம் ஆவி விளக்குக்ள், தார்ச் சாலைகள், சிமென்ட் சாலைகள், பேருந்து நிலையங்கள், பூங்காக்கள், திடக் கழிவு மேலாண்மை, நவீன எரிவாயு தகன மேடைகள், இறைச்சிக் கூடங்கள், சுகாதாரப் பணிகள், மேம்படுத்தப்பட்ட நிர்வாக அமைப்பு போன்ற பல்வேறு பணிகளை இன்றைக்கு நகராட்சி அமைப்பின் சார்பில் நாம் தொடர்ந்து நிறைவேற்றிக்கொண்டிருக்கிறோம். அதற்கு எடுத்துக்காட்டாகச் சிலவற்றை நான் உங்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டம். இது 2006 ஆம் ஆண்டு நாம் ஆட்சிக்கு வந்தவுடன் முதல் ஆண்டிலேயே இந்த அறிவிப்பை வெளியிட்டோம். ஆக, வெளியிட்டது மட்டுமல்ல; இந்தத் திட்டத்திற்காக 616 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, இந்தத் திட்டம் நிறைவேற்றப்படும் என்று அறிவித்து, அதற்குப் பிறகு 30-1-2007 அன்று பரமக்குடியிலே இதனுடைய அடிக்கல் நாட்டு விழாவை நடத்தினோம். நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள்கூட அந்த விழாவிற்கு வருகை தந்து அடிக்கல் நாட்டு விழாவை நடத்தி வைத்தார்கள். இராமநாதபுரம் மாவட்டத்திலே 4 நகராட்சிகள், 7 பேரூராட்சிகள், 11 ஒன்றியங்களிலுள்ள 2,332 ஊரகக் குடியிருப்புகள், அந்தப் பகுதியைப் பொறுத்தவரையிலே இப்போது இருக்கக்கூடிய மக்கள் தொகை 12,18,434 பேர். அதற்குப் பிறகு 2036 ஆம் ஆண்டு இந்த மக்கள் தொகை எந்த அளவிற்கு உயர்கிறது என்று கேட்டால், 15,26,857 பேர். ஆக, அதையும் மனதிலே கொண்டு சிவகங்கை மாவட்டத்தைப் பொறுத்தவரையிலே ஒரு நகராட்சி, 3 பேரூராட்சிகள், 4 ஒன்றியங்களைச் சார்ந்த 796 ஊரகக் குடியிருப்புகள். அந்தப் பகுதியிலே இப்போது இருக்கக்கூடிய மக்கள் தொகை 3,18,669 பேர். 2036 ஆம் ஆண்டு இதனுடைய மக்கள் தொகை 4,00,827 பேராக

உயர்கிறது. அதேபோல புதுக்கோட்டை மாவட்டம். ஒரு பேரூராட்சி, 3 ஒன்றியங்களில் உள்ள 32 ஊரகக் குடியிருப்புகள். அங்கு இருக்கக்கூடிய மக்கள் தொகை 38,579 பேர். இது 2036-லே 48,047 ஆக உயர்கிறது. இவற்றையெல்லாம் கணக்கில் எடுத்துக்கொண்டு, மொத்தமாக இப்போது இருக்கக்கூடிய 15,76,000 மக்கள் தொகை 2036-லே 19,76,000 ஆக உயர்கிற நிலைகளை எல்லாம் கணக்கெடுத்து இந்தத் திட்டத்தை நம்முடைய அரசு உருவாக்கியது. உருவாக்கியது மட்டுமல்ல; அடிக்கல் நாட்டு விழாவையும் நடத்தியது. அடிக்கல் நாட்டு விழாவை நடத்தியது மட்டுமல்ல; இதை எவ்வளவு ஆண்டு காலத்திற்குள் நிறைவேற்றவேண்டும் என்பதற்கென்று ஒரு கால நிர்ணயமும் வகுக்கப்பட்டது.

*பிற்பகல் 12-35*

அந்த அடிக்கல் நாட்டு விழாவிலே, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதிகாரிகளை அழைத்து, "இதை எவ்வளவு காலத்திலே நிறைவேற்றித் தருவீர்கள்" என்று கேட்டபோது, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தைச் சார்ந்த அதிகாரிகள், "3 ஆண்டுகளில் நிறைவேற்றித் தருகிறோம்" என்று எடுத்துச் சொன்னார்கள். நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அந்த அடிக்கல் நாட்டு விழாவை நடத்தி வைத்து அங்கே உரையாற்றுகிறபோது, "இராமநாதபுரம் மாவட்டத்தைப்பற்றி எல்லோருக்கும் தெரியும்; அதுவொரு வறண்ட மாவட்டம். குடிநீருக்காக ஏங்கித் தவித்துக்கொண்டிருக்கக்கூடிய மாவட்டம். ஆக, அங்கே இப்படியொரு பெரிய திட்டம் வருகிறது. அந்த மாவட்டத்திலே இருக்கக்கூடிய மக்கள் இந்தத் திட்டத்தை ஆவலோடு எதிர்நோக்கிக் காத்திருக்கிறார்கள். எனவே, 3 ஆண்டுகள் என்பதை இன்னும் கொஞ்சம் குறைத்து, 2 ஆண்டுகளில் இதை முடித்தால் இன்னும் சிறப்பாக இருக்கும். அப்படி முடித்துத் தந்தால், சம்பந்தப்பட்டிருக்கக்கூடிய அந்த அதிகாரிகளுக்கு நானே அரசின் சார்பில் பரிசு தருவேன்" என்று நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அந்த விழாவிலேயே அறிவித்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

நம்முடைய தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தைச் சார்ந்த அதிகாரிகள் உடனே அதை ஒரு உற்சாகமாக, ஊக்கமாக எடுத்துக்கொண்டு, இந்தத் திட்டத்தை விரைவுபடுத்துவதற்காக சிவகங்கையிலே ஒரு தலைமைப் பொறியாளர் அலுவலகத்தை ஏற்படுத்தினார்கள். அதற்குப் பிறகு, திருச்சி, சிவகங்கைப் பகுதிகளிலே வட்ட அலுவலகங்கள் இரண்டு உருவாக்கப்பட்டன. பரமக்குடியிலே,



தேவகோட்டையிலே, இராமநாதபுரத்திலே, திருச்சியிலே, சிவகங்கையிலே கோட்ட அலுவலகங்கள் ஐந்து உருவாக்கப்பட்டன. அதற்குப் பிறகு தலைமைப் பொறியாளர் முதல் உதவிப் பொறியாளர் வரை 75 பேர் பொறியாளர்களாக நியமிக்கப்பட்டார்கள். அதுமட்டுமல்ல; இதர பணியாளர்கள் 172 பேர் நியமிக்கப்பட்டார்கள். இப்படிப் பணிகள் வேகப்படுத்தப்பட்டன. அதுமட்டுமல்ல; இந்தப் பணிகளைப் பொறுத்தவரையில், 8 தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, இந்தப் பணி நடந்தது. நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புவது என்னவென்றால், இதுவரை 52 சதவிகிதப் பணிகள் முடிவுற்றிருக்கின்றன. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

இங்கே நம்முடைய திருவாடானை சட்டமன்ற உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள் பேசுகிறபோதுகூட, குறிப்பிட்ட இடத்திலே கொஞ்சம் தேக்கம் இருக்கிறது என்று சொன்னார்கள். மழைக் காலம் வந்த காரணத்தினால் கொஞ்சம் தேக்கம் ஏற்பட்டது. அதையும் இப்போது சரி செய்து, அந்தப் பணியும் இப்போது வேகப்படுத்தப்பட்டிருக்கிறது. எனவே, இங்கே நான் தெரிவிக்க விரும்புவது, இந்தத் திட்டத்தை இரண்டு ஆண்டிற்குள் முடிப்பதற்கு எல்லாவித முயற்சிகளிலும் இன்றைக்கு சம்பந்தப்பட்டிருக்கக்கூடிய அதிகாரிகள் ஈடுபட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்ல; நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள் அறிவித்த அந்த அடிப்படையிலே, அந்த இரண்டு ஆண்டுகளுக்குள் இந்தத் திட்டத்தை நிறைவேற்றி, மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கரங்களால் நிச்சயமாகப் பரிசையும் பெறவிருக்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நான் முன்கூட்டியே இந்த அவையிலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம்; நான் இந்தத் திட்டத்தைப்பற்றி அதிகமாகப் பேசிட விரும்பவில்லை. இந்தத் திட்டம் வரவேண்டுமென்று எத்தனை ஆண்டு காலமாக நாம் காத்திருந்தோம் என்பது எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். இதே அவையிலே, கட்சிப் பாகுபாடின்றி எல்லோரும் பேசியிருக்கிறோம். எனவே, இதை நான் அரசியலாக்கக்கூட விரும்பவில்லை. அண்மையிலேகூட இதற்காக நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றி, மத்திய அரசுக்குக்கூட நாம் அனுப்பி வைத்திருக்கிறோம். எனவே, தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்ட மக்களுடைய தாகத்தைத் தீர்க்கக்கூடிய ஒரு மாபெரும் திட்டம். இந்தியாவிலேயே இப்படியொரு மிகப் பெரிய திட்டம் இருக்கிறதா

என்று கேட்டால், இதுதான் முதல் திட்டம். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் மிகப் பெரிய திட்டம்.

இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில், அரசினுடைய கொள்கையைப்பற்றி நான் குறிப்பிட வேண்டுமென்று சொன்னால், நான் அதிகம் பேசவேண்டிய அவசியமில்லை. ஒரே வரியில் சொல்லவேண்டுமென்று சொன்னால், இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் திரு. கோ.க. மணி அவர்கள் இருக்கிறார்கள்; அதுபோல, தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் இங்கே இருக்கிறார்கள். பல முறை இதே அவையிலே இந்தப் பிரச்சினையைப்பற்றி நீங்கள் பேசியிருக்கிறீர்கள். அப்படிப் பேசுகிறபோதுகூட, ஒரு நேரத்திலே நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களே அதற்கொரு விளக்கம் தந்தார்கள். "இந்த ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைப் பொறுத்தவரையில், ஜப்பான் நாட்டு கூட்டுறவு வங்கியினுடைய நிதியை நாம் எதிர்நோக்கிக் காத்திருக்கிறோம்; ஒருவேளை அதில் ஏதாவது சங்கடம் ஏற்பட்டு, நமக்கு அந்த வங்கியினுடைய உதவி கிடைக்கவில்லையென்று சொன்னால், இதை அரசே ஏற்று நடத்தும்" என்று அன்றைக்கே அறிவித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதுவே அரசினுடைய கொள்கை உறுதிப்பாட்டிற்கு ஒரு எடுத்துக்காட்டு. எனவே, நான் அதிகமாக இதைப்பற்றிச் சொல்லவில்லை. இதனுடைய செயல்பாட்டுக் கால அட்டவணைகளை எல்லாம்கூட நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களே அறிக்கைமூலமாக வெளிப்படுத்திக் காட்டியிருக்கிறார்கள். எனவே, எந்தக் காரணத்தைக்கொண்டும், இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில் ஒருநாள்கூட தாமதம் ஆகாது என்பதை நான் இங்கே அழுத்தந்திருத்தமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆகவே, இந்த ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் என்பது, ஒரே வரியில் சொல்ல வேண்டுமென்று சொன்னால், "வானத்திலிருந்த கங்கை நதியை பகீரதன் பூமிக்குக் கொண்டு வந்தார்" என்பது புராணத்தில் இருக்கக்கூடிய கதை. இதை பகீரதப் பிரயத்தனம் என்று சொல்வதுண்டு. ஆனால், இப்போது நிதர்சனமாக, நிஜமாக, கடல் மட்டத்திலிருந்து சுமார் 300 மீட்டர் உயரத்திலிருக்கக்கூடிய ஒகேனக்கல் பகுதியிலிருந்து 950 மீட்டர் உயரத்திலிருக்கக்கூடிய ஓசூர் போன்ற பகுதிகளுக்கும் குடிநீரை அளித்து, தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்ட



மக்களுடைய தாகத்தைத் தீர்த்து வைக்கக்கூடிய திட்டம்தான் இந்தத் திட்டம். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, நவீன காலத்துப் பகீரதனாக நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் இன்றைக்கு விளங்கிக்கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

பிற்பகல் 12-40

அடுத்து, கடல் நீரைக் குடிநீர் ஆக்கக்கூடிய திட்டம். இது சென்னை மாநகர மக்களுடைய ஒரு முக்கியமான பிரச்சினை. இதற்குக் கடந்த கால ஆட்சி ஒரு திட்டம் போட்டது. நாங்கள் அதை மறுக்கவில்லை. எனவே, அதைப்பற்றிக்கூட நான் அதிகமாகப் பேசவும் விரும்பவில்லை. 2003-2004 ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது, கடல் நீரைக் குடிநீர் ஆக்கக்கூடிய ஒரு திட்டத்தை உருவாக்கினார்கள். ஆனால், அதிலே நீதிமன்ற வழக்கு ஒன்று வந்தது. அதனால் அந்தத் திட்டம் தடைப்பட்டுப் போயிருந்தது என்பது எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். ஆக, மீண்டும் தி.மு.க. 2006-ல் ஆட்சிக்கு வந்து, இது அ.தி.மு.க. கொண்டு வந்த திட்டம் என்று கிடப்பில் போடவில்லை. அ.தி.மு.க. திட்டத்தைக் கொண்டு வந்திருந்தாலும், அது நல்ல திட்டமாக இருந்தால் நிச்சயமாக இந்த அரசு நிறைவேற்றும் என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) 2006-ல் நாம் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு சம்பந்தப்பட்ட நிறுவனத்தோடு நம்முடைய துறையின் அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்தி, அதற்குப் பிறகு 25-2-2007 அன்று மீஞ்சூரிலே இந்தத் திட்டத்திற்கான அடிக்கல் நாட்டு விழாவும் நடந்தது. மீஞ்சூரில் காட்டுப்பள்ளி கிராமத்தில், கடல் நீரிலிருந்து தினசரி 100 மில்லியன் லிட்டர் குடிநீரைத் தயாரிக்கக்கூடிய பணி இப்போது வேக வேகமாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. ஆகஸ்ட் 2008-ல் தினசரி 15 மில்லியன் லிட்டர் குடிநீரும், 2009 ஆம் ஆண்டு துவக்கத்திலே தினசரி 100 மில்லியன் லிட்டர் குடிநீரும் சென்னைக்கு வரவிருக்கிறது என்பதையும் நான் இங்கே மகிழ்ச்சியோடு தெரிவிக்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

இதேபோன்று, இன்னொரு திட்டம் பழைய மகாபலிபுரம் சாலையில் இருக்கக்கூடிய நெம்மேலி பகுதியில் இன்னொரு கடல் நீரைக் குடிநீர் ஆக்கக்கூடிய திட்டம். ஏற்கெனவே தமிழகத்திலே அ.தி.மு.க. ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது, மத்தியிலே ஆட்சி மாற்றம் வந்தது. மதிப்பிற்குரிய பாரதப் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்கள் தலைமையில் ஆட்சி அமைந்ததற்குப் பிறகு, முதல் நிதிநிலை அறிக்கையை பாராளுமன்றத்திலே மாண்புமிகு நிதி அமைச்சர் திரு. ப. சிதம்பரம் அவர்கள் அங்கே தாக்கல் செய்தபோது,

சென்னை மாநகா மக்கள்மீது அவர் கொண்டிருக்கக்கூடிய அன்பின் காரணமாக, மத்திய அரசு பெற்றிருக்கக்கூடிய அந்த அன்பின் காரணமாக, கடல் நீரைக் குடிநீர் ஆக்கக்கூடிய திட்டத்திற்கு 1,000 கோடி ரூபாயை நாங்கள் ஒதுக்குகிறோம் என்று நிதிநிலை அறிக்கையிலே அறிவித்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், இங்கிருந்த அரசு என்ன செய்திருக்க வேண்டும்? அதை உடனடியாக ஏற்றுக்கொண்டு, அதற்கான D.P. அறிக்கை, அதாவது விரிவான திட்ட அறிக்கையை அவர்கள் உடனடியாகத் தயாரித்திருக்க வேண்டும். ஆனால், அதைப்பற்றி அவர்கள் கவலைப்படவில்லை. அதிலே அவர்கள் முழுமையான ஆர்வம் காட்டவில்லை. அதற்குப் பிறகு தமிழ்நாட்டில் ஆட்சி மாற்றம். 2006-லே நாம் ஆட்சிக்கு வந்தோம். நானும், நம்முடைய துறையினுடைய அதிகாரிகளும் டெல்லியிலே எங்கள் துறையின் சார்பில் ஒரு மாநாடு நடைபெற்றபோது அங்கே நாங்கள் சென்றிருந்தோம். அப்போது மத்திய நிதி அமைச்சர் மாண்புமிகு திரு. ப. சிதம்பரம் அவர்களைச் சந்திக்கக்கூடிய வாய்ப்பு எங்களுக்குக் கிடைத்தது. அப்போது அவரைச் சந்தித்து உரையாடிக் கொண்டிருந்தபோது பல திட்டங்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தார். அப்பொழுது இந்தக் கடல் நீரைக் குடிநீராக ஆக்கக்கூடிய திட்டத்தைப்பற்றி எடுத்துச் சொன்னபோது, "நான் என்ன செய்வது, நான் அறிவித்தேன்; ஆனால் ஏற்கெனவே இருந்த ஆட்சி திட்ட அறிக்கையை எங்களுக்குத் தரவில்லை, ஆர்வம் காட்டவில்லை" என்று சொன்னார். உடனே நாங்கள் கேட்டோம், "நாங்கள் இதை நிறைவேற்றக் காத்திருக்கிறோம்; எங்களுடைய முதல்வர் அவர்கள் உங்களிடத்திலே இதைப்பற்றிப் பேசச் சொன்னார்கள்" என்று நாங்கள் சொன்னவுடன், "அப்படியென்றால் நீங்கள் திட்ட அறிக்கையை உடனடியாக அனுப்புங்கள், நான் அதுகுறித்துப் பரிசிலிக்கிறேன்" என்று எங்களிடத்திலே உறுதி தந்தார்கள். உடனடியாக எங்கள் துறையின் சார்பிலே ஒரு திட்ட அறிக்கையை நாங்கள் வேக வேகமாகத் தயாரித்தோம். அதற்குப் பிறகு, கடந்த ஜனவரி மாதம் நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் திரு. ப. சிதம்பரம் அவர்கள் சென்னைக்கு வந்தபோது நம்முடைய முதலமைச்சர் அவர்களைச் சந்தித்து உரையாடிக்கொண்டிருந்தபோது, முதல்வர் அவர்கள்மூலமாகவே அந்தத் திட்ட அறிக்கையை அவரிடத்திலே தந்தோம். அந்தத் திட்ட அறிக்கையைப் பெற்ற மாண்புமிகு மத்திய நிதி அமைச்சர் அவர்கள் டெல்லிக்குச் சென்றார். ஜனவரி மாதம் பெற்றுக்கொண்டு செல்கிறார்; பிப்ரவரி மாதம் 29 ஆம் தேதி நிதிநிலை அறிக்கை டெல்லி பாராளுமன்றத்திலே தாக்கல் செய்யப்படுகிறது. அந்த நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்படுகிறபோது, 'சென்னைக் குடிநீர்த்



திட்டத்திற்காக நெம்மேலி பகுதியில் அமைய இருக்கக்கூடிய கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டத்திற்காக முதல் கட்டமாக 300 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படுகிறது' என்று அறிவித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

எனவே, இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுகிறபோது, தினசரி சென்னைக்கு மேலும் 100 மில்லியன் லிட்டர் குடிநீர் கிடைக்க வாய்ப்பு உருவாகியிருக்கிறது. எனவே, இந்தத் திட்டத்திற்காக 300 கோடி ரூபாயை நிதிநிலை அறிக்கையில் முதல் கட்டமாக அறிவித்த மாண்புமிகு நிதி அமைச்சர் திரு. ப. சிதம்பரம் அவர்களுக்கும், அதற்குத் துணை நின்ற பாரதப் பிரதமர் மதிப்பிற்குரிய மாண்புமிகு டாக்டர் மன்மோகன் சிங் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) காங்கிரஸ் பேரியக்கத்தினுடைய தலைவர் அன்னை சோனியா காந்தி அவர்களுக்கும் நான் இந்த நேரத்திலே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) (குறுக்கீடு) கடைசியாகப் பேசுங்கள். (குறுக்கீடு) கடைசியாகப் பேசுங்கள். நகராட்சி. . . .

பிற்பகல் 12-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.பி. அன்பழகன், கடைசியாகக் ஏதாவது கேட்க வேண்டுமென்று சொன்னால், கடைசியாகக் கேட்டுக்கொள்ளலாம், உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. கே.பி. அன்பழகன், கேட்டுக்கொள்ளலாம், உட்காருங்கள். (குறுக்கீடு) சரி, கடைசியாக கேட்டுக்கொள்ளலாம், உட்காருங்கள். சொல்லுங்கள்.

***திரு. கே.பி.அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கடல் நீரைக் குடிநீராக்குகின்ற திட்டத்தைப்பற்றி இங்கே கூறிக்கொண்டிருந்தார்கள். அவர் நெஞ்சைத் தொட்டு சொல்ல வேண்டும், மீஞ்சூரிலே கடல் நீரைக் குடிநீராக்குகின்ற திட்டத்திற்கு அடிக்கல் நாட்டு விழாவைத் தவிர அதில் எந்தப் பணியையுமே இந்த அரசானது மேற்கொள்ளவில்லை என்பதை ஆணித்தரமாக இங்கே அடித்துக் கூற முடியும். அன்றையதினத்திலே சுற்றுச்சூழல் அமைச்சரிடம், கடைசியாக டெண்டர் எல்லாம் விடப்பட்டு அவரிடமிருந்து அனுமதி பெறுவதற்காக அனுப்பப்பட்டதை மத்திய அரசிலே நிறுத்தி வைத்தது இன்று ஆளுகின்ற அரசுதான். இது ஒன்று. இன்னொன்று, 1,000 கோடி ரூபாய் அறிவித்ததாகச் சொன்னார்கள்; அன்று கோரமண்டல கடற்கரைப் பகுதிக்கு, சென்னை, ஒரிசா, ஆந்திரா ஆகிய

மாநிலங்களுக்கு எல்லாம் சேர்த்து ஒட்டுமொத்தமாக அறிவிக்கப்பட்டு, ஒதுக்கிய நிதி வெறும் 5 கோடி ரூபாய் மட்டும்தான் என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பழகன் அவர்கள் அமைச்சர் பொறுப்பிலே இருந்தவர்கள். அவருக்கு எல்லாவிதமான நடைமுறைகளும் தெரியும். சென்னை மாநகரத்திற்கு குடிநீருக்காக 1,000 கோடி ரூபாய் என்று மத்திய அரசு அறிவித்தது. அதிலே அறிக்கை தாக்கல் செய்வதற்கு 5 கோடி ரூபாய் ஒதுக்கித் தந்தது. இவர்கள் அந்த அறிக்கையைக்கூடத் தயார் செய்யாமல் 5 கோடி ரூபாய்கூட செலவு செய்ய முடியாத ஒரு அரசுதான் கடந்த அரசு என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊராக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதனால்தான் நான் முன்கூட்டியே சொன்னேன். எந்தத் திட்டமாக இருந்தாலும், அது நல்ல திட்டமாக இருந்தால், அ.தி.மு.க. கொண்டு வந்திருந்தாலும், அதை நிறைவேற்றக்கூடிய பாங்குதான் இந்த ஆட்சிக்கு என்பதை நான் முதலிலேயே சொல்லியிருக்கிறேன். எனவே, அதைப்பற்றி நான் அதிகம் பேச விரும்பவில்லை.

அடுத்து, நகராட்சி நிருவாகத் துறையில் இன்றைக்குப் பல்வேறு சாதனைகளை இந்த அரசு தொடர்ந்து நிறைவேற்றிக்கொண்டிருக்கிறது என்பது உங்களுக்கு எல்லாம் நன்றாகத் தெரியும். அதற்கு எடுத்துக்காட்டாக ஒன்றை நான் குறிப்பிட வேண்டுமென்று சொன்னால், ஈரோடு, திருப்பூர் நகராட்சிகளை மாநகராட்சிகளாக உயர்த்தியதை நான் குறிப்பிட்டுக் காட்டியாக வேண்டும். தந்தை பெரியார், ஈரோட்டுச் சிங்கம், பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்கள் ஈரோடு நகராட்சியினுடைய தலைவராகப் பொறுப்பிலிருந்தபோது, 1917 ஆம் ஆண்டு அவரே கைப்பட எழுதி, ஈரோடு நகராட்சியை விரிவுபடுத்த வேண்டுமென்று-அவரே கைப்பட எழுதி, அவரே கையெழுத்திட்டு ஒரு தீர்மானத்தை நிறைவேற்றித்



தந்தார்கள். அது 90 ஆண்டு காலம் கழித்து நம்முடைய ஆட்சியில், நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள், நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள், தந்தை பெரியார் கண்ட கனவை நிறைவேற்றக்கூடிய வகையிலே 29-12-2007 அன்று ஈரோட்டிற்கு அவரே வருகை தந்து, அந்த ஈரோடு மாநகராட்சியைத் தொடங்கி வைத்தார்கள். தொடங்கி வைத்த அன்றே மாநகராட்சியினுடைய மேம்பாட்டிற்காக 5 கோடி ரூபாய் ஒதுக்கீடும் செய்து தந்தார்கள்.

அதேபோல் திருப்பூர் நகராட்சியை மாநகராட்சியாக உயர்த்திட வேண்டுமென்று கடந்த ஆண்டு இதே அவையிலே எடுத்துச் சொல்லப்பட்டது. அதுவும் 29-12-2007 அன்று நம்முடைய முதல்வர் அவர்களே நேரடியாக வருகை தந்து அதைத் தொடங்கி வைத்தார்கள். அதற்காக 5 கோடி ரூபாய் மேம்பாட்டுப் பணிக்காக நிதி வழங்கப்பட்டிருக்கிறது. ஆக ஈரோடும், திருப்பூரும் 1-1-2008-லிருந்து மாநகராட்சிகளாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. எனவே, இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே வேலூர் நகராட்சி மாநகராட்சியாக உயர்த்தித் தரப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இவை எல்லாம் நகராட்சியினுடைய உள்ளாட்சி வளர்ச்சிக்கு, அதனுடைய அடையாளங்களாக விளங்கிக்கொண்டிருக்கின்றன என்பதற்காகத்தான் நான் இங்கே இதைச் சுட்டிக்காட்டினேன்.

அடுத்து, ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற மறு சீரமைப்புத் திட்டம். இந்தத் திட்டம் மத்திய அரசின்மூலமாக உருவாக்கப்பட்ட திட்டம். 2005, அதாவது 3-12-2005 அன்று இந்தத் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது. இந்தத் திட்டத்தினுடைய நோக்கம்—நகர்ப்புற வளர்ச்சிக்காக ஒரு சிறப்புக்குரிய மாபெரும் திட்டமாக அமைந்தது. நகர்ப்புறக் கட்டமைப்பு மற்றும் ஆளுமைத் திறன் மேம்பாட்டுத் திட்டம்; நகர்ப்புற ஏழைகளுக்கான அடிப்படை வசதித் திட்டம்; சிறிய நடுத்தர நகரங்களுக்கான மேம்பாட்டுத் திட்டம்; ஒருங்கிணைந்த வீட்டு வசதி, குடிசை மேம்பாட்டுத் திட்டம்; இப்படி நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு இந்தத் திட்டம் இன்றைக்கு நடைபோட்டுக்கொண்டிருக்கிறது. இந்தத் திட்டத்தின்கீழ் குடிநீர் விநியோகம், பாதாளச் சாக்கடைத் திட்டம், திடக் கழிவு மேலாண்மை, குடிசைப் பகுதியிலே இருக்கக்கூடிய புதிய வீடுகள், மின் வசதி, தெரு விளக்குகள், வடிகால் அமைத்தல், சமுதாயக் கழிப்பிட வசதி, சிமெண்ட் தளம், சாலைப் பணிகள் போன்ற பல்வேறு பணிகளை இந்தத் திட்டத்தின்மூலமாக நாம் நிறைவேற்ற இருக்கிறோம். இதுவரை மத்திய அரசு 202 வளர்ச்சித் திட்டங்களுக்கு அனுமதி தந்திருக்கிறது.

நமக்கு மத்திய அரசு 5,790 கோடியே 11 இலட்ச ரூபாய் அனுமதி தந்திருக்கிறது. அந்த வகையிலே இப்பொழுது பணிகளெல்லாம் செயல்பாட்டில் இருக்கின்றன என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

*பிற்பகல் 12-50*

தமிழ்நாடு நகர்ப்புறச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம். இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அதற்காக 1,000 கோடி ரூபாயை நாம் ஒதுக்கீடு செய்திருக்கிறோம். மாநகராட்சி மற்றும் நகராட்சிப் பகுதிகளில் உள்ள சாலைகளை உலகத் தரத்திற்கு உயர்த்திட, அதேபோல் நடைபாதை, மழை நீர் வடிகால், சாலையின் அடியிலே குடிநீர்க் குழாய், மின்சாரக் கம்பிகள் ஆகியவை அமைத்தல் போன்ற இந்தப் பணிகளுக்காக நாம் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற இருக்கிறோம். அதனுடைய முதற்கட்டமாக நான்கு மாநகராட்சிகள், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, திருப்பூர், மதுரை, அதேபோல, 7 நகராட்சிகள். ஆலந்தூர், மயிலாடுதுறை, கரூர், இனாம் கரூர், கும்பகோணம், தஞ்சாவூர் மற்றும் வளசரவாக்கம். இரண்டாவது கட்டமாக இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட இருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகள் அரசிடம் பெற்றிருந்த கடன் முழுமையும் தள்ளுபடி செய்வோம் என்ற ஓர் அறிவிப்பைக் கடந்த ஆண்டில் வெளியிட்டிருந்தோம். அதில், சென்னையைத் தவிர்த்து ஐந்து மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகள் அரசிடமிருந்து பெற்றிருந்த கடன் முழுமையையும் நாம் தள்ளுபடி செய்திருக்கிறோம். அசல் தொகை 429 கோடியே 84 இலட்ச ரூபாய். இந்த அசல் தொகையை முறையாக அரசுக்குச் செலுத்தாத காரணத்தினால், அதற்கு வட்டி எவ்வளவு வந்தது தெரியுமா? அசல் தொகை 429 கோடியே 84 இலட்ச ரூபாய். ஆனால், வட்டி ரூபாய் 357 கோடியே 58 இலட்சம். ஆக, 787 கோடியே 42 இலட்ச ரூபாயை முழுமையாக நாம் இந்த அரசின்மூலமாகத் தள்ளுபடி செய்திருக்கிறோம் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து, அங்கீகாரமற்ற மனைப் பிரிவுகளை வரன்முறை செய்தல். இங்கேகூட உறுப்பினர் திரு. மலரவன் அவர்கள் பேசுகிறபோது பெரிதும் அக்கறை எடுத்துக்கொண்டு பேசினார்கள். ஆனால், இவர்களெல்லாம் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோது இதைப்பற்றிக்



கவலைப்படவில்லை, சிந்தித்தும் பார்க்கவில்லை. ஆனால் 2006 ஆம் ஆண்டிலே திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு, வரன்முறைப்படுத்துவதற்காக இருந்த சட்ட விதிகள் சிலவற்றை நாம் தளர்த்தினோம். புதிய சலுகைகளையெல்லாம் வழங்கினோம். அதற்காக ஒரு புதிய திட்டத்தையும் உருவாக்கி, அறிவித்தோம். இது மக்களிடத்திலே பெரியதொரு வரவேற்பைப் பெற்றது. அந்த வரவேற்பைப் பெற்ற காரணத்தால், இன்றைக்கு வரன்முறை செய்யப்பட்டிருக்கின்ற எண்ணிக்கை எவ்வளவு தெரியுமா? 1 இலட்சத்து 38 ஆயிரத்து 808 மனைகள் இதுவரையில் வரன்முறை செய்யப்பட்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) இதன்மூலமாக, நகராட்சி, உள்ளாட்சி அமைப்புகளுக்கு வருவாய் எவ்வளவு வந்திருக்கிறது தெரியுமா? 94 கோடியே 62 இலட்ச ரூபாய் இதன்மூலமாக வருவாய் வந்திருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சென்னை மாநகராட்சி. சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரை நான் சொல்ல விரும்புவது என்னவென்று கேட்டால், 1996 ஆம் ஆண்டிலே திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோது, 2001 ஆம் ஆண்டு வரை ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது, அந்தக் காலக்கட்டத்திலே, அன்றைக்கு சென்னை மாநகராட்சியினுடைய மேயராக இருக்கக்கூடிய வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அந்த வாய்ப்பைப் பெற்றிருந்தபோது, பல பணிகளை மாநகராட்சியின் சார்பிலே அரசினுடைய ஒத்துழைப்போடு நாம் நிறைவேற்றினோம். ஆனால், குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய வகையிலே நான் ஒன்றை எடுத்துச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், சென்னை நகரத்தில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க வேண்டுமென்பதற்காக மேம்பாலங்களைக் கட்டவேண்டுமென்று முடிவெடுத்தோம். அப்படி 10 மேம்பாலங்களைக் கட்டவேண்டுமென்று முடிவெடுத்து, 9 மேம்பாலங்களை (மேசையைத் தட்டும் ஒலி) குறித்த நேரத்திற்கு முன்பு மட்டுமல்ல, மதிப்பீட்டுத் தொகையைவிடக் குறைத்துச் செலவு செய்து, (மேசையைத் தட்டும் ஒலி) அந்தப் பாலங்களை நாம் கட்டி முடித்து, திறந்து வைத்தோம். அதிலே தடைப்பட்டுப் போனது ஒரேயொரு பாலம்; பெரம்பூர் மேம்பாலம். அதிலே என்ன காரணமென்று கேட்டால், தொழில்நுட்ப ரீதியாக சில பிரச்சினைகள் வந்தன. அதனால் அது தடை பட்டுப் போயிற்று. ஆனால், அதற்குப் பிறகு 2001 ஆம் ஆண்டிலே தமிழ்நாட்டிலே ஆட்சிமாற்றம் வந்தது. ஆட்சிப் பொறுப்பிற்கு வந்தவர்கள் என்ன செய்திருக்க வேண்டும்? எப்படி குடிநீர்த் திட்டத்தை விட்டுவிட்டுப்

போனபோது, ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை விட்டுவிட்டுப் போனபோது, நாம் இப்பொழுது அதை எடுத்துச் செய்கிறோம் அல்லவா? அதுமாதிரி, நாம் அப்பொழுது விட்டுவிட்டுப் போனதை, அவர்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு அந்தப் பாலத்தைக் கட்ட நினைத்திருந்தால், நிச்சயமாக அதைக் கட்டி முடித்திருக்க முடியும். ஆனால், அரசியல் நோக்கத்தோடு ஏதேதோ செய்தார்கள். விசாரணை கமிஷன் அமைத்தார்கள். அந்தப் பிரச்சினைக்குள்ளே செல்ல நான் விரும்பவில்லை. (குறுக்கீடு) இடித்தெல்லாம் பார்த்தார்கள் என்று சொல்கிறார் உறுப்பினர். அதனால்தான் அந்தப் பிரச்சினைக்குள்ளே செல்ல நான் விரும்பவில்லை. அந்த ஒரு பாலம் தடைப்பட்டுப் போயிருந்தது. அதற்குப் பிறகு மீண்டும் 2006 ஆம் ஆண்டிலே நாம் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு, பெரம்பூர் மேம்பாலத்தை எப்படியும் கட்டி முடிக்க வேண்டுமென்று முடிவெடுத்து, வடிவமைப்பிலே சில மாற்றங்களைச் செய்தோம். அதற்குப் பிறகு மீண்டும் டெண்டர் விட்டோம். 14-3-2008 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு, அவை பரிசீலனையில் உள்ளன. விரைவில் அந்தப் பணியும் தொடங்கப்பட இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2006 ஆம் ஆண்டிலே மீண்டும் தமிழகத்திலே நம்முடைய ஆட்சி வந்ததற்குப் பிறகு, சென்னை மாநகராட்சியிலே மேலும் 11 மேம்பாலங்களைக் கட்டவேண்டுமென்று முடிவெடுத்து, அதற்காக 175 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, அந்த 11 மேம்பாலங்களில் ஒரு மேம்பாலம் கட்டி முடிக்கப்பட்டு, கடந்த 30 ஆம் தேதி நம்முடைய முதல்வர் அவர்களே வருகை தந்து திறந்து வைத்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) வடக்கு உஸ்மான் சாலை--மகாலிங்கபுரம் சாலை சந்திப்பிலே அந்தப் பாலம் திறந்து வைக்கப்பட்டது. தொடர்ந்து இன்னும் மூன்று மேம்பாலங்களை இந்த ஆண்டிற்குள் நம்முடைய முதல்வர் அவர்களே வருகை தந்து திறந்து வைக்கவிருக்கிறார்கள். மீதம் இருக்கக்கூடிய அந்த 7 பாலங்களும் 2009 ஆம் ஆண்டிற்குள் கட்டி முடிக்கப்பட்டுத் திறந்து வைக்கப்படவிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-55

இந்த ஆண்டு மாநகராட்சியினுடைய நிதிநிலை அறிக்கையிலே மேலும் ரூ.118 கோடி மதிப்பீட்டிலே 15 பெரிய பாலங்கள் மற்றும் சிறிய பாலங்கள் கட்ட முடிவெடுக்கப்பட்டிருக்கிறது. மெரினா கடற்கரை--எலியட்ஸ் கடற்கரை சாலையில், எலியட்ஸ் கடற்கரையை உலகத் தரம் வாய்ந்த வகையில் அழகுபடுத்த வேண்டும் என்பதற்காக



24 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே அந்தப் பணிகளெல்லாம் இப்பொழுது வேக வேகமாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

அடுத்து, சொத்து வரிச் சீராய்வு. இங்கேகூட சில உறுப்பினர்களெல்லாம் இதைப்பற்றிக் குறிப்பிட்டுப் பேசியிருக்கிறார்கள். நேற்றைக்கு திரு. ரங்கராஜன் அவர்களும், நம்முடைய திரு. ஞானசேகரன் அவர்களும்கூட இங்கே பேசுகிறபோது இதைப்பற்றி எடுத்துச் சொன்னார்கள். ஏன், இன்றைக்கு எதிர்க்கட்சித் தலைவராக இருக்கக்கூடிய மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அவர்கள்கூட இதைக் கண்டித்து அறிக்கைகளெல்லாம் விட்டார்கள். அதற்கு நம்முடைய முதல்வர் அவர்கள் சரியான விளக்கங்களையெல்லாம் தந்திருக்கிறார்கள். இருந்தாலும் நான் இங்கே பதிவு செய்ய விரும்புவது, நகர்ப்புற, உள்ளாட்சி வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ள வேண்டுமென்று சொன்னால், நிச்சயமாக சொத்து வரி மிக மிக முக்கியமான ஒன்று. அதுமட்டுமல்ல, சட்ட விதிகளின்படி ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை சொத்து வரிச் சீராய்வு செய்யப்பட்டாக வேண்டும். அந்த அடிப்படையிலேதான் 1998-லே, 1-10-1998-ல் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது இந்த சொத்து வரிச் சீராய்வு செய்யப்பட்டது. அதற்குப் பிறகு ஆட்சிக்கு வந்த அ.தி.மு.க. என்ன செய்திருக்க வேண்டும்? 1-10-2003-லே இந்த சொத்து வரியைச் சீராய்வு செய்திருக்க வேண்டும். ஆனால், அவர்கள் செய்தார்களா? இல்லை. அப்படிச் செய்யாத காரணத்தால் என்னவாயிற்று? நகராட்சிக்கு வரவேண்டிய வருமானம் குறைந்தது. வருமானம் குறைந்த காரணத்தால், அவர்களால் எந்தப் பணிகளையும் செய்ய முடியாத ஒரு சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டார்கள்.

அதனால், 2006 ஆம் ஆண்டு நாம் ஆட்சிப் பொறுப்பேற்றதற்குப் பிறகு இன்றைக்கு நகராட்சிகளினுடைய தலைவர்களெல்லாம் சேர்ந்து ஒரு பேரவை அமைத்திருக்கிறார்கள். அதிலே எல்லாக் கட்சிகளைச் சார்ந்தவர்களும் இடம் பெற்றிருக்கிறார்கள். அந்தப் பேரவையினுடைய நோக்கம் என்னவென்று கேட்டால், நகராட்சியினுடைய பிரச்சினைகளைப் பேசி, தீர்மானங்களைப் போட்டு, அந்தக் கோரிக்கைகளை அரசுக்கு எடுத்துச் சொல்வது, அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருவது, அவர்கள் உரிமைகளைச் சுட்டிக்காட்டுவது, இதுதான் அந்தப் பேரவையினுடைய நோக்கம். ஆகவே, அந்த நகராட்சிக்கென்று அமைக்கப்பட்டிருக்கக்கூடிய அந்தப் பேரவையிலே எல்லாக் கட்சிகளுடைய தலைவர்களும் இடம் பெற்றிருக்கிறார்கள். நகர்மன்றத் தலைவர்களெல்லாம்கூட இடம் பெற்றிருக்கிறார்கள்.

ஆக, 2007 மார்ச் மாதம் அந்தப் பேரவை கூடி, பல தீர்மானங்களை அதிலே முடிவெடுத்தார்கள். அதிலே ஒன்றுதான், சொத்து வரியைச் சீராய்வு செய்தாக வேண்டும் என்பது. இதற்கு உடனடியாக அரசு ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று ஒரு தீர்மானத்தை அவர்கள் தயாரித்து, அந்தத் தீர்மானத்தை அரசுக்கு அனுப்பி வைத்தார்கள். அந்த அடிப்படையிலேதான் அரசு அதைப் பரிசீலித்து 1-2-2008 அன்று அரசாணை பிறப்பித்திருக்கிறது. அந்த அரசாணை பிறப்பிக்கிறபோது எந்த நிலையிலே அந்த அரசாணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது? தயவு செய்து நீங்கள் உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும், காரணம், சிலர் புரியாமல் இன்னும் சில கருத்துகளை எடுத்துச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இங்கேகூட மாண்புமிகு உறுப்பினர் திரு. மலரவன் அவர்கள் பேசுகிறபோது தொழில் கட்டடங்களுக்கு 100 சதவீதம் என்று சொன்னார்கள், 100 சதவீதத்திற்கு மிகாமலும், 100 சதவீதத்திற்கு அதிகம் போகக்கூடாது; அது 100 சதவீதத்திற்குள்ளாக இருந்தாக வேண்டும். 10 சதவீதம்கூட வைத்துக்கொள்ளலாம், 50 சதவீதம்கூட நகராட்சி நிர்ணயிக்கலாம். ஏன், ஒன்றுமே இல்லாமல் இப்பொழுது இருக்கக்கூடிய நிலையிலேகூட வைத்துக்கொள்ளலாம். இதைத்தான் அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். ஏதோ அரசியல் பேசவேண்டும் என்பதற்காகப் பேசிக்கொண்டிருக்கிறார்களே தவிர, அவரும் மேயராக இருந்தவர், இப்பொழுது சட்டமன்ற உறுப்பினராக இருக்கக்கூடியவர், அவருக்குத் தெரியாமல் இருக்க வாய்ப்புக் கிடையாது.

ஆக, குடியிருப்புக் கட்டடங்களுக்கு 25 சதவீதம் மிகாமலும், தொழில் கட்டடங்களுக்கு 100 சதவீதத்திற்கு மிகாமலும், வணிகக் கட்டடங்களுக்கு 150 சதவீதத்திற்கு மிகாமலும் உயர்த்திக்கொள்ள நம்முடைய அரசு அனுமதி தந்து ஆணை பிறப்பித்திருக்கிறது. இன்றைக்கு இதைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் செய்பவர்களை, இதைக் கண்டித்து அறிக்கை விட்டுக்கொண்டிருக்கக்கூடியவர்களை நான் இங்கே பணிவோடு கேட்க விரும்புகிறேன், இன்றைக்குக் கண்டன அறிக்கையை விட்டுக்கொண்டிருக்கக்கூடியவர்கள், அவர்கள் 1993-லே ஆட்சிப் பொறுப்பிலே இருந்தார்கள். 1993-லே ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது அவர்கள் ஆட்சியிலே சொத்து வரிச் சீராய்வு செய்யப்பட்டது. அப்படி சொத்து வரிச் சீராய்வு செய்தபோது, எந்த நிலையிலே சீராய்வு செய்திருக்கிறார்கள் தெரியுமா? எப்படிப்பட்ட ஆணை பிறப்பித்திருக்கிறார்கள் தெரியுமா? குடியிருப்புக் கட்டடங்களுக்கு 100 சதவீதத்திற்கு மிகாமலும்--குடியிருப்புக் கட்டடங்களுக்கு இப்பொழுது நாம் விதித்திருக்கக்கூடிய சலுகை



25 சதவீதத்திற்கு மிகாமலும்--ஆனால், 1993-லே 100 சதவீதத்திற்கு மிகாமலும் என்று அவர்களே போட்டிருக்கிறார்கள். அதற்குப் பிறகு, தொழில் மற்றும் வணிகக் கட்டடங்களுக்கு 150 சதவீதத்திலிருந்து 200 சதவீதத்திற்கு மிகாமலும் என்று போட்டிருக்கிறார்கள். இப்பொழுது நாம் போட்டிருப்பது, 100 சதவீதத்திற்கு மிகாமலும்.

ஆக, இதிலேயிருந்தே நீங்கள் புரிந்துகொள்ளலாம். ஆக, இதற்குமேல் விளக்கம் தேவையில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-00

அதுமட்டுமல்ல, இன்னொரு விஷயம். பேரவையினுடைய நிர்வாகிகளாக அனைத்துக் கட்சிகளைச் சார்ந்தவர்கள் இடம்பெற்றிருக்கிறார்கள் என்று நான் தொடக்கத்திலேயே சொன்னேன். அந்தப் பேரவை போட்டிருக்கக்கூடிய தீர்மானம் மட்டும் அல்ல. இன்றைக்கு அ.தி.மு.க.வைச் சார்ந்த சிலர் நகராட்சிகளினுடைய தலைவர்களாகவும் இருக்கிறார்கள். குறிப்பிட்டுச் சொல்லவேண்டுமென்றால், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, பூவிருந்தவல்லி, புழுதிவாக்கம், பெரியகுளம். இவற்றிலே நகர்மன்றத்தினுடைய தலைவர்கள் யார் என்று கேட்டால், அ.தி.மு.க.வைச் சேர்ந்தவர்கள் நகர்மன்றத் தலைவர்கள். அவர்கள் தலைமையிலே இருக்கக்கூடிய இந்த நகர்மன்றங்களில்கூடத் தீர்மானம்—அது என்ன தீர்மானம் தெரியுமா? அரசு கொண்டு வந்திருக்கக்கூடிய இந்த ஆணையை ஏற்றுத் தீர்மானம் போட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆதரித்துத் தீர்மானம் போட்டிருக்கிறார்கள். ஆக, இந்தச் சொத்து வரிச் சீராய்வினை அவர்கள் இன்றைக்கு மேற்கொண்டிருக்கிறார்கள். ஆனால், இவர்கள்தான் இன்றைக்கு மாற்று அறிக்கை விட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்பதற்காகத்தான் சொன்னேனே தவிர, வேறு அல்ல. (குறுக்கீடுகள்)

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிறபோது, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய நகர்மன்றத் தலைவர்களே ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். கோபிசெட்டிப்பாளையத்திலே உங்கள் நகர்மன்ற உறுப்பினர்களே அதை மறுத்திருக்கிறார்களே, அதற்கு என்ன பதில் சொல்லப் போகிறீர்கள் என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அரசாணைக்கு ஒரு விளக்கத்தைத் தந்திருக்கிறார்கள். அதாவது, குடியிருப்புப் பகுதிக்கு 25 சதவிகிதம் மிகாமலும், அதேபோல industrial பகுதிக்கு 100 சதவிகிதம் மிகாமலும், அதேபோல கமர்ஷியலுக்கு 150 சதவிகிதம் மிகாமலும் என்று நீங்கள் விளக்கம் அளித்திருக்கிறீர்கள். அந்த விளக்கத்தை தவறாகப் புரிந்துகொண்டு, ஆணையர்கள் இப்போது எல்லா இடங்களிலும் நோட்டீஸ் கொடுத்து, வரி உயர்வுக்கு அவர்கள் இப்பொழுது அடித்தளம் அமைத்துக்கொண்டிருப்பதைத்தான் எதிர்க்கிறார்களேயொழிய, தாங்கள் தயவுசெய்து இந்த அவையின்மூலமாக அவர்களுக்கு ஒரு அறிவிப்பைக் கொடுத்துவிட்டீர்கள் என்று சொன்னால், விளக்கம் பெற்றுவிட்டால் இந்தப் பிரச்சினை வராது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படியொரு பிரச்சினை இருக்கும் என்று சொன்னால், உடனடியாக அது சரிசெய்யப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, 2006-ல் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்தபோது, இதே அவையிலே இதுபோன்ற மானியக் கோரிக்கைக்கு நான் பதில் அளித்துப் பேசுகின்றபோது ஒரு புள்ளிவிவரத்தைச் சொன்னேன். அதாவது, 13-5-2006 அன்று தி.மு.க. அரசு பொறுப்பேற்றபோது, அதற்கு முன்பு இருந்த அ.தி.மு.க. ஆட்சி நிலுவையில் விட்டுச் சென்ற பணிகள் என்ற ஒரு புள்ளிவிவரத்தோடு கணக்கைச் சொன்னேன். 1 இலட்சத்து 54 ஆயிரம் பணிகளை நிலுவையில் விட்டுவிட்டுப் போயிருக்கிறார்கள். இது நம்முடைய அரசுக்கு ஒரு பெரும் சுமை. இதனை நாங்கள் சுமையாகக் கருதாமல் அதை மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டு, அதையும் இந்த அரசு நிறைவேற்றும் என்று அன்றைக்கே நான் உறுதிமொழி தந்தேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அந்தவகையிலே ஒரு கணக்கினைத் தர விரும்புகிறேன். அ.தி.மு.க. ஆட்சி 1 இலட்சத்து 54 ஆயிரம் பணிகளை விட்டுவிட்டுப் போனார்களே, அந்த 1 இலட்சத்து 54 ஆயிரம் பணிகளில் இதுவரையிலே 1 இலட்சத்து 53 ஆயிரத்து 700 பணிகள் முழுமையாக



நிறைவேற்றி முடிக்கப்பட்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) மீதம் இருப்பது 300 பணிகள். அதுவும் இப்போது முன்னேற்றத்தினை நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறது என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, மின்சாரக் கட்டணத்தைப் பற்றிக்கூட இங்கே சொன்னார்கள், கிராம ஊராட்சிகளில் ஒரு பெரும் சுமையாக இந்த மின் கட்டணம் இருக்கிறது என்று. இது ஏற்கெனவே பேசப்பட்டு, கடந்த ஆண்டே நம்முடைய மின்சாரத் துறை அமைச்சர் அவர்களோடும், அவர்களுடைய துறை அதிகாரிகளுடனும் கலந்து பேசி, அதற்குப் பிறகு நம்முடைய முதல்வர் அவர்களிடத்திலே இதுபற்றி நாங்கள் ஆலோசித்து, ஓரளவிற்குக் கட்டணத்தைக் குறைத்தோம். ஒரு யூனிட்டுக்கு ரூ.3-40 ஆக இருந்ததை 3 ரூபாயாகக் குறைத்தோம். ஆக, அந்தக் கட்டணத்தைக் குறைத்தது மட்டுமல்ல, அபராதத் தொகையைக்கூட குறைத்தோம். அது எவ்வளவு என்று கேட்டால், அந்த வரித் தொகையை 12 சதவிகிதத்திலிருந்து 6 சதவிகிதமாகக் குறைத்தோம். அதைப்போல நிலுவைத் தொகை. தாமதமாக வரக்கூடிய அந்த நிலுவைத் தொகை, அதையும் முழுமையாகத் தள்ளுபடி செய்தோம். அந்தக் கணக்கைப் பார்த்தால், 18 கோடியே 46 இலட்சம் ரூபாய் முழுமையாகத் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது.

அதைப்போல, அனைத்து கிராம ஊராட்சி அலுவலகங்களுக்கெல்லாம் தொலைபேசி வசதி செய்து தரப்படும் என்ற ஒரு உறுதிமொழியினைத் தந்தோம். இப்போது கணக்குப் பார்த்தால், 46 கிராம ஊராட்சிகளைத் தவிர--12,618 கிராம ஊராட்சிகளில் 46 கிராம ஊராட்சிகளைத் தவிர எல்லா கிராம ஊராட்சி அலுவலகங்களுக்கும் தொலைபேசி வசதி செய்து தரப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதைப்போல சிமெண்ட் விலை சமீபத்திலே ஒரு பெரிய பிரச்சினையாக இருந்து வந்தது. அதனால் கட்டுமானப் பணிகள் பாதிப்பிற்கு, குறிப்பாக நம்முடைய ஊராட்சித் துறை ஆளாக்கப்பட்டிருந்தது. ஆக, அதையெல்லாம் அடிப்படையாக வைத்து, டான்செம்-உடன் நாங்கள் கலந்து பேசி, அந்த டான்செம் மூலமாக, 7 இலட்சம் டன், ஒரு மூட்டை ரூ.220/- வீதம் கொள்முதல் செய்து, தொய்வின்றி அந்தப் பணிகள் எல்லாம் எந்தவிதத் தடங்கலும் இல்லாமல், அந்தக் கட்டுமானப் பணி பாதிப்பு அடையாதவகையில் அந்தப் பணிகளையும் இப்போது நாம் தொடர்ந்து நிறைவேற்றிக்

கொண்டிருக்கிறோம். நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு மற்றும் குடிநீர் வாரியங்கள் அனைத்திலும் மின் ஆளுமைத் திறன் செயல்படுத்தப்படுகிறது. 157 நகராட்சிகளுக்கும் தனித்தனியாக இணையதளம் உருவாக்கப்பட்டிருக்கிறது. நிர்வாக அமைப்பைப் பொறுத்தவரையில் ஒளிவுமறைவற்றதாக சீரமைக்கப்பட்டிருக்கிறது. அதேபோல, நகராட்சி நிருவாகத் துறையைப் பொறுத்தவரையில், மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள், குடிநீர் வாரியங்கள், இந்த அமைப்புகளிலே இதுவரையில் காலியாக இருந்த மொத்தப் பணியிடங்கள், நாம் ஆட்சிக்கு வருவதற்கு முன்பு வரை காலியாக இருந்த மொத்தப் பணியிடங்கள், 19,704 பணியிடங்கள் காலியாக இருந்தன. நம்முடைய அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு, உடனடியாகக் காலிப் பணியிடங்களையெல்லாம் பூர்த்தி செய்ய வேண்டுமென்று நம்முடைய முதல்வர் அவர்கள் எனக்கு உத்தரவிட்டார்கள். அதை ஏற்று இப்போது 8,382 பணியிடங்கள் நிரப்பப்பட்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) அதிலே குறிப்பாக 1,500 பணியிடங்கள் கருணை அடிப்படையிலே, வாரிசுதாரர்களுக்காக அந்தப் பணியிடங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-05

அதேபோல, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையிலே 17,819 பணியிடங்கள் காலியாக இருந்தன. நம்முடைய ஆட்சி பொறுப்பேற்றதற்குப் பிறகு 16,347 பணியிடங்களை நாம் நிரப்பி இருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) மீதம் இருக்கக்கூடிய 1,472 பணியிடங்கள் இப்போது தேர்வாணையம்மூலமாக நிரப்பப்பட்டுக்கொண்டிருக்கின்றன. அதுமட்டுமல்ல, ஊரக வளர்ச்சித் துறையினுடைய பொறியியல் பிரிவிலே புதியதாக 32 உப கோட்டங்களை நாம் இப்போது ஏற்படுத்தி உள்ளோம் என்பதையும் மகிழ்ச்சியோடு இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

எனவே, இந்த மானியக் கோரிக்கைகள்மீதான விவாதத்திலே ஆளுங்கட்சியைச் சார்ந்த, எதிர்க்கட்சியைச் சார்ந்த, தோழமைக் கட்சிகளைச் சார்ந்திருக்கக்கூடிய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் பல அறிவுரைகளை, ஆலோசனைகளையெல்லாம் வழங்கியிருக்கிறார்கள். ஏன், வரவேற்றும், பாராட்டியும், வாழ்த்தியும் பேசியிருக்கிறீர்கள். அவற்றையெல்லாம் நீங்கள் எங்களுக்குத் தந்திருக்கக்கூடிய ஊக்கமாக நாங்கள் கருதிக்கொண்டிருக்கிறோம். ஏன், எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்கள் சில குற்றச்சாட்டுகளைக்கூட, குறைபாடுகளைக்கூட சுட்டிக்காட்டி இருக்கிறீர்கள். அவற்றை நாங்கள் அலட்சியம் செய்துவிடாமல், அதையும் நாங்கள் பொறுப்போடு



ஏற்றுக்கொண்டு, அதற்காக அவர்களுக்கு நான் இந்த நேரத்திலே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய இந்தியத் திருநாட்டினுடைய முன்னாள் பிரதமராக, ஏன் முதல் பிரதமராக இருந்தவர் யார் என்பது உங்களுக்குத் தெரியும்; ஆசியாவின் ஜோதி ஜவஹர்லால் நேரு அவர்கள். அவருக்குப் பிடித்தமான ஆங்கிலக் கவிதை ஒன்று உண்டு. அந்த ஆங்கிலக் கவிதையை எப்போதும் அவருடைய மேஜையிலே நிரந்தரமாக வைத்திருப்பார். பல கூட்டங்களில் அவர் மேற்கோள் காட்டிக்கூட அந்த ஆங்கிலக் கவிதையைப் பற்றிப் பேசியிருக்கிறார்.

'The woods are lovely, dark and deep,
But I have promises to keep,
Miles to go before I sleep
And miles to go before I sleep'

என்பதுதான் அந்த ஆங்கிலக் கவிதையினுடைய வரியாகும். இலட்சியப் பயணத்தினிடையே, பாதையிலே, தோப்புகளும், சோலைகளும் அழகாக இருக்கலாம். ஆனால், கவனத்தையும், கருத்தையும் அது ஈர்க்கலாம். ஆனால், செல்ல வேண்டிய தூரம், அடைய வேண்டிய இலக்கு தொலைவில் இருக்கிறது. நிறைவேற்ற வேண்டிய கடமைகளை, ஆற்ற வேண்டிய பொறுப்புகளை மனதிலேகொண்டு, உங்களது அனைவரது ஒத்துழைப்போடு இந்தப் பயணத்தை நாங்கள் நிச்சயமாகத் தொடர்வோம் (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) என்று உறுதி கூறுகிற அதே நேரத்தில், ஊரக வளர்ச்சி, நகராட்சி நிருவாகத் துறைகளின் சார்பில் சில அறிவிப்புகள்@ புத்தகமாக அச்சிடப்பட்டு உங்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. இருந்தாலும், சிலவற்றை அமைச்சராக இருக்கக்கூடிய நான் சொன்னால்தான் அது சிறப்பாக இருக்கும் என்பதை மனதில்கொண்டு, சில அறிவிப்புகளை மாத்திரம் நான் இங்கே உங்களிடத்திலே படித்துக்காட்ட விரும்புகிறேன்.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையினுடைய அறிவிப்புகள்: ஊரகக் கட்டமைப்புத் திட்டம்; 1-4-2008 முதல் தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்படுவதால், சம்பூர்ண கிராம வேலைவாய்ப்புத் திட்டம் மத்திய அரசால் நிறுத்தப்பட்டுள்ளது. இதன் விளைவாக, சிறு கட்டடங்கள், சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் போன்ற அடிப்படை

@ 927 முதல் 948 வரையிலான பக்கங்களில் இணைப்புகள் I மற்றும் II ஆக அச்சிடப்பட்டுள்ளன.

வசதிகளை ஏற்படுத்துவதற்குத் தற்போது சரியான திட்டம் ஏதுமில்லை. மேலும், தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்மூலமாக உருவாக்கப்பட்ட சொத்துக்களை நிலைப்படுத்துவதும், அவற்றை நீடித்து நிலைத்திருக்கக்கூடியதாக மாற்றுவதும் அவசியமாகிறது. இது குறித்துப் பெறப்பட்ட பல்வேறு கோரிக்கைகளை மனதிலேகொண்டு, ஊரகக் கட்டமைப்புத் திட்டம் என்ற ஒரு புதிய திட்டத்தினை 2008-2009 ஆம் ஆண்டு முதல் அறிமுகப்படுத்தி, அதற்காக இந்த ஆண்டு 350 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

தகுதிபெற்ற அனைத்து மகளிர் திட்ட சுய உதவிக் குழுக்களுக்கும் சுழல் நிதி; ஏற்கெனவே நான் என்னுடைய உரையிலே இதைக் குறிப்பிட்டிருக்கிறேன்.

சட்டமன்றத் தொகுதி மறுவரையறைக்கு இணங்க ஊராட்சி ஒன்றிய எல்லைகளைச் சீரமைத்தல்; சட்டமன்ற உறுப்பினர்கள் இதைக் கவனிக்க வேண்டும். உங்களுக்காகவே இந்த அறிவிப்பு வெளியிடப்படுகிறது. அண்மையில் சட்டமன்றத் தொகுதிகளை மறுவரையறை செய்வதற்கு முன்பு, ஒரு சட்டமன்றத் தொகுதி, ஓரிரு ஊராட்சி ஒன்றியங்களை முழுமையாகக் கொண்டதாகவும், ஓரிரு ஊராட்சி ஒன்றியங்களைப் பகுதியாகக் கொண்டதாகவும் இருந்தது. சட்டமன்றத் தொகுதிகளை மறுவரையறை செய்யும்போது, ஊராட்சி ஒன்றியங்களையோ, ஊராட்சிகளையோ அடிப்படையாகக் கொள்ளாமல் வருவாய் கிராமங்கள், வருவாய் வட்டங்கள் மட்டுமே கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டன. அதனால், தற்போதுள்ள சட்டமன்றத் தொகுதியில் சுமார் நான்கு அல்லது அதற்கு மேற்பட்ட ஊராட்சி ஒன்றியங்களின் எல்லைகள் பகுதியாக இடம் பெற்றுள்ளன எனத் தெரிய வந்துள்ளது. இதனால், ஒரு சட்டமன்ற உறுப்பினர், தன்னுடைய தொகுதியில் உள்ள பல ஊராட்சி ஒன்றியங்களோடு தொடர்புகொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அதுபோல, ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்களும் இரண்டு, மூன்று சட்டமன்ற உறுப்பினர்களுடன் தொடர்புகொள்ளவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. ஊராட்சி ஒன்றிய எல்லைகளை சட்டமன்றத் தொகுதியின் எல்லைக்கு ஏற்றவாறு சீரமைக்க வேண்டுமெனப் பல சட்டமன்ற உறுப்பினர்களும் கோரிக்கைகள் வைத்துள்ளனர்.

பிற்பகல் 1-10

மேலும், ஊராட்சி ஒன்றியங்களுக்கிடையே ஊராட்சிகளின் எண்ணிக்கை, மக்கள் தொகை, பரப்பளவு ஆகியவற்றில் பெரிய அளவில் வேறுபாடுகள் உள்ளன. கடந்த 15 ஆண்டுகளாக ஊராட்சி



ஒன்றிய எல்லைகள் மிகக் குறைந்த அளவில்தான் மாற்றி அமைக்கப்பட்டுள்ளன. இந்த நிலையில், ஊராட்சி ஒன்றிய எல்லைகளைச் சீரமைப்பதற்கான சரியான தருணம் தற்போது ஏற்பட்டுள்ளது.

ஏற்கெனவே, ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் நிலை உயர்த்துதல், நிலை குறைத்தல், ஒன்றோடொன்று இணைத்தல், பிரித்தல் ஆகியவை குறித்து அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி மாவட்ட ஆட்சித் தலைவர்களும் கருத்துக் கேட்புக் கூட்டங்களை நடத்தி, ஆய்வு செய்து கருத்துருக்களை தயார் செய்து வருகின்றனர். அத்துடன், ஒரு சட்டமன்றத் தொகுதிக்குள் உள்ள ஊராட்சி ஒன்றியங்களின் எல்லைகளும் பகுதியாக இல்லாமல், முழுமையாக அமையும் வகையில் மறுவரையறை செய்ய மாவட்ட ஆட்சியர்மூலம் நடவடிக்கை எடுக்கப்படும். ஊராட்சி ஒன்றிய எல்லைகள் சீரமைக்கப்பட்டாலும், தற்போதுள்ள உள்ளாட்சிப் பிரதிநிதிகளின் பதவிக் காலம் எந்தவிதத்திலும் பாதிக்கப்படமாட்டாது. 2011 ஆம் ஆண்டு உள்ளாட்சித் தேர்தலின்போது இது அமல்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

பெரியார் நினைவு சமத்துவபுரத் திட்டம். தமிழகத்தில் சமூக நீதியை மேம்படுத்தவும், சாதி, சமய பேதமற்ற சமத்துவ சமுதாயத்தை உருவாக்கவும், மக்கள் ஒற்றுமையுடனும், சகோதரத்துவத்துடனும் வாழ வேண்டுமென்ற தந்தை பெரியார் அவர்களின் எண்ணத்திற்கேற்ப மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சமத்துவபுரம் என்ற சீரிய திட்டம் 1997 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்டு, 145 சமத்துவபுரங்கள் அமைக்கப்பட்டன. தற்போது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மேலும் 95 சமத்துவபுரங்கள் அமைக்கப்படுமென அறிவித்துள்ளார்கள். அதன்படி, முதற்கட்டமாக 2008-2009 ஆம் ஆண்டில் 29 புதிய சமத்துவபுரங்கள் அமைக்கப்படும். இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்குத் தேவையான 75 கோடி ரூபாய் நிதியினை அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம். 2006-2007 மற்றும் 2007-2008 ஆம் ஆண்டுகளில் சீரிய முறையில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டதைப்போல, 2008-2009 ஆம் ஆண்டிலும் 2,521 கிராம ஊராட்சிகளில் 509 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்படும்.

நபார்டு வங்கி நிதியுதவியோடு சாலைகள் மேம்பாடு, இதை ஏற்கெனவே என்னுடைய உரையில் குறிப்பிட்டிருக்கிறேன்.

அடுத்து, பன்னிரண்டாவது நிதி ஆணைய மானியத்தில் தார்ச் சாலைப் பணிகள். 2006-2007 மற்றும் 2007-2008 ஆம் ஆண்டுகளில் பன்னிரண்டாவது நிதி ஆணைய மானியத்தில் பழுதடைந்த ஊரகத் தார்ச் சாலைகளை சீரமைத்ததுபோலவே, இந்த ஆண்டும் 103 கோடியே 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பழுதடைந்த தார்ச் சாலைகள் மேம்படுத்தப்படும்.

ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் சீரமைப்புத் திட்டம். ஏற்கெனவே இதுபற்றி நான் என்னுடைய உரையிலே குறிப்பிட்டிருக்கின்றேன்.

ஊராட்சி ஒன்றியங்களுக்குச் சமச்சீர் நிதிப் பகிர்வு. மக்கள் தொகை அடிப்படையில் மட்டுமே மாநில நிதி ஆணைய மானியம் பங்கீடு செய்யும்போது, பல கிராம ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்குப் போதுமான நிதி கிடைப்பதில்லை. இந்நிலையை மாற்ற, கடந்த ஆண்டிலிருந்து ஒவ்வொரு கிராம ஊராட்சிக்கும் குறைந்தபட்சமாக ஆண்டொன்றுக்கு 3 இலட்சம் ரூபாய் வழங்கப்படுவதுபோல, இந்த நிதி ஆண்டிலிருந்து ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஆண்டிற்கு குறைந்தபட்சம் 30 இலட்சம் ரூபாய் வழங்கப்படும். மீதமுள்ள நிதியினை மக்கள் தொகை அடிப்படையில் அனைத்து ஊராட்சி ஒன்றியங்களுக்கும் பிரித்து வழங்கப்படும்.

ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களுக்குப் புதிய கட்டடங்கள் கட்டுதல். பல ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளன. 2008-2009 ஆம் ஆண்டில் முதற்கட்டமாக 50 ஊராட்சி ஒன்றியங்களுக்கு புதிய அலுவலகக் கட்டடங்கள் கட்டுவதற்காக அரசு 50 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யும். இத்திட்டம் படிப்படியாக விரிவுபடுத்தப்படும்.

ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்களுக்குத் தனி வாகனம். ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவருக்கென தனியாக ஒரு வாகனம் வழங்கவேண்டும் என்று வரப்பெற்ற கோரிக்கையை அரசு ஏற்று, 385 ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்களுக்கும் புதிய வாகனங்கள் இந்த ஆண்டு வழங்கப்படும். இதற்கான 385 ஓட்டுநர் பணியிடங்கள் புதிதாகத் தோற்றுவிக்கப்படும். (குறுக்கீடு)

25 ஆயிரம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புடன் கூடிய தொழிற்பயிற்சி. வேலை வாய்ப்பற்ற இளைஞர்களின் வாழ்வில் ஒளியேற்ற, தொழிற்பயிற்சி வழங்கப்படும் என்று இவ்வரசு அறிவித்ததன் அடிப்படையில், கடந்த இரண்டு ஆண்டுகளில் 11,485 இளைஞர்களுக்கு



சிறந்த தொழில் நிறுவனங்கள்மூலம் தொழிற்பயிற்சி வழங்கப்பட்டு, வேலைவாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 2008-2009 ஆம் ஆண்டில் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டு, 25 ஆயிரம் இளைஞர்களுக்குத் தொழிற்பயிற்சி வழங்க 20 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படும்.

25 ஆயிரம் புதிய சுய உதவிக் குழுக்கள் இந்த ஆண்டு அமைக்கப்படவிருக்கின்றது. சுய உதவிக் குழுக்களுக்கு சட்டரீதியான அங்கீகாரம் வழங்கப்படவிருக்கின்றது.

பிற்பகல் 1-15

அடுத்து பணியமைப்பு. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் உள்ள விரிவாக்க அலுவலர் நிலையிலான பணியிடங்களை துணை வட்டார வளர்ச்சி அலுவலர் பணி நிலைக்கு உயர்த்திட வேண்டும் என்று பல ஆண்டுகளாக அரசுக்குத் தொடர்ந்து கோரிக்கை அளிக்கப்பட்டுள்ளது. இந்த நீண்ட நாள் கோரிக்கையை அரசு கனிவுடன் பரிசீலித்தது. இத்துறையின் விரிவாக்க அலுவலர் பணியிடங்களை துணை வட்டார வளர்ச்சி அலுவலர் பணியிடங்களாக நிலை உயர்த்திட அரசு முடிவு செய்துள்ளது.

ஊராட்சிகளில் பணிபுரியும் மக்கள் நலப் பணியாளர்கள், தற்போது ரூபாய் 950 மதிப்பூதியமாகவும், ரூபாய் 50 பயணப்படியாகவும், மொத்தம் மாதம் ஒன்றுக்கு ரூபாய் 1,000 பெற்று வருகிறார்கள். இவர்கள் தங்கள் ஊதியத்தை உயர்த்தி வழங்கவேண்டுமென்று அரசுக்குத் தொடர்ந்து கோரிக்கை விடுத்துள்ளனர். இக்கோரிக்கையின்மீது மைய அரசின் ஆறாவது சம்பளக் குழுவின் பரிந்துரைகளின் பேரில், மத்திய அரசு ஆணைகள் வெளியிட்டபின், மாநில அரசு அலுவலர்களுக்கு அவற்றை நடைமுறைப்படுத்த அமைக்கப்படும் அலுவலர் குழுவிலே பரிந்துரை பெற்று, அதன் அடிப்படையிலே உரிய ஆணைகள் வெளியிடப்படும்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சி. ஞானசேகரன், திரு. சி. கோவிந்தசாமி, திரு. பா. செந்தமிழ்ச்செல்வன், திரு. சு. குணசேகரன் ஆகியவர்களெல்லாம் நேற்றைக்கு இதைப்பற்றி வலியுறுத்திப் பேசியிருக்கிறார்கள். அதற்காக இங்கே ஒரு செய்தியைச் சொல்ல விரும்புகிறேன்.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் உள்ள பதிவறை எழுத்தர், அலுவலக உதவியாளர், இரவுக் காவலர் மற்றும் இதற்கு இணையான பதவிகளில் 50 சதவீத காலிப் பணியிடங்களை தகுதியுள்ள

மக்கள் நலப் பணியாளர்களைக் கொண்டு நிரப்ப நிச்சயமாக அரசு பரிசீலிக்கும். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் வளர்ச்சிப் பணிகள் தரமாக அமைப்பதற்காக, 12 ஆண்டுகளாகத் தீர்க்கப்படாமல் இருந்த பிரச்சினையைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. புஷ்பராஜ் போன்ற பல்வேறு சட்டமன்ற உறுப்பினர்கள் இங்கே குறிப்பிட்டுச் சொன்னார்கள். அதற்காக ஒரு அறிவிப்பு: ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் வளர்ச்சிப் பணிகள் தரமாகவும், விரைவாகவும் செயல்படுத்தப்படுவதை உறுதி செய்திட ஏதுவாக கீழ்க்கண்ட பல்வேறு நிலைகளில் 2,643 புதிய பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டு விரைவில் நிரப்பப்படும்.

| | |
|---|---|
| உதவி செயற்பொறியாளர்கள் | 32 பேர் |
| வட்டார வளர்ச்சி அலுவலர் நிலையிலே கண்காணிப்பாளர்கள் | 30 பேர் |
| உதவிப் பொறியாளர்கள் | 212 பேர் |
| துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் | 385 பேர் |
| உதவியாளர்கள் | 415 பேர் |
| பணி மேற்பார்வையாளர்கள் | 673 பேர் |
| இளநிலை வரைவு அலுவலர்கள் | 32 பேர் |
| ஓட்டுநர்கள் | 32 பேர் |
| அலுவலக உதவியாளர்கள் | 32 பேர் |
| கணினி உதவியாளர்கள் | 800 பேர் |

திட்டப் பணிகளை ஆய்வு செய்து, விரைவாகவும், தரமாகவும் நிறைவேற்றுவதற்கு ஏதுவாக, உதவி இயக்குநர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் உதவிப் பொறியாளர்களுக்கு 11 கோடியே 75 இலட்சம் ரூபாய் செலவில் 250 புதிய வாகனங்கள் வழங்கப்படும்.

அடுத்து, நகராட்சி நிருவாகத்தினுடைய அறிவிப்புகள். ஊராட்சிகளிலும், பேரூராட்சிகளிலும் தற்போது சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வரும் "அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்" போன்ற ஒரு திட்டம் நிதிநிலையில் நலிந்த 30 நகராட்சிகளில், ஒவ்வொரு நகராட்சியிலும் 75 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் என்ற பெயரில் செயல்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)



அனைத்து நகராட்சிகளிலும் பாதாளச் சாக்கடைத் திட்டத்தைச் செயல்படுத்தும் திட்டத்தின்கீழ், வரும் ஆண்டில் ஓசூர், அறந்தாங்கி, உடுமலைப்பேட்டை, அருப்புக்கோட்டை, போடிநாயக்கனூர், சிதம்பரம், பட்டுக்கோட்டை, ஆம்பூர், பேரணாம்பட்டு, மதுராந்தகம், சாத்தூர் மற்றும் இராமேஸ்வரம் ஆகிய பன்னிரண்டு நகராட்சிகளில் பாதாளச் சாக்கடைத் திட்டங்கள் 380 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும். கீழக்கரை நகராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டம் 22 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடப்பு நிதியாண்டில் செயல்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் 145 கோடி ரூபாய் மதிப்பீட்டில், குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின் ஒரு பகுதியாக, திருவரங்கம் பகுதியில் உள்ள ஆறு வார்டுகளில் 24 மணி நேர குடிநீர் விநியோக முறை சோதனை முறையில் அறிமுகப்படுத்தப்படும். இம்முறை, படிப்படியாக இதர வார்டுகளுக்கும் விரிவுபடுத்தப்படும்.

ராசிபுரம், வெள்ளக்கோயில், கடையநல்லூர் மற்றும் மேட்டூர் நகராட்சிகளில் குடிநீர் மேம்பாட்டுத் திட்டங்கள் 66 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

மாநகராட்சி மற்றும் நகராட்சி கல்வி நிதியைப் பயன்படுத்தி, மாநகராட்சி மற்றும் நகராட்சிப் பள்ளிகளில் கட்டமைப்பு வசதிகள் சுமார் 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும். சத்துணவுக் கூடங்களை மேம்படுத்துதல், ஆய்வுக் கூடங்களை அமைத்தல், வகுப்பறைகள் கட்டுதல் மற்றும் விளையாட்டு மைதானங்கள் அமைத்தல் போன்ற பணிகள் இத்திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படும்.

பழைய மற்றும் போதுமான வசதியற்ற கட்டடங்களில் இயங்கி வரும் 45 நகராட்சி அலுவலகங்களுக்கு அனைத்து வசதிகளுடன்கூடிய புதிய நகராட்சி அலுவலகக் கட்டடங்கள் 23 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே கட்டப்படும். நேற்றைக்கு நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள், சிவகங்கையிலே புதிய கட்டடம் கட்டவேண்டுமென்று கோரிக்கை வைத்தார். 45 என்பதை 46 ஆகத் திருத்திக்கொள்ளுங்கள். சிவகங்கைக்கும் உண்டு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருப்பூர் மாநகராட்சியில் உள்ள புதிதாக வான்முறைப்படுத்தப்பட்ட மனைப் பிரிவுப் பகுதிகளில் 40 கோடி ரூபாய் மதிப்பீட்டில்

மழை நீர் வடிகால் வசதிகள் ஏற்படுத்தப்படும். மேலும், இம்மாநகராட்சியுடன் இணைக்கப்படவுள்ள பகுதிகளுக்கு பாதாளச் சாக்கடைத் திட்டத்தை விரிவுபடுத்த ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

தூத்துக்குடி நகரில் அமைந்துள்ள "பக்கில்" ஓடையை மேம்படுத்தும் பணி 35 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பல்வேறு கட்டங்களாக எடுத்துச் செயல்படுத்தப்படும்.

குமாரபாளையம் நகராட்சியில் அமைந்துள்ள கோம்புபள்ளம் திறந்தவெளி ஓடை ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

திருநெல்வேலி மாநகராட்சியில், குடிநீர் வினியோகம் போதுமான அளவு இல்லாத தச்சநல்லூர் மற்றும் மேலப்பாளையம் மண்டலங்களில் 6 வார்டுகளில், குடிநீர் வினியோகம் செய்ய ஏதுவாக, அபிவிருத்திப் பணிகள் சுமார் 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும். மேலும், இம்மாநகராட்சியில் அமைந்துள்ள மேலப்பாளையம் பகுதியில் குடிநீர் வசதி, வடிகால் வசதி, தெரு விளக்கு போன்ற அடிப்படை வசதிகளை மேம்படுத்த ஒருங்கிணைந்த திட்டம் தயாரித்து செயல்படுத்தப்படும்.

மூன்றாம் நிலை நகராட்சி மன்றத் தலைவர்களின் செயல்திறனை அதிகரிக்க, அவர்கள் பயன்படுத்தும் செல்பேசிக்கான கட்டணத்தை மாதம் ஒன்றுக்கு ரூ.500-க்கு மிகாமல் அந்தந்த நகராட்சிகளே செலுத்தும்.

பிற்பகல் 1-20

கடந்த இரண்டு ஆண்டுகளில் நகராட்சிகளில் பல்வேறு கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. இப்பணிகளில் இந்த ஆண்டு முடிவடையும் மற்றும் தொடங்கப்படவுள்ள பேருந்து நிலையக் கட்டடங்களுக்கும், நகராட்சி அலுவலகக் கட்டடங்களுக்கும் பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு விழா நினைவாக 'பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு விழா பேருந்து நிலையம்', (மேசையைத் தட்டும் ஒலி) 'பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு விழா அலுவலகக் கட்டடம்' என்று பெயரிடப்படும்.

இன்று வேகமாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றாக தூத்துக்குடி நகரம் விளங்குகிறது. இதைத்தான் நான் மறந்துவிட்டேன் என்று நம்முடைய முதல்வர் அவர்கள்கூட எனக்கு நினைவுபடுத்தினார்கள். இன்று மிக வேகமாக வளர்ந்து வரக்கூடிய நகரங்களில் ஒன்றாக



தூத்துக்குடி நகரம் விளங்குகிறது. பெருகி வரும் தொழிற்சாலைகளாலும், வளர்ந்து வரும் துறைமுகத்தாலும், அமையவுள்ள சேது சமுத்திரக் கால்வாய் மற்றும் பல்வேறு தொழிற்சாலைகளாலும், இந்நகரிலும், அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலுமுள்ள கட்டமைப்பு வசதிகளை வெகுவாக மேம்படுத்த வேண்டியிருக்கிறது. ஆகவே, தூத்துக்குடி நகராட்சி மாநகராட்சியாகத் தரம் உயர்த்தப்படும் (மேசையைத் தட்டும் ஒலி) இதை தென்காசி சட்டமன்ற உறுப்பினராக இருந்தாலும், திரு. கருப்பசாமி பாண்டியன் அவர்கள் நேற்று இந்தக் கோரிக்கையை வைத்தார்கள். அது மட்டுமல்ல, அந்தத் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினராக இருக்கக்கூடிய அந்தத் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினராக இருக்கக்கூடிய மாண்புமிகு திருமதி கால்நடைத் துறை அமைச்சராக இருக்கக்கூடிய மாண்புமிகு திருமதி கீதா ஜீவன் அவர்கள் பல முறை என்னிடத்திலே இதைப் பற்றி வலியுறுத்தி, முதல்வரிடத்திலே போய் இந்தக் கோரிக்கையை எடுத்து வைத்து, இன்றைக்கு அவர்கள்மூலமாக இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு அரசு முன் வந்திருக்கிறது என்பதையும் நான் இங்கே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து பேரூராட்சிகள். பேரூராட்சிகள் அமைந்துள்ள சாலைகளை மேம்படுத்தும்விதமாக 380 பேரூராட்சிகளில் சுமார் 800 கிலோ மீட்டர் சாலைகள் 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நபார்டு வங்கியின் நிதியுதவித் திட்டத்தின்கீழ் மேம்படுத்தப்படும்.

உரிய அலுவலகக் கட்டடங்கள் இல்லாத 44 பேரூராட்சிகளுக்குப் புதிய அலுவலகக் கட்டடங்கள் 6 கோடியே 40 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும். இக்கட்டடங்களுக்குப் பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு விழா நினைவாக 'பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு விழா அலுவலகக் கட்டடம்' என்று பெயரிடப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

பேரூராட்சியிலுள்ள குடிசைப் பகுதிகளில் வாழும் ஏழை மக்களுக்கு 3,000 வீடுகள் 24 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த வீட்டு வசதி மற்றும் குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஒவ்வொரு வீட்டிற்கும் 80 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டித் தரப்படும். ஒவ்வொரு வீட்டிற்கும் மானியம் மட்டும் 72 ஆயிரம் ரூபாய் ஆகும்.

அடுத்து நகராட்சிகளில், பேரூராட்சிகளில் பணியிடங்களைத் தோற்றுவிப்பதற்காக இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. செந்தமிழ்ச்செல்வன், திரு. ஞானசேகரன் அவர்கள், திரு. கோவிந்தசாமி அவர்கள்கூட இங்கே வலியுறுத்திப் பேசியிருக்கிறார்கள்.

நகராட்சிகளில், பேரூராட்சிகளில் பணியிடங்களைத் தோற்றுவிக்க நிர்ணயிக்கப்பட்டிருக்கக்கூடிய வரையறையினை ஆய்வு செய்து திருத்தி அமைப்பது குறித்துப் பரிந்துரை செய்ய அரசால் அமைக்கப்பட்டுள்ள குழுவின் அறிக்கையின் அடிப்படையில் நகராட்சிகளில், பேரூராட்சிகளில் உள்ள பணியிடங்கள் சீரமைக்கப்படும்.

பேரூராட்சி மன்றத் தலைவர்களின் செயல் திறனை அதிகரிக்க, அவர்கள் பயன்படுத்தக்கூடிய செல்பேசிக்கான கட்டணத்தை மாதம் ஒன்றுக்கு ரூபாய் 500-க்கு மிகாமல் அந்தந்தப் பேரூராட்சிகளே செலுத்தும்.

சென்னை மாநகராட்சி, ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின்கீழ் சென்னை மாநகரில் உள்ள 236 குடிசைப் பகுதிகளில் சிமென்ட் கான்கிரீட் சாலைகள், தெரு விளக்குகள், மழை நீர் கால்வாய்கள், பொதுக் கழிப்பிடங்கள், சமுதாயக் கூடங்கள், விளையாட்டு மைதானங்கள் மற்றும் பூங்கா மேம்பாட்டுப் பணிகள் 127 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறைவேற்றப்படும்.

சென்னை மாநகராட்சியில் தற்போது தினக்கூலி அடிப்படையிலே பணிபுரியும் 2,025 துப்புரவுப் பணியாளர்கள் நிரந்தரப் பணியிடங்களில் பணியமர்த்தப்படுவார்கள்.

சென்னைக் குடிநீர் வாரியத்தின் கழிவு நீர் சுத்திகரிப்புத் திறனை மேலும் அதிகரிக்கும் விதமாக நாளொன்றுக்கு 54 மில்லியன் லிட்டர் திறன்கொண்ட கழிவு நீரை சுத்திகரிக்கும் நிலையம் ஒன்று நெசப்பாக்கத்தில் 51 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

பத்மநாப நகர், கலைஞர் கருணாநிதி நகர், கிரீம்ஸ் சாலை, ஜவஹர் நகர், மேல்பட்டடை, நம்மாழ்வார்பேட்டை, வியாசர்பாடி, புதுப்பேட்டை, அயனாவரம், வில்லிவாக்கம், திருவான்மியூர், பெசன்ட் நகர், சித்தம்மாள் காலனி மற்றும் பட்டினப்பாக்கம் ஆகிய பகுதிகளில் உள்ள கழிவு நீர்க் கட்டமைப்பு 22 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

சென்னையில் உள்ள பொருளாதார நிலையில் பின்தங்கிய பிரிவினர்களுக்கு குடிநீர் வீட்டு இணைப்பை எளிதாகப் பெறுவதை ஊக்கப்படுத்தும் பொருட்டு, இந்தக் கட்டணம் 500 சதுர அடிக்கும் குறைவாக உள்ள வீடுகளுக்கு குடிநீர் இணைப்புக் கட்டணம் தற்போது ரூ.5,000-திலிருந்து 100 ரூபாயாகக் குறைக்கப்படும். மேலும், தமிழ்நாடு



குடிசைப் பகுதி மாற்று வாரியக் குடியிருப்புகள் மற்றும் இதர குடிசைப் பகுதிகளில் கைப்பம்புகள்மூலமாகக் குடிநீர் பெறும் நிலைமையை மாற்ற, குடிநீர்க் குழாய்களில் அதிக அழுத்தத்துடன் குடிநீர் விநியோகம் செய்ய விசை இறைப்பான்கள் மற்றும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைக்கப்படும்.

சென்னைப் பெருநகருக்கு 2021 ஆம் ஆண்டில் குடிநீர்த் தேவைப் பற்றாக்குறை நாளொன்றுக்கு சுமார் 400 மில்லியன் லிட்டராக இருக்கும் என்றும், இதுவே 2026 ஆம் ஆண்டில் சுமார் 650 மில்லியன் லிட்டராக இருக்கும் என்றும் கணக்கிடப்பட்டிருக்கிறது. ஆகவே, சென்னைக்குப் புதிய நீர் ஆதாரங்களைக் கண்டறிவது அவசியமாகிறது. சென்னைக்குப் புதிய நீர் ஆதாரம் கண்டறியப்பட குறைந்தது 15 டி.எம்.சி அளவிற்குக் குடிநீர் ஆதாரம் கண்டறியப்பட வேண்டியிருக்கிறது. எனவே, தொலைநோக்குப் பார்வையுடன், எதிர்பார்க்கப்படும் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய ஏதுவாக புதிய குடிநீர் ஆதாரங்களைக் கண்டறிந்து, திட்டத்தைச் செயல்படுத்தத் தொழில்நுட்ப, பொருளாதார சாத்தியக்கூறுகளை ஆய்வு செய்ய ஒரு கலந்தாலோசகரை நியமிக்க அரசு முடிவெடுத்திருக்கிறது.

ஊரகப் பகுதிகளில் அமைந்துள்ள 10,000 அங்கன்வாடி மையங்களுக்கு 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் குடிநீர் வசதி அளிக்கப்படும்.

4,000 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் குடியிருப்புகளுக்கு 120 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுடன்கூடிய குடிநீர் வசதி அளிக்கப்படும்.

ஊரகப் பகுதிகளில் மிகவும் பழுதடைந்து புனரமைப்புச் செய்ய இயலாத 700 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுக்குப் பதிலாக புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் 20 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே அமைக்கப்படும்.

குடிநீர் ஆதாரங்களின் நிலைத்தத் தன்மையை அதிகரிக்கும்வண்ணம் இராமநாதபுரம் மாவட்டத்தில் இருக்கக்கூடிய 314 ஊரணிகளும், சிவகங்கை மாவட்டத்தில் உள்ள 173 ஊரணிகளும் புனரமைப்பு செய்யப்படும். இங்கே நம்முடைய திரு. இராமசாமி அவர்கள் அந்தக் கோரிக்கையை எடுத்து வைத்தார்கள். சிவகங்கை மாவட்டத்திலே உள்ள 173 ஊரணிகளும், மொத்தம் 487 ஊரணிகள், 25 கோடியே 47 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் புனரமைப்பு செய்யப்படும்.

பிற்பகல் 1-25

ஏற்கெனவே ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, 2008-2009 ஆம் ஆண்டு செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படக்கூடிய சில முக்கியத் திட்டங்கள்.

சேலம் மாவட்டத்தில், நரசிங்கபுரம் நகராட்சி, 18 பேரூராட்சிகள் மற்றும் 7 ஊராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்த 921 குடியிருப்புகளுக்கு 176 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 8 இலட்சம் மக்கள் பயன்பெறக்கூடிய வகையிலே கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

அதேபோல், மதுரை மாவட்டத்தில் மேலூர், திருமங்கலம், அவனியாபுரம் நகராட்சிகள், எ.வெள்ளாளப்பட்டி, பாலை, விளாங்குடி, திருநகர் பேரூராட்சிகள் மற்றும் கொட்டாம்பட்டி, மேலூர், மதுரை மேற்கு, மதுரை கிழக்கு ஒன்றியங்களைச் சேர்ந்த 142 குடியிருப்புகளுக்கு 203 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 3 இலட்சத்து 5 ஆயிரம் மக்கள் பயன்பெறக்கூடிய வகையிலே கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

அரியலூர் மாவட்டத்தில், ஜெயங்கொண்டம் ஒன்றியத்தைச் சேர்ந்த 281 குடியிருப்புகளுக்கு 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 81 ஆயிரம் மக்கள் பயன்பெறக்கூடிய வகையிலே கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

ஈரோடு மாவட்டத்தில் வெள்ளக்கோயில் நகராட்சி மற்றும் காங்கேயம் பேரூராட்சிக்கு—நம்முடைய விடியல் சேகர் அவர்கள் தொடர்ந்து இதை வலியுறுத்திக்கொண்டிருந்தார்கள்—ஈரோடு மாவட்டத்தில் வெள்ளக்கோயில் நகராட்சி மற்றும் காங்கேயம் பேரூராட்சிக்கு 33 கோடியே 14 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 70 ஆயிரம் மக்கள் பயன்பெறக்கூடிய வகையிலே கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் அழகியபாண்டிபுரம், ஆரல்வாய்மொழி, பூதபாண்டி, தாழக்குடி, அழகப்பாபுரம், தேரூர், கொட்டாரம், மைலாடி, மருங்கூர் பேரூராட்சிகள் மற்றும் தோவாளை, அகஸ்தீஸ்வரம் ஒன்றியங்களைச் சேர்ந்த 212 குடியிருப்புகளுக்கு 30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 1 இலட்சத்து 80 ஆயிரம் மக்கள் பயன்பெறக்கூடிய வகையிலே கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

தஞ்சாவூர் மாவட்டத்திலே, தஞ்சாவூர், பூதலூர் மற்றும் திருவையாறு ஒன்றியங்களைச் சேர்ந்த 229 குடியிருப்புகளுக்கு 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 1 இலட்சத்து 18 ஆயிரம் மக்கள் பயன்பெறக்கூடிய வகையிலே கூட்டுக் குடிநீர்த் திட்டம்.



தூத்துக்குடி மாவட்டத்திலே, கோவில்பட்டி, கயத்தார், ஒட்டப்பிடாரம் ஒன்றியங்களைச் சார்ந்த 117 ஊரகக் குடியிருப்புகளுக்கு 20 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 70 ஆயிரம் மக்கள் பயன்பெறக்கூடிய வகையிலே கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

வேலூர் மாவட்டம்—ஒகேனக்கல், ஒகேனக்கல் என்று இங்கே உரக்கக் குரல் கொடுத்தார். அது எந்தச் சூழ்நிலையில் இருக்கிறது என்பது அவருக்கும் தெரியும். அதனால் இப்போது அறிவிப்பு. வேலூர் மாவட்டத்தில் வேலூர் மற்றும் 12 நகராட்சிகள், 11 பேரூராட்சிகளுக்கு, மேட்டூர் அருகில் காவிரியாற்றை நீராதாரமாகக் கொண்டு 952 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 15 இலட்சம் மக்கள் பயன்பெறக்கூடிய வகையிலே கூட்டுக் குடிநீர்த் திட்டம். நடப்பு நிதியாண்டில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படக்கூடிய திட்டங்கள் என்பதை மறந்துவிடக்கூடாது.

விருதுநகர் மாவட்டத்தில் 7 பேரூராட்சிகள் மற்றும் 11 ஒன்றியங்களைச் சார்ந்த 1,457 குடியிருப்புகளுக்கு தாமிரபரணி ஆற்றை நீராதாரமாகக் கொண்டு 250 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 10 இலட்சத்து 20 ஆயிரம் மக்கள் பயன்பெறக்கூடிய வகையியே கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

புதுக்கோட்டை மாவட்டத்தில், புதுக்கோட்டை, விராலிமலை, குன்னாண்டார்கோவில், அன்னவாசல், பொன்னமராவதி, கந்தர்வக்கோட்டை மற்றும் திருமயம் ஒன்றியங்களைச் சார்ந்த 2,088 குடியிருப்புகளுக்கு 125 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 5 இலட்சத்து 90 ஆயிரம் மக்கள் பயன்பெறக்கூடிய வகையிலே கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

கோயம்புத்தூர் மாவட்டத்தில் வீரகோளம், பேரூர், புல்லுவாபட்டி பேரூராட்சிகளுக்கு 44 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 2 இலட்சம் மக்கள் பயன்பெறக்கூடிய வகையிலே குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்.

இங்கே சட்டமன்ற உறுப்பினர்கள் ஆற்றிய உரைகளுக்கு எல்லாம் பதில் இருக்கிறது. நீங்கள் அனுமதித்தால் படிக்கிறேன், இல்லையென்றால் அந்தப் பதில்கள் எல்லாம் உங்களுக்கு கடிதம்மூலமாக அனுப்பி வைக்கப்படும்.

கருங்கல் தேர்வுநிலைப் பேரூராட்சி, மாடல் நகரத் திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ளப்படுமா என்று நம்முடைய உறுப்பினர் திரு. ரங்கராஜன் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் உருவாக்கப்படுவதற்கு

முன்பு இதை எடுத்துக்கொண்டிருந்தோம். ஆனால், இப்போது அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் வந்துவிட்ட காரணத்தினால் இந்த நிலை இப்போது இல்லை என்பதை நம்முடைய உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, தொகுப்பு வீடுகளைப் பழுது நீக்குவதற்கான தொகையை அரசு அதிகரிக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தார்கள். 10 ஆண்டு காலம் நிறைவு பெற்ற தொகுப்பு வீடுகளைப் பழுது நீக்கத் தற்போது அனுமதிக்கப்பட்டுள்ள தொகை ரூ.10,000. இந்த நிதி வரம்பினை உயர்த்துவதற்கு அரசு பரிசீலித்துக்கொண்டு இருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, பள்ளிகளுக்கு வழங்கப்படும் குடிநீருக்கு கட்டணமில்லாமல் இலவசமாக வழங்க வேண்டும் என்று சொன்னார்கள். ஊராட்சிப் பகுதியைப் பொறுத்தவரைக்கும், அது இலவசமாகத்தான் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. ஒருவேளை நகராட்சிப் பகுதியில், பேரூராட்சிப் பகுதியிலே அந்த நிலை இருந்தால் அதுவும் தவிர்க்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல், சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி மானியத்தைத் தொண்டு நிறுவனங்கள்மூலமாக வழங்கிக் கொண்டிருக்கிறார்கள், ஒன்றியம்மூலம் வழங்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தார்கள். ஒன்றியம்மூலமாகத்தான் வழங்க வேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. ஏதாவது இது குறித்து செய்தி இருந்தால், எங்களுக்குத் தகவல் தந்தால், அதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

அதேபோல, நம்முடைய தென்காசி சட்டமன்ற உறுப்பினர் திரு. கருப்பசாமி பாண்டியன் அவர்கள், குன்னூர் சட்டமன்ற உறுப்பினருக்காக இங்கே ஒரு கோரிக்கையை எடுத்து வைத்தார்கள். அதாவது, குன்னூர் நகராட்சி பேருந்து நிலையத்திற்கு அருகில் ஓரிடத்திலே பேருந்து நிலையத்தை விரிவாக்கம் செய்ய வேண்டும் என்று. அங்கே ஒரு தீயணைப்பு நிலையம் இருக்கிறது; அந்தத் துறையைச் சார்ந்த குடியிருப்பும் இருக்கிறது; அதை மாற்ற வேண்டும் என்ற ஒரு நிலையை ஏற்படுத்தி இருக்கிறோம். அந்தப் பணிகள் எல்லாம் இப்போது நடந்து கொண்டிருக்கின்றன. அது முடிந்ததற்குப் பிறகு நிச்சயம் அந்தப் பேருந்து நிலையத்தை விரிவாக்கம் செய்து தரப்படும்.



பிற்பகல் 1-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** திரு. ஞானசேகரன் அவர்கள், அனுமதியற்ற விளம்பரப் பலகைகளை அகற்றுவது பற்றி இங்கே பேசினார்கள். அது இப்போது என்ன நிலையில் இருக்கிறது? சில மாவட்டங்களில் சில பிரச்சினைகள் இருக்கின்றன. யார் அதை எடுப்பது? யாருக்கு அதிகாரம் என்று ஒரு கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். ஒவ்வொரு மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் உரிய வகையில் செய்தி அனுப்பப்பட்டிருக்கிறது. ஆட்சித் தலைவர்கள் அதற்குப் பொறுப்பு ஏற்று எடுக்க வேண்டுமென்று உத்தரவிடப்பட்டிருக்கிறது. அந்த வகையிலே, சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரைக்கும் 4,000-க்கும் அதிகமான விளம்பரப் பலகைகள் அப்புறப்படுத்தப்பட்டிருக்கின்றன. கோவை மாவட்டத்தில் இருந்து வந்த 1,207 விளம்பரப் பலகைகளில் 1,100 அப்புறப்படுத்தப்பட்டிருக்கின்றன. மதுரை மாவட்டத்தில் வைக்கப்பட்டிருந்த 840 விளம்பரப் பலகைகளில் 417 அப்புறப்படுத்தப்பட்டிருக்கின்றன. நெல்லை மாவட்டத்திலே 16-ம், வேலூர் மாவட்டத்திலே 268-ம், கரூர் மாவட்டத்தில் 65-ம் அப்புறப்படுத்தப்பட்டிருக்கின்றன. எனவே, தமிழகம் முழுவதும் பேரூராட்சிப் பகுதிகளில் இருந்த 2,978 விளம்பரப் பலகைகளிலே 2,936 விளம்பரப் பலகைகள் அப்புறப்படுத்தப்பட்டிருக்கின்றன. தொடர்ந்து அந்தப் பணிகள் நடந்துகொண்டிருக்கின்றன என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல், வேலூர் நகராட்சியிலே நாய்களுக்குக் கருத்தடை சிகிச்சை செய்ததிலே 10 இலட்சம் ரூபாய் முறைகேடு நடந்ததாக ஒரு குற்றச்சாட்டைச் சொல்லியிருக்கிறார்கள். நான் அதுபற்றிச் சொல்ல வேண்டாமென்று முதலில் நினைத்திருந்தேன். ஆனால் பத்திரிகைகளில் இது பெரிய செய்தியாக இன்றைக்கு வந்திருக்கிறது. அதனால் இந்த விளக்கம் தர விரும்புகிறேன். என்னவென்று கேட்டால், 5 மாநகராட்சிகள் மற்றும் 50 நகராட்சிகளில் தெரு நாய்கள் இனப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த கருத்தடை செய்ய முடிவு செய்யப்பட்டது. அதற்காக நாளொன்றுக்கு 445 ரூபாய் செலவிடவும் பின்னர் அந்தத் தொகையை பிராணிகள் நல வாரியத்திடமிருந்து திரும்பப் பெற்றுக்கொள்வதற்கான வழிவகைகள் செய்யப்பட்டிருக்கின்றன. ஆனால் வேலூர் நகராட்சியில் 5-12-2007, 11-2-2008 அன்று 2,047 நாய்களுக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டிருக்கிறது. இதற்காக

8 இலட்சத்து 94 ஆயிரத்து 535 ரூபாய் இந்திய பிராணிகள் நல வாரியத்திலிருந்து பெறுவதற்கு நகர்மன்றமே கருத்துரு அனுப்பியிருக்கிறது. ஆனால், இதுவரையில் தொகை வந்து சேரவில்லை. ஆக, இந்த நிலையில் எந்தவித ஊழலும் நடப்பதற்கு வாய்ப்பு இல்லை. எந்தவித முறைகேடுகள் நடப்பதற்கும் வாய்ப்பு இல்லை என்பதையும் நான் மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல திரு. செந்தமிழ்ச்செல்வன் அவர்கள், மேல்மலையனூரில் ஒரு பேருந்து நிலையம் கட்டித் தர வேண்டுமென்று கோரிக்கை வைத்தார்கள். நியாயமான கோரிக்கை. காரணம், அங்கே அதிகமான மக்கள் வந்து செல்லக்கூடிய ஒரு முக்கியமான ஊர் என்பதை நாங்கள் தெளிவாக உணர்ந்து இருக்கிறோம். எனவே, அந்த இடத்தைத் தேர்வு செய்ய மாவட்ட ஆட்சித் தலைவர் அறிவுறுத்தப்பட்டிருக்கிறார். எனவே, சட்டமன்ற உறுப்பினரைக் கேட்டுக்கொள்ள விரும்புவது, அவரும் அதற்குத் துணை நின்று அந்த இடத்தை தேர்வு செய்வதற்கான அந்தப் பணிகளை நிறைவேற்றித் தந்தால் உடனடியாகப் பேருந்து நிலையம் கட்டித் தரப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. கோவிந்தசாமி அவர்கள், திருப்பூர் மாநகராட்சிக்கு பவானிசாகர் அணையிலிருந்து குடிநீர் வழங்கத் திட்டம் திட்டப்படுமா என்ற ஒரு கருத்தை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். எனவே, திருப்பூர் மாநகராட்சி விரிவாக்கம் செய்யப்படுகிற அந்தக் காலக்கட்டத்தில் நிச்சயமாக அது குறித்துப் பரிசீலிக்கப்படும் என்பதல்ல, அது நிச்சயமாக நிறைவேற்றப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதேபோல, நகராட்சியினுடைய தெற்குப் பகுதியிலே புதிய பேருந்து நிலையம் அமைக்கப்படுமா என்ற ஒரு கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அதற்கும் இதுவேதான் பதில். நிச்சயமாக திருப்பூர் மாநகராட்சி விரிவுபடுத்துகிற அந்தச் சூழ்நிலையிலே நிச்சயமாக அங்கே பேருந்து நிலையம் உருவாக்குகிற முயற்சியிலே இந்த அரசு ஈடுபடும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, பணிக் காலத்தில் மாணம் அடைந்த துப்புரவுப் பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு தகுதிக்கேற்ப பணியிடங்கள் வழங்கப்படவில்லை, அதைப் பரிசீலிக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். இதுவரை 283 துப்புரவுப் பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்குப் பணி ஆணை வழங்கப்பட்டிருக்கிறது.



அதிலே வரிசை வாரியாக நான் சொல்ல வேண்டுமென்றால், கல்வித் தகுதிக்கேற்ப 34 இளநிலை உதவியாளர் பணிகளும், 28 வருவாய் உதவியாளர் பணிகளும், 1 மின் பணியாளர் பணியும், 1 பணி ஆய்வாளர் பணியும், 2 பதிவறை எழுத்தர் பணியும், 7 துப்புரவு மேற்பார்வையாளர் பணியும், 2 ஓட்டுநர் பணியும், 13 அடிப்படைப் பணியாளர் பணியும், ஆக மொத்தம் 88 பணிகள் வழங்கப்பட்டிருக்கின்றன. 8 ஆம் வகுப்புக்குக்கீழ் கல்வித் தகுதி பெற்றவர்களுக்கு மட்டுமே மீண்டும் துப்புரவுப் பணியாளர் பணி வழங்கப்பட்டிருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல், கோவில்பட்டி குடிநீர்த் திட்டத்திலே, சீவலப்பேரி நீருந்து நிலையத்திற்குத் தனி மின் பாதை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று கேட்டிருக்கிறீர்கள். அந்தப் பணிகள் எல்லாம் இப்போது நடந்துகொண்டிருக்கிறது. அண்மையில் மார்ச் மாதம் பெய்த மழையின் காரணத்தால், அங்கே வெள்ளம் சூழ்ந்து, தண்ணீர் சூழ்ந்திருக்கிற காரணத்தால்தான் அந்தப் பணியிலே கொஞ்சம் தாமதம் ஏற்பட்டிருக்கிறது. நிச்சயமாக அந்தப் பணி மீண்டும் தொடங்கப்பட்டு, ஜூன் 2008-க்குள் அந்தப் பணி முடிக்கப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, நீலகிரி மாவட்டம் அதிகரெட்டி பேரூராட்சியில் தானமாக ஒருவர் இடத்தைத் தந்திருக்கிறார். ஆனால், இடத்தை மாற்றி இன்றைக்கு அங்கே கட்டடத்தைக் கட்டுகிறார்கள் என்று ஒரு செய்தியைச் சொன்னார்கள். அந்த இடத்திற்கு 4 பேர்கள் உரிமையாளர்கள். 2 பேர்கள்தான் தானமாகத் தந்திருக்கிறார்கள். 2 பேர் கையெழுத்துப் போடவில்லை. அதனால் அது சட்டச் சிக்கலாக நின்றுகொண்டிருக்கிறது. அதனால்தான் வேறு இடத்தைத் தேர்ந்தெடுத்து, அதே இடத்திலே கட்டடத்தைக் கட்டிக்கொண்டிருக்கிறார்கள் என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல், திரு. கோவிந்தசாமி அவர்கள் இன்னொரு முக்கியமான பிரச்சினையைச் சொல்லியிருக்கிறார். ஆதி திராவிட வகுப்பைச் சார்ந்திருக்கக்கூடியவர்களுக்கு ஊராட்சி மன்றத்திலே பல பிரச்சினைகள் எல்லாம் வந்துகொண்டிருக்கின்றன என்று இங்கே குறிப்பிட்டுச் சொன்னார்கள். இந்த ஆட்சி வந்ததற்குப் பிறகுதான், பாப்பாபட்டி, கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம், கொட்டக்காச்சியேந்தலிலே பல ஆண்டுகளாகத் தேர்தல் நடைபெற முடியாமல் இருந்த அந்த நிலையை

மாற்றி, அங்கே தேர்தலை நடத்தி, (மேசையைத் தட்டும் ஒலி) அதற்காக சமத்துவப் பெருவிழா என்ற ஒரு விழாவை நடத்தி, அவர்களையெல்லாம் அழைத்து ஒரு பாராட்டு விழா நடந்ததை நீங்கள் மறந்திருக்கமாட்டீர்கள்.

*பிற்பகல் 1-35*

நிச்சயமாக இந்த அரசைப் பொறுத்தவரைக்கும் எப்போதெல்லாம் இதுபற்றிய செய்தி வருகிறதோ, உள்ளூரிலே இருக்கக்கூடிய சில தனிப்பட்ட பிரச்சினைகளுக்குக்கூட அது வருகிறது. ஆக, நீங்கள் சொல்வதுபோல இருக்கலாம். நான் இல்லையென்று மறுக்கவில்லை. ஆனால், எந்தப் பிரச்சினை இருந்தாலும், நிச்சயமாக இந்த அரசு வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்காது; உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதையும் (மேசையைத் தட்டும் ஒலி) நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ.க. மணி அவர்கள் இங்கே இந்த மானியத்திலே பேசவில்லை என்று சொன்னாலும், நேற்றையதினம் ஒரு கோரிக்கை மனுவாக என்னிடத்திலே ஒன்றைத் தந்தார்கள். மேட்டூர் நகராட்சியிலே ஒரு புதிய பேருந்து நிலையம் அமைக்க வேண்டுமென்று ஒரு கோரிக்கையை எடுத்து வைத்திருக்கிறார்கள். மேட்டூர் நகராட்சியிலே தற்போது செயல்பட்டு வரக்கூடிய பேருந்து நிலையத்தின் அருகிலே மின்சார வாரியத்திற்குச் சொந்தமான (குறுக்கீடு)—அமைச்சர் எனக்கு அருகிலேதான் இருக்கிறார்—அந்த வாரியத்திற்குச் சொந்தமான 1.34 எக்டேர் நிலத்தையும் சேர்த்து அந்தப் பகுதியிலே ஒரு புதிய பேருந்து நிலையம் அமைக்கத் திட்டமிடப்பட்டது. ஆனால், அந்த நிலத்தினுடைய மதிப்பு 4 கோடி ரூபாய் என்று மின்சார வாரியம் தெரிவிக்கிறது. அதனால்தான் இப்போது சங்கடம். அதை உடனடியாக வாங்க முடியாத நிலையில் இருக்கிறது. அதன் காரணமாக இப்போது அந்தப் பணி பாதியில் நின்றுகொண்டிருக்கிறது. நிச்சயமாக அவர்களுக்கு இன்னொரு மாற்று இடத்தைத் தந்துவிட்டு அந்த இடத்தைப் பெறலாம் என்று ஒரு முடிவு செய்யப்பட்டிருக்கிறது. ஆக, மாற்று இடம் தெரிவு செய்தவுடன் தொடர் நடவடிக்கை நிச்சயமாக மேற்கொள்ளப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, நம்முடைய சட்டப் பேரவையினுடைய தலைவர் அவர்கள் இரண்டு நாட்களுக்கு முன்பே என்னுடைய மானியக்



கோரிக்கைக்கு எனக்கு வாழ்த்துச் சொல்லிவிட்டு, கையிலே ஒரு கடிதத்தையும் கொடுத்தார்கள். அவர்களுடைய அம்பாசமுத்திரம் மற்றும் விக்கிரமசிங்கபுரம் நகராட்சிகளில் நவீன எரிவாயு தகன மேடை அமைக்க வேண்டுமென்று ஒரு கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அம்பாசமுத்திரம் மற்றும் விக்கிரமசிங்கபுரம் நகராட்சிகளில் நவீன எரிவாயு தகன மேடை இந்த ஆண்டு அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

எனவே, இந்த இரண்டு ஆண்டு காலத்தில் நிகழ்த்தப்பட்டிருக்கக்கூடிய இவ்வளவு பெரிய சாதனைகளுக்கெல்லாம் காரணமாக, துணையாக இருந்தவர்களை நான்-நிச்சயமாக நான் மட்டுமல்ல நீங்களும் மறந்துவிடக்கூடாது. நம்முடைய நகராட்சி நிர்வாகத் துறையினுடைய செயலர் திரு. தீனபந்து, இ.ஆ.ப. அவர்கள், (மேசையைத் தட்டும் ஒலி) ஊரக வளர்ச்சித் துறையினுடைய செயலாளர் திரு. க. அஷோக்வர்தன் ஷெட்டி, இ.ஆ.ப. அவர்கள், (மேசையைத் தட்டும் ஒலி) நகர்ப்புறக் கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகத்தினுடைய தலைவர் திரு. கௌரிசங்கர், இ.ஆ.ப. அவர்கள், (மேசையைத் தட்டும் ஒலி), நகராட்சி நிர்வாகத்தினுடைய ஆணையர் டாக்டர் நிரஞ்சன் மார்டி, இ.ஆ.ப. அவர்கள், (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினுடைய மேலாண்மை இயக்குநர் திரு. ஸ்வரண் சிங், இ.ஆ.ப. அவர்கள், (மேசையைத் தட்டும் ஒலி), சென்னைக் குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் திரு. சிவதாஸ் மீனா, இ.ஆ.ப. அவர்கள், (மேசையைத் தட்டும் ஒலி) சென்னை மாநகராட்சியினுடைய ஆணையர் திரு. ராஜேஷ் லக்கானி, இ.ஆ.ப. அவர்கள், (மேசையைத் தட்டும் ஒலி) பேரூராட்சிகளினுடைய ஆணையர் டாக்டர் கோபால், இ.ஆ.ப. அவர்கள், (மேசையைத் தட்டும் ஒலி) மகளிர் மேம்பாட்டுக் கழகத் தலைவர் திருமதி சூசன் மேத்யூ, இ.ஆ.ப. அவர்கள், (மேசையைத் தட்டும் ஒலி) மகளிர் மேம்பாட்டு மேலாண்மை இயக்குநர் திரு. முருகானந்தம், இ.ஆ.ப. அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி), சுனாமி நிவாரணத் திட்டச் செயலாக்க இயக்குநர் திரு. தங்கவேல், இ.ஆ.ப. அவர்கள், (மேசையைத் தட்டும் ஒலி) ஊரக வளர்ச்சி இயக்குநர் திரு. ககன் தீப் சிங் பேடி, இ.ஆ.ப. அவர்கள், (மேசையைத் தட்டும் ஒலி) மாவட்ட ஆட்சியர்கள், உள்ளாட்சி மன்றங்களினுடைய தலைவர்கள், துறையினுடைய அதிகாரிகள், மாவட்ட அளவில் இருக்கக்கூடிய அலுவலர்கள், நம்முடைய மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், பாராளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், அவ்வப்போது சில உண்மையான

செய்திகளையும் எழுதி ஊக்கப்படுத்தி அல்லது சில செய்திகளில் குறைகளை, குற்றச்சாட்டுக்களைக்கூட அவ்வப்போது எங்களுக்கு எடுத்துச் சொல்லி, அவ்வப்போது எங்களை உற்சாகப்படுத்திக்கொண்டிருக்கக்கூடிய நம்முடைய பத்திரிகை உலகம் மற்றும் தொலைக்காட்சி நண்பர்களுக்கும் இந்த நேரத்திலே என்னுடைய இதயமார்ந்த நன்றியை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பிலே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் பெருமக்களால் வழங்கப்பட்டிருக்கக்கூடிய வெட்டுத் தீர்மானங்களின் எண்ணிக்கை 489. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பிலே இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்களால் வழங்கப்பட்டிருக்கக்கூடிய வெட்டுத் தீர்மானங்கள் 492. முடிந்த வரையிலே பதில் தந்திருக்கிறேன். இன்னும் நேரம் இருந்து, நீங்கள் பொறுமையாக இருந்தால், இன்னும் விளக்கங்களைத் தருவதற்கு நான் காத்திருக்கிறேன். இருந்தாலும் உங்களை நான் சோதிக்க விரும்பவில்லை. எனவே, இவற்றை நீங்கள் மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டு, விடுபட்டுப் போய் இருக்கக்கூடிய அந்தப் பிரச்சினைகளுக்கெல்லாம் உரிய நேரத்தில் உரிய வகையிலே நான் அதிகாரிகளோடு கலந்து பேசி, துறையோடு விவாதித்து, உரிய நடவடிக்கை நிச்சயமாக எடுக்கப்படும் என்பதையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொண்டு, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் தந்திருக்கக்கூடிய வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, கோரிக்கை எண் 34-நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மற்றும் கோரிக்கை எண் 42-ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைகளுக்கான மானியக் கோரிக்கைகளைப் பெருந்தன்மையோடு நீங்கள் நிறைவேற்றித் தர வேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டு, அமைகிறேன். வணக்கம். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சட்டமன்றப் பேரவையில் இன்று மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் உறுப்பினர்களுக்கு 101 நிமிடங்கள் பதில் அளித்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குப் பேரவையின் சார்பாகவும், எனது சார்பாகவும் பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)



## 4. அறிவிப்பு—தொடர்ச்சி

### உறுப்பினர்களுக்கு, நகராட்சி நிருவாகம், குடிநீர் வழங்கல்-ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய வெளியீடுகள், நூல்கள் மற்றும் குறுந்தகடு வழங்குதல்-தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. ஊரக வளர்ச்சித் துறையின்மூலம் பேரவை உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட தொகுதி நூல்கள் அடங்கிய பெட்டியை இதுவரை பேரவை நூலகப் பிரிவு-2-லிருந்து பெற்றுக்கொள்ளாதவர்கள் பெற்றுக்கொள்ளுமாறு மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கின்றேன். மேலும், ஊரக வளர்ச்சித் துறை சார்பாக இன்றையதினம் 2008-2009 ஆம் ஆண்டுக்கான அறிவிப்புகள் மற்றும் 2007-2008 ஆம் ஆண்டுக்கான அறிவிப்புகள் மீதான நடவடிக்கை விவரம், உயர்மட்டக் குழு பரிந்துரைமீதான நடவடிக்கைகள் பற்றிய குறுந்தகடு (C.D.) ஆகியவையும் உறுப்பினர்களுக்கு வழங்கப்படுகின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

## 3. மானியக் கோரிக்கைகள், 2008–2009, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

**(அ) கோரிக்கை எண் 34-நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை**
**(ஆ) கோரிக்கை எண் 42-ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை**
—தொடர்ச்சி

பிற்பகல் 1-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அற்புதமான புள்ளிவிவரங்களையும், தெளிவான கருத்துக்களையும், வரக்கூடிய ஆண்டுகளிலே இந்த உள்ளாட்சித் துறை எப்படி பயணிக்கவிருக்கிறது என்பதையெல்லாம் மிக அருமையாக எடுத்துச்சொல்லியிருக்கிறார்கள். அவர்களுக்கு இந்த மாமன்றத்தின் சார்பிலே, இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பிலே எங்களுடைய நெஞ்சார்ந்த பாராட்டுதல்களை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் பல முக்கியமான கொள்கை முடிவுகளை எடுத்து இந்த அவையிலே இன்று அறிவித்திருக்கிறார்கள். அதிலே ஊராட்சி ஒன்றியங்களை, ஊராட்சி மன்றங்களின் எல்லைகளை புதியதாக நிர்ணயிப்பது பற்றிய அவாது அறிவிப்பு கிராமங்களிலே, நகர்ப்புறங்களிலே மிகப்பெரிய சமூக, அரசியல், பொருளாதார மாற்றங்களை ஏற்படுத்தக்கூடிய அளவிற்கு நிகழவிருக்கின்ற—மறுபரிசீலனைக்குண்டான அறிவிப்பு. அந்த அறிவிப்பு வந்திருக்கிற அதேநேரத்தில்—நான் ஒரு கோரிக்கையை நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். இந்த நகர பஞ்சாயத்துகள்—டவுன் பஞ்சாயத்துக்கள் என்ற அமைப்பு இந்தியாவிலே வேறு எந்த மாநிலத்திலும் இருப்பதாகத் தெரியவில்லை. நம்முடைய மாநிலத்திலே மட்டும் இருக்கின்ற அந்த நகர பஞ்சாயத்து என்கின்ற அந்த அமைப்பு, கிராமப்புற வளர்ச்சித் திட்டங்களுக்கான உதவிகளையும் பெறமுடியாமல்—முழுமையான நகர்ப்புற வளர்ச்சித் திட்டங்களுக்கான உதவியையும் பெறமுடியாமல் இந்த இரண்டு அமைப்புகளுக்குமிடையிலே உயிர் வாழ்வதற்கே மிகவும் சிரமப்படுகின்ற ஒரு நிலையை நாங்கள் பார்க்கிறோம். உதாரணமாக, இப்போது ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டம், இந்த ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டம் என்பது மிகப் பெரிய திட்டம். அது கிராமப்புற ஊராட்சிகளுக்கு மட்டும்தான் கிடைக்கிறது. ஆனால் கிராமப்புறத்தை ஒட்டி இருக்கின்ற நகர பஞ்சாயத்துகளுக்கு அது கிடைப்பதில்லை. ஆகவே, இதை மறுபரிசீலனை செய்கிறபோது நம்முடைய அரசு இந்த நகர பஞ்சாயத்துகள் என்ற அமைப்பு இனிமேல் இருக்கவேண்டுமா? அதிலே தகுதியான நகர பஞ்சாயத்துக்களை நகராட்சியாக தரம் உயர்த்தியும், தகுதி இல்லாத சிறிய நகர பஞ்சாயத்துக்களை மீண்டும் கிராமப் பஞ்சாயத்துகளாக மாற்றியும், அவற்றை இரண்டு வகைப்படுத்தினால், உள்ளாட்சித் துறை நிர்வாகத்திற்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்ற ஆலோசனையை நான் சொல்லி வறுமைக் கோட்டு எல்லைக்குக் கீழே உள்ளவர்களின் பட்டியல் ஒவ்வொரு கிராமத்திலும் இன்னும் முழுமையாக்கப்படவில்லை. அமைச்சர் அவர்களும், அதிகாரிகளும் நாம் பாராட்டக்கூடிய அளவுக்கு பல முயற்சிகளை எடுத்தார்கள். ஆனாலும்கூட, இன்னும் பல கிராமங்களிலே மிகத் தகுதியான ஏழை மக்கள் வறுமைக்கோட்டு எல்லைக்கு உட்பட்ட பட்டியலில் இல்லாத காரணத்தினால் அவர்களுக்கு சரியான உதவிகளைச் செய்யமுடியவில்லை. ஆகவே ஆண்டுதோறும் அந்தப் பட்டியல் சரிசெய்யப்படவேண்டும். அதிலே, குறிப்பாக ஆதி திராவிட,



குடும்பங்களைச் சார்ந்தவர்கள்—நான்கூட மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கு ஓர் ஆலோசனையைச் சொன்னேன். அதாவது, வருமான வரி கட்டுகிறவர்கள், அரசு ஊழியர்கள், வணிக வரி கட்டுகிறவர்கள் இவர்கள் ஆதிதிராவிடர், பழங்குடியினர், மலைவாழ் மக்கள் இந்த மூன்று பேர்களைத் தவிர மற்ற எல்லோரையும் வறுமைக்கோட்டு எல்லைக்குக் கீழே உள்ளவர்கள் என்று அறிவித்தால் அந்த மக்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். அதை நம்முடைய அரசு செய்வதற்கு அதிகாரம் இல்லை என்று சொன்னாலும்கூட—நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் கேட்கிறேன், மத்திய அரசுக்கு அதைப் பரிந்துரை செய்து அந்த ஆதி திராவிட, பழங்குடி, மலைவாழ் மக்களுக்கு வருமான வரி கட்டுவோர் தவிர, அரசு ஊழியர் தவிர, வணிகவரி கட்டுபவர்கள் தவிர, அத்தனைப் பழங்குடி மக்களும், ஆதி திராவிட மக்களும் வறுமைக்கோட்டு எல்லைக்குக்கீழே உள்ளவர்கள் என்பதை அறிவிக்கின்ற அந்த முயற்சியை நம்முடைய தமிழக அரசு மேற்கொள்ள வேண்டும் என்று உங்கள் மூலமாகக் கேட்டு அமர்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பழகன். (குறுக்கீடுகள்) மற்றவர்கள் எல்லோரும் உட்காருங்கள். இரண்டே வார்த்தைகளில் என்னென்ன சொல்லவேண்டுமோ, சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் பேசுங்கள் சார், மைக் இயங்கும், பேசுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் பேசுங்கள்.

**திரு. கே.பி. அன்பழகன்:** Mike கொடுக்கச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசுங்கள். எனக்குக் கேட்கும், பேசுங்கள்.

***திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2005 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதல்வராக இருக்கின்றபோது, புது வாழ்வுத் திட்டம் என்று ரூ.717 கோடி ரூபாயிலே ஒரு திட்டமானது அன்றையதினம் தொடங்கப்பட்டது.

*பிற்பகல் 1-45*

புது வாழ்வுத் திட்டம் என்று, அந்தத் திட்டத்தினுடைய நோக்கம், கிராமப் பகுதியில் இருக்கின்ற ஏழையெளிய மக்கள், அதேநேரத்தில் ஊனமுற்றவர்கள், அவர்களுக்கு மறு வாழ்வு அளிக்கின்ற வகையிலே அந்தத் திட்டத்தைப் பயன்படுத்த வேண்டும் என்று. இரண்டாண்டு

காலத்தில் இந்த அரசால் 51 கோடியே 13 இலட்சம் மட்டும் செலவழிக்கப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டம் ஆறு ஆண்டுகளுக்காகத் தீட்டப்பட்ட திட்டம். அதை 'வாழ்ந்து காட்டுவோம்' என்று திட்டத்தை மாற்றி அறிவித்து இருக்கின்ற இந்த அரசு முனைப்போடு செயல்படாமல் இருக்கின்றது. இன்னும் மீதி இருக்கின்ற $3\frac{1}{2}$ ஆண்டு காலத்தில் அந்தப் பணத்தை முழுமையாகச் செலவழிக்க முடியுமா என்பதை மாண்புமிகு அமைச்சரிடம் கேட்டுக்கொள்கின்றேன், ஒன்று.

இன்னொன்று, 19-10-2005-லே தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம்-III என்ற வகையில், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உலக வங்கி நிதியுடன் ரூ.1,925 கோடிக்கு அந்த நேரத்திலே அந்தத் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்கள். தொடங்கி வைத்து, 24 மாவட்டத் தலைநகரங்களிலும் பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்காக, அன்று அரசு மானியமாகவும், வங்கியினுடைய கடனாகவும், உள்ளாட்சி அமைப்புகளுடைய பங்காகவும், மக்களுடைய பங்காகவும், அந்த மாவட்டத் தலைநகரங்களில் பாதாளச் சாக்கடைத் திட்டம் போடப்பட்டது. அது இந்த இரண்டு ஆண்டு காலத்தில் பார்த்தோம் என்றால், அன்றையதினத்தில் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்த காலம் முதல் இன்று வரை அந்தத் திட்டத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன, எவ்வளவு நேரம் நீங்கள் பேசிக்கொண்டிருக்கிறீர்கள்? *(குறுக்கீடுகள்)* அதை நேற்றுப் பேசியிருக்க வேண்டும். *(குறுக்கீடுகள்)* நேற்று இருந்து பேசியிருக்க வேண்டும். *(குறுக்கீடுகள்)*

**திரு. கே.பி. அன்பழகன்:** பிரச்சினை இருக்கிறது சார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, எந்த உறுப்பினர்களாக இருந்தாலும் விளக்கம் கேட்பதிலே தவறில்லை. நேற்று மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பழகன் பேசியிருக்கலாம். நேற்றுப் பேசாததையெல்லாம் இன்று இப்போது பேச ஆரம்பித்தால். . . *(குறுக்கீடுகள்)*



**திரு. கே.பி. அன்பழகன்:** இதிலே என்னப் பிரச்சினை என்றால். . .

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று எங்களையெல்லாம் வெளியேற்றிவிட்டீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, வெளியேற்றவில்லை. நீங்களாக walk out பண்ணிவிட்டீர்கள். உட்காருங்கள். *(குறுக்கீடு)* மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் பதில் சொல்லிய கிட்டத்தட்ட $1\frac{3}{4}$ மணி நேரம் நாங்கள் பொறுமையாக அவர் சொன்னதைக் கேட்டுக்கொண்டிருந்தோம். எங்களுடைய மாண்புமிகு உறுப்பினர் சொல்லுகின்ற ஒரு சில வார்த்தைகளைக்கூட பொறுக்க முடியாமல் பிரச்சினை பண்ணினால் எப்படி? அவரைப் பேசச் சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, நான் சொல்கிறேன். இன்றைக்குச் சொல்வதை நேற்று சொல்லியிருக்கலாம் என்று சொல்கிறேன், வேறு ஒன்றும் இல்லை. சரி, சொல்லுங்கள். *(குறுக்கீடு)* இரண்டு பேரும் சொன்னீர்கள். இரண்டு பேரும் சொல்லிவிட்டீர்கள் அல்லவா? சொல்லுங்கள், சீக்கிரம் சொல்லுங்கள்.

**திரு. கே.பி. அன்பழகன்:** ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு. . .

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இங்கே குறிப்பிடுவதைப்போல 'வாழ்ந்து காட்டுவோம் திட்டம்' என்பது தொடர்ந்து இந்த ஆட்சியில் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. நேரம் இல்லாத காரணத்தினால்தான் அந்த விவரங்களையெல்லாம் சொல்லாமல் விட்டுவிட்டேனே தவிர, வேறல்ல. நேற்றைக்கு நீங்கள் இருந்து அதைப் பேசியிருந்தால் ஒருவேளை அதற்கு நான் பதில் சொல்லக்கூடிய வாய்ப்பு எனக்குக் கிடைத்திருக்கும். நேற்றைக்கு இல்லாதது உங்களுடைய குறை என்பதையும் நான் இங்கே பதிவு செய்துகொள்ள விரும்புகிறேன். *(குறுக்கீடுகள்)*

பிற்பகல் *1-50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவ்வளவுதான். *(குறுக்கீடுகள்)* விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. *(குறுக்கீடுகள்)* உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)*

## (அ) கோரிக்கை எண் 34-நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 34-நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை. 15-4-2008 அன்று மாண்புமிகு உறுப்பினர்களால் முன்மொழியப்பட்ட வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.2,206,45,21,000/-, மூலதனக் கணக்கில் ரூ.876,47,28,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.219,80,56,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

என்னும் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

## (ஆ) கோரிக்கை எண் 42-ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 42-ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை. 15-4-2008 அன்று மாண்புமிகு உறுப்பினர்களால் முன்மொழியப்பட்ட வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.



(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.3,551,62,22,000/-, மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.1,047,18,90,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

என்னும் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (17-4-2008) வியாழக்கிழமை காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-50 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

# 5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

## (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

-ஏதுமில்லை-

## (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

74. மாநில நகராட்சி நிர்வாக ஆணையரகத்தின்கீழுள்ள மாநகராட்சி, நகராட்சிப் பணியமைப்பு மற்றும் பணியாளர்களின் விவரங்கள் குறித்த கையேடு. (தமிழ், ஆங்கிலம்)

75. நகராட்சி நிர்வாக ஆணையரகத்தால் மேற்கொள்ளப்பட்டு வரும் பெருந்து நிலையப் பணிகள் குறித்த விவரங்கள் அடங்கிய சிறு நூல். (தமிழ்)

76. மானியக் கோரிக்கை எண் 41-வருவாய் மற்றும் மானியக் கோரிக்கை எண் 51-இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு ஆகிய மானியக் கோரிக்கைகளின்மீதான விவாதத்தின்போது மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2008-2009. (தமிழ்)

77. மானியக் கோரிக்கை எண் 26-வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கையின்மீதான விவாதத்தின்போது மாண்புமிகு குடிசை மாற்று மற்றும் இட வசதிக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2008-2009. (தமிழ்)



## இணைப்பு I

(899 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

## மானியக் கோரிக்கை எண் 34-நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

## அறிவிப்புகள், 2008-2009

1. ஊராட்சிகளிலும், பேரூராட்சிகளிலும் தற்போது சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வரும் "அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்" போன்ற ஒரு திட்டத்தை நிதி நிலையில் நலிந்த 30 நகராட்சிகளில், ஒவ்வொரு நகராட்சியிலும் 75 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் என்ற பெயரில் செயல்படுத்தப்படும்.

2. அனைத்து நகராட்சிகளிலும் பாதாளச் சாக்கடைத் திட்டத்தைச் செயல்படுத்தும் திட்டத்தின்கீழ், வரும் ஆண்டில் ஓசூர், அறந்தாங்கி, உடுமலைப்பேட்டை, அருப்புக்கோட்டை, போடிநாயக்கனூர், சிதம்பரம், பட்டுக்கோட்டை, ஆம்பூர், பேரணாம்பட்டு, மதுராந்தகம், சாத்தூர் மற்றும் இராமேஸ்வரம் ஆகிய பன்னிரெண்டு நகராட்சிகளில் பாதாளச் சாக்கடைத் திட்டங்கள் 380 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

3. திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில், 145 கோடி ரூபாய் மதிப்பீட்டில் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின் ஒரு பகுதியாக திருவானைக்கோவில் பகுதியில் உள்ள ஆறு வார்டுகளில் 24 மணி நேர குடிநீர் விநியோக முறை சோதனை முறையில் அறிமுகப்படுத்தப்படும். இம்முறை, படிப்படியாக இதர வார்டுகளுக்கும் விரிவுபடுத்தப்படும்.

4. இராசிபுரம், வெள்ளக்கோயில், கடையநல்லூர் மற்றும் மேட்டூர் நகராட்சிகளில் குடிநீர் மேம்பாட்டுத் திட்டங்கள் 66 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

5. மாநகராட்சி மற்றும் நகராட்சி கல்வி நிதியைப் பயன்படுத்தி, மாநகராட்சி மற்றும் நகராட்சிப் பள்ளிகளில் கட்டமைப்பு வசதிகள் சுமார் 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும். சத்துணவுக் கூடங்களை மேம்படுத்துதல், ஆய்வுக்கூடங்களை அமைத்தல், வகுப்பறைகள் கட்டுதல் மற்றும் விளையாட்டு மைதானங்கள் அமைத்தல் போன்ற பணிகள் இத்திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படும்.

[2008 ஏப்ரல் 16

6. நகர்ப்புறங்களில் அமைந்துள்ள மண் மற்றும் கற்சாலைகளை தார்ச் சாலையாகவும், சிமெண்ட் சாலையாகவும் மாற்றி அமைக்கும் திட்டத்தின்கீழ் இந்த ஆண்டு சுமார் 120 கி.மீ. சாலைகள் 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும். இத்திட்டத்தின் வாயிலாக, மண் சாலைகள் அனைத்தும் தார் சாலைகளாக மேம்படுத்தப்பட்டு, ஈரோடு மாநகராட்சியும் மற்றும் 35 நகராட்சிகளும் "மண் சாலை இல்லாத நகராட்சிகள்/மாநகராட்சி" என அறிவிக்கப்படும்.

1. செங்கல்பட்டு
2. மதுராந்தகம்
3. திருத்தணி
4. வளசரவாக்கம்
5. மணலி
6. கடையநல்லூர்
7. சங்கரன்கோவில்
8. பத்மநாபபுரம்
9. திருவில்லிபுத்தூர்
10. சாத்தூர்
11. மேட்டூர்
12. குமாரபாளையம்
13. தருமபுரி
14. கிருஷ்ணகிரி
15. கரூர்
16. பள்ளிபாளையம்
17. தஞ்சாவூர்
18. கும்பகோணம்
19. நாகப்பட்டினம்
20. மணப்பாறை
21. கம்பம்
22. சிவகங்கை
23. பரமக்குடி
24. பழனி
25. அரக்கோணம்
26. வாலாஜாபேட்டை
27. திருவத்திபுரம்
28. விழுப்புரம்
29. திண்டிவனம்
30. சத்துவாச்சாரி
31. பவானி
32. வால்பாறை
33. புஞ்சைபுளியம்பட்டி
34. சூரம்பட்டி
35. வீரப்பன்சத்திரம்



2008 ஏப்ரல் 16]

7. பழைய மற்றும் போதுமான வசதியற்ற கட்டடங்களில் இயங்கி வரும் 45 நகராட்சி அலுவலகங்களுக்கு அனைத்து வசதிகளுடன் கூடிய புதிய நகராட்சி அலுவலகக் கட்டடங்கள் 23 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

8. திருப்பூர் மாநகராட்சியில் உள்ள புதிதாக வரன்முறைப்படுத்தப்பட்ட மனைப் பிரிவுப் பகுதிகளில் 40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மழை நீர் வடிகால் வசதிகள் ஏற்படுத்தப்படும். மேலும், இம்மாநகராட்சியுடன் இணைக்கப்படவுள்ள பகுதிகளுக்கு பாதாளச் சாக்கடைத் திட்டத்தை விரிவுபடுத்த ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

9. தூத்துக்குடி நகரில் அமைந்துள்ள "பக்கில் ஓடையை மேம்படுத்தும் பணி" 35 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பல்வேறு கட்டங்களாக எடுத்து செயல்படுத்தப்படும்.

10. குமாரபாளையம் நகராட்சியில் அமைந்துள்ள கோம்புபள்ளம் திறந்தவெளி ஓடை 1 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

11. தமிழகத்தில் தேசிய மற்றும் மாநில நெடுஞ்சாலைகளில் அமைந்துள்ள நகர்ப்புற பேருந்து நிலையங்களை நவீனப்படுத்தும் திட்டத்தின்கீழ் நாகர்கோவில், கோவில்பட்டி, இராஜபாளையம், திருவண்ணாமலை மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய நகராட்சிகளில் ஐந்து பேருந்து நிலையங்கள் 11 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மேலும், நெல்லிக்குப்பம், கொடைக்கானல், கோயம்புத்தூர் (மேட்டுப்பாளையம் சாலை), உள்ளகரம்-புழுதிவாக்கம், பொள்ளாச்சி, பூவிருந்தவல்லி, வந்தவாசி, பழனி மற்றும் ஓசூர் ஆகிய ஒன்பது நகராட்சிகளில் பேருந்து நிலையப் பணிகள் 33 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன. மணலி மற்றும் அனகாபுத்தூர் ஆகிய நகராட்சிகளில் ஒரு கோடி ரூபாய் செலவில் பணிகள் நடப்பு ஆண்டில் துவங்கப்படும். இத்திட்டம் தேசிய நெடுஞ்சாலை மற்றும் மாநில நெடுஞ்சாலைகளில் அமைந்துள்ள இதர நகராட்சிகளுக்கும் விரிவுபடுத்த தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

12. கடந்த இரண்டு ஆண்டுகளில், 102 நகராட்சி மற்றும் மாநகராட்சிகளிலும் நவீன இறைச்சிக் கூடங்கள் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதன் தொடர்ச்சியாக, நடப்பு நிதியாண்டில், மேலும் 23 நகராட்சிகளில் நவீன இறைச்சிக் கூடங்கள் 4 கோடியே 60 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

13. 42 நகராட்சிகளில் உள்ள 45 மகப்பேறு நிலையங்கள் கடந்த ஆண்டு நவீன வசதிகளுடன் மேம்படுத்தப்பட்டன. இதன் தொடர்ச்சியாக நடப்பாண்டில், 19 நகராட்சிகளில் உள்ள 20 மகப்பேறு நிலையங்கள் 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

14. கடந்த இரண்டு ஆண்டுகளில் 47 நகராட்சிகள் மற்றும் 5 மாநகராட்சிகளில் எரிவாயு தகன மேடைகள் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதன் தொடர்ச்சியாக, நடப்பு நிதியாண்டில் மறைமலை நகர், வளசரவாக்கம், விருத்தாசலம், அருப்புக்கோட்டை மற்றும் திருச்செங்கோடு ஆகிய ஐந்து நகராட்சிகளில் 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் எரிவாயு தகன மேடைகள் அமைக்கப்படும்.

15. கோயம்புத்தூரில் அமைந்துள்ள தமிழ்நாடு நகரியற் பயிற்சி மையத்திற்கு ஒரு கோடியே 50 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் தங்கும் விடுதிகள் கட்டப்படும்.

16. குடிநீர் விநியோகத்தில் ஏற்படும் கசிவுகளைக் கண்டறிந்து சீர்படுத்த ஏதுவாக, கசிவுகளைக் கண்டுபிடிக்கும் கருவிகள் பொருத்திய 17 நடமாடும் வாகனங்கள் நகராட்சிகளுக்கு வழங்கப்படும். மேலும், குடிநீர் விநியோகத்தில் புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தும் விதமாக, திருநெல்வேலி மாநகராட்சி குடிநீர்த் திட்டத்தின் செயலாக்கத்தை நவீனப்படுத்த, SCADA என்ற தொலை உணர்வுடன் கூடிய கட்டுப்பாட்டுக் கருவிகள் 63 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் பொருத்தப்படும்.

17. திருநெல்வேலி மாநகராட்சியில் குடிநீர் விநியோகம் போதுமான அளவு இல்லாத தச்சநல்லூர் மற்றும் மேலப்பாளையம் மண்டலங்களில் 6 வார்டுகளில் குடிநீர் விநியோகம் செய்ய ஏதுவாக, அபிவிருத்திப் பணிகள் சுமார் 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும். மேலும், இம்மாநகராட்சியில் அமைந்துள்ள மேலப்பாளையம் பகுதியில் குடிநீர் வசதி, வடிகால் வசதி, தெரு விளக்கு போன்ற அடிப்படை வசதிகளை மேம்படுத்த ஒருங்கிணைந்த திட்டம் தயாரித்து செயல்படுத்தப்படும்.

18. கட்டட வரைபடங்களுக்கு அனுமதி வழங்கும் வழிமுறைகளைத் துரிதப்படுத்தும் நோக்கத்தோடு, ஒரு முன்னோடித் திட்டமாக கோயம்புத்தூர் மாநகராட்சியில் 1-5-2008 முதல் கட்டட அனுமதி வழங்கும் முறை கணினிமயமாக்கப்படும். இதனால் பொதுமக்கள்



எளிதாகவும், விரைவாகவும் கட்டட வரைபடங்களுக்கு அனுமதி பெற இயலும். இம்முறை படிப்படியாக அனைத்து நகராட்சிகளுக்கும், மாநகராட்சிகளுக்கும் விரிவுபடுத்தப்படும்.

19. மூன்றாம் நிலை நகராட்சி மன்றத் தலைவர்களின் செயல் திறனை அதிகரிக்க அவர்கள் பயன்படுத்தும் செல்பேசிக்கான கட்டணத்தை மாதம் ஒன்றுக்கு ரூ. 500-க்கு மிகாமல் அந்தந்த நகராட்சிகளே செலுத்தும்.

20. கடந்த இரண்டு ஆண்டுகளில் நகராட்சிகளின் பல்வேறு கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. இப்பணிகளில் இந்த ஆண்டு முடிவடையும் மற்றும் தொடங்கப்படவுள்ள பேருந்து நிலையக் கட்டடங்களுக்கும், நகராட்சி அலுவலகக் கட்டடங்களுக்கும் பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு விழா நினைவாக "பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு விழா பேருந்து நிலையம்/ பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு விழா அலுவலகக் கட்டடம்" என்று பெயரிடப்படும்.

21. இன்று மிக வேகமாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றாக தூத்துக்குடி நகரம் விளங்குகிறது. பெருகி வரும் தொழிற்சாலைகளாலும், வளர்ந்து வரும் துறைமுகத்தாலும், அமையவுள்ள சேது சமுத்திரக் கால்வாய் மற்றும் பல்வேறு தொழிற்சாலைகளாலும், இந்நகரிலும், அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலுமுள்ள கட்டமைப்பு வசதிகளை வெகுவாக மேம்படுத்த வேண்டியுள்ளது. ஆகவே, தூத்துக்குடி நகராட்சி, மாநகராட்சியாகத் தரம் உயர்த்தப்படும்.

## பேரூராட்சிகள்

22. பேரூராட்சிகளில் அமைந்துள்ள சாலைகளை மேம்படுத்தும் விதமாக 380 பேரூராட்சிகளில் சுமார் 800 கிலோ மீட்டர் சாலைகள் 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நபார்டு வங்கி நிதியுதவித் திட்டத்தின்கீழ் மேம்படுத்தப்படும்.

23. சுற்றுலா மற்றும் வழிபாட்டுத் தலங்களாக உள்ள 40 பேரூராட்சிகளில் அமைந்துள்ள பேருந்து நிலையங்களில் 4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நவீன சுகாதார வளாகங்கள் கட்டப்படும்.

24. திடக் கழிவு மேலாண்மைத் திட்டத்தின்கீழ் குப்பைகளைப் பிரித்தெடுத்து கையாளத் தேவையான அறைகளைக் கட்டும் பணிகளும், உரக்கிடங்குகளை மேம்படுத்தும் பணிகளும் 40 பேரூராட்சிகளில் 4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

25. உரிய அலுவலகக் கட்டடங்கள் இல்லாத 44 பேரூராட்சிகளுக்கு புதிய அலுவலகக் கட்டடங்கள் 6 கோடியே 40 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும். இக்கட்டடங்களுக்கு பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு விழா நினைவாக "பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு விழா அலுவலகக் கட்டடம்" என்று பெயரிடப்படும்.

26. பேரூராட்சிகளில் உள்ள குடிசைப் பகுதிகளில் வாழும் ஏழை மக்களுக்கு 3,000 வீடுகள் 24 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த வீட்டு வசதி மற்றும் குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஒவ்வொரு வீட்டிற்கும் 80,000 ரூபாய் மதிப்பீட்டில் கட்டித் தரப்படும். ஒவ்வொரு வீட்டிற்கும் மானியம் மட்டும் 72,000 ரூபாயாகும்.

27. பேரூராட்சி நிர்வாகத்தில் பணிபுரியும் பொறியாளர்களின் கண்காணிக்கும் திறனை அதிகரிக்கும்பொருட்டு 21 ஈப்புகள் ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டில் வழங்கப்படும்.

28. மின்சார சேமிப்பை அதிகரிக்கும் நடவடிக்கையாக, 200 பேரூராட்சிகளில் தற்போதுள்ள குழல் விளக்குகளுக்குப் பதிலாக 2,000 ஒளிரும் அடர்மின் விளக்குகள் ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

29. பேரூராட்சிகளில் பணியிடங்களைத் தோற்றுவிக்க நிர்ணயிக்கப்பட்டுள்ள வரையறையினை ஆய்வு செய்து திருத்தியமைப்பது குறித்து பரிந்துரை செய்ய அரசால் அமைக்கப்பட்டுள்ள குழுவின் அறிக்கையின் அடிப்படையில் பேரூராட்சிகளில் உள்ள பணியிடங்கள் சீரமைக்கப்படும்.

30. தற்போது நாளொன்று, நபர் ஒருவருக்கு 50 லிட்டருக்கும் குறைவாகக் குடிநீர் வழங்கப்பட்டு வரும் அல்லாபுரம், மெலட்டூர், அரூர், நசியனூர், வீரகோளம், வி.புதூர், நாங்குனேரி, திசையன்விளை, களக்காடு, கல்லுக்கூட்டம், பாலப்பள்ளம், கீழ்குளம், மண்டைக்காடு, புத்தளம், தென்தாமரைக்குளம், திங்கள்நகர், கொல்லங்கோடு, முளகுமூடு, திருவட்டாறு, திருவிதாங்கோடு, வாழ்வச்சகோஷ்டம், ஆத்தூர், இரணியல், வத்திராயிருப்பு, ஆனைமலை, சின்னாளப்பட்டி, வத்தலக்குண்டு, செட்டியார்பட்டி, கிள்ளியூர், கருங்கல், கப்பியறை, வெள்ளிமலை, கொல்லன்கோயில், இடைக்கழிநாடு மற்றும் சேத்தூர் ஆகிய 35 பேரூராட்சிகளில் நடப்பு நிதியாண்டில் குடிநீர் மேம்பாட்டுத் திட்டங்கள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.



31. பேரூராட்சி மன்றத் தலைவர்களின் செயல் திறனை அதிகரிக்க அவர்கள் பயன்படுத்தும் செல்பேசிக்கான கட்டணத்தை மாதம் ஒன்றுக்கு ரூ. 500-க்கு மிகாமல் அந்தந்தப் பேரூராட்சிகளே செலுத்தும்.

## சென்னை மாநகராட்சி

32. சென்னை மாநகரில் வாகனங்கள் நிறுத்துவதற்குத் தேவையான அடுக்கு மாடி வாகனங்கள் நிறுத்துமிட வசதிகள் கிரீம்ஸ் சாலை அருகிலும், பிராட்வே பேருந்து நிலையத்திலும், ரிட்சி தெருவில் மாநகராட்சிக்குச் சொந்தமான மத்திய தொழிற்கூடம் அமைந்துள்ள பகுதியிலும் வடிவமைத்தல், கட்டுதல், இயக்குதல் மற்றும் ஒப்படைத்தல் முறையில் ஏற்படுத்தப்படும்.

33. ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புறப் புனரமைப்புத் திட்டத்தின்கீழ் சென்னை மாநகரில் உள்ள 236 குடிசைப் பகுதிகளில் சிமெண்ட் கான்கிரீட் சாலைகள், தெரு விளக்குகள், மழை நீர் வடிகால்வாய்கள், பொதுக் கழிப்பிடங்கள், சமுதாயக் கூடங்கள், விளையாட்டு மைதானங்கள் மற்றும் பூங்கா மேம்பாட்டுப் பணிகள் 127 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறைவேற்றப்படும்.

34. சென்னை மாநகராட்சியில் தற்போது தினக்கூலி அடிப்படையில் பணிபுரியும் 2,025 துப்புரவுப் பணியாளர்கள் நிரந்தரப் பணியிடங்களில் பணி அமர்த்தப்படுவார்கள்.

35. மின்னணு சாதனக் கழிவுகளை முறையாகக் கையாளுவதற்கு ஏதுவாக மின்னணு சாதனங்களை அதிகமாகப் பயன்படுத்தும் தொழில் நிறுவனங்களின் ஈடுபாட்டோடு மின்னணு சாதனக் கழிவு வசதி ஒன்று சென்னையில் ஏற்படுத்தப்படும்.

## சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம்

36. சென்னை மாநகரின் குடிநீர்த் தேவைகளை நிறைவு செய்யும் முயற்சியாக வடிவமைத்து, சொந்தமாக நிறுவி, இயக்கி மற்றும் திருப்பித் தரும் அடிப்படையில் கடல் நீரைக் குடிநீராக்கும் நிலையத்தை மீஞ்சூரில் உள்ள காட்டுப்பள்ளி கிராமத்தில் அமைக்கத் திட்டமிட்டு, அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்த வருடத்தில் இப்பணிகள் அனைத்தும் முடிக்கப்பட்டு இத்திட்டம் பயனுக்குக் கொண்டு வரப்படும். மேலும், நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர்

உற்பத்தித் திறன்கொண்ட கடல் நீரைக் குடிநீராக்கும் மற்றொரு நிலையத்தினை 994 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இந்திய அரசின் நிதி உதவி பெற்று கிழக்குக் கடற்கரைச் சாலையில் உள்ள நெம்மேலியில் அமைக்க அரசு திட்டமிட்டுள்ளது. மத்திய அரசும் இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையில் இத்திட்டத்திற்கு முதற்கட்டமாக 300 கோடி ரூபாய் ஒதுக்கி உள்ளது. இந்த நிதி உதவியைக் கொண்டு கடல் நீரைக் குடிநீராக்கும் இரண்டாவது நிலையம் அமைக்கும் பணிகள் நடப்பாண்டில் துவங்கப்பட்டு, 2010-ல் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

37. சென்னைக் குடிநீர் வாரியத்தின் கழிவு நீர் சுத்தகரிப்புத் திறனை மேலும் அதிகரிக்கும் விதமாக நாளொன்றுக்கு 54 மில்லியன் லிட்டர் திறன்கொண்ட கழிவு நீரை சுத்தகரிக்கும் நிலையம் ஒன்று நெசப்பாக்கத்தில் 51 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

38. பத்மநாப நகர், கலைஞர் கருணாநிதி நகர், கிரீம்ஸ் சாலை, ஜவஹர் நகர், மேல்பட்டடை, நம்மாழ்வார்பேட்டை, வியாசர்பாடி, அயனாவரம், வில்லிவாக்கம், புதுக்கோட்டை, திருவான்மியூர், பெசன்ட் நகர், சீத்தம்மாள் காலனி மற்றும் பட்டினப்பாக்கம் ஆகிய பகுதிகளில் உள்ள கழிவு நீர்க் கட்டமைப்பு 22 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

39. சென்னைக் குடிநீர் வாரியம் புதிய குடிநீர் இணைப்புகளுக்கு 1,000 சதுர அடிக்கு மிகாமல் உள்ள குடியிருப்புகளுக்குத் தற்போது 5,000 ரூபாய் இணைப்புக் கட்டணமாக வசூலித்து வருகிறது. சென்னையில் உள்ள பொருளாதார நிலையில் பின்தங்கிய பிரிவினர்களும் குடிநீர் வீட்டு இணைப்பை எளிதாகப் பெறுவதை ஊக்கப்படுத்தும் பொருட்டு, இந்தக் கட்டணம் 500 சதுர அடிக்கும் குறைவாக உள்ள வீடுகளுக்கு ரூபாய் 100 ஆகக் குறைக்கப்படும். மேலும், தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியக் குடியிருப்புகள் மற்றும் இதர குடிசைப் பகுதிகளில் கைப்பம்புகள் மூலமாகக் குடிநீர் பெறும் நிலைமையை மாற்ற குடிநீர்க் குழாய்களில் அதிக அழுத்தத்துடன் குடிநீர் விநியோகம் செய்ய விசை இறைப்பான்கள் மற்றும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைக்கப்படும்.

40. சென்னைப் பெருநகருக்கு 2021 ஆம் ஆண்டில் குடிநீர்த் தேவை பற்றாக்குறை நாளொன்றுக்கு சுமார் 400 மில்லியன் லிட்டராக இருக்கும் என்றும், இதுவே 2026 ஆம் ஆண்டில் சுமார் 650 மில்லியன் லிட்டராக இருக்கும் என்றும் கணக்கிடப்பட்டுள்ளது. ஆகவே, சென்னைக்குப் புதிய நீர் ஆதாரங்களை கண்டு அறிவது அவசியமாகிறது. குறைந்தது



15 டி.எம்.சி. அளவிற்குக் குடிநீர் ஆதாரம் கண்டறியப்பட வேண்டியுள்ளது. எனவே, தொலைநோக்குப் பார்வையுடன், எதிர்பார்க்கப்படும் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய ஏதுவாகக் புதிய குடிநீர் ஆதாரங்களை, கண்டறிந்து, திட்டத்தைச் செயல்படுத்த தொழில்நுட்ப, பொருளாதார சாத்தியக்கூறுகளை ஆய்வு செய்ய ஒரு கலந்தாலோசகரை நியமிக்க அரசு முடிவெடுத்துள்ளது.

## தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்

41. ஊரகப் பகுதிகளில் அமைந்துள்ள 10,000 அங்கன்வாடி மையங்களுக்கு 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் குடிநீர் வசதிகள் அளிக்கப்படும்.

42. 4,000 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் குடியிருப்புகளுக்கு 120 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுடன்கூடிய குடிநீர் வசதிகள் அளிக்கப்படும்.

43. ஊரகப் பகுதிகளில் மிகவும் பழுதடைந்து புனரமைப்பு செய்ய இயலாத 700 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுக்குப் பதிலாக புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

44. குடிநீர் ஆதாரங்களின் நிலைத் தன்மையை அதிகரிக்கும் வண்ணம் இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள 314 ஊரணிகளும், சிவகங்கை மாவட்டத்தில் உள்ள 173 ஊரணிகளும், மொத்தம் 487 ஊரணிகள் 25 கோடியே 47 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் புனரமைப்பு செய்யப்படும்.

45. 850 அரசுப் பள்ளிகளுக்கு 9.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் குடிநீர் வசதிகள் அளிக்கப்படும். மேலும் மாநிலத்தில் உள்ள அனைத்து அரசுப் பள்ளிகளிலும் பழுதடைந்த நிலையில் உள்ள குடிநீர்த் திட்டங்கள் 20 கோடி ரூபாய் செலவில் புனரமைக்கப்பட்டு மீண்டும் பயனுக்குக் கொண்டு வரப்படும்.

46. வாரியத்தின் பராமரிப்பிலுள்ள 50 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களில் மின்சார சிக்கனத்திற்காக 50 குதிரைத் திறன் மற்றும் அதற்கு மேற்பட்ட மின் இறைப்பான்களுக்கு 11 கோடியே 52 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 419 மாற்றத் தகுந்த மின் அலை மாற்றிகள் (Variable Frequency Drive) அமைக்கப்படும்.

[2008 ஏப்ரல் 16

47. குடிநீர் ஆதாரங்களை மேம்படுத்தும்வண்ணம் தடுப்பணைகள் மற்றும் கசிவு நீர்க் குட்டைகள் போன்ற நீர் செறிவூட்டும் கட்டமைப்புகள் 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

**ஏற்கனவே செயலாக்கத்தில் உள்ள கீழ்க்கண்ட குடிநீர்த் திட்டங்கள், 2008-09 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்டு மக்கள் பயனுக்குக் கொண்டு வரப்படும்:**

48. அரியலூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களில் 44 கோடியே 12 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் அரியலூர், செந்துறை, திருமானூர், வேப்பூர், ஆலத்தூர் ஒன்றியங்களைச் சார்ந்த 525 குடியிருப்புகளுக்கு 4 இலட்சத்து 14 ஆயிரம் மக்கள் பயன்பெறும் கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகள் அக்டோபர் 2008-ல் முடிக்கப்பட்டு, மக்களின் பயனுக்குக் கொண்டு வரப்படும்.

49. கோயம்புத்தூர் மாவட்டத்தில் குறிச்சி, குனியமுத்தூர் நகராட்சிகள் மற்றும் கிணத்துக்கடவு பேரூராட்சிக்கு 49 கோடியே 93 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் ஒரு இலட்சத்து 45 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் டிசம்பர் 2008-ல் நிறைவேற்றப்படும்.

50. கோயம்புத்தூர் மாவட்டத்தில் கவுண்டம்பாளையம் நகராட்சி மற்றும் வடவள்ளி பேரூராட்சிக்கு 30 கோடியே 38 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் 73 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் மார்ச் 2009-ல் நிறைவேற்றப்படும்.

51. திருநெல்வேலி மாவட்டத்தில் ராயகிரி, சிவகிரி, வாசுதேவநல்லூர், ஆலங்குளம் ஆகிய பேரூராட்சிகள் மற்றும் வாசுதேவநல்லூர், பாப்பாகுடி ஒன்றியங்களைச் சார்ந்த 78 குடியிருப்புகளுக்கு 43 கோடியே 32 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் ஒரு இலட்சத்து 43 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் மார்ச் 2009-ல் நிறைவேற்றப்படும்.

52. திருநெல்வேலி மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட வள்ளியூர் மற்றும் இராதாபுரம் ஒன்றியங்களைச் சார்ந்த 113 குடியிருப்புகளுக்கு 23 கோடியே 68 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் 85 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் டிசம்பர் 2008-ல் நிறைவேற்றப்படும்.

53. காஞ்சிபுரம் மாவட்டத்தில் தாம்பரம் நகராட்சிக்கு 32 கோடியே 61 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் 1 இலட்சத்து 37 ஆயிரம் மக்கள்



2008 ஏப்ரல் 16]

பயன்பெறும் வகையில் குடிநீர் அபிவிருத்தித் திட்டம் டிசம்பர் 2008-ல் நிறைவேற்றப்படும்.

54. ஈரோடு மாவட்டத்தில் பெருந்துறை, சென்னிமலை, கே.சி. பாளையம், நசியனூர் மற்றும் சித்தோடு ஆகிய பேரூராட்சிகளுக்கு 23 கோடியே 4 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் 88 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் மார்ச் 2009-ல் நிறைவேற்றப்படும்.

55. திருவண்ணாமலை மாவட்டத்தில் வந்தவாசி ஒன்றியத்தைச் சார்ந்த கீழ்கொடுங்கலூர் மற்றும் 76 ஊரகக் குடியிருப்புகளுக்கு 4 கோடியே 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 30 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் மார்ச் 2009-ல் நிறைவேற்றப்படும்.

56. திருச்சி மாவட்டத்தில் மணிகண்டம் ஒன்றியத்தைச் சார்ந்த 146 குடியிருப்புகள், புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை ஒன்றியத்தைச் சார்ந்த 5 குடியிருப்புகளுக்கு 13 கோடியே 12 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் 87 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் மார்ச் 2009-ல் நிறைவேற்றப்படும்.

57. விழுப்புரம் மாவட்டத்தில் விழுப்புரம் நகராட்சிக்கு 9 கோடியே 55 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் 95 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் குடிநீர் அபிவிருத்தித் திட்டம் டிசம்பர் 2008-ல் நிறைவேற்றப்படும்.

**ஏற்கனவே ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட கீழ்க்கண்ட குடிநீர்த் திட்டங்கள் 2008-09 ஆம் ஆண்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்:**

58. சேலம் மாவட்டத்தில் நரசிங்கபுரம் நகராட்சி, 18 பேரூராட்சிகள் மற்றும் 7 ஊராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்த 921 குடியிருப்புகளுக்கு 176 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 8 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

59. மதுரை மாவட்டத்தில் மேலூர், திருமங்கலம், அவனியாபுரம் நகராட்சிகள், எ. வெள்ளாளப்பட்டி, பரவை, விளாங்குடி, திருநகர் பேரூராட்சிகள் மற்றும் கொட்டாம்பட்டி, மேலூர், மதுரை மேற்கு, மதுரை கிழக்கு ஒன்றியங்களைச் சேர்ந்த 142 குடியிருப்புகளுக்கு 203 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 3 இலட்சத்து 5 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

60. அரியலூர் மாவட்டத்தில் ஜெயங்கொண்டம் ஒன்றியத்தைச் சேர்ந்த 281 குடியிருப்புகளுக்கு 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 81 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

61. ஈரோடு மாவட்டத்தில் வெள்ளக்கோயில் நகராட்சி மற்றும் காங்கேயம் பேரூராட்சிக்கு 33 கோடியே 14 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் 70 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

62. திண்டுக்கல் மாவட்டத்தில் தொப்பம்பட்டி மற்றும் பழனி ஒன்றியங்களைச் சேர்ந்த 175 குடியிருப்புகளுக்கு 17 கோடியே 2 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் ஒரு இலட்சத்து 32 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

63. கன்னியாகுமரி மாவட்டத்தில் பாலபள்ளம், ரீத்தாபுரம், கல்லுக்கூட்டம், அஞ்சுகிராமம், மண்டைக்காடு, மணவாளக்குறிச்சி, கணபதிபுரம், அகஸ்தீஸ்வரம், தெற்குதாமரைகுளம், புத்தளம், தெங்கம்புதூர் பேரூராட்சிகள் மற்றும் தக்கலை, இராஜாக்காமங்களம் ஒன்றியங்களைச் சேர்ந்த 19 குடியிருப்புகளுக்கு 4 கோடியே 34 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் ஒரு இலட்சத்து 60 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

64. கன்னியாகுமரி மாவட்டத்தில் அழகியபாண்டிபுரம், ஆரல்வாய்மொழி, பூதபாண்டி, தாழக்குடி, ஆழகப்பாபுரம், தேரூர், கொட்டாரம், மைலாடி, மருங்கூர் பேரூராட்சிகள் மற்றும் தோவாளை, அகஸ்தீஸ்வரம் ஒன்றியங்களைச் சேர்ந்த 212 குடியிருப்புகளுக்கு 30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 1 இலட்சத்து 80 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

65. நாமக்கல் மாவட்டத்தில் ஆலம்பாளையம் பேரூராட்சிக்கான குடிநீர் அபிவிருத்தித் திட்டம் மற்றும் திருச்செங்கோடு குடிநீர் அபிவிருத்தித் திட்டத்தைச் சார்ந்த வழியோரக் குடியிருப்புகளுக்கு 23 கோடியே 83 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் 61 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

66. தஞ்சாவூர் மாவட்டத்தில் தஞ்சாவூர், பூதலூர் மற்றும் திருவையாறு ஒன்றியங்களைச் சேர்ந்த 229 குடியிருப்புகளுக்கு 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 1 இலட்சத்து 18 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.





67. தஞ்சாவூர் மாவட்டத்தில் கும்பகோணம், திருவிடைமருதூர் ஒன்றியங்களைச் சார்ந்த 189 குடியிருப்புகளுக்கு 7 கோடியே 57 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் ஒரு இலட்சத்து 20 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

68. நாகப்பட்டினம் மாவட்டத்தில் சீர்காழி மற்றும் கொள்ளிடம் ஒன்றியங்களைச் சார்ந்த இரும்புத் தாதுவினால் குடிநீர் தாம் பாதிக்கப்பட்ட 184 குடியிருப்புகள் மற்றும் 87 வழியோரக் குடியிருப்புகளுக்கு 22 கோடியே 98 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் ஒரு இலட்சத்து 6 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

69. நாகப்பட்டினம் மாவட்டத்தில் செம்பனார்கோவில், மயிலாடுதுறை ஒன்றியங்களைச் சார்ந்த இரும்புத் தாதுவினால் குடிநீர் தரம் பாதிக்கப்பட்ட 111 குடியிருப்புகள் மற்றும் 202 வழியோரக் குடியிருப்புகளுக்கு 14 கோடியே 80 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் 77 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

70. நீலகிரி மாவட்டத்தில் கடநாடு மற்றும் 3 ஊராட்சிகளை சேர்ந்த 114 குடியிருப்புகளுக்கு 19 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 36 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

71. தூத்துக்குடி மாவட்டத்தில் கோவில்பட்டி, கயத்தார், ஓட்டப்பிடாரம் ஒன்றியங்களைச் சார்ந்த 117 ஊரகக் குடியிருப்புகளுக்கு 20 கோடியே 50 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் 70 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

**நடப்பு நிதியாண்டில் கீழ்க்கண்ட திட்டங்கள் புதியதாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும்:**

72. வேலூர் மாவட்டத்தில் வேலூர் மற்றும் 12 நகராட்சிகள், 11 பேரூராட்சிகளுக்கு மேட்டூர் அருகில் காவிரியாற்றை நீராதாரமாகக் கொண்டு 932 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 15 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

73. விருதுநகர் மாவட்டத்தில் 7 பேரூராட்சிகள் மற்றும் 11 ஒன்றியங்களைச் சார்ந்த 1,457 குடியிருப்புகளுக்கு தாமிரபாணி ஆற்றை நீராதாரமாகக் கொண்டு 250 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 10 இலட்சத்து 20 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

74. புதுக்கோட்டை மாவட்டத்தில் புதுக்கோட்டை, விராலிமலை, குன்னாண்டார்கோவில், அன்னவாசல், பொன்னமராவதி, கந்தர்வக்கோட்டை மற்றும் திருமயம் ஒன்றியங்களைச் சார்ந்த 2,088 குடியிருப்புகளுக்கு 125 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 5 இலட்சத்து 90 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

75. கோயம்புத்தூர் மாவட்டத்தில் வீரகேரளம், பேரூர், புல்லுவாபட்டி பேரூராட்சிகளுக்கு 44 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 2 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்.

76. கோயம்புத்தூர் மாவட்டத்தில் மடத்துக்குளம், சங்கரமநல்லூர், கணியூர், குமரலிங்கம் பேரூராட்சிகள் மற்றும் 125 குடியிருப்புகளுக்கு 20 கோடியே 60 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் 54 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

77. திருவண்ணாமலை மாவட்டத்தில் செங்கம், புதுப்பாளையம் பேரூராட்சிகள் மற்றும் செங்கம், புதுப்பாளையம் ஒன்றியங்களைச் சேர்ந்த 227 குடியிருப்புகளுக்கு 10 கோடியே 40 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் ஒரு இலட்சத்து 4 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

78. தூத்துக்குடி மாவட்டத்தில் திருச்செந்தூர் பேரூராட்சிக்கு 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 30 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்.



## இணைப்பு II

(899 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

## மானியக் கோரிக்கை எண் 42—ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

## அறிவிப்புகள், 2008–2009

### 1. ஊரகக் கட்டமைப்புத் திட்டம்

1-4-2008 முதல் தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்படுவதால், சம்பூர்ண கிராம வேலைவாய்ப்புத் திட்டம் (SGRY) மத்திய அரசால் நிறுத்தப்பட்டுள்ளது. இதன் விளைவாக, சிறு கட்டடங்கள், சிமென்ட் கான்கிரீட் சாலைகள் போன்ற அடிப்படை வசதிகளை ஏற்படுத்துவதற்கு தற்போது சரியான திட்டம் ஏதும் இல்லை. மேலும், தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்மூலம் உருவாக்கப்பட்ட சொத்துக்களை நிலைப்படுத்துவதும், அவற்றை நீடித்து நிலைத்திருக்கக்கூடியதாக மாற்றுவதும் அவசியமாகிறது. இது குறித்து பெறப்பட்ட பல்வேறு கோரிக்கைகளை மனதில் கொண்டு, ஊரகக் கட்டமைப்புத் திட்டம் என்ற ஒரு புதிய திட்டத்தினை 2008-2009 ஆம் ஆண்டு முதல் அறிமுகப்படுத்தி அதற்காக இந்த ஆண்டு 350 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

### 2. இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம்

தமிழ்நாடு அரசு கான்கிரீட் கூரை அமைக்க ஒவ்வொரு வீட்டிற்கும் கூடுதலாக ரூபாய் 12,000/- வழங்கி வந்ததை தாங்கள் அறிவீர்கள். இந்த நிதியாண்டிலிருந்து இத்தொகை 12,000 ரூபாயிலிருந்து 20,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். மேலும், மத்திய அரசு இந்த ஆண்டு முதல் ஒரு வீட்டிற்கான அலகுத் தொகை 10,000 ரூபாய் உயர்த்தி வழங்கப்படும் என அறிவித்துள்ளது.

இதனால் புதிய தொகுப்பு வீடு கட்டுவதற்கு 37,000 ரூபாய் என்று இருந்த அலகுத் தொகை 55,000 ரூபாய் ஆக உயர்த்தி வழங்கப்படும்.

### 3. தகுதிபெற்ற அனைத்து மகளிர் திட்ட சுய உதவிக் குழுக்களுக்கும் சுழல் நிதி

நகர்ப்புறம் மற்றும் ஊரகப் பகுதிகளில் 1 இலட்சத்து 50 ஆயிரம் மகளிர் திட்ட சுய உதவிக் குழுக்கள், தகுதி இருந்தும் சுழல் நிதி மானியம் பெறாமல் உள்ளன. இந்நிலையைக் கருத்தில் கொண்டு

[2008 ஏப்ரல் 16

இவ்வாண்டு தகுதியான அனைத்து மகளிர் திட்ட சுய உதவிக் குழுக்களுக்கும் 150 கோடி ரூபாய் செலவில் சுழல் நிதி மானியம் வழங்க அரசு முடிவு செய்துள்ளது. இதன்மூலம் ஒவ்வொரு சுய உதவிக் குழுவும் தலா 10,000 ரூபாய் சுழல் நிதி மானியம் மட்டுமல்லாது வங்கிகள் மூலம் கூடுதலாக 30,000 ரூபாய் வரை கடனும் பெற வாய்ப்புள்ளது.

## 4. சட்டமன்றத் தொகுதி மறுவரையறைக்கு இணங்க ஊராட்சி ஒன்றிய எல்லைகளைச் சீரமைத்தல்

அண்மையில் சட்டமன்றத் தொகுதிகளை மறுவரையறை செய்வதற்கு முன்பு, ஒரு சட்டமன்றத் தொகுதி, ஓரிரு ஊராட்சி ஒன்றியங்களை முழுமையாகக் கொண்டதாகவும், ஓரிரு ஊராட்சி ஒன்றியங்களை பகுதியாகக் கொண்டதாகவும் இருந்தது. சட்டமன்றத் தொகுதிகளை மறுவரையறை செய்யும்போது ஊராட்சி ஒன்றியங்களையோ, ஊராட்சிகளையோ அடிப்படையாகக் கொள்ளாமல் வருவாய் கிராமங்கள், வருவாய் வட்டங்கள் மட்டுமே கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டன. அதனால், தற்போதுள்ள சட்டமன்றத் தொகுதியில் சுமார் நான்கு அல்லது அதற்கு மேற்பட்ட ஊராட்சி ஒன்றியங்களின் எல்லைகள் பகுதியாக இடம் பெற்றுள்ளன எனத் தெரிய வந்துள்ளது.

இதனால், சட்டமன்ற உறுப்பினர் தனது தொகுதியில் உள்ள பல ஊராட்சி ஒன்றியங்களுடன் தொடர்புகொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

அதுபோல ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்களும் இரண்டு, மூன்று சட்டமன்ற உறுப்பினர்களுடன் தொடர்புகொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. ஊராட்சி ஒன்றிய எல்லைகளைத் சட்டமன்ற தொகுதியின் எல்லைக்கு ஏற்றவாறு சீரமைக்க வேண்டுமென பல சட்டமன்ற உறுப்பினர்களும் கோரிக்கைகள் வைத்துள்ளனர்.

மேலும், ஊராட்சி ஒன்றியங்களுக்கிடையே ஊராட்சிகளின் எண்ணிக்கை, மக்கள் தொகை, பரப்பளவு ஆகியவற்றில் பெரிய அளவில் வேறுபாடுகள் உள்ளன. கடந்த 15 ஆண்டுகளாக ஊராட்சி ஒன்றிய எல்லைகள் மிகக் குறைந்த அளவில்தான் மாற்றி அமைக்கப்பட்டுள்ளன. இந்த நிலையில், ஊராட்சி ஒன்றிய எல்லைகளைச் சீரமைப்பதற்கான சரியான தருணம் தற்போது ஏற்பட்டு உள்ளது.



2008 ஏப்ரல் 16]

ஏற்கெனவே, ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் நிலை உயர்த்துதல், நிலை குறைத்தல், ஒன்றோடொன்று இணைத்தல், பிரித்தல் ஆகியவை குறித்து அரசு ஆணை வெளியிட்டுள்ளது. அதன்படி மாவட்ட ஆட்சித் தலைவர்களும் கருத்துக் கேட்புக் கூட்டங்களை நடத்தி, ஆய்வு செய்து கருத்துருக்களைத் தயார் செய்து வருகின்றனர். அத்துடன் ஒரு சட்டமன்றத் தொகுதிக்குள் உள்ள ஊராட்சி ஒன்றியங்களின் எல்லைகளும் பகுதியாக இல்லாமல், முழுமையாக அமையும் வகையில் மறுவரையறை செய்ய மாவட்ட ஆட்சியர்மூலம் நடவடிக்கை எடுக்கப்படும். ஊராட்சி ஒன்றிய எல்லைகள் சீரமைக்கப்பட்டாலும், தற்போதுள்ள உள்ளாட்சிப் பிரதிநிதிகளின் பதவிக் காலம் எந்தவிதத்திலும் பாதிக்கப்படமாட்டாது.

2011 ஆம் ஆண்டு உள்ளாட்சித் தேர்தலின்போது இது அமல்படுத்தப்படும்.

## 5. பெரியார் நினைவு சமத்துவபுரம் திட்டம்

தமிழகத்தில் சமூக நீதியை மேம்படுத்தவும், சாதி, சமய பேதமற்ற சமத்துவ சமுதாயத்தை உருவாக்கவும், மக்கள் ஒற்றுமையுடனும், சகோதரத்துவத்துடனும் வாழ வேண்டுமென்ற தந்தை பெரியார் அவர்களின் எண்ணத்திற்கேற்ப, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சமத்துவபுரம் என்ற சீரிய திட்டம் 1997 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்டு, 145 சமத்துவபுரங்கள் அமைக்கப்பட்டன. தற்போது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மேலும் 95 சமத்துவபுரங்கள் அமைக்கப்படுமென அறிவித்துள்ளார்கள். அதன்படி முதற்கட்டமாக 2008-09 ஆம் ஆண்டில் 29 புதிய சமத்துவபுரங்கள் அமைக்கப்படும். இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்குத் தேவையான 75 கோடி ரூபாய் நிதியினை அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

## 6. நமக்கு நாமே திட்டம்

வளர்ச்சிப் பணிகளில் மக்களை ஈடுபடுத்தி, அவர்களது பங்களிப்போடு பணிகளை மேற்கொள்ளும் நமக்கு நாமே திட்டம் இந்த அரசால் மீண்டும் 2007-08 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பொதுமக்களிடம் இத்திட்டம் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ள நிலையில் 2008-09 ஆம் ஆண்டிலும் இத்திட்டத்திற்கென இந்த அரசால் 50 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

[2008 ஏப்ரல் 16

வெளிநாடுகளில் உள்ள தமிழ்நாட்டைச் சேர்ந்தோர், தமது சொந்த ஊர் மற்றும் அங்குள்ள மக்களுக்கு உதவிட விரும்புகின்றனர். நமக்கு நாமே திட்டம் போலவே இவர்களின் நன்கொடைமூலமாக மேற்கொள்ள விரும்பும் பணிகளைச் செயல்படுத்துவதற்கான பொது அறக்கட்டளை ஒன்றை இந்த அரசு அமைக்கும் என இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி இந்த அறக்கட்டளை அமைக்கப்பட்டு, இத்திட்டம் சிறப்பாகச் செயல்படுத்தப்படும்.

## 7. அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்.

2006-07 மற்றும் 2007-08 ஆம் ஆண்டுகளில் சீரிய முறையில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டதைப்போல 2008-09 ஆம் ஆண்டிலும் 2,521 கிராம ஊராட்சிகளில் 509 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்படும்.

## 8. நபார்டு வங்கி நிதி உதவியுடன் சாலைகள் மேம்பாடு

அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்படும் ஊராட்சிகளில் பல்வேறு அடிப்படை வசதிகளை ஏற்படுத்துவதோடு, அவ்வூராட்சிகளுக்குச் செல்லும் சாலைகளையும் நபார்டு வங்கி நிதி உதவியுடன் மேம்படுத்தி தார்ச் சாலைகளாக மாற்றி அமைக்கத் திட்டமிடப்பட்டு உள்ளது.

2006-07 ஆம் ஆண்டு அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட ஊராட்சிகளில் நபார்டு வங்கி நிதி உதவியுடன் 3,898 கி.மீ. நீளமுள்ள ஊரக சாலைப் பணிகள் 410 கோடி ரூபாய் செலவில் நடைபெற்று வருகின்றன.

அதேபோல, 2007-08 ஆம் ஆண்டு அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட ஊராட்சிகளில், நபார்டு வங்கி ஒப்புதலுக்குப் பின்னர் 3,205 கி.மீ. நீளமுள்ள ஊரகச் சாலைப் பணிகள் 409 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

## 9. பன்னிரண்டாவது நிதி ஆணைய மானியத்தில் தார்ச் சாலைப் பணிகள்

2006-07 மற்றும் 2007-08 ஆம் ஆண்டுகளில் பன்னிரண்டாவது நிதி ஆணைய மானியத்தில் பழுதடைந்த ஊரகத் தார்ச் சாலைகளைச்



2008 ஏப்ரல் 16]

சீரமைத்ததுபோலவே இந்த ஆண்டும் 103 கோடியே 60 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் பழுதடைந்த தார்ச் சாலைகள் மேம்படுத்தப்படும்.

## 10. ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் சீரமைப்புத் திட்டம்

தமிழ்நாட்டிலுள்ள சுமார் 27,000 ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் பெரும்பாலான பள்ளிகள் பல ஆண்டுகளாக பராமரிப்பின்றி பழுதடைந்த நிலையில் இருந்தன. இந்தப் பள்ளிக் கட்டடங்களைப் புதுப்பிக்க ஒரு சிறப்பான திட்டமாக 'ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் சீரமைப்புத் திட்டம்' 2007-08 ஆம் ஆண்டு துவக்கப்பட்டது.

இந்தத் திட்டத்தின்கீழ் 2006-07 மற்றும் 2007-08 ஆம் ஆண்டு அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட ஊராட்சிகளில் 10,248 பள்ளிகளில் சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2008-09 ஆம் நிதியாண்டிலும் இத்திட்டத்தின்கீழ் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்படும் கிராம ஊராட்சிகளில் உள்ள சுமார் 5,000 பள்ளிகளில் கட்டடம் புதுப்பிக்கும் பணிகள் 60 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்.

## 11. ஊராட்சி ஒன்றியங்களுக்கு சமச்சீர் நிதிப் பகிர்வு

மக்கள் தொகை அடிப்படையில் மட்டுமே மாநில நிதி ஆணைய மானியம் பங்கீடு செய்யும்போது பல கிராம ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்குப் போதுமான நிதி கிடைப்பதில்லை. இந்நிலையை மாற்ற, கடந்த ஆண்டிலிருந்து ஒவ்வொரு கிராம ஊராட்சிக்கும் குறைந்தபட்சமாக ஆண்டு ஒன்றுக்கு 3 இலட்சம் ரூபாய் வழங்கப்படுவதுபோல, இந்த நிதி ஆண்டிலிருந்து ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஆண்டிற்குக் குறைந்தபட்சம் 30 இலட்ச ரூபாய் வழங்கப்படும். மீதமுள்ள நிதியினை மக்கள் தொகை அடிப்படையில் அனைத்து ஊராட்சி ஒன்றியங்களுக்கும் பிரித்து வழங்கப்படும்.

## 12. ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களுக்குப் புதிய கட்டடங்கள் கட்டுதல்

பல ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளன. 2008-09 ஆம் ஆண்டில் முதற்கட்டமாக 50 ஊராட்சி ஒன்றியங்களுக்குப் புதிய அலுவலகக் கட்டடங்கள்

கட்டுவதற்காக அரசு 50 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யும். இத்திட்டம் படிப்படியாக விரிவுபடுத்தப்படும்.

## 13. ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்களுக்குத் தனி வாகனம்

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் தற்போது இரண்டு வாகனங்கள் பயன்பாட்டில் உள்ளன. இதில் ஒரு வாகனத்தை ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் பயன்படுத்திக்கொள்ள ஏதுவாக 100 லிட்டர் எரிபொருள் கூடுதலாக வழங்கப்படுகிறது. எனினும், ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவருக்கெனத் தனியாக ஒரு வாகனம் வழங்க வேண்டும் என்று வரப்பெற்ற கோரிக்கையை அரசு ஏற்று, 385 ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்களுக்கும் புதிய வாகனங்கள் இந்த ஆண்டு வழங்கப்படும். இதற்கான 385 ஓட்டுநர் பணியிடங்கள் புதிதாகத் தோற்றுவிக்கப்படும்.

## 14. 25,000 இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புடன் கூடிய தொழிற்பயிற்சி

வேலைவாய்ப்பற்ற இளைஞர்களின் வாழ்வில் ஒளியேற்ற, தொழிற்பயிற்சி வழங்கப்படும் என்று இவ்வரசு அறிவித்ததன் அடிப்படையில், கடந்த இரண்டு ஆண்டுகளில் 11,485 இளைஞர்களுக்கு சிறந்த தொழில் நிறுவனங்கள்மூலம் தொழிற்பயிற்சி வழங்கப்பட்டு, வேலை வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

2008-09 ஆம் ஆண்டில் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டு, 25,000 இளைஞர்களுக்குத் தொழிற் பயிற்சி வழங்க 20 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படும்.

## 15. 25,000 புதிய சுய உதவிக் குழுக்கள் அமைத்தல்

தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம்மூலம் இதுவரை 3 இலட்சத்து 65 ஆயிரம் சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டு இருப்பினும், 3,644 ஊராட்சிகளில் 25 சதவிகிதத்திற்கும் குறைவான மகளிரே சுய உதவிக் குழுக்களில் உறுப்பினர்களாக உள்ளனர். எனவே, இவ்வூராட்சிகளில் தனிக் கவனம் செலுத்தி, விடுபட்டுள்ள ஏழை எளிய மகளிருக்கும் தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் பயனடையும் மகளிருக்கும் முன்னுரிமை அளித்து, இவ்வாண்டு 25,000 புதிய சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்படும்.





## 16. சுய உதவிக் குழுக் கூட்டமைப்புகளுக்குச் சட்டரீதியான அங்கீகாரம்

ஊராட்சி அளவிலான சுய உதவிக் குழுக்களின் கூட்டமைப்புகளை வலுப்படுத்த இவ்வரசு எடுத்து வரும் பல்வேறு நடவடிக்கைகளின் மூலம் கூட்டமைப்புகள் புத்துயிர் பெற்று சிறப்பாகச் செயல்படத் தொடங்கியுள்ளன.

இந்திய ரிசர்வ் வங்கியின் சிறப்பு உத்தரவின் பேரில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் சட்ட ரீதியாகப் பதிவு பெறாமலே வங்கிக் கடன் பெற முடிகிறது. இந்தச் சலுகை சுய உதவிக் குழுக் கூட்டமைப்புகளுக்குப் பொருந்தாது. ஆதலால், இக்கூட்டமைப்புகள் அதிக அளவில் வங்கிக் கடன் பெற ஏதுவாக, இவற்றை தமிழ்நாடு சங்கங்கள் பதிவு, சட்டம், 1975-ன்கீழ் பதிவு செய்ய முடிவு செய்யப்பட்டு உள்ளது.

## 17. பணியமைப்பு

➢ ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் உள்ள விரிவாக்க அலுவலர் நிலையிலான பணியிடங்களை துணை வட்டார வளர்ச்சி அலுவலர் பணி நிலைக்கு உயர்த்திட வேண்டும் என பல ஆண்டுகளாக அரசுக்குத் தொடர்ந்து கோரிக்கை அளிக்கப்பட்டுள்ளது.

இந்த நீண்ட நாள் கோரிக்கையை அரசு கனிவுடன் பரிசீலித்தது. இத்துறையின் விரிவாக்க அலுவலர் பணியிடங்களை துணை வட்டார வளர்ச்சி அலுவலர் பணி இடங்களாக நிலை உயர்த்திட அரசு முடிவு செய்துள்ளது.

➢ ஊராட்சிகளில் பணிபுரியும் மக்கள் நலப் பணியாளர்கள் தற்போது ரூபாய் 9.50 மதிப்பூதியமாகவும், ரூபாய் 50 பயணப் படியாகவும், மொத்தம் மாதம் ஒன்றுக்கு ரூபாய் 1,000 பெற்று வருகிறார்கள். இவர்கள் தங்கள் ஊதியத்தை உயர்த்தி வழங்க அரசுக்குக் கோரிக்கை விடுத்துள்ளனர். இக்கோரிக்கையின்மீது மைய அரசின் ஆறாவது சம்பளக் குழுவின் பரிந்துரைகளின்பேரில் மத்திய அரசு ஆணைகள் வெளியிட்ட பின் மாநில அரசு அலுவலர்களுக்கு அவற்றை நடைமுறைப்படுத்த, அமைக்கப்படும் அலுவலர் குழுவின் பரிந்துரை பெற்று, அதன் அடிப்படையில் உரிய ஆணைகள் வெளியிடப்படும்.

➢ ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் உள்ள பதிவறை எழுத்தர், அலுவலக உதவியாளர், இரவுக் காவலர் மற்றும் இதற்கு

[2008 ஏப்ரல் 16

இணையான பதவிகளில் 50 சதவீத காலிப் பணியிடங்களை தகுதியுள்ள மக்கள் நலப் பணியாளர்களைக் கொண்டு நிரப்ப அரசு பரிசீலிக்கும்.

➢ ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் வளர்ச்சிப் பணிகள் தரமாகவும், விரைவாகவும் செயல்படுத்தப்படுவதை உறுதி செய்திட ஏதுவாக, கீழ்க்கண்ட பல்வேறு நிலைகளில் 2,643 புதிய பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டு, விரைவில் நிரப்பப்படும்.

| | |
|---|---|
| உதவி செயற்பொறியாளர்கள் | 32 |
| வட்டார வளர்ச்சி அலுவலர் நிலையில் கண்காணிப்பாளர்கள் | 30 |
| உதவிப் பொறியாளர்கள் | 212 |
| துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் | 385 |
| உதவியாளர்கள் | 415 |
| பணி மேற்பார்வையாளர்கள் | 673 |
| இளநிலை வரைவு அலுவலர்கள் | 32 |
| ஓட்டுநர்கள் | 32 |
| அலுவலக உதவியாளர்கள் | 32 |
| கணினி உதவியாளர்கள் | 800 |

➢ திட்டப் பணிகளை ஆய்வு செய்து, விரைவாகவும், தரமாகவும் நிறைவேற்றுவதற்கு ஏதுவாக, உதவி இயக்குநர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் உதவிப் பொறியாளர்களுக்கு 11 கோடியே 75 இலட்ச ரூபாய் செலவில் 250 புதிய வாகனங்கள் வழங்கப்படும்.

D
V 211, 31026
P68. 47.3
தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
228410.
சென்னை-600 008
நூலகம்

அரசு மைய அச்சகம், சென்னை-600 079.

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai,
Chennai-600 002.

©
Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Principal Secretary to Government and Commissioner of Stationery and Printing, Chennai-600 002.